**இந்தப் புத்தகத்தைப் பற்றி** 1

**வாரம் 1 – சீஷத்துவம்** 2

சீஷர்களை உருவாக்குதல் 3

தண்ணீர் ஞானஸ்நானம்

சீஷத்துவத்துக்கான நிபந்தனைகள்

1. வேறு யாரையும்விட கர்த்தரை அதிகம் நேசித்தல்

2. கர்த்தரின் சித்தத்தை ஏற்றுக்கொள்ள நம் சித்தத்தை விட்டுக் கொடுத்தல்

3. உடைமையை விட்டுவிட்டு உக்கிராணத்துவத்தை எடுத்துக் கொள்ளுதல்

சீஷத்துவத்தின் பாதை

சிந்திக்க

**வாரம் 2 – மனந்திரும்புதல்**

மனந்திரும்புதலின் பொருள்

மனந்திரும்புதலின் காரணிகள்

உண்மையான மற்றும் பொய்யான மனந்திரும்புதல்

மனந்திரும்புதலின் படிகள்

உண்மை மனந்திரும்புதலின் ஆதாரங்கள் – கனிகள்

தொடர்ந்து கொண்டிருக்கும் மனந்திரும்புதல்

தொடரும் மனந்திரும்புதலும், பவுலின் மூலம் சுயத்தைக் கண்டறிதலும்

மனந்திரும்புதலின் நிலைகள்

மேலும் படிக்க

சிந்திக்க

**வாரம் 3 - பாவம்**

சுபாவம்

வகைகள்

செயல்பாடு

விளைவுகள்

கண்ணோட்டம்

துவக்கம்

பழைய, புதிய உடன்படிக்கைகளில் பாவம் என்ற கருத்து

நடைமுறைப்படுத்துதல்

**வாரம் 4 - ஐந்து வகை பெரும் பாவங்கள்**

1) பெருமை

ஆன்மீகப் பெருமையை மேற்கொள்வது எப்படி?

எனது பெருமையைப் பற்றிய சிந்தனைகள்

2) மாய்மாலம்

எனது மாய்மாலம் பற்றிய சிந்தனைகள்

3) அவிசுவாசம்

எனது அவிசுவாசம் பற்றிய சிந்தனைகள்

4) செயலில்லாத வெறும் வார்த்தைகள்

எனது வெறும் வார்த்தைகள் பற்றிய சிந்தனைகள்

5) முறுமுறுத்தல் / குறை சொல்லுதல்

எனது முறுமுறுத்தல் பற்றிய சிந்தனைகள்

நடைமுறைப்படுத்துதல்

இறுதி வார்த்தைகள்

மேலும் படிக்க

**வாரம் 5 - விசுவாசம்**

விசுவாசம் - ஒரு விளக்கம்

விசுவாசம் - வேதாகம விளக்கம்

விசுவாசம் - பழைய, புதிய உடன்படிக்கைகளின் வேறுபாடுகள்

விசுவாசம் - பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளின் காலங்களில்

விசுவாசம் – இந்தக் காலத்து பிரச்சனைகள்

விசுவாசம் – அது எப்படி வருகிறது?

விசுவாசம் – அதன் அளவு

விசுவாசம் – அதன் இலக்கு

விசுவாசம் – தனிமையானதல்ல

விசுவாசம் – அதன் ஆதாரம்

விசுவாசம் – தேவனைப் பிரியப்படுத்தும் வகை

ஜெபம்

மேலும் படிக்க

சிந்திக்க

**வாரம் 6 – நோக்கம் – குடும்பம்**

தேவனது குடும்பம் எதனால் உருவாக்கப்பட்டிருக்கிறது?

எப்படிப்பட்ட பிதா நமக்கு இருக்கிறார்?

தேவனாகிய உங்கள் பிதாவிடமிருந்து ஒரு கடிதம்

**வாரம் 7 – நோக்கம் – அன்பு**

கிறிஸ்துவை நேசித்த அளவு தேவன் உங்களை நேசிக்கிறார்

கிறிஸ்துவை நேசித்த அதே முறையில் தேவன் உங்களை நேசிக்கிறார்

தேவன் உங்களை நேசித்த அதே முறையில் இயேசு உங்களை நேசிக்கிறார்

தேவனது அன்பிலிருந்து உங்களை எதுவும் பிரிக்க இயலாது

ஜெபம்

**வாரம் 8 – நோக்கம் – கிறிஸ்துவைப்போல மாறுதல்**

கிறிஸ்துவின் சாயலைப்போல் இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்

தேவனைப் பிரியப்படுத்தும் வகையில் இயேசு இந்த உலகில் செய்தது என்ன?

இயேசு எவ்வாறு தம்மைக் கீழ்ப்படித்தினார்?

இயேசு தன்னைப் பின்பற்ற நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்

தேவன் உங்களில் கிரியை செய்கிறார்

முடிவு

**வாரம் 9 – நோக்கம் – ஆராதனை**

ஆராதனை - பொருள் என்ன?

ஆராதனை - சில துணிகர எண்ணங்கள்

ஆராதனை - ஒரு வாழ்க்கை முறை

ஆராதனை - பழைய, புதிய ஏற்பாடுகளில் வெளிப்பட்ட முறைகள்

மோசேயின் கூடாரமும், தாவீதின் கூடாரமும் - ஆராதனையில் வித்தியாசங்கள்

ஆராதனை - உட்பிரிவுகள்

தியாகம் இல்லாமல் ஆராதனை இல்லை

உடல், ஆன்மா, ஆவி ஆகியவற்றால் தேவனை ஆராதிப்பது எப்படி?

தேவனுக்கு நமது பதிற்செயலாக ஆராதனை

தேவன் - நமது ஆராதனையின் இலக்கு

அவரை வாஞ்சையுடன் ஆராதித்தல்

அவரை ஆராதிப்பது நமது நோக்கம்

ஆராதனை - உங்களைப் படைத்தவருக்கு இன்பத்தைக் கொடுப்பது

முடிவு

**வாரம் 10 - என் பணி**

நமது மூன்று வகைப் பணி

இந்தப் பணியை நான் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

## இந்தப் புத்தகத்தைப் பற்றி...

சீஷத்துவம் பற்றிய இந்தப் புத்தகத்தை நீங்கள் வைத்திருப்பதால், நம் கர்த்தரும் இரட்சகருமான இயேசுவைப் பின்பற்றுவதில் நீங்கள் தீவிரமாக இருக்கிறீர்கள், அதற்காகக் கர்த்தரை நான் துதிக்கிறேன். விசுவாசம், ஆசீர்வாதங்கள் போன்ற தலைப்புகளில் பல புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால், சீஷத்துவம் என்ற அதிகம் புறக்கணிக்கப்பட்ட தலைப்பில் புத்தகங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. நம் கர்த்தர் தமது திருச்சபைக்குக் கொடுத்த கட்டளையான அனைத்து உலகத்தையும் சீஷர்களாக்க வேண்டும் என்பதுவே சீஷத்துவம் ஆகும்.

உலக கிறிஸ்தவ ஐக்கியத்தில் இந்த சீஷத்துவப் பாடங்களை உருவாக்கினோம். இது பலரது வாழ்க்கைகளைப் புதுப்பித்திருக்கின்றது. இந்தப் புத்தகம் உங்களையும் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷராக மாற்றும் என்பதில் எங்களுக்குப் பெரும் நம்பிக்கை உண்டு.

இந்தப் பாடங்களைப் பற்றிய முழுமையான விடியோக்கள் யூ ட்யூப் சானலில் கிடைக்கின்றது. கீழ்க்கண்ட முகவரியில் இணையத்தில் தேடிப் பார்த்து பயன்பெறுங்கள்:

> www.youtube.com/user/wcflondon/playlists சீஷத்துவப் பாடங்கள் (Discipleship Course) என்ற தலைப்பை பட்டியலில் (playlist) தேடிப் பார்க்கவும்.

இந்தப் புத்தகம் சாதாரணமாக வாசிப்பதற்கு உரியது அல்ல என்பதையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். தீவிரமாகத் தேடுவோருக்குக் கீழ்க்கண்ட அறிவுரைகளை நான் கொடுக்கிறேன்:

1. இந்தப் புத்தகத்தைக் கிறிஸ்தவ வாழ்வுக்கான கையேடாக ஜெபத்துடன் வாசித்து, தியானியுங்கள். நீங்கள் குறிப்புகள் எழுதுவதற்காகவே இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் அதிகமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
2. உங்களுடன் இந்தக் கையேட்டைப் படிக்க இன்னும் ஒருவர் கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். உங்களது போராட்டங்கள் மற்றும் சவால்களை நீங்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு சேர்ந்து ஜெபிக்க இது வசதியாக இருக்கும்.
3. மற்ற புத்தகங்களை வாசிப்பது போல இந்த புத்தகத்தை ஒரே மூச்சில் வாசித்துவிடாதீர்கள். ஒரு நேரத்தில் ஒரு அத்தியாயத்தை எடுத்துக் கொண்டு, அந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சவால்களை மேற்கொள்ள இயலும்வரை அதை முற்றிலும் படியுங்கள். அதற்கு முன் அடுத்த அத்தியாயத்துக்குப் போகாதீர்கள்.
4. இந்தப் புத்தகத்தை வாசித்து முடித்து ஒரு சீஷனாக மாறுவேன் என்றும் குறைந்த பட்சம் ஒருவரையாவது சீஷராக்க முயற்சிப்பேன் என்றும் கர்த்தரிடம் நீங்கள் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள்.

இந்த புத்தகத்தை நீங்கள் படித்து முடிக்க வேண்டும் என்று எங்கள் ஜெபங்கள் உங்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சீடராக மாற வேண்டும் என்ற தீவிரமான விருப்பம் இல்லை என்றால், தயவு செய்து இந்தப் புத்தகத்தை நீங்கள் வாசிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்தப் புத்தகத்தை உங்களுக்குக் கொண்டு வருவதில் என்னை ஒரு கருவியாக பயன்படுத்தியதற்காகக் கர்த்தருக்கு நன்றி சொல்லித் துதிக்கிறேன். இன்று நான் இருக்கும் இந்த நிலைமைக்கு என்னை செதுக்குவதில் உதவிய ஒவ்வொருவருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

# சீஷத்துவம்

**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.**

**(மத்தேயு 6:19-21)**

மாற்கு 16:15 இன்படி நற்செய்தி ஊழியமானது ஒரு நபருக்கு மட்டும் அல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதற்கும் கொடுக்கப்பட்டது ஆகும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசமுள்ள ஒவ்வொருவரும் இந்தப் பெரும் கட்டளையை நிறைவேற்ற அழைக்கப் பட்டிருக்கிறோம். நீங்கள் ஞாயிற்றுக்கிழமை களில் மட்டுமல்ல; 24 மணி நேரமும் / 7 வார நாட்களும் / 365 நாட்களும் கிறிஸ்தவர்கள். ஆகவே கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஒவ்வொரு விசுவாசியும் நற்செய்தி சொல்லும் பணியைச் செய்து, இரட்சிக்கப்படாதவர்களை தேவனுடைய ராஜ்யத்துக்குள் கொண்டு வர வேண்டும்.

நற்செய்தி என்னும் வரமும், நற்செய்தியாளராக வேண்டும் என்ற குறிப்பிட்ட அழைப்பும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் இருக்கும் இரு வித்தியாசமான பகுதிகளாகும்.

இந்த இரண்டையும் நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது. அப்போஸ்தலர் 1:8 இவ்வாறு சொல்கிறது: 120 விசுவாசிகளின் மீதும் ஆவியானவர் பொழியப்பட்டபோது, அவர்கள் சாட்சி சொல்வதற்கான வல்லமையைப் பெற்றார்கள். சாட்சி என்பவர், அவர் அனுபவித்த ஒரு விஷயத்துக்கு உயிருள்ள சாட்சியாக இருக்கின்றார். அதைப்போலவே, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருப்பதற்குத் தேவையானவற்றால் நிரப்பப் பட்டிருக்கிறார். விசுவாசிகளுக்குத் தேவை யானவைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கிறிஸ்துவின் கிருபையின் மூலமாக வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று எபேசியர் 4:11 கூறுகிறது. ஆகவே நற்செய்தி வரத்தை, சாட்சி சொல்லுதல் என்னும் வார்த்தையுடன் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் நற்செய்தியாளருக்கு ஒரு பரந்த பொறுப்பு இருக்கின்றது. ஆனால் ஒரு விசுவாசியோ தான் எங்கிருந்தாலும் அங்கே சாட்சியாக இருக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வீடாகவோ, பணியிடமாகவோ இருக்கலாம்; எந்த இடமும் ஒரு ஊழியக்களமாக மாறுகின்றது. ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஊழியக்காரனாக மாறுகின்றார்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் முழுமையான வளர்ச்சிக்காக, ஐந்து நிலைகளில் ஊழியங்கள் இருக்கின்றது என்று எபேசியர் 4:7-16 சொல்கிறது. சமீபத்தில் மனம்திரும்பிய ஒருவருக்குச் சரியான கவனம் கொடுக்கப்படவில்லை என்றால், அவருக்கு வேத வசனம் கற்றுக் கொடுக்கப்படவில்லை என்றால் அவர் முந்திய நிலையைவிட மோசமான நிலைக்குச் சென்று விடுவார். இதை இயேசு இரட்டிப்பான நரகம் என்கிறார்.

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத் தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் (மத்தேயு 23:15).**

நற்செய்தி அல்லது நற்செய்தியாளர் பற்றி உலகம் எப்படிப் பார்க்கிறது என்று பார்க்காமல் வேதாகமம் என்ன சொல்கிறது என்பதையே பார்க்க வேண்டும்.

**எபேசியர் 4:13 சொல்கின்ற ஐந்து நிலை ஊழியங்களாவன:**

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| அப்போஸ் தலர்கள் | தீர்க்க தரிசிகள் | சுவி சேஷகர் | மேய்ப் பர்கள் | போதகர் கள் |

இவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இவை 1 கொரிந்தியர் 12:28இல் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.

“தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்க தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும் (இது நற்செய்தியாளர்களைக் குறிக்கின்றது), ஆளுகைகளையும் (கப்பலைத் திருப்புபவர்கள் என்று பொருள் கொடுக்கும் இந்த வார்த்தையானது ஆயர்கள் / போதகர்களைக் குறிக்கின்றது), பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்”

நற்செய்தியாளர்களை இயேசு மனிதர்களைப் பிடிப்பவர்கள் என்றார். அவர் அப்போஸ்தலர்களை அழைத்து, “நான் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்” என்றார்.

மீன்கள் கடலிலோ ஆற்றிலோ இருந்து பிடிக்கப்பட வேண்டும். ஒருவர் மனம்திரும்பிய பின்னர், அவர் உள்ளூர் சபையில் இணைக்கப்பட வேண்டும். ஒரு சீடராக ஆன்மீகத்தில் வளர்க்கப்பட வேண்டும். இதுதான் அப்போஸ்தலர்களின் வழக்கமாகவும் இருந்தது. ஆனால் தற்கால நற்செய்தி ஊழியர்கள் இவ்வாறு செயல்படவில்லை.

### சீஷர்களாக்குதல்

சகல நாட்டினரையும் நாம் சீடர்களாக்க வேண்டும் என்று மத்தேயு 28:19 மிகத் தெளிவாக நமக்கு அறிவுறுத்துகிறது. ‘ஜாதிகள்’ (நாடுகள்) என்று வேதம் சொல்வது, மக்கள் இனக் குழுக்களைக் குறிக்கின்றது. ஒவ்வொரு நாட்டிலும் பல மக்கள் இனக் குழுக்கள் இருக்கலாம். மனம் திரும்பிய ஒருவர் ஒரு சீடனாகக் கட்டி எழுப்பப்பட்டு தேவனது திட்டத்தின்படி ஆயத்தமாக்கப்படும்போதுதான் தேவ சித்தம் முழுமையடைகிறது. ஆகவே மனம் திரும்பிய ஒவ்வொருவரும் சீடராக மாற வேண்டும் என்பது கட்டாயமான ஒரு தேவையாகும்.

> “மனம் திரும்பிய ஒருவர் ஒரு சீடனாக கட்டி எழுப்பப்பட்டு தேவனது திட்டத்தின்படி ஆயத்தமாக்கப்படும் போது தான் தேவ சித்தம் முழுமையடைகிறது.”

## நித்தியம் வரை நிலைப்பதும் மாபெரும் பலனைக் கொடுப்பதுமான ஒரு முதலீடு

மாபெரும் கட்டளை என்பது இரு பக்கங்களை உடைய ஒரு நாணயத்தைப் போன்றதாகும். எந்தப் பணமாக இருந்தாலும் இரு பக்கங்களும் அச்சிடப்பட்டிருந்தால்தான் அது செல்லுபடியாகும்.

**மாபெரும் கட்டளைக்கும் இரு பக்கங்கள் இருக்கின்றன. இரு வேறு பணிகள் இருக்கின்றன. இதைக் கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்:**




**நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (மாற்கு 16:15).**

**நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, (மத்தேயு 28:19).**

இந்த இரு கட்டளைகளும் மாபெரும் கட்டளை என்னும் ஒரே கட்டளையின் இரு பகுதிகள் ஆகும். மிகக் கவனமாகப் பார்த்து, கீழ்ப்படிந்தால்தான் நாம் தேவனது மாபெரும் கட்டளையை நிறைவேற்ற முடியும். அப்படிச் செய்யும்போதுதான் நம் வாழ்க்கையைப் பற்றிய தேவனது சித்தம் முழுமையடையும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீது நீங்கள் வைத்திருக்கும் விசுவாசமானது ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவைப் போன்ற குணங்களுடன் நீங்கள் வாழ்வதில்தான் பிரதிபலிக்கும். விசுவாசம் உள்ளே இருக்கக் கூடியது. கனிகள் வெளிப்புறம் தெரியக்கூடியவைகள். நாம் விசுவாசிப்பது மட்டுமல்ல தேவன் நமக்குக் கொடுத்த அத்தனைக் கட்டளைகளையும் நாம் கைக்கொள்ள வேண்டும் என்று மாபெரும் கட்டளையானது நம்மிடம் எதிர்பார்க்கின்றது. விசுவாசியாக மட்டும் இருக்கும் ஒருவர் உண்மையான கிறிஸ்தவராக இருக்க முடியாது. விசுவாசிக்கின்ற ஒருவர், இயேசு கொடுத்த அத்தனை கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவார். அவர்தான் அதிகாரப்பூர்வமான, உண்மையான கிறிஸ்தவன்.

ஆனாலும் தற்காலத்தில் நற்செய்தி நீர்த்துப் போய்விட்டது. அதிகாரப்பூர்வமான உண்மையான நற்செய்தி புறக்கணிக்கப்படுகின்றது.

**கீழ்க்கண்ட வேத பகுதி இதை உறுதிப்படுத்துகிறது:**

**அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான் (மத்தேயு 3:1-2).**

யோவான் ஸ்நானகன், "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கம் செய்தார்.

**அது முதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் (மத்தேயு 4:17).**

இயேசுவும் அதே செய்தியைத்தான் பிரசங்கம் செய்தார். புதிய ஏற்பாட்டில் காணப்படும் முதல் வாக்குத்தத்தம் மத்தேயு 1:21-இல் இருக்கின்றது: “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்றான்.

முதலாவதாக, நீங்கள் பாவத்திலிருந்து மனம் திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகர் என்று விசுவாசிக்க வேண்டும்.

ஆதித் திருச்சபையின் பிரசங்கங்கள் கர்த்தரின் வார்த்தைகளை உறுதிப்படுத்தின. பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு செய்த பிரசங்கமே இதற்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டு ஆகும்:



**பேதுரு அவர்களை நோக்கி: “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி; இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான் (அப்போஸ்தலர் 2:38-40).**

“உங்கள் பாவங்களுக்காக உண்மையாகவே மனம் திருந்தாமல் இருந்தால் நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப்படவில்லை. அப்படியானால் நீங்கள் உண்மையான விசுவாசியும் இல்லை.”

இதைப் போலவே பவுலும் எபேசுவில் மூன்று ஆண்டுகளாகப் பிரசங்கம் செய்து வந்தார். இதை நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:21 ஆம் வசனத்தில் காணலாம்:

**“தேவனிடத்திற்கு மனந்திரும்புவதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும், நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.”**

யூதர்களுக்கு சாட்சியாகவும், புற ஜாதியாருக்குக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விடம் மனம் திரும்புவதைப் பற்றியும் அவர் பிரசங்கித்தார்.

உங்கள் பாவங்களுக்காக உண்மை யாகவே மனம் திருந்தாமல் இருந்தால் நீங்கள் உங்கள் பாவத்திலிருந்து இரட்சிக்கப் படவில்லை. அப்படியானால் நீங்கள் உண்மை யான விசுவாசியும் இல்லை. இதனால்தான் இந்தக் காலங்களில் மனம் திரும்பியவர்கள் என்று சொல்லப்படும் பலரும், போலி விசுவாசிகளாக இருக்கின்றனர். அவர்களது விசுவாசத்தைப் பற்றி அவர்களே குழம்பிப் போய் இருக்கின்றனர். அவர்களது விசுவாசமானது விவாதத்துக்குரியதாக, தீய வழிகளிலிருந்து திருந்தி வாழும் புதிய இதயம் இல்லாமல் வாழ்கின்றனர். ஆனாலும் தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.



லூக்கா 15:7-10 என்ற பகுதி என்ன சொல்கிறது என்பதை நாம் கவனிப்போம்:

மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சகேயுவின் வாழ்வில் இதன் முதல் காட்சியைக் காணலாம் (லூக்கா 19:1-10).

**“சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான் (வசனம் 8). இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே (வசனம் 9) என்றார்.”**

மேற்கண்ட வேதப் பகுதியில், சகேயு மனம் திரும்பி, தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்த பின்னர்தான் இயேசு சகேயுவின் வீட்டாருக்கு இரட்சிப்பு வந்தது என்று அறிவிக்கிறார். ஆகவே உண்மையான மனந்திரும்புதலைக் கொடுக்கும் மனமாற்றத்திற்குப் பின், இரட்சிக்கப்பட்ட நபர் தேவனது சித்தத்தின்படியான தனது வாழ்க்கையைக் குறித்து சீஷனாக மாற்றப்பட வேண்டும். சீஷத்துவத்துக்கு வழி நடத்தாத இரட்சிப்பு என்பது அரைகுறையான பணியாகும். சகேயு இயேசுவை விசுவாசித்தபடியால் அத்திமரத்தின் மேல் ஏறினார். அப்படியே சொத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்தல், அநியாயமாய் வாங்கப்பட்டதை நான்கு மடங்காகத் திரும்பக் கொடுத்தல் போன்ற தேவ கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தது அவரது இரட்சிப்பை முழுமையாக்கியது.

## தண்ணீரில் ஞானஸ்நானம்

ஒருவர் மனந்திரும்பியதும், அவர் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற வேண்டும். புதிய விசுவாசி செய்ய வேண்டிய முதல் செயலானது ஞானஸ்நானம் ஆகும்.

“நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு

ஞானஸ்நானங்கொடுத்து...'' (மத்தேயு 28:19).

''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசி யாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்'' (மாற்கு 16:16). மேற்கண்ட வசனங்கள் மிகத் தெளிவாக, தண்ணீர் ஞானஸ்நானத்தின் தேவையை வலியுறுத்து கின்றன. அப்போஸ்தலர் 2 ஆம் அதிகாரத்தில் (38-39 வசனங்கள்) பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு ஞானஸ்நானத்தின் தேவையைத் தெளிவாகச் சொல்கிறார். யோவான் 3:5 இல் கூட ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்காவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்கிறார் இயேசு. அதன் பின்னர் அந்தச் சீடன் ஒவ்வொரு நாளும், வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.

**சீஷத்துவத்துக்கான நிபந்தனைகள்**

லூக்கா 14: 25-35 யில், சீஷத்துவத்துக்கான நிபந்தனைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில், ஒரு உவமையுடன்கூட சீடனாக இருப்பதற்கான நிபந்தனைகளை இயேசு சொல்கிறார். நம் கட்டுப்பாட்டை மீறி எதுவும் போய்விடுவதற்கு முன்பு நாம் விஷயங்களைத் தீர ஆராய வேண்டும் என்பதைச் சொல்கின்றது. கோபுரத்தைக் கட்டுவதற்கு முன்பாக அதற்கு ஆகும் செலவைக் கணக்கிட வேண்டும் என்கிறார் இயேசு. அதைப்போலவே, இயேசுகிறிஸ்துவின் சீடனாக இருக்க வேண்டும் என்றால் அதற்கு ஆகக் கூடிய கிரயத்தைப் பற்றி நாம் கணக்கிட வேண்டும்.

**ஒரு சீடனாக இருக்க வேண்டும் என்றால் பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் மூன்று இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டுள்ளன:**

- வேறு எதையும் நேசிப்பதைவிட தேவனை அதிகமாக நேசிக்க வேண்டும். இயேசுவைப் பின்பற்றுவதற்கு எதுவும் தடையாக இருக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள் (வசனம் 26).
- ஒவ்வொரு நாளும் தேவனது சித்தத்தை ஏற்றுக் கொள்வதற்காக உங்கள் சொந்த சித்தத்தை வெறுத்து விடுங்கள் (வசனம் 27).
- உடைமையைக் கைவிட்டு, உக்கிராணத்துவத்தை எடுத்துக் கொள்ளுங்கள் (வசனம் 33).

### 1. வேறு யாரையும்விட கர்த்தரை அதிகம் நேசித்தல்.

முதல் நிபந்தனையானது, இயற்கையாக நமக்கு எந்த உறவின் மீதும் இருக்கின்ற தொடர்பைத் துண்டிப்பதாகும். நம் வாழ்வில் இருக்கும் எந்த உறவைக் காட்டிலும் இயேசு கிறிஸ்துவுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். வெறுத்தல் என்பதற்கு நமது இயற்கையான உறவுகளை விட்டுவிட வேண்டும் என்று பொருள் அல்ல. நமது பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் நாம் மதிப்பு கொடுக்க வேண்டும், அவர்களை நேசிக்க வேண்டும். ஆனால் எல்லாரையும்விட கர்த்தரை நாம் அதிகமாக நேசிக்க வேண்டும். நாம் அதைச் செய்யும்போது, கர்த்தர் தனது தெய்வீக அன்பை நம்மீது ஊற்றுவார், அதைக் கொண்டு நம்மைச் சுற்றி இருப்பவர்களை, அவர்கள் இருக்கிறபடியே நேசிக்க நம்மால் இயலும்.

லூக்கா 14:26 இவ்வாறு சொல்கிறது, “யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரனையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.” நீ என் சீடனாக இருக்க வேண்டும் என்றால் மற்றவர்களைவிட என்னை அதிகம் நேசிக்க வேண்டும் என்பதுதான் இதற்கான பொருளாகும். தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், ஆம் உங்கள் சொந்த உயிரைக்கூட அதிகமாக நேசிக்கக் கூடாது. இல்லையென்றால் நீங்கள் இயேசுவின் சீடராக முடியாது என்பதுவே அதன் பொருள். கர்த்தரால் அவரது ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட பலரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர்கள் தங்களது அழைப்பை நிறைவேற்ற முடியாதபடி அவர்களது பெற்றோர், வாழ்க்கைத் துணை, சில நேரங்களில் பிள்ளைகள் இருக்கின்றனர்.

எல்லா நேரங்களிலும் இயேசுவை நமது முன்மாதிரியாக எடுத்துக் கொள்வது முக்கியமானதாகும். இயேசு தனது தாயாருக்குக் கீழ்ப் படிந்தார், உலகில் அவர் இருந்த குறுகிய காலத்திலும் தன் தாயையும் உடன் பிறந்தாரையும் நன்றாகக் கவனித்துக் கொண்டார். ஆனால் கானாவூர் கல்யாண விருந்தில் அவர் கலந்துகொள்ள வந்தபோது, தன் தாயாகிய மரியாளிடமிருந்து தன்னை இவ்வாறு கூறி தூரப்படுத்திக் கொண்டார், “ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை” (யோவான் 2:4).

தனது சகோதரர்களுடனனான உறவைக் கையாளும் நிலை வந்தபோது இயேசு "என் பிதாவின் சித்தத்தை செய்கிறவர்களே எனக்கு தாயும், சகோதரருமாய் இருக்கிறார்கள்" என்று அவர்களுடனான உறவை தூரப்படுத்திக் கொண்டார்.

மற்றொரு சமயம் இயேசு தமது சீடர்களிடம் ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டபோது, அவரை எலியா என்றும் யோவான் என்றும் ஜனங்கள் கூறுகின்றனர் என்று பதிலளித்தனர். நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள் என்று மீண்டும் கேட்டபோது, "பேதுரு நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பதிலளித்தார். "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" (மத்தேயு 16:17) என்றார். ஆனால் அடுத்த சில மணித்துளி நேரத்தில் சிலுவைக்கு இயேசு போகக் கூடாது என்று அதே பேதுரு சொன்னபோது, "அப்பாலே போ சாத்தானே" என்று கண்டிக்கப்பட்டார் (மத்தேயு 16:13-23). அதே இயேசுதான் தனது உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், பேதுருவிடம் வந்து, அவரைப் புதுப்பித்து, திருச்சபையின் பொறுப்பாளராக அவரை ஏற்படுத்தினார்.

மேலும் இயேசுவின் நோக்க அறிக்கையானது யோவான் 6:38 என்ற வசனத்தில் சுருக்கமாக சொல்லப்பட முடியும்: "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்."

தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தைச் செய்து முடிப்பது மட்டுமே இயேசுகிறிஸ்துவுக்கு ஒரே நோக்கமும், ஒரே இலக்குமாய் இருந்தது. அதையே இயேசு தனது சீஷர்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றார்.

> "இங்கே சிலுவையை சுமத்தல் என்பது, இயேசுவைப் போல ஒரு சிலுவையை சுமந்து கொண்டிருப்பதைச் சொல்லவில்லை. மாறாக, உங்களது சுய சித்தத்தை வெறுத்தலைச் சொல்கிறது."

சங்கீதம் 73:25 என்ற வசனத்தைப்போலவே நாமும் சொல்ல முடியும் என்றால் சீடத்துவத்தின் முதல் நிபந்தனையை நாம் நிறைவேற்றியவர்களாவோம்: "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை."

யோவான் 14:21 மிகத் தெளிவாகச் சொல்கிறது, "நீங்கள் என்னை நேசித்தால் என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்." கர்த்தரை நேசிப்பவர்களுக்குத் தேவனுடைய ராஜ்யத்தில் மிகவும் முக்கியமானதும், மதிப்புள்ளதுமான இடம் கொடுக்கப்படும்.

## 2. கர்த்தரின் சித்தத்தை ஏற்றுக்கொள்ள நம் சித்தத்தை விட்டுக் கொடுத்தல்.



"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:27).

இங்கே சிலுவையை சுமத்தல் என்பது, இயேசுவைப்போல ஒரு மரத்தாலான சிலுவையை சுமந்து கொண்டிருப்பதைச் சொல்லவில்லை. மாறாக, உங்களது சுய சித்தத்தை வெறுப்பதைப் பற்றிச் சொல்கிறது. உங்கள் சுய சித்தத்தை செய்வதா அல்லது தேவனது சித்தத்தைச் செய்வதா? நம் ஒவ்வொருவரிடமும் இருக்கும் ஆதாமின் சுபாவமானது, இந்த உலகத்தின் இன்பங்களுக்காக நம்மை ஏங்க வைக்கின்றது. ஆனால் நாமோ தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. நமது சுய வாழ்க்கையானது கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு எதிரியாகும். இதைத்தான் வேதாகமம் மாமிசம் என்கிறது. மாமிசத்தில் தீய இச்சைகள் சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லா நேரமும் நம் விருப்பத்தின்படி செய்யவே அது நம்மைத் தூண்டிக் கொண்டிருக்கிறது. நமக்கான லாபத்தை, நமது மரியாதையை, நமது இன்பத்தை, நம் வழியை மட்டுமே நாடுகின்றது.

இந்த நிபந்தனையானது லூக்கா 9:23இல் வலியுறுத்தப்படுகின்றது : “ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.” அனுதினமும் என்ற வார்த்தையை இயேசு பயன்படுத்துவதன் மூலமாக, ஒரு விசுவாசி மனம் கடினமான ஒரு நபராக மாற 24 மணி நேரம் போதும் என்ற கருத்தை நமக்குச் சொல்கிறார். எபிரெயர் 3:13 ஐ கூர்ந்து கவனித்தால் நாம் 24 மணி நேரத்தில் இருதயக்கடினத்தைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனாலும் இதைப் பற்றிய விளக்கங்களை இன்னொரு பகுதியில் பார்க்கலாம்.



### 3. உடைமையை விட்டுவிட்டு உக்கிராணத்துவத்தை எடுத்துக் கொள்ளுதல்

லூக்கா 14:33, “உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.”

நம்மிடம் பொருட்கள் சொந்தமாக இருப்பதைக் கவனிக்கும்போது, நமக்கென்று

எதையும் நாம் வைத்திருக்க இயலாது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். வேதாகமம் இதற்கு உக்கிராணத்துவம் என்ற அருமையான வார்த்தையைப் பயன்படுத்துகிறது. இதற்குப் பொருள் என்னவென்றால் நம்மிடம் இருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம், கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதுதான்.

இதற்கான உதாரணத்தை ஆபிரகாமின் வாழ்க்கையில் நாம் காணலாம். ஆபிரகாமுக்கு 75 வயதாகும்போது கர்த்தர் ஆபிரகாமிடம் வந்து அவருக்கு ஒரு மகன் பிறப்பான் என்கிறார். 75 வயதில் ஒருவருக்கு குழந்தை பிறப்பது என்பது சாத்தியமில்லாத ஒரு விஷயமாகும். அதைத் தொடர்ந்து 24 ஆண்டுகளாக ஆபிரகாமின் வாழ்வில் எதுவும் நடக்கவில்லை. ஆபிரகாமுக்கு எப்படி இருந்திருக்கும் என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். பின்னர் ஆபிரகாம் 99 வயதானவராக இருந்தபோது கர்த்தர் அவரிடம் மீண்டும் வந்து, அவருக்கு ஒரு மகன் பிறப்பான் என்கிறார். ஆனால் இது நடப்பதற்கான வாய்ப்பு என்பது சாத்தியமில்லை என்பதிலிருந்து, முடியவே முடியாது என்ற நிலையில் இருக்கின்றது. ஆனாலும் அடுத்த ஆண்டில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். இப்போது ஆபிரகாமுக்கு ஒரு உண்மை தெளிவாகப் புரிகின்றது: தனது முயற்சியோ, திறமைகளோ இந்தக் குழந்தையைத் தனக்குத் தரவில்லை.

ஈசாக்கு என்னும் அவரது மகன்தான் ஆபிரகாமின் முக்கியமான சொத்து. பின்னர் ஒரு நாளில், கர்த்தர் ஈசாக்கைத் தனக்கு பலியாகத் தரும்படி கேட்டார். ஆபிரகாமும்

> "நம்மிடம் இருக்கும் ஒவ்வொரு பொருளுக்கும் நாம் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம், கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்"

ஈசாக்கை பலிபீடத்தில் கிடத்திவிட்டார். பலியிட ஆயத்தமாகிவிட்டார். ஆனால் கர்த்தர் குறுக்கிட்டு, ஆபிரகாம் தனக்கு முழு மனதோடு கீழ்ப்படிபவர் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதால், இனி பலி தேவையில்லை என்கிறார் (ஆதியாகமம் 22). அதன் பின்னர், ஈசாக்கு தன்னுடன் தன் வீட்டில் இருந்தாலும், அவன் தனது சொத்து அல்ல என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தார். ஏனென்றால் ஈசாக்கு கர்த்தருடையவன்.



மோசேயை நாம் அடுத்த உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவர் எகிப்தியன் ஒருவனைக் கொன்ற பின்னர் நாட்டைவிட்டே ஓடிப் போனார். தன் மாமனாருடன் 40 ஆண்டுகள் இருந்தார். அந்த காலத்தில் கர்த்தர் அவருடன் எரிகின்ற முட்செடியிலிருந்து பேசினார். யாத்திராகமம் 3 ஆம் அதிகாரத்தில் இதை நாம் காணலாம். உன் கையில் இருப்பது என்ன என்று மோசேயிடம் கர்த்தர் கேட்டார். அது ஒரு கோல் என்றார் மோசே. அதைக் கீழே போடும்படி கர்த்தர் சொன்னார், மோசே அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கோலைத் தரையில் போட அது பாம்பாக மாறியது. அதை வாலைப்பிடித்துத்

தூக்கச் சொன்னார் கர்த்தர், அது மீண்டும் கோலாக மாறியது. அதன் பின்னர் அந்தக் கோலானது, மோசேயினுடையது என்று அல்ல, தேவனுடைய கோல் என்றே வேதாகமத்தில் குறிப்பிடப்படுகின்றது; “மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்துக்குத் திரும்பினான்; தேவனுடைய கோலையும் மோசே தன் கையிலே பிடித்துக் கொண்டுபோனான்” (யாத்திராகமம் 4:20).

உங்கள் கையிலிருப்பது எதுவானாலும் அதைப் பலிபீடத்தில் போட்டுவிடும்போது, கர்த்தர் அதை ஒரு அற்புதமான பரிசாகத் தனது மகிமைக்கென்று மாற்றுவார். அந்த கோலானது 30 லட்சம் பேராக இருந்த இஸ்ரவேல் மக்கள் அனைவரையும் 40 ஆண்டுகளாக வனாந்திரத்தில் வழி நடத்திச் செல்லப் போதுமானதாக இருந்தது.

> “உங்கள் கையிலிருப்பது எதுவானாலும் அதைப் பலிபீடத்தில் போட்டுவிடும் போது, கர்த்தர் அதை ஒரு அற்புதமான பரிசாகத் தனது மகிமைக்கென்று மாற்றுவார்.”

இதுதான் நமது உடைமைகள் அனைத்தையும் விட்டுவிடுதல் என்பதாகும். நமக்கு இருப்பவை அனைத்துமே பலிபீடத்தில் படைக்கப்பட வேண்டும். கர்த்தரிடம் விட்டுவிடப்பட வேண்டும். நீங்கள் வாழும் வீடும், ஓட்டிக் கொண்டிருக்கும் காரும், கர்த்தருடையது, உங்களை இலவசமாக அனுபவிக்கச் சொல்லி அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

**விரைவாக ஒரு பட்டியலை எழுதுங்கள்:**

- ☐ அ) வங்கிக் கணக்கு,
- ☐ ஆ) சொத்துக்கள் (வீடு, அலுவலகம் போன்றவை)
- ☐ இ) வேலை அல்லது வியாபாரம்,
- ☐ ஈ) தகுதிகள்,
- ☐ உ) வரங்களும் தாலந்துகளும்,
- ☐ ஊ) வாழ்க்கைத் துணை (கணவன் அல்லது மனைவி)
- ☐ எ) பிள்ளைகள்.

இத்துடன் இந்த உலகத்தில் நீங்கள் மதிப்புள்ளது என்று நினைக்கின்ற அனைத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். இயேசுகிறிஸ்துவின் உண்மையான சீடனாக மாற வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், இவை எல்லாவற்றையும் பலிபீடத்தில் படைத்துவிட வேண்டும். அதன் பின்னர்தான் நாம் முழு இருதயத்துடனும் கர்த்தரை நேசிக்க முடியும். இதுதான் மத்தேயு 5:8 இல் சொல்லப்பட்டுள்ள, சுத்த இருதயம் ஆகும்.

சுத்த மனசாட்சி மட்டும் இருப்பது போதாது. தெரிந்த பாவங்களை மட்டும் விட்டுவிட்டோம் என்றுதான் இதற்கு அர்த்தமாகும். சுத்த இருதயம் என்பதற்கு, எல்லாவற்றையும் நாம் விட்டுவிட்டோம் என்று அர்த்தம்.

சீடத்துவத்தின் கிரயம் என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கு, நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று கர்த்தர் நினைப்பதில்லை. ஆகவேதான் மக்கள் திரள் கூட்டமாக அவரிடம் வந்த உடனேயே, சீடத்துவத்தின் கிரயம் என்ன என்பதைப் பற்றி பேசினார் (லூக்கா 14:26-33). அதற்கும் மேலாக, சீடனாக மாற விருப்பமில்லாத ஒரு நபர், சாரமற்ற உப்பைப்போல கர்த்தருக்கு பயனற்றவராக இருப்பார் என்றும் சொல்கிறார் (லூக்கா 14:35).

**“உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்”(லூக்கா 14:34-35).**

## சீஷத்துவத்தின் பாதை

மத்தேயு 28:20இல் இயேசு நமக்கு ஒரு மாபெரும் கட்டளையைக் கொடுத்திருக்கிறார். சீடர்கள் கர்த்தர் கொடுத்த ஒவ்வொரு கட்டளை யையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இப்படியாக, நீங்கள் அவரது சீடர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். மத்தேயு 5 முதல் 7 வரையிலான அதிகாரங்களில் கொடுக்கப்பட்ட போதனை களிலிருந்து, நாம் கட்டளைகளை வாசிப்பது மட்டுமல்ல, அவற்றுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**“நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:22-25).**

பிறருக்குப் போதிப்பதற்கு முன், ஒரு சீடன் கற்றுக் கொள்பவனாகவும், பின்பற்றுகின்றவனாகவும் இருக்க வேண்டும்.

> “கிறிஸ்துவிடம் மக்களை அழைத்து வரும் நற்செய்திக் கூட்டங்கள், உள்ளூரிலேயே ஒரு திருச்சபையை ஏற்படுத்துவதில் முடிய வேண்டும்.”

மறுபடியும் பிறந்த விசுவாசிகள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் பெரும் திரளான மக்கள், தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவை எந்த வழியிலும் பிரதிபலிக்காதவர்களாகவே இருக்கின்றனர். இதுதான் வேதனையான ஒன்றாகும். இதற்குக் காரணம், திருச்சபையானது விசுவாசிகளை சீடர்களாக மாற்றாமல் வைத்திருப்பது தான்.

யார் இயேசுவின் சீடராக முடியும், யார் சீடராக முடியாது என்று மேலே கண்ட நாம், நாம் இயேசுவின் சீடர்கள் என்பதை இந்த உலகம் எப்படிக் கண்டுகொள்ளும் என்பதையும் பார்க்கலாம். இதை இயேசுவே யோவான் 13:35இல் கூறியிருக்கிறார்:

“நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர் களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்.”

இந்த உலகத்தில் இருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்வும் இந்த வசனத்துக்கு ஒத்துப் போகின்றதாக இருக்கின்றதா? வேதாகமத்தை வாசித்தல், ஆலய ஆராதனைகளில் பங்கேற்றல், அன்னிய பாஷைகளில் பேசுதல், மலையை அசைக்கும் விசுவாசம், தசமபாகம் கொடுத்தல், ஆடிப் பாடுதல், கர்த்தருக்காகப் பெரும் நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்றவைகள் மட்டுமே கிறிஸ்தவ வாழ்க்கை ஆகாது. இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்த மூல செய்தியிலிருந்து நாம் எந்த அளவுக்கு விலகி வந்திருக்கிறோம் என்பதைப் பாருங்கள்.

ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கும் தீவிரமான அன்பின் மூலம்தான் நீங்கள் இயேசுவின் சீடர்கள் என்று அடையாளம் காணப்படுவீர்கள். கிறிஸ்துவிடம் மக்களை அழைத்து வரும் நற்செய்திக் கூட்டங்கள், உள்ளூரிலேயே ஒரு திருச்சபையை ஏற்படுத்துவதில் முடிய வேண்டும். அங்குதான் சீடர்கள் ஒருவர்மீது ஒருவருக்கு இருக்கும் அன்பை வெளிக்காட்ட முடியும்.

இயேசுவும் அவரது சீடர்களும் எப்படித் தங்கள் ஊழியங்களை நடத்தினார்கள்? அவர்கள் மக்களுக்கு உணவளித்து அவர்களுக்குத் தேவனுடைய வார்த்தையைப் போதித்தார்கள். மக்கள் வேதத்தைப் பின்பற்றினார்களா என்பதைக் கவனித்தார்கள். யோவான் 6 ஆம் அதிகாரத்தைத்தான் பல நேரங்களில் நான் எனது பிரசங்கங்களுக்காகத் திருப்பிப் பார்ப்பேன். இயேசு அந்த அதிகாரத்தை மட்டும் ஒரு டிவிடி-யாக வெளியிட்டிருந்தால் பலர் அதை வாங்கிப் பார்த்திருக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இயேசு 5,000 பேருடன் ஊழியத்தைத் துவங்கினார் (யோவான் 6:2) ஆனால் இறுதியில் 11 பேர்தான் மிஞ்சினார்கள் (யோவான் 6:70). திரளான மக்கள் அப்பத்தையும் மீனையும் சாப்பிட்டிருந்தாலும், வேத வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் பட்டபோது, அவர்களால் அதைக் கையாள முடியாது என்று நினைத்து இயேசுவை விட்டுப் போய்விட்டனர் (யோவான் 6:60,66). அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்ற

> உலகப்பிரகாரமாக இயேசுவின் ஊழியத்தை நாம் அளவிட்டால், அது ஒரு பெரும் தோல்வியான ஊழியம் என்று தான் சொல்லப்படும். ஏனென்றால் அவரது மூன்றரை ஆண்டு ஊழியத்தில் அவரால் 11 சீடர்களை மட்டுமே உருவாக்க முடிந்தது. ஆனால் அந்த 11 பேரும் தான் உலகத்தையே நித்தியத்துக்கும் மாற்றிவிட்டனர்

ஆராய்ச்சியில் இறங்காமல், நாம் இப்போதே என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிந்து அதைச் செயலில் காட்டுவோம்.

நாம் நமது திருச்சபையின் தரத்தைப் பற்றி சிந்திப்பதைவிட, அளவைப் பற்றிதான் அதிகமாகச் சிந்திக்கிறோம். உலகப்பிரகாரமாக இயேசுவின் ஊழியத்தை நாம் அளவிட்டால், அது ஒரு பெரும் தோல்வியான ஊழியம் என்றுதான் சொல்லப்படும். ஏனென்றால் மூன்றரை ஆண்டு ஊழியத்தில் அவரால் 11 சீடர்களை மட்டுமே உருவாக்க முடிந்தது. ஆனால் அந்த 11 பேரும்தான் உலகத்தையே நித்தியத்துக்கும் மாற்றிவிட்டனர் என்பதை நாம் மறந்து போய்விடக் கூடாது.

போதையை மறக்கச் செய்வது போன்ற, பழக்கவழக்கங்களை மாற்றச் செய்வது இந்த பாடங்களின் நோக்கமல்ல. இது ஆன்மீக மறுமலர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. தனது கிருபையால் கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார்.

“ஜீவனுக்குப் போகும் பாதையானது நெருக்கமும், இடுக்கமுமானது. வெகு சிலரே அதைக் கண்டடைவார்கள். இந்த வழியைத் தேர்ந்தெடுக்க நீங்கள் விருப்பமாயிருக்கின்றீர்களா?




நீங்கள் இதைக் குறித்து தீவிரமான எண்ணம் இல்லாதவர்களாக இருப்பீர்களானால், உடனேயே இந்தப் பாடத்திட்டத்தையும் புத்தகத்தையும் கீழே போட்டுவிட்டு போய்விடுங்கள். இதைத் தொடர வேண்டாம். ஆனால், கர்த்தர் நமது மகிழ்ச்சியைக் கொல்லும் ஒரு நபர் அல்ல என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவுமே அவர் விரும்புகிறார். கர்த்தரை நித்தியத்துக்கும் பின்பற்றுவது என்பது இந்த உலகத்திலேயே நாம் செய்யக்கூடியவற்றில் மிகவும் அருமையான ஒரு அனுபவமாகும். இந்த வாழ்வில் உங்களது கீழ்ப்படிதல் என்பது நித்திய வாழ்வில் மகிமையான எதிர்காலத்தில் மாபெரும் பலன்களையும், மகிழ்ச்சியையும் கொண்டு வரும்.

தன்னையும் தனது வார்த்தையாகிய வேதாகமத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் மக்களைக் கர்த்தர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

நாங்களும் அதையே எதிர்பார்க்கிறோம்!!

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத்தேயு 11:28-30).

**சிந்திக்க**

நீங்கள் சீடராவதற்குத் தடையாக இருப்பவை என்று நீங்கள் நினைப்பவை யாவை?

இந்தத் தடைகளை ஜெபத்தில் வைத்து, அவற்றை மேற்கொள்ளக் கர்த்தர் உதவி செய்ய விட்டுக் கொடுப்பீர்களா?



## நித்தியம் வரை நிலைப்பதும் மாபெரும் பலனைக் கொடுப்பதுமான ஒரு முதலீடு

தேவனது குடும்பத்தில் செயல்படும் ஒரு உறுப்பினராக இணைவது என்பது ஒரு சிறப்பான பயணமாகும். இதை தேவனுடன் ஒரு உடன்படிக்கை செய்து பதிவு செய்து கொள்வோம்.




## தேவனுடைய குடும்பத்துக்கு உங்களை வரவேற்கிறோம்!

# மனந்திரும்புதல்

பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட அல்லது விடுதலையாக முதலில் நம்மிடம் நடைபெற வேண்டிய காரியம் மனந்திரும்புதல். மனந்திரும்புதலைப் பற்றி ‘எரிக் காவல்’ என்ற தேவமனிதர் எழுதும்போது அது மூன்று முக்கிய உள்ளான மற்றும் வெளிப்படையான செயல்களைக் கொண்டது என்று குறிப்பிடுகிறார்.

**மனந்திரும்புதல் என்றால் என்ன?**

1. ஒருவரது எண்ணங்களில் அல்லது மனதில் முதலாவது பாவத்தைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்கிறான்.
2. தனது உணர்வில் பாவத்தைக்குறித்து வலியையும் மனவேதனையையும் வெளிப்படுத்துகிறான். பாவத்தை வெறுக்கிறான்.
3. இதன்மூலம் அவனது சிந்தித்தலில் அல்லது செயல்பாடுகளில் மாறுதல் உண்டாகிறது. பாவத்திலிருந்து விடுதலை பெறுகிறான். பரிசுத்த தேவனை தேடுகிறான்.

எபிரெயர் 6:1,2 ஆகிய வசனங்களில் கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரம் என்று சொல்லப்படும் வரிசையில் முதலாவது வருவது மனந்திரும்புதலாகும். தினமும் தேவனோடு தொடர்புகொண்டு தேவ உறவில் நிலைத்து வாழ்வதற்கு அடிப்படையான அஸ்திபாரம் மனந்திரும்புதல் ஆகும். ஒரு மனிதனின் வாழ்க்கையில் மனந்திரும்புதல் வரும்போது கிறிஸ்துவைப்போல சிந்தித்து கிறிஸ்துவைப்போல செயல்பட ஆரம்பிப்பான். அவனது வாழ்வில் கர்த்தரை நோக்கிய U Turn ஆரம்பிக்கும். ஆக கிறிஸ்துவைப்போல நாம் மாற மனந்திரும்புதல் சரியாக இருக்க வேண்டும்.

மனந்திரும்புதலைப் பற்றி வேதமும் தேவனும் செல்லுவது என்ன என்பதை அறிய 2 இராஜாக்கள் 17:13ஐ திருப்புங்கள்.

நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும், என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு சொல்லி அனுப்பினதுமான நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள், ஞானதிருஷ்டிக்காரர் எல்லாரையும் கொண்டு இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் திடசாட்சியாய் எச்சரித்து...”

இதில் கர்த்தர் தீர்க்கதரிசிகள், ஞானதிருஷ்டிக்காரர் “எல்லாரையும் கொண்டு” ஜனங்கள் மனந்திரும்ப வேண்டுமென்று எச்சரிக்கிறார். மேலும் எரேமியா 25:8,9 இல் “எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை உங்களில் அவனவன் தன்தன் பொல்லாத வழியையும் உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டு திரும்பி கர்த்தர் உங்களிடத்திற்கு தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரையும் ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்து....”

இங்கு ஒரு சிலரைக் கொண்டு அல்ல சகல ஊழியக்காரரையும் கொண்டு தீயவழிகள் மற்றும் பாவத்தைவிட்டு மனந்திரும்ப எச்சரிக்கிறார்.

எசேக்கியேல் 18:20இல் “நீங்கள் மனந்திரும்புங்கள் உங்கள் எல்லா மீறுதல்களையும் விட்டு திரும்புங்கள், அப்போது அக்கிரமம் உங்கள் கேட்டுக்கு காரணமாய் இருப்பதில்லை” என்று கர்த்தர் எரேமியாவைக் கொண்டு ஜனங்களை எச்சரிக்கிறார். ஆக பழைய ஏற்பாடு முழுவதும் இது ஒரு இழையைப்போல எல்லா புத்தகங்களிலும் ஊடுருவி உள்ளதைக் காணலாம்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர் எல்லாரையும் கொண்டு ஜனங்களை எச்சரித்துச் சொன்ன ஒரே வார்த்தை “**மனந்திரும்புங்கள்**” என்பதே. பழைய ஏற்பாடு முடிந்து 430 வருட இடைவெளிக்குப் பின்பு புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில் யோவான் ஸ்நானகனைக் கொண்டு “**மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது**” (மத்தேயு 3:2) மனந்திரும்புங்கள் என்று மீண்டும் சொல்கிறார்.

யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு இயேசு மத்தேயு 4:17இல் “**மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது**” என்று பிரசங்கம் பண்ணத்தொடங்கினார்.

மீண்டும் லூக்கா 13:3-5 வசனங்களில் இயேசு “நீங்கள் மனந்திரும்பாமற்போனால் அப்படியே கெட்டுப்போவீர்கள்” என்று எச்சரிக்கிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் தங்களது ஊழியத்தைத் தொடங்கும்போது மாற்கு 6:12இல் ‘‘மனந்திரும்புங்கள்’’ என்றே பிரசங்கித்தார். இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தந்தபின்பு அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட செய்தி லூக்கா 24:46,47இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. கடைசியாக இயேசு மனந்திரும்புதல் குறித்து பிரசங்கம் பண்ணும்படி உபதேசித்தார்.

இயேசுகிறிஸ்து எடுத்துக் கொள்ளப்பட்டு பரிசுத்த ஆவி அருளப்பட்டவுடன் அப்போஸ்தலனாகிய பேதுரு தனது முதல் பிரசங்கத்தில் (அப்போஸ்தலர் 2:38) ‘‘**நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்**’’ என்று உபதேசிக்கிறார். அன்று 3000 பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள் என்று வேதம் கூறுகிறது. அப்போஸ்தலர் 17:30இல் பவுல் அப்போஸ்தலன் மார்ஸ் மேடையில் முழங்கிய சுவிசேஷ வார்த்தைகள் இதோ ‘‘**அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளை இடுகிறார்.**’’ எல்லா இடத்திலுமுள்ள எல்லா மனுஷருக்கும் பிரசங்கி என்று தேவன் கட்டளையிட்டதைக் குறிப்பிடுகிறார்.

எபேசு சபையில் மூன்று வருட ஊழியத்தை முடித்து பவுல் புறப்படுவதற்கு முன்பு அந்தச் சபையின் மூப்பர்களுக்குத் (அப்போஸ்தலர் 20:20) ‘‘**தேவனிடத்திற்கு மனந்திரும்புகிறதைக் குறித்தும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும் நான் யூதருக்கும், கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்**’’ என்று சொல்லிவிட்டு, இதையே வீடுகள்தோறும் பிரசங்கித்ததாகக் கூறுகிறார்.

மனந்திரும்புதல் இல்லாமல் தேவனை ஏற்றுக் கொண்டதாக வேதத்தில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. சுமார் 60 வருடங்களுக்குப் பின்பு அப்போஸ்தலனாகிய யோவானுக்குப் பிரசன்னமாகி வெளிப்படுத்தின விசேஷத்தில் (வெளிப்படுத்தல் 3:19) லவோதிக்கேயா சபையின் தூதனுக்குத் தேவன் சொன்ன கடைசி தீர்க்கதரிசன வார்த்தையும் அதுதான். ‘‘**ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு**’’ என்று எச்சரிக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழு சபைகளுக்கு எழுதின கடிதங்களில் ஐந்து சபைகளுக்கு எழுதும்போது மனந்திரும்புதலைக் குறித்து வலியுறுத்துகிறார்.

மனந்திரும்புதல் இல்லாமல் தேவனை விசுவாசிப்பது பிரயோசனமற்றது. மனமாறுதல் என்பது ஒரு மனதின் தீர்மானம் அல்லது ஒரு தேர்வு அல்லது முடிவு என்று சொல்லலாம். பாவத்தைக் குறித்து இருதயத்தில் உணர்த்தப்படும்போது அதை அறிக்கை செய்து ஒருவரின் நடவடிக்கைகளில் மாற்றம் உண்டாக வேண்டும். இதுதான் மனந்திரும்புதல்.

### மனந்திரும்புதலின் பொருள்

மனந்திரும்புதல் என்றால் மனதின் மாற்றம் என்று பொருள். இது ஒரு தீர்மானம், தெரிந்தெடுப்பு, இதயத்தின் முடிவு, சித்தத்தின் வெளிப்படையான செயல்பாடு. தற்காலத்தில்

> “மனந்திரும்புதல் என்பது தொடர்ந்து நடைபெறவேண்டிய காரியம். ஏதோ ஒருமுறை மட்டும் நடந்த காரியம் அல்ல. அனுதினமும் மனந்திரும்புவது அவசியம். அப்போதுதான் நமது வாழ்க்கை மாறும். இல்லையென்றால் மாறவே மாறாது.”

வாழும் வாழ்வைவிட வருங்காலத்தில் என் வாழ்வு எவ்வாறு வித்தியாசமானதாக இருக்கும் என்பதைத் தீர்மானித்தல் ஆகும். மனஸ்தாபம் என்னப்படும் மனம் குத்தப்படுதலில் துவங்கும் ஒரு தொடர் நிகழ்ச்சி இதுவாகும். மனஸ்தாபப்படுதல் என்பது பாவ சுபாவத்துக்காக மனம் வருந்துதல் அல்லது உடைந்து போகுதல் ஆகும்.

மனந்திரும்பாமல் அநேகர் ஆண்டவரை விசுவாசிப்பதால்தான் பிரச்சனை ஏற்படுகின்றது. அவர்கள் மூலம் தேவநாமம் தூஷிக்கப்படுகிறது. பாவி என்று உணர்த்தப்பட்டவுடன் தன் பாவங்களைத் தேவனிடம் அறிக்கை செய்து, தேவனோடும் மனுஷரோடும் ஒப்புரவாவது மிகவும் அவசியம். அவ்வாறு அறிக்கைசெய்து நடவடிக்கைகளில் மாற்றம் எதுவும் இல்லாது சாட்சிகளை இழந்தோர் ஏராளம்.

2 கொரிந்தியர் 7:10இல் இரண்டுவிதமான துக்கங்களைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. **“தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப் படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக் கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்கு கிறது. லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.”** தேவனுக்கேற்ற துக்கம் பாவத்தை அறிக்கை செய்து மனந்திரும்ப வைக்கும்; மனந்திரும்பின பிறகு குற்ற உணர்ச்சிக்கு இடமளிக்காது. உலகப்பிரகார மான துக்கமோ அல்லது லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்கும்.

மனந்திரும்புதல் என்பது தொடர்ந்து நடைபெறவேண்டிய காரியம். ஏதோ ஒருமுறை மட்டும் நடந்த காரியம் அல்ல. மனந்திரும்பி விட்டீர்களா என்று கேட்டால் கடந்த காலத்தில் ஏதோ ஒரு ஆண்டைக் குறிப்பிடுவர். ஆனால் அனுதினமும் மனந்திரும்புவது அவசியம். அப்போதுதான் நமது வாழ்க்கை மாறும். இல்லையென்றால் மாறவே மாறாது.

வேதத்தில் செய்த தவறுக்கு மனம் வருந்தி அறிக்கை செய்தும் நடவடிக்கை மாற்றம் ஏதும் இல்லாது சாட்சிகளை இழந்தோர் ஏராளம். சாப்பிட உதவாத கனியை ஒரு மரம் கொடுக்கிறதென்றால் அந்தக் கனியை மட்டும் அப்புறப்படுத்துவதால் சுவையான கனி திரும்ப அந்த மரத்தில் காய்க்காது. ஏனென்றால் அது அந்த மரத்தின் அஸ்திபாரமாகிய வேர் சம்பந்தமான பிரச்சனை. வேர் ஊடுருவி இருக்கும் மண்ணின் தன்மையையே முற்றிலும் மாற்றினால்தான் நல்ல

> “சாப்பிட உதவாத கனியை ஒரு மரம் கொடுக்கிறதென்றால் அந்த கனியை மட்டும் அப்புறப்படுத்துவதால் சுவையான கனி திரும்ப அந்த மரத்தில் காய்க்காது. ஏனென்றால் அது அந்த மரத்தின் அஸ்திபாரமாகிய வேர் சம்பந்தமான பிரச்சனை.”

கனியை அந்த மரம் கொடுக்க இயலும். கிளையை வெட்டுவதாலோ பழத்தை அப்புறப்படுத்துவதாலோ எந்தவொரு மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது.

அதேபோலத்தான் ஒரு மனிதனின் இரட்சிப்புக்கு அஸ்திபாரமாகிய மனந்திரும்புதலில் முழுமையான மாற்றம் இல்லாமல் செயல்பாடுகளில் மாறுதல் உண்டாகாது. உலகத்தில் மூன்றுவிதமான மனிதர்களைப் பார்க்கலாம்.




1. முற்றிலும் உலகத்தை நோக்கிய மனிதன் (0°)
2. முற்றிலும் தேவனை நோக்கிய மனிதன் (180° U Turn)
3. பாதி உலகத்தையும் பாதி தேவனையும் நோக்கிய மனிதன் (90°)

உலகத்தை நோக்கிய மனிதன் முற்றிலும் உலகத்தை சார்ந்து வாழ்ந்து பாவவாழ்க்கையில் மடிந்து போகிறான். தேவனை நோக்கிய மனிதன் முற்றிலும் தேவனைச்சார்ந்து வாழ்ந்து தேவ மனிதனாய் மாறுகிறான். ஆனால், மூன்றாவது ரக மனிதன் 90° திரும்பியிருப்பதால் உலகத்தையும் விட முடியாமல்

தேவனையும் விட முடியாமல் இன்றைக்கு வாழும் அநேக கிறிஸ்தவர்களைப்போல அதே பாவத்திலும் அதே பிரச்சனைகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

யாக்கோபு 4:8இல் இவர்களைக் குறித்து ‘இருமனமுள்ளவர்கள்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுக்கு முதுகுகாட்டி வாழ்ந்த ஒரு மனிதன் முற்றிலுமாய் திரும்பி தேவனை நோக்கி நடப்பதுதான் உண்மையான மனந்திரும்புதல். சரி அப்படியாயின் எப்படி, எதன்மூலம் மனந்திரும்ப முடியும், யோவான் 14:6இல் சொல்லியபடி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலம் மட்டுமே ஒருவர் மனந்திரும்ப முடியும். “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்று திட்டவட்டமாய் சொல்லியிருக்கிறார். அதே ஆண்டவர் யோவான் 10:1இல் “ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய் பிரவேசிக்காமல் வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்” என்று தெளிவாக சொல்லியிருக்கிறார். இயேசுவை அல்லாமல் வேறு வழியில் ஒருவரும் தேவனிடத்தில் சேர இயலாது.

## உண்மையான மற்றும் பொய்யான மனந்திரும்புதல்

நம்முடைய மனந்திரும்புதல் சரியா இல்லையா என்று அறிய வேதத்தில் சில மனிதர்களைக் குறித்துப் பார்ப்போம்.

## பொய்யான மனந்திரும்புதல்

யாத்திராகமம் 9:27இல் பார்வோன் “நான் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்” என்று அறிக்கையிடுகிறான். எண்ணாகமம் 22:34இல் பிலேயாம் கரத்தருடைய தூதனை நோக்கி “நான் பாவம் செய்தேன்” என்று சொன்னான். யோசுவா 7:20இல் ஆகான், “நான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன்” என்று சொன்னான். 1 சாமுவேல் 15:24இல் அப்போது சவுல் சாமுவேலைப் பார்த்து, “நான் கர்த்தருடைய கட்டளைகளையும், உம்முடைய வார்த்தைகளையும் மீறினதால் பாவஞ்செய்தேன்” என்று கூறி அறிக்கையிட்டான். பாவத்தை மறைக்க விரும்பினான். 2 ராஜாக்கள் 21:27இல் ஆகாபின் குற்றம் உணர்த்தப்பட்டபோது தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு பாவத்தை அறிக்கையிட்டான். முழுமையான மனந்திரும்புதலின்றி வாழ்ந்ததால் இஸ்ரவேலின் பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்டான். மத்தேயு 27:3-5 ஆண்டவரை காட்டிக்கொடுத்ததற்காக யூதாஸ் மனஸ்தாபப்பட்டான். அறிக்கை செய்தான். ஆனால் தேவனிடத்திற்கு வராமல் மனுஷரிடத்தில் அறிக்கையிட்டு பாவமன்னிப்பு அடையாமல் நான்று கொண்டு செத்தான். மேற்கண்ட மனிதர்கள் எல்லாம் பாவஞ் செய்தேன் என்று அறிக்கையிட்டார்கள். ஆனால் மனம் மாறவில்லை.

## உண்மையான மனந்திரும்புதல்

நாத்தான் மூலம் தன் பாவம் உணர்த்தப்பட்டபோது அதை சங்கீதம் 51இல் பாடலாக அறிக்கையிட்டு தான் எப்படிப்பட்ட பாவி என்பதை உலகம் அறிய விரும்பினான் தாவீது. மனந்திரும்பினான். சவுலுடைய விஷயத்தில் தன்னுடைய பாவத்தை மறைத்து ரகசியம் காக்க சாமுவேலிடம் கேட்டுக்கொண்டான். ஆனால், தாவீது மனதுருகி அழுது அறிக்கையிட்டு, ‘‘சுத்திகரியும், கழுவும், மாற்றும், பரிசுத்தமாக்கும்’’ என்று கதறுகிறான். மத்தேயு 26:31-35இல் பேதுரு மூன்று தரம் மறுதலிப்பான் என்று இயேசு முன்னறிவிக்கிறார். மத்தேயு 27:69-75இல் அவ்வாறே நடந்தபோது பேதுரு மனங்கசந்து அழுது தனது செயலுக்காக வருந்துகிறார். நான்கு சுவிசேஷங்களை எழுதிய நான்கு அப்போஸ்தலருக்கும் தனது குற்றத்தை அறிக்கையிட்டதால்தான், அந்த நான்கு சுவிசேஷங்களும் அவனது மனந்திரும்புதலை அவ்வாறே விவரிக்கின்றன.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். ஆனால் அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்று நீதிமொழிகள் 28:13 கூறுகிறது. தன்னை முன்னிறுத்தாமல் தேவனை முன்னிறுத்தி தன் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறவனிடத்திலேதான் உண்மையான மனந்திரும்புதல் உண்டாகும். மனந்திரும்புதலுக்கு முன்பாக ஒரு மனிதனில் நடக்கும் காரியங்கள் என்ன?

### மந்திரும்புதலின் படிகள்




## பாவங்களைக் குறித்த அறிவு

1. தன்னிலுள்ள பாவங்களைக் குறித்த அறிவு, உணர்வு, புரிதல் ஒரு மனிதனுக்கு உண்டாகும். சங்கீதம் 38:18இல் தாவீது ‘‘நான் என் பாவங்களை உணர்ந்தேன்’’ என்கிறார்.

ரோமர் 3:10இல் **நீதிமான் ஒருவனாகிலும் இல்லை** என்றும் ரோமர் 9:23இல் **நாம் எல்லோரும் பாவஞ்செய்து தேவமகிமையற்ற வர்களானோம்** என்றும் கூறுகிறது. ஆதாம் ஏவாள் செய்த பாவத்தினால் நாம் எல்லாரும் பிறக்கும்போதே பாவத்தில்தான் பிறக்கிறோம்.

கி.பி.4ஆம் நூற்றாண்டில் தூய அகஸ்டின் என்பவர் வேத விளக்கங்கள் அருளப்படாத நிலையில் இன்றைக்கு நடைமுறையில் உள்ள நமக்குத் தேவையான சத்தியங்களை ஆழமாக எடுத்துச் சொன்னவர். அதே காலகட்டத்தில் ப்ரிட்டனைச் சேர்ந்த பெலேசியஸ் என்ற அறிஞர் ரோமில் வாழ்ந்து வந்தார். இவர்கள் இருவரும் வேத சத்தியங்களைக் குறித்து முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந் தனர். பெலேசியஸின் கோட்பாடுகள் பெலேஜியசியம் என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கோட்பாடுகளின்படி "நாம் நினைப்பதைச் செய்வதற்குச் சில வாய்ப்புகள் இருக்கிறது. அதைச் செய்யலாமா வேண்டாமா என்ற விருப்பமும் என்னிடத்தில் இருக்கிறது. அதை முன்னெடுத்து செய்யக்கூடிய காரியமும் என்னிடத்தில்தான் இருக்கிறது" என்று கூறுகிறார். நடுநிலையாக இருக்கும் ஒரு மனிதன் இடதுபுறமாக சாய்ந்தால் உலகமும் பாவமும் அவனைப் பற்றிக் கொள்ளும். வலதுபுறமாக சாய்ந்தால் தேவனையும் நன்மையையும் கண்டடைவான் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கோட்பாடுகளின்படி நடுநிலையாக இருப்பது ஒரு மனிதனின் சுதந்திரம், அதேபோல இடதுபுறமாகவோ வலது புறமாகவோ சாய்வதும் அவனது சுதந்திரம். அதைச் செய்வதற்குரிய விருப்பமும், அதைச் செய்து முடிக்கும் காரியமும் அந்த மனிதனில்தான் இருக்கிறது. ஆனால் அவன் எடுக்கும் முடிவு அவனது சுதந்திரமாய் இருப்பதால் இடதுபுறமாக சாய்ந்து பாவத்தை தெரிந்து கொண்டால் வாழ்நாள் முழுவதும் அதற்காக மனஸ்தாபப்பட வேண்டியதில்லை.

ஆனால் அகஸ்டினின் கோட்பாடுகளின்படி நடுநிலையாக இல்லாமல் பாவத்திலிருந்து

> பாவத்திலிருந்து செத்துப் போயிருக்கும் ஒரு மனிதனுக்கு அதிலிருந்து மீட்பு மட்டும் அல்ல ஒரு மறுபிறப்பு தேவை.

செத்துப் போயிருக்கும் ஒரு மனிதனுக்கு அதிலிருந்து மீட்பு மட்டும் அல்ல ஒரு மறுபிறப்பு தேவை. தேவன் அந்த மனிதனைப் பாவத்திலிருந்து மீட்டு வலதுபுறமாக தன்னோடு சேர்த்துக் கொண்டிருக்கிறார். நான் அவரோடு இருப்பதால் அவருக்குள் நான் செய்யக்கூடிய காரியங்களில் எனக்குச் சுதந்திரம் உண்டு. அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டுக்கொண்டே இருப்பதால் நான் பாவத்தில் இல்லை, நான் ஆண்டவருக்குள் இருக்கிறேன்.

பொதுவாக உலகமனிதர்கள் கூறும்போது நான் எந்தப் பாவமும் செய்யவில்லை. என்னால் முடிந்த நன்மைகளைப் பிறருக்குச் செய்கிறேன். கடவுள் என்னை எப்படிப் பாதாளத்துக்கு அனுப்புவார்" என்று சொல்வதைக் கேட்டிருக்கலாம். இது பெலேசியஸ் கோட்பாடுகளிலிருந்து வந்தது. நான் நல்லவன். நான் பாவங்கள் செய்தாலும் நிறைய நன்மைகள் செய்கிறேன். நான் தேவனைத் தேடுவதும் தேடாமல் இருப்பதும் என்னுடைய விருப்பம் என்கின்றனர். இப்படிப்பட்ட மனநிலை உலக மனிதர்களிடம் மட்டும் அல்ல, கிறிஸ்தவர்களிடமும் இருக்கிறது. அநேக நன்மைகள் செய்தாலும் தொடர்ந்து பாவத்திலே வாழ்கின்றனர். அடிப்படையில் நான் 'பாவி' என்பதை உணர்ந்து கொள்வதில்லை. எபேசியர்

2:1இல் பாவத்தில் மரித்துக் கிடந்த நம்மை உயிர்ப்பித்தார் என்று கூறுகிறது. ரோமர் 6:17 முன்னே பாவத்திற்கு அடிமைகளாய் இருந்த நம்மை உபதேச சட்டங்களுக்கு கீழ்படிந்த படியால் தேவன் நம்மை மீட்டு நீதிக்கு அடிமைகளாகக் மாற்றினார் என்று கூறுகிறது. ஆகவே, தேவனுக்குள் வாழ்வதுதான் ஒரு கிறிஸ்தவனின் சுதந்திரம்.

## மனஸ்தாபப்பட வேண்டும்

பாவத்திலிருக்கும் ஒரு மனிதன் அதற்காக மனஸ்தாபப்பட வேண்டும். பாவத்திலிருந்து விடுதலையாக வேண்டும் என்கிற விருப்பமும் அதற்காக மனஸ்தாபப்படுதலும் உண்டாக வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு விரோதமானது என்ற ஞானம் உண்டாகும்போதுதான் மனஸ்தாபம் உண்டாகும்.

போத்திபாரின் மனைவி தினமும் யோசேப்பைப் பாவஞ்செய்ய அழைத்த போது, அது தேவனுக்கு விரோதமான பாவம் என்ற ஞானம் யோசேப்புக்கு இருந்ததினால் அதிலிருந்து விடுதலை பெற முடிந்தது. நம்மை ஈர்க்கக் கூடிய, விழத்தட்டக்கூடிய பாவங்கள் எல்லாமே தேவனுக்கு விரோதமானது என்ற

> "நாம் செய்யும் ஒவ்வொரு பாவமும் தேவனுக்கு விரோதமானது என்ற ஞானம் உண்டாகும்போதுதான் மனஸ்தாபம் உண்டாகும்."




உணர்வு வரும்போது மனஸ்தாபம் உண்டாகும். சங்கீதம் 38:18இல் தாவீது "என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன். என் துக்கம் என் முன்பாக இருக்கிறது" என்று மனஸ்தாபப்படுவதைப் பார்க்கிறோம்.

யோவேல் 2:12,13 வசனங்களில் "**ஆதலால் நீங்கள் இப்போதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**நீங்கள் உங்கள் வஸ்திரங்களை அல்ல. உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள். அவர் இரக்கமும், மன உருக்கமும் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர். அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.**" ரோமர் 2:4 தேவனுடைய நன்மை மனந்திரும்புதலுக்கு ஏதுவான காரணமாயிருக்கிறது என்று சொல்கிறது. யாக்கோபு (4:8,9இல்) எருசலேம் சபைக்கு அன்று எழுதியது இன்றைய சபைக்குச் சரியாய்ப் பொருந்துகிறது. "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். நீங்கள் துயரப்பட்டு துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது".

இதில் "இருமனமுள்ளவர்களே" என்பது பாதி உலகத்தையும் பாதி தேவனையும் சார்ந்து வாழ்கிற பெரும்பாலான இன்றைய கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. ஆகவேதான் பாவி என்பதை உணர்ந்து பாவத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற தீர்மானத்தோடு இருதயத்தில் துயரப்பட்டு துக்கித்து அழுது மனஸ்தாபப்பட்டால்தான் உண்மையான மனந்திரும்புதல் உண்டாகும்.

## அறிக்கை செய்தல்

நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் தவறு செய்யும்போது, ஆண்டவரிடத்தில் அறிக்கையிடும்போது அவர் நம்மைக் கழுவி சுத்திகரிக்கிறார். அறிக்கை செய்வதில் உள்ள பிரச்சனை என்னவென்றால், அநேகருக்குத் தங்கள் தவறுகளை ஆண்டவரிடம் சொல்வதில் பயம். இவர்களுக்குத் தாம் செய்யும் பாவம், தவறுகள் ஏற்கெனவே ஆண்டவருக்குத்



தெரியும் என்கிற ஞானம் இல்லை என்பது ஆச்சரியமான உண்மை. எபிரெயர் 4:13 சொல்கிறது “அவர் கண்களுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமாயும், வெளியரங்கமுமாய் இருக்கிறது. அவர் கண்களுக்கு மறைத்து நாம், எதுவும் செய்ய முடியாது.”

வேதாகமத்தில் முதலாவது பாவம் என்று சொல்லப்படுவது என்ன? யோவான் 16:30 தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசியாமல் இருப்பது பாவம்.

நாம் பாவ அறிக்கை செய்தவுடன் நம்மை ஆண்டவர் மன்னிக்கிறார். தேவனோடு ஒப்புரவாகிறோம். நமக்கும் தேவனுக்கும் உள்ள அந்நியோநியம் பலப்படுகிறது.

உதாரணத்துக்கு, நம்முடைய ஒரு பிள்ளை நாம் வைத்திருக்கும் 4 சாக்லேட்டில் ஒன்றைச் சாப்பிட்டு விட்டு அதை நம்மிடம் தெரிவிக்காமல் மறைத்தால், நாம் மீதியுள்ள சாக்லேட்களை ஒளித்து வைப்போம். அதேசமயம் நம்மிடம் வந்து “நீங்கள் வைத்திருந்த சாக்லேட்டில் ஒன்றைச் சாப்பிட்டு விட்டேன். நன்றாக இருந்தது” என்று சொன்னால், நம்மிடம் உள்ள மீதி சாக்லேட்டையும் அவனிடமே கொடுத்து சாப்பிட சொல்வோம்.

1 யோவான் 1:9இல் நம்முடைய பாவங் களைத் தேவனிடம் அறிக்கை செய்யும்போது நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து நமக்கு மீட்பைக் கொடுக்கிறார். என்னுடைய மீறுதல்கள்தான் அவருக்குத் தெரியுமே. பிறகு ஏன் நான் அறிக்கை செய்ய வேண்டும் என்று நினைப்பது தவறு. கிறிஸ்துவிடம் அறிக்கை செய்து அந்தப் பாவத்திலிருந்து விடுதலை அடையும்போது மனந்திரும்புதல் முழுமையடைகிறது.

## உண்மை மனந்திரும்புதலின் ஆதாரங்கள் - கனிகள்

மனந்திரும்புதல் நம்மிடம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை நம்முடைய வாழ்க்கையின் கனிகளால் அறியலாம். மத்தேயு 3:8இல் “மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். கோடாரியானது இப்பொழுது மரத்தின் வேர் அருகே வைத்திருக்கிறது” (மத்தேயு 3:10) என்று யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தார். நமது வாழ்க்கையிலும் கனி கொடாத அநேக காரியங்கள் இருக்கின்றன. அவைகளை உற்றுக் கவனித்து, நமது கெட்ட கனி எந்த வேரிலிருந்து வருகிறது என அறிய வேண்டும்.

நமக்கு வரும் கோபம், மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசுதல், கெட்ட பழக்கவழக்கங்கள் இவைகளின் மூலகாரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதனை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். அப்போதுதான் நம்மில் நல்ல கனி உண்டாகும். கிளையை வெட்டிக்கொண்டே இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. லூக்கா 19இல் சகேயு “என் ஆஸ்தியில்

> “நமக்கு வரும் கோபம், மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசுதல், கெட்ட பழக்கவழக்கங்கள் இவைகளின் மூலகாரணம் என்ன என்பதைக் கண்டறிந்து அதனை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். அப்போதுதான் நம்மில் நல்ல கனி உண்டாகும்.”

பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாக திரும்பச் செலுத்துகிறேன்'' என்று இயேசுவைக் கண்டு தனது உண்மையான மனந்திரும்புதலை அறிக்கை யிட்டார். மனந்திரும்பியவுடன் சகேயு கனி கொடுக்கிறவராக மாறிவிட்டார். அதுபோல நாமும் கனிகொடுக்க வேண்டும்.

## தொடர்ந்து கொண்டிருக்கும் மனந்திரும்புதல்



வெங்காயத்தைத் தோலுரிக்க உரிக்க இறுதியில் ஒன்றுமில்லாததுபோல நம்முடைய வாழ்விலும் ஒருசில துர்குணமாகிய மேல்தோல் களை உரித்துக்கொண்டே இருக்க வேண்டும். நமது வாழ்வில் இறுதியில் தேவனைத் தவிர வாழ்வின் பொருள் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து கொள்வோம். நாம் தேவனைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன் அப்போஸ்தலர் 2:38இல் சொல்லப்பட்ட காரியம் நம்முடைய வாழ்க்கையிலும் நடக்கிறது.

''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போது பரிசுத்த ஆவியின் பெலனைப் பெறுவீர்கள்.'' லூக்கா 17:7-10இல் சொல்லப்பட்டபடியே ''மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது.'' அப்போஸ்தலர் 11:18இல் செல்லப்பட்டபடி ஜீவனுக்கு ஏதுவான நல்ல நித்திய வாழ்க்கை வாழ்வதற்கு வழி கிடைக்கிறது.

எபேசு பட்டணத்தில் 213 தூண்களுள்ள ஒரு பெரிய ஆலயம் டயானா என்ற தேவதைக்கு எழுப்பப்பட்டு இருந்தது. மக்கள் வெள்ளிச் சிலைகளை உருவாக்கி, வணங்கி வந்தனர். அந்தக் காலக்கட்டத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவில் தங்கி மூன்றாண்டுகள் மனந்திரும்புதலைக் குறித்தும் விசுவாசத்தைக் குறித்தும் சபைகள்தோறும், வீடுகள்தோறும் பிரசங்கித்துவந்தார். அங்குள்ள டயானா ஆலயத்தில் மந்திரவாதம், பில்லிசூனியம் போன்றவை பற்றிய லட்சக்கணக்கான மதிப்புமிக்க புத்தகங்கள் உள்ள நூலகம் ஒன்று இருந்தது. பவுல் பிரசங்கம் பண்ணத் தொடங்கியதில் இருந்து மனமாறுதல் அடைந்து அந்த மக்கள் நூலகத்தில் உள்ள புத்தகங்களைத் தூக்கிப்போட்டு எரித்தனர். இவ்வாறு எபேசு பட்டணத்தில் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. அந்த எபேசு சபைக்காக பவுல் ஆழமான, ஆவிக்குரிய காரியங்களையும் வரங்களைக் குறித்த சத்தியங்களையும் விளக்கி எபேசியர் நிருபத்தை எழுதினார். அதே எபேசு சபையைக் குறித்து 20 ஆண்டுகள் கழித்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் (2:4,5) ''ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்கு குறை உண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையில் இருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக.

இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிப் போடுவேன்" என்று எச்சரிக்கிறார். விளக்குத்தண்டாகிய வெளிச்சத்தை எடுத்துவிட்டால் இருள் சூழ்ந்துவிடும். அதனுடைய ஆவிக்குரிய பொருள் மனந்திரும்பாத பட்சத்தில் பாதாளம் செல்லும் அவலநிலை ஏற்படும் என்று எச்சரிக்கிறார். தொடர்ந்து மனந்திரும்பும் அனுபவம் இல்லாதபட்சத்தில் ஆண்டவரை விட்டு விலகிச் செல்வோம் என்பதற்கு எபேசு சபை ஒரு உதாரணம்.

வெளிப்படுத்துதல் 3:3இல் சர்தை சபைக்கு ஆவியானவர் எழுதும்போது "ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால் திருடனைப்போல உன்மேல் வருவேன். நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" என்று அறிவுறுத்துகிறார். திருடனைப்போல வரும் ஆண்டவருடைய வருகை எப்போது வேண்டுமானாலும் இருக்கும் என்பதால் நாம் தினமும் மனந்திரும்பி நமது கண்களை அவர்மீது பதித்து வாழ வேண்டும்.

## தொடரும் மனந்திரும்புதலும், பவுலின் மூலம் சுயத்தைக் கண்டறிதலும்

மனந்திரும்புதலைக் குறித்து ஒரு நடைமுறை உதாரணத்தோடு பார்ப்போம். ஒரு இருட்டு அறைக்குள் ஒரு மெழுகு வர்த்தியோடு சென்றால் அந்த அறையிலுள்ள அழுக்குகள் தெரியாது. அந்த அறையில் உள்ள பெரிய பொருட்கள் மட்டுமே தெரியும். அதே

“ஆண்டவராகிய வெளிச்சத்தை நெருங்க நெருங்க நம்மிலுள்ள அழுக்குகள், துர்குணங்கள் ஒவ்வொன்றாக வெளிப்படும்.”

அறையில் குழல்விளக்கு எரியும்போது பெரிய பெரிய அழுக்குகள், தூசிகள் கண்ணுக்குத் தெரியும். ஆனால் அதே அறையில் 2000 வாட்ஸ் வெளிச்சம் இருந்தால் அந்த அறையில் உள்ள சிறிய தூசு, துரும்பு கூட கண்களுக்கு பளிச்சென்று தெரியும். அதே அறைதான். வெளிச்சம்தான் மாறுகிறது. அதேபோல ஆண்டவராகிய வெளிச்சத்தை நெருங்க நெருங்க நம்மிலுள்ள அழுக்குகள், துர்குணங்கள் ஒவ்வொன்றாக வெளிப்படும். இதைப் பவுலுடைய வாழ்க்கையில் நாம் பார்க்க முடியும். (பிலிப்பியர் 3:5,6) தனது மாம்சப்பிரகாரமான குலப்பெருமையைப் பற்றி பேசிவிட்டு, தான் குற்றமற்றவன் என்று கூறுகிறார். அதே பவுல் மனந்திரும்பிய 10 வருடங்களில் தேவனை நெருங்கி வாழ்ந்தபிறகு (1 கொரிந்தியர் 15:9) நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவன் என்று அறிக்கையிடுகிறார். அதே பவுல் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தேவப்பிரசன்னத்தில் வாழ்ந்தபிறகு (எபேசியர் 3:8) “பரிசுத்தவான்களில் சிறியவனான நான்” என்று தன்னைக் காண்பிக்கிறார். அதே பவுல், அடுத்த ஐந்து ஆண்டுகள் தேவனோடு நெருங்கி வாழ்ந்தபின்பு, தீமோத்தேயுவுக்கு எழுதும்போது (1 தீமோத்தேயு 1:15) “பாவிகளில் பிரதான பாவி” என்று தன்னை அறிக்கையிடுவதைப் பார்க்கலாம்.

முதலாவது தான் குற்றமற்றவன் என்று பெருமை பாராட்டிய பவுல் தேவனுடைய வெளிச்சத்தை நெருங்க நெருங்க தன்னிலுள்ள குறைகளைத் தேவன் வெளிப்படுத்தியபோது குறைகள் ஒவ்வொன்றாக அறிக்கையிட்டு பூரணத்துக்குள் கடந்து சென்றார். அதைப்போல நாமும் தேவன் உணர்த்துகிற ஒவ்வொரு காரியங்களிலும் தினமும் மனந்திரும்ப வேண்டியது அவசியமாய் இருக்கிறது. சீஷத்துவத்தில் முன்னேற முன்னேற அல்லது தேவனோடு நெருங்க நெருங்க வெங்காயத்தை உரிப்பதைபோல நம்மிடத்தில் உள்ள துர்குணங்களைக் களைந்து பரிசுத்தத்தில் வளருவோம்.

## மனந்திரும்புதலில் நிலைகள்

### 1. நீதிமானாக்கப்படுதல்.

நம்முடைய பாவங்களுக்காக நாம் மனஸ்தாபப்பட்டு, அறிக்கையிட்டு ஆண்டவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, நமது அனைத்துப்

“தேவன் உணர்த்துகிற ஒவ்வொரு காரியங்கிலும் தினமும் மனந்திரும்ப வேண்டியது அவசியமாய் இருக்கிறது. சீஷத்துவத்தில் முன்னேற முன்னேற அல்லது தேவனோடு நெருங்க நெருங்க வெங்காயத்தை உரிப்பதைபோல நம்மிடத்தில் உள்ள துர்குணங்களைக் களைந்து பரிசுத்தத்தில் வளருவோம்.”

பாவங்களையும் மன்னித்து நம்மை நீதிமான்களாக்குகிறார். உதாரணமாக முற்காலத்தில் பயன்படுத்தப்பட்ட தட்டச்சு இயந்திரத்தால் தட்டச்சின் இடதுபுறத்தை மட்டுமே சரிபடுத்த முடியும். வலதுபக்க ஓரத்தைச் சரிசெய்ய இயலாததுபோல பழைய ஏற்பாட்டு காலத்தில் நியாயப்பிரமாணத்தால் நம்மை இரட்சிக்க முடியவில்லை. அதேசமயம் தற்போதைய கணினியால் தட்டச்சு முடித்தபின்பு நேர்த்தியாக்குதல் (Justification) என்ற பொத்தானை அழுத்தியவுடன் முழு தட்டச்சு பக்கங்களும் கண்ணிமைக்கும் நேரத்தில் வலதுபுற இடதுபுற ஓரங்கள் சரி செய்யப்பட்டு நேர்த்தியாய் மாறுவதுபோல் நம்முடைய வாழ்விலும் எத்தனைக் குறைகள் தவறுகள் இருந்தாலும், மனம் வருந்தி அதற்காகத் தேவனிடம் மன்னிப்பு கேட்கும்போது, தமது தூய இரத்தத்தால் கழுவி சரிப்படுத்துகிறார்.

## 2. பரிசுத்தமாக்கப்படுதல்

நாம் வெங்காயத்தை உரிப்பதுபோல் அனுதினமும் மனந்திரும்பிக்கொண்டே இருக்கும்போது பரிசுத்தமடைகிறோம். இந்தச் செயல், நாம் மரித்து தேவனிடம் போகும்வரைக்குமோ அல்லது ஆண்டவர் வருகைவரைக்குமோ தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். பாவம் நம்மை ஆளுகை செய்ய முடியாதபடி இது நம்மைக் காக்கும்.

## 3. மகிமைப்படுத்தப்படுதல்

நாம் மரித்தாலோ அல்லது ஆண்டவருடைய வருகையிலோ நாம் மகிமைக்குள்ளாகச் செல்வோம். நம்மிடத்தில் பாவம் இராது.

| நிலை | செயல் | விளைவு | விடுதலை |
|---|---|---|---|
| 1 | மனஸ்தாபத்தின் துவக்கம் | நீதிமானாக்கப்படுதல் | பாவத்தின் தண்டனையில் இருந்து |
| 2 | தொடரும் மனஸ்தாபம் | பரிசுத்தமாக்கப்படுதல் | பாவத்தின் வல்லமையில் இருந்து |
| 3 | இரண்டாம் வருகை | மகிமைப்படுத்தப்படுதல் | பாவத்தின் பிரசன்னத்தில் இருந்து |

## மேலும் படிக்க

1) லேவியராகமம் 26:40, 1 இராஜாக்கள் 8:47; 2 நாளாகமம் 6:24-39, 7:14; சங்கீதம் 32:5; எரேமியா 3:12f, 8:4-6, 5:3, 44:4-5; யோனா 3:8-10; ஆமோஸ் 4:6-11; லூக்கா 15:18-21, 17:3-4; அப்போஸ்தலர் 19:18; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9.

2) சங்கீதம் 34:18, 51:17, 31:10; ஏசாயா 57:15, 66:2, 22:12 -14; யோபு 42:6; எரேமியா 31:19, 5:3, 6:26, யோனா 3:5-8; மத்தேயு 26:75, 11:20; 2 நாளாகமம் 34:27, எஸ்றா 10:1.

3) அப்போஸ்தலர் நடபடிகளில் மனந்திரும்புதல் பற்றி காணப்படும் வசனங்கள்: 2:38, 3:19, 5:31, 8:22, 11:18, 13:24, 17:30, 20:21, 26:20.

**இந்த வாரத்துக்கான சிந்தனைகள்:**

1. நீங்கள் செய்திருக்கும் பாவங்களைப் பட்டியலிடுங்கள். (யாருக்கு எதிராக நீங்கள் பாவம் செய்திருந்தாலும் அது கர்த்தருக்கு எதிராகச் செய்த பாவம் தான் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் - ஆதியாகமம் 39:9).

2. வருத்தப்படுவதுடன் மட்டுமல்லாமல் அவற்றை வெறுக்கவும் செய்ய வேண்டும். (உங்கள் பாவங்களை நீங்கள் வெறுக்காவிட்டால் அவற்றை விட்டுவிடவும் முடியாது எபிரெயர் 1:9).

3. உங்களை பாவத்துக்கு வழி நடத்துகிற உங்களது தனிப்பட்ட இன்பங்கள் யாவை? பாவம் என்பது இனிமையானது என்பதையும் மறந்துவிடாதீர்கள் (எபிரெயர் 11:25). அந்த இன்பங்களை விட்டுவிட திட்டமிடுங்கள்.

4. அறிக்கை - முதலாவது உங்கள் பாவங்களைக் கர்த்தரிடம் அறிக்கையிடுங்கள். பின்னர் யாருக்கு எதிராக அவற்றைச் செய்திருந்தீர்களோ அவர்களிடமும் அறிக்கை இடுங்கள்.

5. தாவீது அரசனைப் போலவும், பேதுருவைப் போலவும் துணிச்சலாக, உங்களால் இந்த சீஷத்துவப் படிப்பை உங்களுடன் நடத்தும் நபரிடம் அறிக்கையிட முடியுமா?

6. வருகிற வாரங்களில் மனந்திரும்புதலின் கனிகளை உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் காண்பீர்களா?

7. இது ஒரே நாளில் முடிந்து விடுகின்ற நிகழ்வு அல்ல. இது தொடர்ந்து, குறிப்பிட்ட காலத்துக்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய தொடர் நிகழ்வு ஆகும். இந்த பாடத்துக்காக மட்டுமல்ல, தொடந்து நடக்க வேண்டும்.

# பாவம்

**பாவம் என்பது என்ன?**

அனைத்து நாட்டின் பண்பாடு, பழக்க வழக்கம், சமூகம், வளர்ந்த சூழல் இவைகளைப் பொறுத்து, மனிதனுக்கு மனிதன் 'பாவம்' என்னும் பதம் பொதுவாக புரிந்து கொள்ளப் படுகிறது. பாவத்தைக் குறித்து ஒவ்வொரு வருக்கும் ஒரு தனிப்பட்ட கருத்து இருக்கிறது. கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில் பாவத்தைக் குறித்த நம்முடைய கருத்துக்களைவிட பாவத்தைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என்பதே முக்கியம். ஜாண் கி. லேக் என்னும் தேவமனிதன் பாவத்தைக் குறித்து சொல்லும்போது "நீ எது பாவமென்று நினைக்கிறாயோ அதுதான் பாவமென்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். அது சரியல்ல. தேவன் எதைப் பாவமென்று நினைக்கிறாரோ அதுவே பாவம்." நம்முடைய மனசாட்சியில் எதைப் பாவமென்று நினைக்கிறோமோ அது அல்ல. தேவன் எதை நினைக்கிறாரோ அதுவே பாவம். உதாரணத்துக்கு, நீதிபதி முன்பாக ஒரு வழக்கு வரும்போது நாம் செய்தது சரியா, தவறா என்று தீர்ப்பு வழங்குவார். நீதிமன்றத்தில் நீதிபதியின் கருத்தே முக்கியமானது. வாதியின் வாதமோ, பிரதிவாதியின் வாதமோ, குற்றம் சாட்டப்பட்டவரின் முறையீடோ முக்கியமல்ல. **நாமும் நியாயத்தீர்ப்பு நாளிலே நியாதிபதியாகிய தேவனுக்கு முன்பாக நிற்போம். ஆகவே நமது கருத்துகளோ, நம்மை வழிநடத்துபவர்களின் கருத்துகளோ முக்கியமானதல்ல. ஆண்டவர் தமது வார்த்தையின் மூலம் எதை வெளிப் படுத்தியிருக்கிறாரோ அதுவே முக்கியம்.**

> "கிறிஸ்தவர்களைப் பொருத்தமட்டில் பாவத்தைக் குறித்த நம்முடைய கருத்துக்களைவிட பாவத்தைக் குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என்பதே முக்கியம்."

ஏனென்றால், தேவனுடைய வார்த்தைகளாகிய சட்டத்தின்படிதான் நமக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படும். மற்றவர்களின் கருத்துகள்படி அல்ல.

## பாவம் என்றால் என்ன?



**குறிபார்த்து அடிக்கப்படும் அம்பானது குறிதவறி வெவ்வேறு இடங்களில் விழுவது என்ற பதத்தை தழுவி வந்தது 'பாவம்' என்ற வார்த்தை.**

ரோமர் 3:23இல் "எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களானோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் 'தேவ மகிமை' என்று நம்முடைய ஐம்புலன்களில் அறிந்து கொண்டது ஆகும். தேவ பிரசன்னத்தில் இருந்து, தேவ மகிமையில் வாழ்ந்த ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததினால் தேவ மகிமையில் இருந்து கீழே விழுந்தார்கள்.

அந்த இடைவெளி அதிகமாக அதிகமாக பாவத்திற்குள்ளாக கடந்து போய்கொண்டே இருப்போம். கொலோசெயர் 1:27,"கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே அந்தத் தேவமகிமையின் இரகசியம்" என்று கூறுகிறது. ஆதாம் ஏவாளின் பாவத்தினால் தேவ மகிமையில் இருந்து விழுந்த நம்மை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து திரும்பவும் தேவ மகிமைக்குள் கொண்டு செல்லத்தான் தமது இரத்தத்தைச் சிந்தியிருக்கிறார். ஒவ்வொருவரும் நாம் கிறிஸ்துவோடு உள்ள நெருக்கத்தின் அடிப்படையில் தேவமகிமையில் வெவ்வேறு நிலையில் இருக்கிறோம். நாம் முழுமையாக தேவமகிமையில் வாழ்வதே இயேசுவின் விருப்பம். கிறிஸ்துவோடு நெருங்க நெருங்க நம் பேச்சு, செயல் எல்லாம் கிறிஸ்துவைப்போல மாறும்.

> "கிறிஸ்துவோடு நெருங்க நெருங்க நம் பேச்சு, செயல் எல்லாம் கிறிஸ்துவைப்போல மாறும்."

# பாவத்தின் சுபாவம்

**தேவ மகிமையிலிருந்து நாம் எப்படி விழுந்தோம் என்பதைப் பார்ப்போம்.**

1. 1 யோவான் 3:4 பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் என்று வேதம் சொல்கிறது.
2. 1 யோவான் 5:17 அநீதியெல்லாம் பாவந்தான் என்று கூறுகிறது.
3. யாக்கோபு 4:17 நன்மை செய்வது இன்னதென்று அறிந்தும் அதை செய்யாமல் போனால் பாவம்.
4. ரோமர் 14:22,23 விசுவாசத்தால் வராத யாவும் பாவமே. நாம் பெற்றுக்கொள்கிற எதையும் விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளாவிட்டால் அது பாவம்.
5. நீதிமொழிகள் 24:9, சங்கீதம் 53:1, சங்கீதம் 14:1 தேவனை அறியாதவர்களை முட்டாள் என்று வேதம் சொல்கிறது. முட்டாள்களின் நடவடிக்கையெல்லாம் பாவமாயிருக்கிறது.
6. யோவான் 16:9 ஒருவன் இயேசுகிறிஸ்துவை அறியாமல் போனால் அது அவனுக்குப் பாவம்.

| | | |
|---|---|---|
| 1. மீறுதல் | கர்த்தரின் நியாயப்பிரமாணத்தை மீறுகிறது பாவம். | I யோவான்3:4 |
| 2. அநீதி | நீதியல்லாத, ஒழுக்கமில்லாத, தவறுகள் | I யோவான் 5:17(a) |
| 3. தெரிந்த கடமையை செய்யாமல் விடுதல் | நன்மை செய்யத் தவறுதலும் பாவமே. | யாக்கோபு 4:17 |
| 4. விசுவாசமின்மை | விசுவாசத்தின் உறுதியில் செயல்படாமல் இருத்தல் | ரோமர் 14:22 - 23 |
| 5. மூடத்தனமான செயல்கள் | தீமையான அல்லது அவசரமான திட்டமிடுதல் | நீதிமொழிகள் 24:9 |
| 6. அவிசுவாசம் | இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காமல் இருத்தல் | யோவான் 16:9 |

**பாவத்தைக் குறித்த ஆண்டவரின் வார்த்தைகள்**

1. தேவன் பாவத்தை அருவருக்கிறார். (உபாகமம் 12:31)
2. பாவம் தேவனுடைய இயல்புக்கு எதிர்மறையானது (ஏசாயா 6:3); கர்த்தர் பரிசுத்தர்.
3. பாவம் அழுக்கான காரியம். (நீதிமொழிகள் 30:12, எசேக்கியேல் 24:13, யாக்கோபு 1:21)
4. பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும். எசேக்கியேல் 18:4,20)

பாவத்தைக் குறித்த நம்முடைய பார்வையும் தேவனுடைய பார்வையைப்போல மாற வேண்டும்.

நாம் ஆன்டவருக்காகச் செய்யக்கூடிய காரியங்களின் நோக்கம் முக்கியம். தவறான நோக்கத்தோடு செய்வது பாவம். (நீதிமொழிகள் 24:9)

## பாவத்தின் வகைகள்

பாவத்தை நான்கு விதமான வார்த்தைகளால் விளக்கலாம். எபிரேய மூல எழுத்துகளில் வார்த்தையும், அர்த்தமும் இதைக் குறிக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| **1. இலக்கு தவறுதல்** (Missing the Mark) அல்லது **கீழ்ப்படியாமை** | **2. மீறுதல்** (transgression) | **3. தப்பு** | **4. அக்கிரமம்** |

இந்த நான்கு வார்த்தைகளையும் நடைமுறையில் கீழ்கண்டவாறு விளக்கலாம்.

ஒரு சாலையில் வேகக்கட்டுப்பாடு 30 கி.மீ. என்று குறித்திருந்து, அதைப் பற்றி தெரியாமல் 35 கி.மீ. வேகத்திற்கு வாகனத்தைச் செலுத்துவதற்கு மீறுதல் என்று பெயர்.

வேகக்கட்டுப்பாடு இருப்பது தெரிந்தும் வேண்டுமென்றே 35 கி.மீ. வேகத்தில் செல்வதை தப்பு என்றும், வேகக்கட்டுப்பாட்டை மீறிச் செல்வது தப்பு என்ற தெரிந்தும் மீண்டும் மீண்டும் அதையே செய்வதை அக்கிரமம் என்றும் கூறலாம்.

## செயல்பாடு

**பாவம் நமக்குள் எப்படி வருகிறது?**

யாக்கோபு 1:14,15, “அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்.”




சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்ல முடியாது. தன் சுய இச்சையினால்தான் சோதிக்கப்படுகிறான்.

ஒரு மனிதனுக்குச் சோதனை உண்டாகும்போது, அதைக் குறித்த ஒரு இச்சை முதலில் தோன்றுகிறது. அதை விரும்பி செய்கிறான். உடலுறவு கொள்வதைப்போல இது கர்ப்பந்தந்தரித்து, பாவத்தைப் பிறப்பித்து, இறுதியில் மரணத்தைக் கொண்டுவரும்.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், ஒருவர் தம்மிடமுள்ள அலைபேசியைவிட அதிக வசதிகள் கொண்ட புதிய அலைபேசியை வாங்க விரும்புகிறார். அதை என்ன காரணத்துக்காக வாங்குகிறார் என்பது முக்கியம். அதன்மூலம் நமது வியாபாரம் பெருகுமா? அல்லது அதன் பயன்பாட்டின் அளவைக் கூட்டப்போகிறோமா? பெரும்பாலும் எதுவுமே இருக்காது. தன்னிடமுள்ள அலைபேசியைப்பற்றி பெருமை பாராட்டுவதற்கே பயன்படுகிறது. இது மாம்சத்தின் இச்சையையும் வாழ்க்கையின் பெருமையையும் காட்டுகிறது. உண்மையான பயன்பாட்டிற்காக வாங்குவதில் தவறில்லை.

## விளைவுகள்




ஒரு மனிதன் பாவம் செய்யும்போது தேவனுக்கும் அவனுக்கும் இடையில் பெரிய இடைவெளி உண்டாகிறது. அந்த இடைவெளியை நிரப்ப பெரும்பாலானவர்கள் தத்துவங்கள், மதம், நற்செயல்கள் போன்றவற்றைக் கொண்டு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அது முடியாது. இயேசுகிறிஸ்துவால் மட்டுமே இந்த இடைவெளியை சரிசெய்ய முடியும். இந்த இடைவெளி என்ன காரணத்தினால் வருகிறது என்று பார்ப்போம். பழைய ஏற்பாட்டின் கடைசி நூலான மல்கியாவை மல்கியா தீர்க்கதரிசி கி.மு.434ஆவது வருடம் எழுதினார். அதற்குப்பின்பு யோவான் ஸ்நானகன் வரும்வரை எந்தத்

> "ஒரு மனிதன் பாவம் செய்யும்போது தேவனுக்கும் அவனுக்கும் இடையில் பெரிய இடைவெளி உண்டாகிறது. அந்த இடைவெளியை நிரப்ப பெரும்பாலானவர்கள் தத்துவங்கள், மதம், நற்செயல்கள் போன்றவற்றை கொண்டு முயற்சி செய்கிறார்கள். இயேசுகிறிஸ்துவால் மட்டுமே இந்த இடைவெளியை சரிசெய்ய முடியும்."

தேவசெய்தியும் அருளப்படவில்லை. அந்தக் காலகட்ட மக்கள் சுமார் 430 வருடங்கள் தேவனுடைய இடைபடுதல் எதுவும் இன்றி வாழ்ந்ததாகத்தான் தெரிகிறது. மத்தேயு 4:4இல் ‘‘மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’’ என்று வேதம் கூறுகிறது. தேவ வார்த்தையை உட்கொண்டு வாழும் வாழ்க்கைக்குப் பெயர் ‘‘ஜீவித்தல்.’’ தேவ வார்த்தையின்றி வாழும் வறண்ட வாழ்க்கைக்கு ‘‘வாழ்தல்’’. இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. இயேசுகிறிஸ்து தன் வாழ்வின் மிக முக்கியமான ஒன்றாகக் கருதியது தேவனுடைய உறவை மட்டுமே. அடிக்கடி தனிமையான இடத்துக்குச் சென்று பிதாவோடு பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

மாற்கு 1:29 இயேசுகிறிஸ்து ஊழியத்தை ஆரம்பித்த ஆரம்ப நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை இவ்வாறு விவரிக்கிறது. இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டு, ஜீரமாய் கிடந்த சீமோன் பேதுருவின் மாமியின் கையைப்பிடித்துத் தூக்கிவிட்டார். உடனே, அவள் ஜீரம் நீங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு, சாயங்காலமானபோது, சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். பட்டணத்தார் யாவரும் வீட்டு வாசல் முன்பு கூடினார்கள். மாற்கு 1:34இல் சொல்லப்பட்டபடி ‘‘வியாதியஸ்தர்களையும், பிசாசு பிடித்தவர்களையும் குணமாக்கினார்.’’ திரளான கூட்டமாயிருந்தபடியால் அவர் இரவு முழுவதும் இவ்விடத்தில் அவர்களுக்கு ஊழியம் செய்திருக்க வேண்டும். இதற்குப்பின்பு (மாற்கு 1:35) இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து வனாந்திரமான ஓர் இடத்துக்கு போய் அங்கு ஜெபம் பண்ணினார். அந்தப் பட்டணத்தார் எல்லாரும் விடுதலை ஆக்கப்பட்டிருந்ததால், அவர்களோடு நேரம் செலவிட விரும்பாமல், அதிகாலையில் இருட்டோடே எழுந்து வனாந்திரத்துக்குப் போய் பிதாவோடு நேரம் செலவழிக்கவே விரும்பினார்.

சீமோனும் அவனோடிருந்தவர்களும் அவரைத் தேடிப்போய் உம்மை எல்லாரும் தேடுகிறார்கள் என்று சொன்னபோதோ, ‘‘நான் அடுத்த ஊர்களிலும் பிரசங்கம் பண்ண வேண்டும்’’ என்று சொல்லி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். அநேகர் விடுதலை அடைந்து பட்டணத்தார் அநேகர் இரட்சிக்கப்பட்டிருந்தாலும், இயேசு அங்கே தங்கியிருந்து தன் ஊழியத்தைத் தொடர விரும்பாமல், வேறு ஊர்களுக்குக் கடந்து சென்று பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலே கவனமாயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது மரணத்தைக் குறித்து சீஷர்களிடத்தில் மூன்று முறை இயேசு பேசினார். சிலுவை மரணம் அடையப்போவது குறித்து அவருக்கு ஏற்கெனவே தெரியும். ஆனாலும் கெத்செமனே தோட்டத்தில் சிலுவை மரணத்திற்குள் செல்லுமுன் மிகவும் வியாகுலப்பட்டு ஜெபித்தார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது என்று லூக்கா 22:44 கூறுகிறது. ஏன் அவ்வாறு அழுதார்? அவர் சிலுவையில் தொங்கும் மூன்றுமணிநேரமும் பிதாவோடு அவருக்கு இருக்கும் தொடர்பு அறுபடப்போகிறது என்று தெரிந்து

> நமது வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனோடு தொடர்பு கொள்வதையும் அவருடைய சத்தத்தையும் கேட்பதையும், முக்கியமானதாக கருதி வாழ வேண்டும். அனுதினமும் தேவசத்தத்தைக் கேட்டு வாழப்பழக வேண்டும்.

அதினிமித்தம் அவ்வாறு அழுது ஜெபித்தார்; எல்லாவற்றிற்கும்மேலாக பிதாவோடு உள்ள தொடர்பைத்தான் பெரிதாக எண்ணினார். சிலுவையில் தொங்கும்போதுகூட அதை நினைத்துதான் பிதாவை நோக்கி "பிதாவே பிதாவே ஏன் என்னை கைவிட்டீர்?" என்று கதறுகிறார். நாமும் நமது வாழ்க்கையில் ஆண்டவரோடு உள்ள தொடர்பிலிருந்து விடுபடவே கூடாது. எப்போதும் அவரோடு வாழ விரும்ப வேண்டும். ஏசாயா 54:1,2,3.

"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத் தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது; உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக் கேட்டை வசனிக்கிறது." என்று கூறுகிறது.

ஏசாயா 1:15ம் இவ்வாறே கூறுகிறது. "நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன். நீங்கள் மிகுதியாக ஜெபம் பண்ணினாலும் கேளேன். உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது."

சங்கீதம் 66:18ம் இதே கருத்தை வலியுறுத்துகிறது. "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்"

ஆனால், அதே ஆண்டவர் நீதிமொழிகள் 15:29இல் "நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்" என்றும் யோவான் 9:31இல் "பாவிகளுக்குத் தேவன் செவிகொடுப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாய் இருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்" என்றும் கூறுகிறது.

ஆகவே, மேற்கண்ட வசனங்களின் அடிப்படையில் நாம் பார்க்கும்போது, நம்முடைய இருதயத்தில் உள்ள பாவங்களை அறிக்கை செய்யாவிட்டால் ஆண்டவர் நமது ஜெபத்தைக் கேட்பதில்லை. அதேசமயம் அவருக்குச் சித்தமானதைச் செய்தால் செவிகொடுப்பார். நமது வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனோடு தொடர்புகொள்வதையும் அவருடைய சத்தத்தைக் கேட்பதையும், முக்கியமானதாகக் கருதி வாழ வேண்டும். அனுதினமும் தேவசத்தத்தைக் கேட்டு வாழப் பழக வேண்டும்.

## கண்ணோட்டம்

### பாவத்தைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம்?

பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இருதயத்திலிருக்கும் மாயத்திலிருந்தும், அக்கிரமத்திலிருந்தும் விடுபட வேண்டும் என்று கூறுகிறார். வெளிப்படையான மாற்றங்களை அவர் அங்கீகரிக்கவில்லை. இயேசுகிறிஸ்து மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் இருதய சுத்திகரிப்பைப் பற்றியே வலியுறுத்துகிறார். பரிசேயர் நியாயப்பிரமாணத்தைச் சரியாக கடைப்பிடித்து மூன்றுமுறை தொழுதல், தசமபாகம் கொடுத்தல் போன்ற வெளியரங்கமான சடங்குகளில் கவனமாயிருந்தார்கள். ஆனால் இவர்களைக் குறித்து மத்தேயு 23:27,28இல் இயேசு "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய் காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்" என்றார். வெளியரங்கமாய் நீதிமானாய் வாழ்வது முக்கியமல்ல. தேவனுடைய பார்வையில் இருதயத்தில் நீதிமானாய் வாழ்வது முக்கியம். மத்தேயு 23:23இல் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுப்பதோடு, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற

விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும், விசுவாசத்தையும் விடாதிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மாற்கு 7:20-23 “மனுஷருக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும் வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும் வன்கண்ணும் தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்” என்று கூறுகிறது. மேற்கூறிய துர்க்குணங்கள் மனுஷனுக்குள்ளிருந்து புறப்பட்டாலும் நாம் அவைகளைப் பாவங்களாக எடுத்துக் கொள்வதில்லை. வெளியரங்கமான புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்றவைகளையே பாவங்களாகக் கருதுகிறோம். ஆனால் இந்தப் பாவங்களைப்போல உள்ளத்திலிருந்து புறப்பட்டுவரும் முன்சொல்லப்பட்ட பாவங்களும் கொடிய பாவங்களே.

சங்கீதக்காரன் தாவீது சங்கீதம் 19:12,13இல் “தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கி விடும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.” என்று கெஞ்சுகிறார். ஒவ்வொரு மனிதனுக்குள் மறைவாக இருக்கும் குற்றங்கள் மற்றவர்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஒருவேளை அவ்வாறு தெரியக்கூடிய வாய்ப்பிருந்தாலும் நமது நிலைமை எப்படி இருக்கும்? சற்று யோசித்துப் பாருங்கள். ஆனால், தேவனுடைய கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை. நம்முடைய மறைவான குற்றங்கள் அவருக்குத் தெரியாது என்று தப்புக்கணக்கு போடுகின்றோம். சகலத்தையும் அறிந்த தேவன் நமது உள்ளான மனிதனில் உள்ள மறைவான குற்றங்களை அறிந்திருக்கிறார் என்னும் உணர்வு நமக்கு இருக்குமானால், நாம் அதில் எப்படித் தொடர முடியும்?

“நாம் பாவம் செய்வதால் பாவிகளல்ல; பாவிகளாய் இருப்பதால் பாவம் செய்கிறோம்.”

நாம் பாவம் செய்வதால் பாவிகளல்ல; பாவிகளாய் இருப்பதால் பாவம் செய்கிறோம்.

## துவக்கம்

### பாவம் எப்படி வந்தது?

அண்டசராசரங்களில் நடந்த முதலாவது பாவம் பரலோகத்தில் தேவனை ஆராதித்துக் கொண்டிருந்த தேவதூதர்களின் தலைவன்

லூசிபர் செய்ததுதான். ஏசாயா 14:12-15 வசனங்களில் சொல்லியபடி, "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே நீ வானத்திலிருந்து விழுந்தாயே. ஜாதிகளை ஈனப்படுத்தினவனே நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக எனது சிங்காசனத்தை உயர்த்துவேன்; வலபுறங்களிலுள்ள ஆராதனை கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும் நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே! ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாயே."

லூசிபர் தன் இருதயத்திலே "நான், நான்" என்று தன்னைத் தேவனுக்கு மேலாக உயர்த்தி பெருமை கொண்டான். தன் இருதயத்தில் பெருமையாக நினைத்ததுதான் அவனது பாவம். அந்தப் பாவம் அவனைப் பாதாளத்தில் தள்ளியது.

நாம் யாரும் இதுவரை பெருமையை ஒரு பாவமாகக் கருதுவதில்லை. ஆனால் இன்றைக்கும் 'பெருமை' என்ற பாவம் கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது. ஜாண் மில்டன் என்ற தேவமனிதனின் 'இழந்துபோன பரதீசு' (Paradise Lost) என்ற புத்தகத்தில், சாத்தான் "நான் பரலோகத்தில் பணிவிடைக்காரனாய் இருப்பதைவிட நரகத்தின் தலைவனாய் இருப்பதையே விரும்புகிறேன்" என்று சொல்வதாக வருகிறது.

பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டாலும், அவனைவிட்டு அந்தப் பெருமை அகல வில்லை. கிறிஸ்தவர்களில் அநேகருக்குச்



சபையில் பதவி, முதலிடம், கனம் இவைகளை எதிர்பார்ப்பதில் இருக்கிற ஆர்வம், ஆண்டவரோடு பிரசன்னத்தில் வாழவேண்டும், நல்ல தேவபிள்ளைகளாய் இருக்கவேண்டும் என்பதில் இல்லை. இதனடிப்படைக் காரணம் அவர்களுக்குள் இருக்கும் பெருமையே.

அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கை யில் சாத்தானின் போராட்டம் அதிகமாக இருக்கிறது என்று சொல்வதை அதிகமாக கேள்விப்பட்டிருப்போம். ஆனால் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பரலோகத்தில் மூன்றிலொரு பங்கு தூதர்கள் மாத்திரமே தள்ளப்பட்டு, சாத்தானோடு சேனையாய் மாறினார்கள். மூன்றில் இரண்டு பங்கு தூதர்கள் தேவனுக்கும் தேவபிள்ளை களுக்கும் இன்றளவும் பணிவிடை செய்கின்ற னர். ஆக, நமக்கு எதிராக ஒரு சாத்தான் செயல்படும்போது, நமக்கு ஆதரவாக இரண்டு தூதர்கள் இருப்பதை அநேக நேரங்களில் மறந்து விடுகிறோம்.

> "நமக்கு எதிராக ஒரு சாத்தான் செயல்படும்போது, நமக்கு ஆதரவாக இரண்டு தூதர்கள் இருப்பதை அநேக நேரங்களில் மறந்து விடுகிறோம்."

> நாம் பாவம் செய்வதால் நமக்கு ஏற்படும் பாதிப்புகளுக்காக தேவன் துக்கப்படுகிறார். நமது பாவத்தால் மற்றவர்கள் பாதிக்கப்படும்போது அந்த காரியத்தை தீவிரமாக எடுத்து தண்டிக்கிறார்.

அடுத்து பூமியில் நடந்த முதல் பாவத்தைக் குறித்துப் பார்ப்போம். ஆதாம் ஏவாளுடைய கீழ்ப்படியாமை என்ற பாவத்தின் பின்னணியில் சாத்தான் அவர்களிடம் இந்தக் கனியைப் புசிக்கும் நாளில் நீங்கள் தேவர்களைப்போல மாறுவீர்கள் என்று சொன்னான். ஆனால், உண்மை என்னவென்றால் அவர்கள் ஏற்கெனவே தேவர்களைப்போல தேவனோடு உறவாடி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆதாமின் பிள்ளையான காயீன் ஆபேலைக் கொலை செய்தபோது, காயீனுடைய பாவத்திற்காகப் பூமியையே சபித்தான். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது நாம் பாவம் செய்வதால் நமக்கு ஏற்படும் பாதிப்புகளுக்காகத் தேவன் துக்கப்படுகிறார். நமது பாவத்தால் மற்றவர்கள் பாதிக்கப்படும்போது அந்தக் காரியத்தைத் தீவிரமாக எடுத்து தண்டிக்கிறார்.

உதாரணத்துக்குச் சொல்ல வேண்டு மானால், ஒருவர் தன் நண்பரிடமிருந்து ஆயிரம் ரூபாயைத் திருடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். சில வருடங்கள் கழித்து, நடந்த தவறுக்காக அவரிடம் மன்னிப்பு கேட்டு பணத்தைத் திரும்பக் கொடுக்கும்போது அவரும் மன்னித்துவிட்டார். அதே சமயம் ஒருவர் மற்றவைரைக் குறித்து ஒரு பெண்ணோடு தொடர்பு இருப்பதைப்போன்று தவறான தகவல்களைப் பரப்பிவிட்டு திரும்ப அவரிடம் போய் மன்னிப்பு கேட்டு, அவர் மன்னித்தாலும் அவர் இழந்துபோன மரியாதையைத் திரும்பக் கொடுக்க முடியுமா? இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் சர்வசாதாரணமாக மற்றவரைக்குறித்து கேவலமாக பேசிவிட்டு சென்று விடுகின்றனர். இதன்மூலம் அந்த நபர் இழக்கும் மரியாதையைத் திருப்பிக் கொடுக்க முடியுமா? இப்படிப்பட்டப் பாவத்திலிருந்து நாம் நம்மைத் தப்புவித்துக் கொள்வோம்.

“பொறாமையும், விரோதமும் எங்கே உண்டோ அங்கே கலகமும், சகலவித துர்ச்செய்கைகளும் உண்டு” என்று யாக்கோபு 3:16 கூறுகிறது. திருடப்பட்டப் பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடலாம். ஆனால், இழந்த மரியாதையைத் திரும்பக் கொடுக்க இயலாது. அதற்கான தண்டனையைத் தேவன் கொடுப்பார்.

எபிரெயர் 1:9இல் ஆண்டவர் பாவத்தை வெறுத்து நீதியை விரும்பினார் என்று கூறுகிறது. நாமும் அவ்வாறே வாழவேண்டும் என்ற தேவன் விரும்புகிறார்.

> திருடப்பட்ட பணத்தை திரும்பக் கொடுத்துவிடலாம். ஆனால் இழந்த மரியாதையை திரும்ப கொடுக்க இயலாது.
> **அதற்கான தண்டனையை தேவன் கொடுப்பார்.**

# பழைய, புதிய உடன்படிக்கைகளில் பாவம் என்ற கருத்து

பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. பழைய உடன்படிக்கையில், அவர்களது நீதி வெளியரங்கமாய் மாத்திரம் இருந்தது. புதிய உடன்படிக்கையில் உள்ள நம்முடைய நீதி வெளியரங்கமாய் மாத்திரமல்ல; உள்ளான மனிதனிலும் உண்மையாக இருக்க வேண்டும். அது மிக மிக முக்கியம்.

பழைய உடன்படிக்கையிலும் புதிய உடன்படிக்கையிலும் பாவத்தைக் குறித்த வித்தியாசத்தைப் பார்ப்போம். பத்துக் கட்டளைகளில் முதல் ஒன்பது கட்டளை களையும் கடைபிடிப்பது எளிது. பத்தாவது கட்டளையைக் கடைபிடிப்பது கடினம். இயலாது. ஏனென்றால் அது இருதயம்

> "பத்து கட்டளைகளில் முதல் ஒன்பது கட்டளைகளையும் கடைபிடிப்பது எளிது. பத்தாவது கட்டளையை கடைபிடிப்பது கடினம். இயலாது. ஏனென்றால் அது இருதயம் சம்பந்தப்பட்டது. அது "இச்சியாதிருப்பாயாக" என்று கூறுகிறது. இந்த கட்டளையை கைக்கொள்ள வேண்டுமானால் நாம் புதிய உடன்படிக்கைக்குள் வர வேண்டும்."

சம்பந்தப்பட்டது. அது “இச்சியாதிருப்பாயாக” என்று கூறுகிறது. இந்தக் கட்டளையைக் கைக்கொள்ள வேண்டுமானால் நாம் புதிய உடன்படிக்கைக்குள் வர வேண்டும். பழைய உடன்படிக்கையில் நியாயபிரமாணம் கொடுக்கப்பட்டதன் நோக்கமே நம்மை நம்மால் இரட்சிக்க இயலாது, நமக்கு ஒரு இரட்சகர் வேண்டும் என்பதை வலியுறுத்தத்தான். கலாத்தியர் 3:1-4இல் சொல்லப்பட்டபடி நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற ஆசிரியராகத்தான் இருந்தது.

உதாரணத்திற்கு, 10 கட்டளைகளில் 7ஆவது கட்டளை “விபச்சாரம் செய்யாதிருப்பாயாக” என்று கூறுகிறது. ஒருவன் தன் மனைவியையும் நேசிக்காமல் விபச்சாரமும் செய்யாதிருந்தால் பழைய உடன்படிக்கையின்படி அது சரியான செயல். புதிய உடன்படிக்கையில் விபச்சாரம் செய்யாமல் ஒரு பெண்ணை இச்சையோடு பார்த்தாலே அது பாவம். புதிய உடன்படிக்கையில் வெளிப்பிரகாரமாக மாத்திரமல்ல, உள்ளான மனிதனிலும் பரிசுத்தம் தேவை.

உள்ளான இதய சுத்திகரிப்பு எவ்வளவு அவசியம் என்று பாருங்கள்? உள்ளான மனிதனில் ஒரு மாற்றம் உருவாகவே சீஷத்துவப் பயிற்சி தேவை. உள்ளான

> “புதிய உடன்படிக்கையில் வெளிப்பிரகாரமாக மத்திரமல்ல உள்ளான மனிதனிலும் பரிசுத்தம் தேவை.”

இதயத்தில் உள்ள கழிவுகள், சாக்கடை, கீழ்த்தரமான காரியங்கள் இவைகளிலிருந்து விடுபட்டு உண்மையான கிறிஸ்துவின் சீஷர்களாய் மாற வேண்டும் என்பதே இதன் பிரதான நோக்கம். மத்தேயு 12:35இல் கூறியபடி, நல்ல மனுஷன் தன் இருதயத்தில் நல்ல விதைகளைப் போட்டு வைத்தால் அது நல்ல கனிகளைக் கொடுக்கும். தீய விதையைப் போட்டு வைத்தால் தீய கனியைத்தான் கொடுக்கும்.

இயேசுகிறிஸ்து தன்னுடைய உபதேசங்களில் கடிந்து கொண்ட பாவங்களில் எதுவுமே 10 கட்டளைகளில் இல்லை என்பது கவனிக்கத்தக்கது. கிறிஸ்துவின் பார்வையில் பாவம் வித்தியாசமாகப் பார்க்கப்பட்டது. அந்தப் பாவங்களில் ஐந்து பாவங்களைக் குறித்து வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

**நடைமுறைப் படுத்த:**

1. ஒவ்வொரு பாவமும் இதயத்தில் இருந்து தான் துவங்குகின்றது. ஆகவே உங்கள் இதயத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

2. எல்லாவற்றுக்கும் மேல் உங்கள் இதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள், அதிலிருந்து தான் நீங்கள் செய்கின்ற அனைத்தும் புறப்பட்டு வரும் - நீதிமொழிகள் 4:23

3. கிறிஸ்தவ வாழ்வு என்பது செயல்களை சீர்திருத்துவது அல்ல. அது கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கையாகும்.

   **விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் – மத்தேயு 12:34**

4. புதிய உடன்படிக்கையில் இணைக்கப்பட்ட விசுவாசியாக, நீங்கள் செய்பவற்றைவிட நீங்கள் சிந்திப்பவையே மிகவும் முக்கியமானவைள் ஆகும். மலைப்பிரசங்கம் நமது உள்ளான வாழ்வைப் பற்றியே அதிகம் வலியுறுத்துகிறது.

5. கர்த்தரைத் தவிர வேறு ஒருவரும் உங்கள் இதயத்தைப் பார்க்க முடியாது. ஆகவே கர்த்தருக்கு உண்மையாக இருங்கள்.

# ஐந்து வகை பெரும் பாவங்கள்

பாவத்தில் சின்ன பாவம், பெரிய பாவம், நடுத்தர பாவம் என்று வேறுபிரிக்க இயலாது. ஆனாலும், நாம் இலகுவாக வஞ்சிக்கப்படக்கூடிய ஐந்து பாவங்களைக் குறித்துப் பார்ப்போம்.

## பெருமை

முதலாவது நாம் 'பெருமை' என்ற பாவத்தைக் குறித்துப் பார்ப்போம். ஆதியிலே லூசிஃபரை விழத்தள்ளின இந்தப் 'பெருமை' நம்மை இலகுவாக விழத்தள்ளக்கூடிய பாவம். "எனக்குள்ளே பெருமையே கிடையாது. நான் மிகவும் தாழ்மையானவன்" என்று ஒருவர் சொல்லும்போதே அவருக்குள் அதே பாவம் வந்துவிடுகிறது.

இயேசுகிறிஸ்து தன்னுடைய பிரசங்கங்களில் அதிகமாக கடிந்துகொண்ட காரியம் "நடிப்பது". 'மாயக்காரரே' என்று அவர் குறிப்பிடுகிறார். பரிசேயரும் சதுசேயரும் நடித்ததற்குக் காரணம் அவர்களுக்குள் இருந்த பெருமையே. மத்தேயு 23:4-7இல் அவர்களைக் குறித்து இயேசு சீஷர்களிடம் பேசும்போது "சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தை வெளிகளில் வந்தனங்களையும் மனுஷரால் ரபீ, ரபீ என்று

> "எனக்குள்ளே பெருமையே கிடையாது. நான் மிகவும் தாழ்மையானவன்" என்று ஒருவர் சொல்லும்போதே அவருக்குள் அதே பாவம் வந்து விடுகிறது.



அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்'' என்று குறிப்பிடுகிறார். ''தான் பெரிய ஆள்'' என்ற எண்ணம் பெருமையைக் கொண்டு வருகிறது.

''டைட்டானிக் கப்பலைக் குறித்து அனைவருக்கும் தெரியும். தொழில்நுட்பத்தின் உச்சகட்ட நிலையில் வடிவமைக்கப்பட்ட கப்பல் இது. 269 மீட்டர் நீளமும் 2310 டன் எடையுடனும் வடிவமைக்கப்பட்டது. 1911ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்தக் கப்பலைக் குறித்து அந்தக் காலத்தில் பெல்ஃபாஸ்டில் இருந்து வெளிவந்த நாளிதழ் தலைப்புச் செய்தி வெளியிட்டது. இது தண்ணீர் உட்புகாத ஆறு அறைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தது. 1911ஆம் ஆண்டில் இந்தக் கப்பலில் தினசரி நாளிதழ் அச்சடிக்கும் வசதி இருந்தது. தபால் அலுவலகம் இருந்தது. பங்குசந்தை குறித்து தினசரி செய்திகளை அச்சடித்து இந்தக் கப்பலில் விநியோகம் செய்தனர். இந்தக் கப்பலின் முதல் வகுப்பு கட்டணம் 2,00,000 பவுன்ட்கள் (இன்றைய மதிப்பில்). இந்த கப்பல் "Rayal Mail Service Titatanic" என்று பெருமையாக அழைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 1000 பணியாளர்கள் இந்தக் கப்பலில் இருந்தார்கள். 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி புறப்பட்டு தனது முதல் பயணத்திலேயே கடலில் மூழ்கிவிட்டது.

இந்தக் கப்பலை ஓட்டிய எட்வர்ட் ஸ்மித் என்ற கேப்டன் தனது தொழிலில் 43 வருட அனுபவமிக்கவர். அவரது அனுபவம் அந்தக் கப்பலைக் காப்பாற்ற முடியவில்லை.

பிரான்ஸ் தேசத்தைச் சார்ந்த பத்திரிக்கை யாளர் ஒருவர் இந்தக் கப்பலில் இருந்தபடியே "இந்தக் கப்பல் போய்ச் சேராது" என்று தந்தி அனுப்பிவிட்டு அதே கப்பலில் இருந்து தப்பித்து விட்டார். வேறொரு பெண்மணி "இந்தக் கப்பலில் மரண வாசனை வீசுகிறது" என்று சொல்லி இரவெல்லாம் தூங்காமல் பயணித்து கப்பல் மூழ்கும்போது அதிலிருந்து தப்பித்து விட்டார். ஜான் கோபி என்ற பணியாளர் அயர்லாந்தி லிருந்து இந்தக் கப்பல் புறப்படுவதற்காக ஏணிகள் அகற்றப்பட்டு முடிந்தபின் அந்தக் கப்பலிலிருந்து குதித்து கரையேறி, "இந்தக் கப்பல் போய்ச் சேராது" என்று சொன்னார்.

தேவனை சார்ந்து ஒரு மனிதன் வாழும்போது தேவனுடைய வழிநடத்துதல் வித்தியாசமாக இருக்கும்.

ஆபகூக் 2:4 "இதோ, அகங்காரியாயிருக் கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்." என்று கூறுகிறது. பெருமை வந்துவிட்டால் ஒரு மனிதனில் அவன் ஆத்துமா செம்மையாய் இருப்பதில்லை. அதே வசனத்தின் பின்பகுதி "தன் விசுவாசத் தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று கூறுகிறது. பெருமையும் விசுவாசமும் இங்கு எதிர் பதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருமை வந்துவிட்டால் தேவன்மேல் உள்ள விசுவாசம் போய்விடும். மாறாக தன்மேல் விசுவாசம் அதிகரிக்கும். "தன்னால் எல்லாம் முடியும்" என்ற எண்ணத்தைக் கொண்டு வரும். தேவன்மேல் விசுவாசமாயிருக்கிறவன் "தன்னால் எதுவும் முடியாது, தேவனால் எல்லாம் முடியும்" என்று நம்புவான்.

ஆம் **'பெருமை' என்பது நம்மேல் நம்பிக்கை வைப்பது, 'விசுவாசம்' என்பது தேவன்மேல் நம்பிக்கை வைப்பது.**

கலாத்தியர் 6:3இல் "ஒருவன், தான் ஒன்று மில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட் டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" என்று கூறப்பட்டுள்ளது.

**எனக்குள் பெருமை இருக்கிறதா? வஞ்சிக்கப்பட்டிருக்கிறோமா? என்ற கேள்விக்கு விடை காண நம்முடைய அன்றாட பேச்சுகளில் வரும் சிலவற்றைப் பார்போம்.**

1. அடுத்தவர் பாவத்தை குறித்து அதிகம் பேசுவது.
2. அடுத்தவர் நடிப்பதாக கூறுவது.
3. காழ்ப்புணர்ச்சியுடன் அடுத்தவரைக் குறித்து பேசுதல்.
4. தனக்கு மரியாதை தேடுவது. கல்யாண வீட்டிற்கு போனால் மாப்பிள்ளையாயிருக்க வேண்டும், சாவு வீட்டிற்கு போனால் தான் தான் பிணமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்.
5. தன்னுடைய திறமைகளை, தாலந்துகளை குறித்து பெருமையாகப் பேசுவது.
6. நாம் செல்லும் சபையை குறித்து, அல்லது குறிப்பிட்ட போதகரை குறித்து அல்லது தனது அலுவலகத்தை, பதவியை குறித்து, தனது அறிவைக் குறித்து மேன்மை பாராட்டுவது.

இதன் பொருள் நம்மை நாமே தரம் தாழ்த்திக்கொள்ள வேண்டுமென்பது அல்ல. மாறாக ஒரு செயலைச் செய்ய நமக்குத் திராணியிருக்கும்போது அதை ஒரு பொருட்டென்று எண்ணி பெருமைகொள்ள ஆரம்பிக்கும்போது நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் மாறிவிடுகிறோம். நம்மை நாமே வஞ்சிக்கும்போது யார் நம்மைக் காப்பாற்ற இயலும்? யோசித்துப் பாருங்கள்.

பெருமை வந்த பின்பு உங்களை நீங்களே ஏமாற்ற ஆரம்பித்து விடுவீர்கள். உங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்தத் தொடங்குவீர்கள்.

ஆக 'பெருமை' என்ற பாவம் நம்மை வஞ்சித்துவிடாமல் நம்மை நாமே பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மற்றவர்களோடு ஒப்பிடும்போதுதான் பெருமை வருகிறது. மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்க தேவன் நம்மை அனுமதிக்கவில்லை.

நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட சிறப்பான தாலந்துகளைக் கொடுத்துதான் தேவன் நம்மைப் படைத்திருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் அவர் தனது 12ஆவது வயதிலேயே வேத வசனங்களை எல்லோரும் ஆச்சரியப்படும்விதமாக வியாக்கியானம் பண்ணினார். ஆனாலும் தனது ஊழியத்தைத் தொடங்கும் 30ஆவது வயதுவரை தேவ ஆலயத்திற்குத் தவறாமல் சென்று வந்தார். எல்லா ஞானத்திற்கும் அதிபதியான கர்த்தர் அங்கு வழங்கப்பட்ட அவருடைய ஞானத்திற்கு ஒவ்வாத செய்திகளை வாராவாரம் கேட்டுதான் வளர்ந்தார். ஆனாலும் அமைதியாகக் குறை சொல்லாமல் இருந்தார்.

யாக்கோபு 4:6இல் "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" என்று சொல்லியிருக்கிறது.

1 பேதுரு 5:5,6இல் "நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்." என்று சொல்லப்பட்டுள்ளது. ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.

பெருமையுள்ளவர்கள் தேவனை எதிர்த்து நிற்கிறார்கள் என்பது தெளிவு. தன்னைத் தாழ்த்துகிறவனைத் தக்கசமயத்தில் தேவன் உயர்த்துவார். லூக்கா 18:9-14இல் ஆயக்காரனும் பரிசேயனும் தேவ ஆலயத்தில் ஜெபம் பண்ணப்போகும்போது பரிசேயன் "நான் ஆயக்காரன் போல் இல்லை" என்கிறான். ஆயக்காரனோ மார்பில் அடித்து "தான் ஒரு பாவி" என்று அறிக்கையிட்டு தேவ இரக்கம் பெற்றான் என்பது நாம்

> "ஒரு மனிதனுக்குள் பெருமை வந்துவிட்டால் அது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலும், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலும் பெரிய இடைவெளியை கொண்டு வந்து விடும்."

அறிந்த ஒன்று. அமெரிக்கன் Standard Version வேதாகமத்தில் ஆயக்காரன் ‘‘நானே அந்த பாவி’’ என்று அறிக்கையிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

Sues Luis “Christian behaviour” என்ற புத்தகத்தில் எழுதும்போது ஒரு மனிதனுக்குள் பெருமை வந்துவிட்டால் அது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலும், மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலும் பெரிய இடைவெளியை கொண்டு வந்துவிடும் என்று குறிப்பிடுகிறார்.

மேலும் அப்புத்தகத்தில் ஒரு சம்பவத்தை விவரிக்கிறார். ஒரு சபைக்கு விரோதமாக சாத்தானுடைய கூட்டம் ஆலோசனை நடத்துகிறது. ஒவ்வொரு விசுவாசிக்கும் விரோதமாக செயல்பட, ஒவ்வொரு சாத்தானை நியமித்து ஒவ்வொரு திட்டமாக விவாதித்தார்கள்.

இந்தச் சபையில் இந்தப் பெண் அழகை விரும்புவள். எனவே அவளைக் காதலிக்கும்படி ஒரு அழகான வாலிபனைத் தயார் செய்ய ஒரு சாத்தானுக்குப் பணிக்கப்பட்டது. வேறொரு விசவாசி பண ஆசை பிடித்தவர். எனவே அவர் விழுந்துபோகும்படி நிறைய செல்வத்தைக் கொடுக்க வேறொரு சாத்தானுக்கு வேலை கொடுக்கப்பட்டது. இப்படி சபையிலுள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் தனித்தனியாக ஒரு சாத்தானை நியமித்து பணி வழங்கப்பட்டது. ஆனால் அந்தப் போதகரை மட்டும் பின்மாற்றமடைய எந்தப் பணியும் எந்தச் சாத்தானுக்கும் வழங்கப்படவில்லை. ஒரு சாத்தான் இதைக் குறித்து கேள்வி எழுப்புகிறான். அதற்கு அந்தக் கூட்டத்தின் தலைவன் ‘‘அது மிக எளிது. அவருக்கு நாம்

எதையும் செய்யத் தேவையில்லை" அவர் தனது ஊழியத்தை முடித்து தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிடுவார். அந்தச் சமயத்தில் அவரது காதருகினில் போய் "நீ எவ்வளவு பிரமாதமாக ஊழியம் செய்தாய் பார்த்தாயா?" என்று கிசுகிசுத்துவிட்டு வா. அது போதும்"

நாம் ஒவ்வொருவருக்கும் தேவனைக்குறித்து கற்பனை செய்து வைத்திருக்கும் காரியங்களில் வித்தியாசமுண்டு. அது பெரும்பாலும் வேத வசனத்தின் அடிப்படையில் இருக்காது. ஆக **சமநிலை கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்து நாம் அறிந்து கொள்வது அவசியம். தேவன் அன்பானவர் என்று அறிந்த நாம், அவர் பட்சிக்கிற தேவன், நீயாயந்தீர்ப்பவர் என்ற சத்தியத்தையும் அறிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் நமது மனதில் தேவனைக் குறித்துத் தவறாகச் சித்தரித்து வைத்துக்கொண்டு, நமது கற்பனையில் இருக்கும் தேவனுக்கு இது இதெல்லாம் பிடிக்கும் என்று சொல்லி, அவருக்குப் பிடிக்கும் காரியங்களைச் செய்வதாக நினைத்து, நமக்குப் பிடித்த காரியங்களைச் செய்து நம்மை நாமே திருப்தி செய்து கொள்கிறோம். அப்படித்தான் விசுவாசிக்குள் "பெருமை" உண்டாகிறது.**

உதாரணத்திற்கு, சபைக்கு பணம் கொடுப்பதோ, இசை வாசிப்பதோ, தவறாமல் ஆலயத்திற்கு போவதோ தேவனுக்கு மிகவும் பிடிக்கும் என்று நமது கற்பனையில் நமக்குப் பிடித்த காரியத்தைத் தேவனுக்குப் பிடிக்கும் என்று நினைத்து அதை செய்துவிட்டு, "தேவனுக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது" என்று பெருமை பாராட்டிச் சென்று விடுகிறோம்.

இந்தப் பெருமையிலிருந்து எப்படி விடுபடுவது என்பது குறித்து மூன்று காரியங்களைத் தியானிக்கலாம்.

### 1. ஜெபப் பங்காளர்

முதலாவது, நீங்கள் இன்னொருவரோடு கூடி ஜெபிக்கும்போது நீங்கள் செய்யும் காரியங்களில் அல்லது நடவடிக்கைகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டக்கூடிய உரிமையை அவருக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் "சகோதரரே நீங்கள் செய்யும் இந்தக் காரியம் சரியானதல்ல" என்று அவர் சுட்டிக்காட்டவும், நீங்கள் அதைச் சரி செய்யவும் ஏதுவாக இருக்கும். அப்படிச் சுட்டிக் காட்டும்போது அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவு மனப்பக்குவம் உங்களில் உருவாக வேண்டும். அவர் சரியாகக் காரியங்களைச் சொல்வார் என்பதற்காகத்தான் நீங்கள் அவரோடு சேர்ந்து ஜெபிக்கிறீர்கள். நீங்கள் இருவரும் ஒருமனப்பட்டு ஜெபம் செய்யும்போது நீங்கள் பார்க்காத காரியங்களை அவர் ஜெபத்தில் பார்ப்பார். அவர் பார்க்காத காரியங்களை நீங்கள் பார்ப்பீர்கள்.

எனக்கு ஒரு வெளிப்பாடு உண்டாகும் போது எனக்கு நெருங்கிய ஆவிக்குரிய

நண்பர்களோடு விவாதிப்பேன். வேத வசனத்தின் அடிப்படையில் நாங்கள் தியானிக்கும்போது அந்த வெளிப்பாடு சரியானதா? இல்லையா? என்பதைப் புரிந்து கொள்வேன்.

அதை வேதவசனங்களின் அடிப்படையில் சரிசெய்து கொள்ள அது ஏதுவாக அமைகிறது.

வேத வசனங்களில் எனக்கு உண்டாகும் வெளிப்பாடுகள் எல்லாவற்றையும் அப்படியே பிரசங்கித்தால், நான் சொல்வதெல்லாம் சரி என்ற தவறான எண்ணத்திற்கு நான் வந்து விடுவேன்.

ஆக இப்படிப்பட்ட ஆவிக்குரிய அனுபவங் களைப் பகிர்ந்துகொள்ள, ஆலோசனை பெற ஒரு ஜெபப் பங்காளர் நமக்கு அவசியம்.

## 2. பாவ உணர்வு

இரண்டாவது, ‘‘நான் பாவி’’ என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். லூக்கா 18ஆம் அதிகாரத்தில் ஆயக்காரன் சொன்னதுபோல நம்மை மற்றவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தி ‘‘நானே அந்த பாவி’’ என்று தாழ்த்தி மன்னிப்பு கேட்க வேண்டும்.

நாம் செய்யும் ஊழியத்தைக் குறித்தோ செய்யும் காரியங்களைக் குறித்தோ ‘பெருமை’ பாராட்டாமல் ‘‘நான் பாவி’’ என்பதை உணர்ந்தவர்களாய் தாழ்மையோடு ஜீவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். 1 யோவான் 1:8 ‘‘நமக்கு பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது’’ என்று கூறுகிறது.

## 3. தேவனில் மேன்மை பாராட்டுதல்

மூன்றாவது, தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த காரியங்களைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டும். இதில் கவனிக்க வேண்டியது தேவன் செய்தவைகளுக்காக, நம்மைக் குறித்து மேன்மை பாராட்டுவதல்ல; தேவனைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும், நாம் ஒன்றுமில்லை. தேவனே எல்லாம் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் எல்லாக் காரியங்களைச் செய்தாலும் 1 கொரிந்தியர் 15:10இல் ‘‘ஆகிலும் நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன். அவர் எனக்கு அருளின கிருபை விருதாவாய் இருக்கவில்லை. அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல என்னுள் இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது’’. பவுல் ‘‘எல்லாக் காரியங்களையும் செய்தாலும் தேவ கிருபைதான் அவரை அப்படிச் செய்ய வைத்தது, தன்னுடைய பலத்தில் எந்தக் காரியமும் செய்யவில்லை’’ என்று கூறுகிறார். ரோமர் 15:18,19இல் ‘‘புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும்படிக்கு அற்புத அடையாளங்களின் பலத்தினாலும் தேவ ஆவியின் பலத்தினாலும் கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை’’ என்று பவுல் ‘‘தான் ஒன்றுமில்லை, எல்லாமே கிறிஸ்துதான் தன்னில் கிரியைகளை நடப்பிக்கிறார்’’ என்று கூறுகிறார்.

ஆண்டவர் தன்மேலே உட்கார்ந்திருக்கும் வரைதான் கழுதைக்கு மரியாதை. எருசலேம்

வீதிகளின் எல்லாரும் துணிகளையும், போட்டு வரவேற்றதற்குக் காரணம் கழுதையல்ல. கழுதையின்மேல் வீற்றிருந்த ஆண்டவராகிய இயேசுவே. கழுதை தனக்குத்தான் இவ்வளவு கனமும் செலுத்துகிறார்கள் என்று நினைத்தால் என்ன ஆகும்? ஊழியம் செய்கிறவர்கள் இப்படித்தான் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது நமக்குள் பெருமை இருக்காது.

## என் பெருமையைப் பற்றிய சிந்தனைகள்

உங்கள் பெருமையை சோதித்துப் பார்க்கலாம். உங்களைவிட தகுதியில் குறைந்தவரை உங்கள் போதகர் பாராட்டினால் நீங்கள் எப்படி உணர்வீர்கள்?

a) அடுத்த நபருக்காக மகிழ்ச்சியடைவீர்களா?

b) பொறாமைப்படுவீர்களா?

c) எந்த உணர்வும் இருக்காதா?

d) மகிழ்ச்சியாக இருப்பது போல நடிப்பீர்களா?

e) ______________________________

______________________________

**உங்கள் பொறுமையை பெருமை வெற்றி கொண்ட சமயங்களை நினைவுபடுத்தி பட்டியலிட முடியுமா?**

______________________________

______________________________

______________________________

**வருகின்ற வாரங்களில், பெருமையை நீங்கள் வெற்றி கொண்ட அனுபவங்களை இந்த இடத்தில் எழுதி வையுங்கள்.**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## நடிகன் அல்லது மாயக்காரன்



இரண்டாவது "நடிகன் அல்லது மாயக்காரன்". ஆண்டவர் மத்தேயு 23இல் மாயக்காரரைக் குறித்து மிகவும் கடிந்து கொண்டதற்கு அவர்கள் வெளிப்பிரகாரமாக பரிசுத்தவான்கள்போல காணப்பட்டாலும், உட்பிரகாரமாக மிகவும் மோசமானவர்களாக இருந்தார்கள். அவர்களது வெளி வேஷம் நேர்த்தியாய் இருந்தது. உள்ளுக்குள் பாவிகளாய் காணப்பட்டார்கள். நாம் எந்த எந்த விசயங்களில் மாயக்காரராக ஜீவிக்கிறோம் என்று சற்று யோசித்துப் பார்ப்போம்.

தீத்து 1:16ஆம் வசனத்தில் "அவர்கள் வார்த்தைகளெல்லாம் மாயாஜாலமான வார்த்தைகள். ஆனால் அவர்களது நடவடிக்கைகளோ மிகவும் மோசமானவை. அவர்கள் ஒன்றுக்கும் உதவாத மக்களாக வாழ்கிறார்கள்" என்பதை விளக்குகிறது.

இப்படிப்பட்ட நடிப்பின் வாழ்க்கையிலிருந்து நாம் வெளிவர வேண்டும். என்னென்ன காரியங்களில் நாம் இவைகளைக் கடைபிடிக்கவேண்டும் என்று பார்ப்போம்.

### 1. கொடுத்தல்

முதலாவது, "கொடுத்தல்". மத்தேயு 6:1-4இல் எப்படிக் கொடுக்கக்கூடாது என்று குறிப்பிடு கிறார். இடது கை செய்கிறதை வலது கை அறியக்கூடாது என்கிறார்.

### 2. ஜெபம்

இரண்டாவது, "ஜெபம்". அடுத்தவர் பார்க்க வேண்டும் என்று ஜெபம் செய்யக்கூடாது. அந்தரங்கத்தில் ஜெபிக்க வேண்டும் என்கிறார்.

### 3. உபவாசம்

அடுத்தது, "உபவாசம்". நாம் உபவாசம் இருப்பது மற்றவர்களுக்குத் தெரியாதவாறு தலைக்கு எண்ணெய் பூசி தோற்றமளிக்க வேண்டும் என்கிறார். இன்றைக்கும் "நான் உபவாசம் இருக்கிறேன்" என்று கூறுபவர்கள் அநேகரைப் பார்க்கிறோம்.

### 4. நியாயந்தீர்த்தல்

அடுத்தது "நியாயந்தீர்த்தல்". மத்தேயு 7:1-5 வரையுள்ள வசனங்கள் எப்படி நியாயந்தீர்க்க கூடாது என்பதைக் கூறுகிறது.

### 5. கோட்பாடுகள்

அடுத்தது "கோட்பாடுகள்". வேத வசனத்தைத் தவறாக வியாக்கியானம் செய்து அதை மனிதக் கோட்பாடுகளாக மாற்றுவது.


> "நாம் எப்போது தேவனை பிரியப்படுத்தத்தான் வாழ்கிறோம் என்பதை உணர்கிறோமோ அப்போதுதான்நாம் மனிதர்களிடம் நடிப்பது நின்று போகும்."


### 6. ஆதிக்கம் செலுத்துதல்

மற்றொரு காரியம் "ஆதிக்கம் செலுத்துதல்". எப்படி மற்றவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பதையும், "பகுத்தறிதல்" - நாம் எப்படி பகுத்தறிய வேண்டும் என்பதையும் குறித்த வேத வசனங்களைத் தியானிக்க வேண்டும்.

நாம் எப்போது தேவனைப் பிரியப்படுத்தத்தான் வாழ்கிறோம் என்பதை உணர்கிறோமோ அப்போதுதான் நாம் மனிதர்களிடம் நடிப்பது நின்று போகும்.

அப்போஸ்தலன் பவுல் மனுஷரைப் பிரியப் படுத்துவதற்காக அல்ல, தேவனையே பிரியப் படுத்த வாழ்கிறேன் என்று குறிப்பிடுகிறார்.

மற்றவர்கள் எந்தந்த காரியங்களில் நடிக்கிறார்கள் என்று கணக்கெடுக்காமல் நாம் எதிலெல்லாம் நடித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தியானித்து அவைகளிலிருந்து விடுபடுவோம்.

**என் மாய்மாலத்தைப் பற்றிய சிந்தனைகள்:**

**கீழ்க்கண்ட இடங்களில் எங்கே நீங்கள் நடித்திருக்கிறீர்கள் (மாய்மாலம் செய்தல்)?**

- ❑ வேலை செய்யுமிடம் ❑ உறவினர்களிடம்
- ❑ குடும்பம் (வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகளிடம்) ❑ நண்பர்களிடம்
- ❑ திருச்சபையில் அல்லது ஐக்கியத்தில்
- ❑ மற்ற இடங்களில் ________________________________

________________________________________________

________________________________________________

வருகிற வாரங்களில் மாய்மாலத்தை வெற்றி கொண்ட உங்கள் அனுபவங்களை இந்த இடத்தில் குறித்து வையுங்கள்.

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________

## அவிசுவாசம்

மூன்றாவது பாவம் "அவிசுவாசம்". நம்மில் அநேகர் "நான் விசுவாசிதான். சில சமயம் பயம் வரும்போது அவிசுவாசம் வந்து விடுகிறது." அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவதைப் பார்க்கிறோம். ஆனால் 'அவிசுவாசம்' என்ற பாவத்தை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 8 முறை கடுமையாகக் கடிந்து கொண்டார்.

மாற்கு 6:5,6இல் ஆண்டவர் அற்புதங்களைச் செய்யக்கூடாதபடி அவர்களுக்குள் இருந்த அவிசுவாசத்தைக் குறித்து, ஆச்சரியப்பட்டார் என்று பார்க்கிறோம். அவிசுவாசம் ஒரு பலவீனமல்ல; அது பாவம் என்பதை நாம் அறிந்திருந்தால் அதிலிருந்து விடுபட முடியும்.

**மத்தேயு 6:30 அற்ப விசுவாசிகளே!**

மத்தேயு 8:26 "அதற்கு அவர் அற்பவிசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி, எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று."

இந்த வசனத்தில் கடலைப் பார்க்க முடியும். ஆனால் காற்றைப் பார்க்க முடியாவிட்டாலும்

அதனை அவர் அடக்குவதைப் பார்க்கும்போது, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால் பார்க்கக்கூடிய பிரச்சனைகளைத் தீர்ப்பவரும் அவரே, பார்க்க முடியாத பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியவரும் அவரே.

மத்தேயு 14:31இல் பேதுரு இயேசுவைப் போல கடலில் நடக்க விரும்பி, விசுவாசத்தோடு நடந்து வருகையில் காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில் ஆண்டவரே! என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து "அற்பவிசுவாசியே! ஏன் சந்தேகப்பட்டாய்" என்றார்.

மத்தேயு 16:8இல் சீஷர்கள் அப்பங்களைக் கொண்டுவர மறந்தபடியால் இயேசு தங்களைக் கடிந்து கொள்கிறார் என்று தவறான எண்ணங்கொண்டபோது, அவர்களது அவிசுவாசத்தை இவ்வாறு கடிந்து கொள்கிறார். மத்தேயு 16:8-10 வசனங்களில் அவர் செய்த அற்புதங்களை மறந்து அவிசுவாசம் கொண்டதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மத்தேயு 17:17-20 சந்திரரோகியாய் இருந்து கொடிய வேதனைப்பட்ட ஒரு மனிதனின் தந்தை, தனது மகனைச் சீஷர்களிடம் கொண்டுவந்த போது, அவர்களால் அவனைக் குணப்படுத்தக் கூடாமற்போயிற்று என்று கூறியபோது, இயேசு அவர்களை இவ்வாறு கடிந்து கொள்கிறார்.

"மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன். எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பேன்" என்று கூறி கடிந்து கொள்கிறார். கடுகு விதையளவு விசுவாசமிருந்தால்கூட இந்த மலையைப் பார்த்து இவ்விடம்விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம்போம் என்று விசுவாசத்தின் மேன்மையைக் கூறுகிறார். மாற்கு 16:14இல் அவர் உயிர்த்தெழுந்தபின்பு பதினொருவரும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, "உயிர்த்தெழுந்திருந்த தன்னைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும், இருதயக் கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்.

லூக்கா 24:25 அவர் உயிர்தெழுந்த பின்பு எம்மாவூர் என்னும் ஊருக்குக் கடந்து சென்ற சீஷர்களோடு சேர்ந்து நடந்து செல்லும்போது, "தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே" என்று கடிந்து கொண்டார்.

யோவான் 20:27இல் தோமா நான் இயேசுவைக் கண்டு, அவர் காயத்தைத் தொட்டுப் பார்த்தாலொழிய நம்ப மாட்டேன் என்று சொன்தற்குப் பிறகு, இயேசு சீஷர்களுக்குத் தரிசனமாகி, தோமாவை நோக்கி "நீ உன் விரலை நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்றார்.

இவ்வாறு இயேசு எட்டுமுறை அவிசுவாசத்தைக் கடிந்து கொண்டார். ஆகவே அவிசுவாசம் ஒரு பெலவீனமல்ல, இது ஒரு பாவம் என்பதை நாம் மறக்கக்கூடாது.

> "அவிசுவாசம் ஒரு பெலவீனமல்ல, இது ஒரு பாவம் என்பதை நாம் மறக்கக்கூடாது."

எபிரேயர் 3:4 அதிகாரங்களில் இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை அடைய தடையாய் அமைந்த பாவங்களில் ஒரு முக்கியமான பாவம் அவிசுவாசம் என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே எபிரெயர் 3:12இல் தேவன் இவ்விதம் நம்மை எச்சரிக்கிறார். ‘‘சகோதரரே! ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாச முள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக் குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையா யிருங்கள்’’. அவிசுவாசம் என்பது நம்பிக்கை இல்லாத நிலையைக் காட்டுகிறது. நாம் இதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், நமது பிள்ளைகள் நம்மிடம் வந்து ‘‘அப்பா இன்று எனக்கு சாப்பாடு தருவீர்களா?’’ என்று கேட்டால் நமது மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை யோசிப்போம். இவ்வாறு தேவனை நாம் கேட்கும்போது, நாம் அவரை அவமானப்படுத்துவது போலவும், தரக்குறைவாக மதிப்பிடுவது போலவும் இருக்குமல்லவா? ஆனால் இதே இயேசு, மூன்று விதமான விசுவாசத்தைக் குறித்து மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைந்ததை வேதம் கூறுகிறது.

மத்தேயு 8:5-13 ஒரு நூற்றுக்கு அதிபதி, தன் வேலைக்காரனைச் சொஸ்தமாக்க வேண்டிக் கொண்டபோது, நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்போது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு. நான் ஒருவனை வா என்றால் வருகிறான். போ என்றால் போகிறான். வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று கூறியபோது இயேசு அவனுடைய விசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்.



லூக்கா 17:11-19இல் இயேசுவின் வார்த்தையால் சுகமடைந்த 10 குஷ்டரோகிகளில் ஒருவன் மாத்திரம் வந்து நன்றி சொன்னபோது வராத மற்றவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டார். மாற்கு 7:25-30இல் சிரோபேனிக்கியா கிரேக்க ஸ்திரீ, விடாப்பிடியாய் இயேசுவை பற்றிக்கொண்டு, தன் மகள் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்க சொன்ன விசுவாச வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார் என்று வேதம் கூறுகிறது. ஆகவே நமது விசுவாசத்தால் நாம் தேவனை மகிழ்வித்து ஆச்சரியப்பட வைக்க முடியும். நமது அவிசுவாசத்தால் தேவனை ஆச்சரியப்படுத்தி வருத்தப்படவைக்க முடியும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இதை எபிரெயர் 11:6 இவ்வாறு கூறுகிறது.

“விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.” அவிசுவாசத்தால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தையே அடையமுடியாமல் போகலாம்.

## என் அவிசுவாசத்தைப் பற்றிய சிந்தனைகள்:

**உங்கள் வாழ்வில் பிரச்சனைகள் வரும் போது பிற வழிகளை நாடுவதற்கு முன்பு கர்த்தரை நாடிய சூழ்நிலைகள் யாவை?**

- ☐ படிப்பைப் பற்றி தீர்மானித்த போது
- ☐ வாகனம் வாங்கும் போது
- ☐ கடனுக்கு விண்ணப்பித்த போது
- ☐ நிச்சயதார்த்தத்தின் போது
- ☐ மற்ற நிகழ்வுகள் - பட்டியலிடுக
- ☐ சுகவீனம் ஏற்பட்ட அவசர காலத்தில் அருகில் யாரும் இல்லாத போது
- ☐ சபை சங்கத்தில் ஒரு பொறுப்புக்காக தேர்தலில் போட்டியிட்ட போது

**வருகின்ற வாரங்களில், உங்கள் அவிசுவாசத்தை நீங்கள் வெற்றி கொண்டது எப்படி என்று இங்கே எழுதுங்கள்.**

# கிரியையில்லாத அன்பு




நான்காவதாக கிரியையில்லாத அன்பு என்பதைப் பற்றி மத்தேயு 25:31-46 வரை உள்ள வசனங்களில் பார்க்க முடியும். பசியாயிருக்கும், தாகத்தோடு அலையும், வஸ்திரமில்லாது வாடும், வியாதியோடு போராடும், காவலில் வைக்கப்பட்டு கதறும் எளியவர்களுக்குச் செய்தது தேவனுக்குச் செய்த அன்பு செயலாகவும், அதைச் செய்யாது வாழ்வோர், தேவனுக்கு அன்பு செய்யாத செயலாகவும் கூறப்படுகிறது. அத்தகையோருக்கு மோட்சமும் நரகமும் பிரதிபலனாகக் கிடைப்பது பற்றி கூறப்படுகிறது. தேவனிடத்தில் அன்பு கூறுவது என்பது பிறருக்குச் செய்யும் கிரியையில் மட்டும் வெளிப்படும்.

கலாத்தியர் 6:10இல், "நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்று வேதம் கூறுகிறது.

லூக்கா 10:25-37 நல்ல சமாரியன் கதையில் எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்ற ஒரு மனுஷன் கள்ளர் கையில் அகப்பட்டு, குற்றுயிராக விடப்பட்டான். ஆனால் அவனை விசாரிக்க வேண்டிய அன்பை போதிக்கிற ஆசாரியனும், லேவியனும் உதவி செய்யாமல் விலகிபோனார்கள். ஆனால் அன்பு பற்றி அதிகம் அறியாத சமாரியன், அவன் காயங்களைக் கட்டி, அவனைக் காப்பாற்றி, அன்பு செலுத்தினான் என்று பார்க்கிறோம். ஆகவே கிறிஸ்தவ வாழ்க்கை என்பது அழகாகப் பேசும் ஆவிக்குரிய காரியங்களிலல்ல, செய்யக்கூடிய காரியங்களே நாம் கிறிஸ்தவர்களா இல்லையா என்பதை காட்டிக் கொடுக்கும்.

வேதஅறிவு நமக்கு அவசியம். ஆனால் வேதத்தை அறிந்திருப்பது ஒன்றே நம்மைத் தேவனிடம் கொண்டு சேர்க்காது. நமது காரியங்களே முக்கியம், லூக்கா 16:19-31 பணக்காரனும் லாசரும் கதையில் பணக்காரன் சுயநலமாய் வாழ்ந்ததால் பாதாளம் சென்றான். லாசரு தான் அழைக்கப்பட்ட நிலைமையில் தேவனை உயர்த்தி வாழ்ந்ததால் பரலோகம் சென்றான். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வதற்கு ஏற்றார்போல் ஆவிகளின் உலகத்திற்குள்ளே ஒரு சிறிய இடைவெளி மட்டுமே உண்டு. இக்கதையின் மூலம் நாம் தெரிந்து கொள்ளும் உண்மைகள் இரண்டு.

1) நாம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும்

உலகப் பொருள்களைப் பயன்படுத்தி பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்க வேண்டும்.

2) நாம் அறிந்துகொண்ட சத்தியத்தைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

யாக்கோபு 2:15-17இல் விசுவாசக் குடும்பத்தார் கண்காண ஒருவர் வஸ்திரமில்லாமல், அனுதின ஆகாரமில்லாமல் இருக்கும்போது அவருக்கு உதவிசெய்யாதபடி நமது இதயத்தை அடைத்துக் கொண்டால் பிரயோஜனமென்ன, கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது என வேதம் நம்மை எச்சரிக்கிறது. 1யோவான் 3:17,18 இதையே வலியுறுத்துகிறது.

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டு என்பதைக் கண்டும் தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால் அவனுக்குள் தேவஅன்பு நிலை கொண்டு இருப்பது எப்படி? என் பிள்ளைகளே வசனத்தாலும், நாவினாலும் அல்ல. கிரியையினாலும், உண்மையினாலும் அன்புகூறக் கடவோம்.

**எனது செயல் இல்லாத வார்த்தைகளைப் பற்றிய சிந்தனைகள்:**

1. உங்களைச் சுற்றிப் பார்க்கும் போது ஆத்துமாக்கள் அழிகின்றதையும், நரகத்துக்குப் போகின்றதையும் கவனிக்கலாம். இது உங்களை கவலைக்குள்ளாக்கவில்லையா? ஜெபிக்கவும் செயல்படவும் தூண்டவில்லையா?

2. ஒரு நபர் தேவையுடன் இருக்கும் போது, என்ன செய்வீர்கள்?

____________________

____________________

____________________

____________________

வருகிற வாரங்களில், செயல் இல்லாத வெறும் வார்த்தைகளை நீங்கள் எப்படி வெற்றி கொண்டீர்கள் என்ற அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள்.

____________________

____________________

____________________

____________________

____________________

## முறுமுறுத்தல், புகார் கூறுதல்

முறுமுறுத்தல், புகார் கூறுதல்: இது ஒரு பாவமாகவே நாம் பெரும்பாலும் கருதுவதில்லை. அப்படியெனில் ‘புகார்’ கூறவே கூடாதா என்று நாம் கேட்கலாம். நாம் அரசு அலுவலகங்களிலும், ரயில் நிலையங்களில் உள்ள சீர்கேடுகளை நீக்க, ஏதேனும் தகவல் பெற, பிரச்சனைகளைத் தீர்க்க புகார் கூறுவதில் தவறில்லை. ஆயினும், நாம் புகார் கூறும்போது, நாம் எதிர்பார்க்கும் பலனை அதன்மூலம் பெறமுடியாதபோது, அதுவே முறுமுறுப்பாக மாறுகிறது. இத்தகைய முறுமுறுப்புகளைத் தேவன் வெறுக்கிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

உபாகமம் 1:26-33 உள்ள வசனங்களை வாசித்துப் பார்த்தால், இந்தப் பாவத்தின் பல்வேறு நிலைகள் அதன் விளைவுகள் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. **முதலில் முறுமுறுத்தல் என்ற பாவம் இதயத்தில் இரகசியமாக செயல் படும். அதன் அடுத்த படிநிலை தேவனுக்கு எதிராக பேசுதல், தேவனுடைய காரியங்களைத் தவறாக சித்தரித்தல், எதிர்த்துப் பேசுதல், மற்றவர்களைக் கலங்கவைக்கும் வண்ணம் பேசுதல், தேவனுடைய நற்செயல்களையும் அற்புத செயல்களையும் மறத்தல், கடைசியாக அவிசுவாசம் என்ற பாவத்தில் விழுதல் என்று முடிவடையும்.**

> “நாம் புகார் கூறும்போது, நாம் எதிர்பார்க்கும் பலனை அதன்மூலம் பெறமுடியாதபோது, அதுவே முறுமுறுப்பாக மாறுகிறது. இத்தகைய முறுமுறுப்புகளை தேவன் வெறுக்கிறார்”

‘முறுமுறுத்தல்’ என்ற பாவத்தின் விளைவாக பெற்ற தண்டனைகள் வரிசையில் எண்ணாகமம் 16ஆம் அதிகாரத்தில் மோசேக்கு எதிராக முறுமுறுத்து மரணத்தை சந்தித்த கோராகு மற்றும் அவனது கூட்டாளிகள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக இருந்தார்கள். எஜமான் தன் வயல்வேலைக்கு பல்வேறு மணிநேரத்தில் பல மனிதர்களை அழைத்து வேலை கொடுத்து, கடைசியில் எல்லாருக்கும் ஒரேவிதமான ஊதியத்தைக் கொடுத்தபோது, முந்தி வேலைக்கு வந்தவர்கள் முறுமுறுத்தார்கள். இந்தச் சம்பவத்தில் ‘முறுமுறுத்தல்’ என்ற பாவம் வரும்போது நாம் தேவனைப் பார்ப்பதை விட்டு மனிதர்களைப் பார்த்து பொறாமைப்பட்டு, சமாதானத்தை இழக்கிறோம்.

லூக்கா 5:29,30 வசனங்களில் லேவி என்பவன் வீட்டில் ஒரு பெரிய விருந்து பண்ணினான். அதில் இயேசு ஆயக்காரரோடும் பாவிகளோடும் பந்தி இருந்ததைக் கண்டு வேதபாரகரும், பரிசேயரும் அவரையும் அவரது சீஷரையும் குறித்து முறுமுறுத்தார்கள் என்று எழுதப்பட்டு இருக்கிறது. 1 கொரிந்தியர் 10:9,10,11 வசனங்களில் “அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப் பட்டார்கள். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்க ளாக அவர்களுக்கு சம்பவித்தது. உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது” என்று நாம் வாசிக்கிறோம்.

> “‘முறுமுறுத்தல்’ என்ற பாவம் வரும்போது நாம் தேவனைப் பார்ப்பதை விட்டு மனிதர்களைப் பார்த்து பொறாமைப்பட்டு, சமாதானத்தை இழக்கிறோம்.”

மத்தேயு 12:43-45 வசனங்களில் ஒரு அசுத்த ஆவி துரத்தப்பட்டு அந்த இடம் வெற்றிடமாக இருக்குமானால் அந்த ஆவி இன்னும் வேறு ஏழு ஆவிகளோடே வந்து அதன் முன்னிலைமையைவிட பின்நிலைமையைக் கேடுள்ளதாக்கும் என்று எழுதப்பட்டுள்ளது. ஆகவே, முறுமுறுப்பு என்ற அசுத்த ஆவி துரத்தப்பட்டபின் அதற்குப் பதிலாக, பரிசுத்த ஆவி இங்கு குடியேற்றப்பட வேண்டும்.

நாம் கேட்ட வசனத்திற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, வாழாவிட்டால் 2 பேதுரு 2:20,21 வசனம் போன்று, நம் வாழ்வு முன்னிலைமையைவிட பின்நிலைமை கேடுள்ளதாக மாறும். ஆகவே ‘முறுமுறுப்பு’ என்ற ஆவி அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் வளரவும், நீதியின் மார்க்கத்தையும், பரிசுத்த கற்பனைகளையும் கடைப்பிடித்து வாழ வேண்டும்.

பிலிப்பியர் 2:14-16 வசனங்கள் எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும்,

தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் என்று அறிவுறுத்துகிறது. 1 தெலோனிக்கேயர் 5:18 ‘முறுமுறுப்பு’ என்ற பாவம் நம்மை தொடாதிருக்க வேண்டுமெனில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறுகிறது. ‘எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்’. இந்தப் பாவத்திலிருந்து நாம் விடுபட, நமக்கு இடறலாய் இருக்கும் காரியங்களை, முறுமுறுக்க வைக்கும், புகார் கூற வைக்கும் காரியங்களைக் குறித்து முதலில் தேவனிடம் இந்த பாவத்துக்கு விலகியிருக்க ஜெபிக்க வேண்டும். நமது எல்லா காரியங்களையும் தேவன் பார்க்கிறார் அவரது அனுமதி இல்லாமல் ஒன்றும் நடக்காது என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே, விசுவாச குடும்பத்தார்கள் மத்தியிலே காணப்படக்கூடிய, இந்தப் பெருமை, நடித்தல், அவிசுவாசம், கிரியையில்லாத அன்பு, முறுமுறுப்பு என்ற பாவங்களுக்கு ஜாக்கிரதையாயிருந்து ஞானமாய் நடந்து கொள்வோம். பழைய ஷிஷிலிசி தேர்வுகள்படி, இந்த ஐந்து காரியங்களில் ஒன்று தவறிப்போனலும், முழுவதும் தோற்றுவிட்டதாக அர்த்தம். இதையே யாக்கோபு 2:14 கூறுகிறது.

## நடைமுறைப்படுத்துதல்

இந்த ஐந்து பாவங்களையும், நியாயப் பிரமாணங்களையும் நம்மால் கைக்கொள்ள முடியாது என்பதால், 2 கொரிந்தியர் 5:21 “நாம் அவருக்குள் தேவ நீதியாய் இருக்கும்படிக்குப் பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். ரோமர் 11:6, அது கிருபையினால் உண்டாயிருந்தால் கிரியையினால் உண்டாயிராது. ஆகவே தேவன் சிலுவை மரணத்தின்மூலமாய் சம்பாதித்த கிருபையைப் பற்றிக் கொண்டு ஜெயம் பெறுவோம். ரோமர் 3:23,24 எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். எபேசியர் 2:8,9 வசனம்.

“ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல” என்று கூறுகிறது. 2 தீமோத்தேயு 1:9, “அவர் நம்முடைய கிரியையின்படி இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியேயும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியேயும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.”

## எனது முறுமுறுத்தல் / குறை சொல்லுதல் பற்றிய சிந்தனைகள்:

1. இருவர் ஒன்று சேர்ந்தாலேயே காலநிலையைப் பற்றி குறை சொல்வது மிகவும் சாதாரணமாக நடக்கின்ற ஒன்று. காலநிலையைப் பற்றி குறை சொல்வதும், முறுமுறுப்பதும் கர்த்தருக்கு எதிரானது என்பது உங்களுக்குத் தெரியுமா?

2. எதைப் பற்றி நீங்கள் முறுமுறுக்கிறீர்கள்? உங்கள் தலைவர் அல்லது மேல் அதிகாரியைப் பற்றி குறை சொல்வது பொதுவானது. தங்கள் தலைவருக்கு எதுவுமே தெரியாது என்று சிலர் என்னிடம் சொல்லியிருக்கின்றார்கள். இது உங்களுக்குப் பழகிய ஒன்றாக இருக்கின்றதா? உங்களுக்கு மேல் இருக்கும் அதிகாரியைப் பற்றி நீங்கள் குறை சொல்கிறீர்களா?

ஒவ்வொரு அதிகாரமும் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. (தானியேல் 2:21; 4:17; ரோமர் 13:1-2).

வருகின்ற வாரங்களில் நீங்கள் முறுமுறுத்தல் / குறை சொல்லுதலை மேற்கொண்ட அனுபவத்தை இங்கே பகிர்ந்து கொள்ளுங்கள்.

## இறுதி வார்த்தைகள்

ஆகவே நாம் கிறிஸ்துவுக்குள் வாழவேண்டும். சுயத்தில் வாழ முயற்சிக்கக்கூடாது. தேவனுடைய வெளிச்சம் வரவர நமது மன இருட்டுகள் அகலும். 1 யோவான் 3:5-8 “அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை. ரோமர் 6:14 கிறிஸ்துவைக் குறித்த அறிவினாலே கிருபைக்கு கீழ்ப்பட்டு பாவத்தினின்று விடுதலை பெற்று நித்திய வாழ்வு பெற தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**கடந்த வாரத்தில் மனந்திரும்புதல் என்ற தலைப்பில் நாம் பார்த்தது போலவே, இதில் கீழ்க்கண்ட பகுதிகள் அடங்கியிருக்கின்றன;**

- ❑ பாவங்களைக் குறித்த அறிவு
- ❑ மனஸ்தாபப்பட வேண்டும்
- ❑ சுயத்தை விட்டுவிட வேண்டும்
- ❑ அறிக்கை செய்தல்

**மேலும் படிக்க:**

1. மத்தேயு 6:1-6, 7:1-5, 15:1-9.

# விசுவாசம்

**"அன்பு கட்டிய படிகளில் ஏறிச்சென்று நம்பிக்கை திறந்து வைத்த சன்னல்கள் வழியாக விசுவாசம் வெளியே பார்க்கிறது"**

**– சார்லஸ் ஸ்பர்ஜன்**

அன்பு, நம்பிக்கை, விசுவாசம் மூன்றும் ஒன்றாகவே இணைந்து செயல்படுகிறது. இவைகளைப் பிரிக்க முடியாது. இரட்சிப்பு என்பது மனந்திரும்புதலும், விசுவாசமும் இணைந்த ஒன்று. தேவனிடத்தில் மனந்திரும்புவதும், விசுவாசம் வைப்பதுமே இரட்சிப்பு. இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் அதிகமாகப் பேசப்படுவதும், போதிக்கப்படுவதும், ஆராய்ச்சி செய்யப்படுவதும் விசுவாசத்தைக் குறித்துதான். ஆனால் அதேசமயம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதும் விசுவாசத்தைக் குறித்துதான்.

விசுவாசம் என்பது தேவனிடமிருந்து எதை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதைக் குறித்தது அல்ல. ஆனால், தேவனிடத்தில் விசுவாசம் வைத்து எப்படி இரட்சிக்கப்படுவது என்பதைக் குறித்தது. சிலர் அவரை நல்ல கருத்துகளைச் சொன்ன போதனையாளராக விசுவாசிக்கிறார்கள். சிலர் நல்ல வாழ்க்கை முறையைச் சொன்ன மதகுரு என்று விசுவாசிக்கின்றனர். மகாத்மா காந்தியடிகள் மத்தேயு 5,6,7 அதிகாரங்களைத் தினமும் வாசித்து, இயேசுகிறிஸ்துவை நல்ல போதனையாளராக விசுவாசித்திருந்தார். வேறு சிலர் அவரைத் தீர்க்கதரிசி என்று விசுவாசிக்கின்றனர். இதில் எதுவுமே முழுமையான விசுவாசம் அல்ல. ஆனால் இயேசுகிறிஸ்து தேவனும் ஆண்டவரும் மனித குலத்தின் இரட்சகருமாய் இருக்கிறார் என்பதை விசுவாசிப்பதே முழுமையான விசுவாசம். அப்போஸ்தலர் 2:36 "ஆகையால்

> **"இயேசுகிறிஸ்து தேவனும் ஆண்டவரும் மனித குலத்தின் இரட்சகருமாய் இருக்கிறார் என்பதை விசுவாசிப்பதே முழுமையான விசுவாசம்."**

நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்'' என்றான். அப்போஸ்தலர் 4:6ம் இதே கருத்தை வலியுறுத்துவதைப் பார்க்க முடியும்.

''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' என்று கூறுகிறது.

பவுல் தெசலோனிக்கேயர் 5:9இல் ''தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய கர்த்தராகிய இயேசு மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்'' என்று கூறுகிறார்.

உலகம் அனைத்தையும் படைத்து காக்கின்ற பரம்பொருளாகிய தேவன், இயேசுகிறிஸ்துவைப் பூமியில் இரட்சகராக அனுப்பி இரட்சிப்பை கட்டளையிட்டிருப்பதை பிலிப்பியர் 2:6-11 வரை உள்ள வசனங்களில் காணலாம். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' என்று கூறுகிறார். இதிலிருந்து கிறிஸ்துவே நமது ஒரே இரட்சகர் என்பதை அறிந்து கொள்ளலாம். அகிரிப்பா ராஜாவிடம் தனது சாட்சியை அறிவிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தபோது பவுல் சொல்வதைப் பாருங்கள்: ''அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்துக்கும் சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு நீ அவர்கள் கண்களை திறக்கும்பொருட்டு இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்'' (அப்போஸ்தலர் 26:18) என்று தேவன் தன்னை இரட்சித்து, அனுப்பினதைப் பற்றி கூறுகிறார்.

ஆனால் தேவனை அடைய பல வழிகள் இருப்பதாக மக்கள் பொதுவாக நம்புகின்றனர். உதாரணமாக, 3 மில்லியன்

விசுவாசிகளைக் கொண்ட சபையின் போதகரும், தொலைக்காட்சி போதகருமான ஒரு பெண்மணி, தேவனை அடைய இரட்சிப்பைப் பெற ஆயிரக்கணக்கான வழிகள் இருக்கின்றன என்கிறார். 1.7 மில்லியன் விசுவாசிகளைக் கொண்ட நியூயார்க்கைச் சேர்ந்த போதகர் ஒருவர் அன்பு ஜெயிக்கும் என்றும் அன்பாகவே இருக்கும் கடவுள், மனிதர் ஒருவரையும் நரகத்தில் தள்ளமாட்டார். ஆகவே, நாம் மனம்போல் வாழலாம் என்றும் போதிக்கின்றார். ஆகவே, கள்ளப் போதனைகள் பெருகி, இலட்சக்கணக்கானோர் அழிவின் பாதையில் செல்லும் கொடிய காலத்தில் இருக்கிறோம். ஆனால், வேதம் தெளிவாக சொல்லுகிறதைக் கவனியுங்கள். யோவான் 14:6இல் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்." என்று இயேசு கூறுகிறார். யோவான் 10:9-11 வசனங்கள் நல்ல மேய்ப்பனுக்கும் கள்ள மேய்ப்பனுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவாகக் காட்டி, இயேசு எவ்விதம் நல்ல மேய்ப்பனாக இருக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

பாவம் தேவனிடமிருந்து நம்மைப் பிரிக்கிறது. இயேசு மூலமாய் அவர் சிந்தின இரத்தத்தின் மூலமாய்ப் பாவத்திலிருந்து விடுதலையாகி விசுவாசத்தின் மூலம் நாம் தேவனோடு இணைக்கப்படுகிறோம். பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்றபோது, தேவனுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி நீக்கப்படுகிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தினால் நாம் தேவனோடு இணைக்கப்படுகிறோம். தேவனுடைய ஆலயமாக மாறுகிறோம்.

# விசுவாசம் - ஒரு விளக்கம்

## விசுவாசம் என்பது என்ன?



விசுவாசம் என்பது மனிதகுலத்தின் மொத்த தன்மையும் தேவன்மேல் பற்றுதலாயிருந்து அவருடைய முழுமையான ஞானத்திலும் அன்பிலும் வல்லமையிலும் நம்பிக்கை வைத்தல் ஆகும். நாம் இரட்சிக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் தேவன்மேல் விசுவாசமாயிருந்து "ஆண்டவரே நீர்தான் எனக்கு எல்லாம். உங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்யமாட்டேன்" என்று

> "நாம் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் தேவன்மேல் விசுவாசமாயிருந்து "ஆண்டவரே நீர் தான் எனக்கு எல்லாம். உங்களை கேட்காமல் நான் எதுவும் செய்ய மாட்டேன்" என்று சொல்கிறோம். கொஞ்சம் வேத அறிவு, பொருளாதார முன்னேற்றம் வந்தவுடன் நாம் மாறிவிடுகிறோம்."

சொல்கிறோம். கொஞ்சம் வேத அறிவு, பொருளாதார முன்னேற்றம் வந்தவுடன் நாம் மாறிவிடுகிறோம்.

சூழ்நிலையின் தாக்கம் விசுவாசத்தைப் பாதிக்கும். நம்மில் பெரும்பாலானவர்கள் நம்மால் செய்ய முடிந்த காரியங்களுக்குத் தேவனை விசுவாசிப்பதில்லை. நம்மால் சாதிக்க முடியாத காரியங்களுக்கு மட்டுமே தேவனை விசுவாசிக்கிறோம். என்னால் இன்னின்னதைச் செய்துகொள்ள முடியும். என்னால் முடியாததை மட்டும் நீங்கள் செய்யுங்கள் என்று தேவனைக் கேட்பது முழுமையான விசுவாசம் அல்ல. ஒரு குழந்தையை உயரத்திலிருந்து 'குதி' என்று சொல்ல, எந்த விளைவுகளையும் பற்றி ஒரு நொடிகூட யோசிக்காமல் தந்தையின்மேல் விசுவாசம் வைத்து குதித்துவிடும். ஆனால் அதே குழந்தை வாலிபனாகும்போதும் அதுபோன்ற ஒரு காரியத்தைச் சொன்னால் தன்னுடைய அறிவு, சூழ்நிலை போன்ற எல்லாவற்றையும் பயன்படுத்தி அதே தந்தையிடம் மறுக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நம்மிடமும் அதே பிரச்சனைதான். கொஞ்சம் வளர்ந்தவுடன் நம்முடைய மொத்தத் தன்மையும், தேவனைச் சார்ந்து வாழ்வதில்லை. நமக்குத் தேவைப்படுகின்ற, ஆனால் நம்மால் முடியாத காரியங்களுக்கு மட்டுமே தேவனை விசுவாசிக்கிறோம். எபிரெயர் 6:1,2 வசனங்களில் மூல உபதேசமாக கிறிஸ்தவ வாழ்க்கையின் அஸ்திபாரமாக மனந்திரும்புதலும், விசுவாசமும் குறிப்பிடப்படுகிறது. ஒரு கட்டிடம் கட்ட குழி தோண்டி, அஸ்திபாரம் போடுவது போன்று கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையான காரியம் இது.

> "என்னால் இன்னின்னதை செய்து கொள்ள முடியும். என்னால் முடியாததை மட்டும் நீங்கள் செய்யுங்கள் என்று தேவனை கேட்பது முழுமையான விசுவாசம் அல்ல."

## விசுவாசம் - வேதாகம விளக்கம்

"விசுவாசமானது நம்பப்படுபவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமாகவும் இருக்கிறது" (எபிரெயர் 11:1).

விசுவாசம் என்பது தேவன் என்ன சொல்கிறாரோ அதைக் குறித்ததான உறுதியான நம்பிக்கை. என்ன சூழ்நிலை காணப்பட்டாலும் பிரச்சனை இல்லை. அவர் அதைச் செய்வார் என்று ஆணித்தரமாக நம்புவது.

இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, திரும்பவும் உங்களைச் சேர்த்துக்கொள்ள வருவேன் என்று வாக்குப்பண்ணியிருக்கிறார். நாம் அதை எவ்வளவாய் விசுவாசித்து வாழ வேண்டும்! நாம் எதிர்பார்த்து விசுவாசத்தோடு வாழ்வதில் தேவன் பிரியமாயிருக்கிறார். உதாரணத்துக்கு, பிறந்தநாள் பரிசாக அலைபேசி ஒன்றை ஒருவர் வாக்குபண்ணியிருந்தால் அந்த நாளில் அந்த அலைபேசி கிடைக்கும் என்று ஆவலோடு விசுவாசித்து காத்திருப்போம். அதேபோலத்தான் தேவன்மேலும் நமது விசுவாசத்தை வைக்கவேண்டும். நமது பாவங்களுக்காக மரித்த அவர் திரும்ப வருவேன் என்று சொன்னதை விசுவாசித்து

எதிர்பார்ப்போடு காத்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் 20:21 இவ்வாறு கூறுகிறது, “தேவனிடத்தில் மனந்திரும்புவதைக் குறித்தும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தும் நான் யூதருக்கும் கிரேக்கருக்கும் சாட்சியாக அறிவித்தேன்.” இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவங்கள் மன்னிக்கப்பட்ட பின்பு அனுதினமும் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியம். நடைமுறை வாழ்க்கையில் நேற்றைக்கு நாம் செய்த காரியங்களை யோசித்து, தவறுகளைத் தேவனிடம் அறிக்கையிட்டு, மனந்திரும்புவதுதான், தினசரி இரட்சிப்பு. இது நம்மைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டே வரும். இது பாவத்தின் வல்லமையிலிருந்து நம்மை முற்றிலும் விடுதலையாக்குகிறது. நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தில் ஒரு முழுமையான விடுதலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அனுபவங்கள், நம்மை தேவனுடைய வருகையில் பரிசுத்தவான்களாய் நிறுத்தும் (மனந்திரும்புதல் என்ற பாடத்திலிருந்து ஒரு அட்டவணை இதை விளக்குவதற்காக இங்கே மீண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது).

| நிலை | செயல் | விளைவு | விடுதலை |
|---|---|---|---|
| 1 | மனஸ்தாபத்தின் துவக்கம் | நீதிமானாக்கப்படுதல் | பாவத்தின் தண்டனையில் இருந்து |
| 2 | தொடரும் மனஸ்தாபம் | பரிசுத்தமாக்கப்படுதல் | பாவத்தின் வல்லமையில் இருந்து |
| 3 | இரண்டாம் வருகை | மகிமைப்படுத்தப்படுதல் | பாவத்தின் பிரசன்னத்தில் இருந்து |

### விசுவாசம் - பழைய, புதிய உடன்படிக்கைகளின் வேறுபாடுகள்

விசுவாசத்திலும், அன்பிலும் தேவனோடு உள்ள தொடர்பிலும் ஆதாமும், ஏவாளும் வாழ்வதற்காகத்தான் உருவாக்கப்பட்டார்கள். அவர்கள் பாவம் செய்ததினால் அந்த உறவு அறுபட்டுப் போனது. இன்று அநேகரிடம் உள்ள கேள்வி, “தேவன் ஏதேன் தோட்டத்தில் நன்மை தீமை அறியத்தக்க கனியை எதற்காக வைக்க வேண்டும். அதனால்தானே ஆதாம் ஏவாள் பாவம் செய்தார்கள்?”

இதில் இரண்டு காரியங்கள் உள்ளன. தேவனுடைய தனித்தன்மையில் நடப்பது ஒன்று.

மற்றொன்று நன்மை தீமை என்னவென்று அறிந்து உணர்ந்து அதில் நாம் விரும்புவதைத் தெரிந்து எடுக்கக்கூடிய சுதந்திரத்தைத் தேவன் நமக்குத் தந்திருப்பது. ஆனால் ஆதாம்–ஏவாளுடைய தவறான தெரிந்தெடுப்பால் பாவம் அங்கு உருவானது. அதற்குப் பின்பு பழைய ஏற்பாட்டு புருஷர்களோடு தேவன் இடைபட்டார். ஆபிரகாமின் காலத்தில் அவரிடத்தில் தவறுகள் இருந்தாலும் அவர் தேவனிடத்தில் விசுவாசம் வைத்தபடியால் அவனை நீதிமான் என்று அழைத்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர பாதைகளைக் கடந்து வரும்போது அவர்களுக்கு நியாயப்பிரமாணமாகிய பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். அந்தக் கட்டளைகளில் 9 கட்டளைகளைக் கைக்கொள்வது எளிது. ஆனால் பத்தாவது கட்டளையைக் கைக்கொள்வது இயலாது. அது மனம் சம்மந்தப்பட்டது. இஸ்ரவேல் ஜனங்கள் இந்த கட்டளையை எங்களால் கைக்கொள்ள இயலாது. “உங்க கிருபை எங்களுக்கு வேண்டும்” என்று அவரைச் சார்ந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்துதான் அதைக் கொடுத்தார். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. 1500 வருடங்கள் தொடர்ந்து முயன்றும் அந்தக் கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. அந்த பத்துக் கட்டளைகளை 613 ஆக மாற்றினார்கள். ஆனால், அவர்கள் வாழ்க்கை சற்றும் மாறவில்லை. ஆகவே, கடைசியில் மனுக்குலத்தின் இரட்சிப்புக்காகத் தன் சொந்த குமாரனாகிய இயேசுவைப் பாவநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்தார்.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதின் நோக்கம் கலாத்தியர் 3:24இல் கொடுக்கப்பட்டுள்ளது. “இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் நடத்துகிற உபாத்தியாய் இருக்கிறது.”

இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசத்தினாலே தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாய் நாம் தேவனிடத்தில் சேரமுடியாது. இதை எபேசியர் 2:8 கூறுகிறது.

“கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு.” அதாவது, இலவசம். கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தால் இரட்சிப்பு இலவசம். வானத்திலிருந்து தேவன் தமது கரத்தை நீட்டும்போது, நாம் நமது கரத்தை நீட்டி, அவரது கரத்தைப் பிடிப்பதுதான் விசுவாசம். 1 கொரிந்தியர் 15:1-4ல் சொல்லப்பட்டபடி, “கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்தெழுந்தார்.”

> நமக்காக மரிக்கும் அளவுக்கு அன்பு செலுத்த கிறிஸ்துவைத்தவிர யாருமில்லை என்பதை அறிந்திருந்தால் நமது வாழ்க்கையே மாறும்.

வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து வந்தார். என்னுடைய பாவங்களுக்காக மரித்து உயிர்த்தார். இன்றைக்கும் என்னை நோக்கி அவரது கரத்தை நீட்டுகிறார். எனது கரத்தை நீட்டி அவர் கரத்தை பிடிப்பதுதான் விசுவாசம். ரோமர் 5:8,9இல் தேவன் இவ்வாறு கூறுகிறார். “நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.”

நமக்காக மரிக்கும் அளவுக்கு அன்பு செலுத்த கிறிஸ்துவைத்தவிர யாருமில்லை என்பதை அறிந்திருந்தால் நமது வாழ்க்கையே மாறும். காதலிக்கிற இருவர் “உனக்காக என் உயிரைக்கூட கொடுப்பேன்” என்று காதல் மயக்கத்தில் பிதற்றுவது உண்டு. ஆனால் அதே வாய் திருமணத்திற்குப் பின்பு வேறுமாதிரி பேசுவதைப் பார்த்திருக்கிறோம்.

“உன் மீது அன்பு வைத்திருக்கிறேன். உங்களுக்காக என் உயிரைக்கூட கொடுப்பேன்” என்று சொல்பவரிடம் கொஞ்சம் கடன்கேட்டு பாருங்கள். அதன்பின்பு காணாமல் போய்விடுவார். ஒரு ஊரில் ஒரு கோடீஸ்வரர், இரண்டு சிறுநீரகமும் பழுதுபட்டு, மருத்துவமனையில் இருந்தார். அவருக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் இருந்தனர். ஆனால் அந்த மனிதனுக்கு ஒரு சிறுநீரகத்தை தர மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் மனதில்லை. கடைசியில் ஜீவனைக் கொடுத்து, நேசித்த கிறிஸ்துவின் அன்பை நான் பகிர்ந்து கொண்டபோது, தன் இருதயத்தையும் வாழ்க்கையையும் அவருக்குக் கொடுத்து, பூரண சுகம் பெற்று அநேகருக்கு நற்செய்தி அறிவிக்கும் பணியை செய்து வருகிறார்.

**ரோமர் 5:6,8,10 ஆகிய வசனங்களில்**

1. நாம் பெலனற்றவர்களாய் இருக்கும் போது...
2. நாம் பாவிகளாய் இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே...
3. நாம் தேவனுக்குச் சத்துருக்களாய் இருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக் கப்பட்டோமானால் ஒப்புரவாக்கப்பட்ட பின்பு நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.

இந்த உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மேற்கண்ட இந்த மூன்று நிலையில் ஒன்றில்தான் இருப்பான். ஆகவே, தேவன் கிறிஸ்தவர்களுக்காக மாத்திரம் மரிக்கவில்லை. இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்தார்.

> தேவன் கிறிஸ்தவர்களுக்காக மாத்திரம் மரிக்கவில்லை. இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரித்தார்.

எபேசியர் 1:4 இவ்வாறு கூறுவதைப் பாருங்கள். “தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களு மாய் இருப்பதற்கு அவர் உலகத் தோற்றத்திற்கு முன்பே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்.”

இந்த வசனத்தில் அண்ட சராசரங்களைப் படைக்கும் முன்னே நம்மைத் தெரிந்து கொண்டார் என்பது எவ்வளவு ஆச்சரியமான அழகான விஷயம். ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்? தேவன் நம்மைக் குறித்து, “இவர்களை என்ன செய்யலாம்“ என்று யோசித்துக் கொண்டு இருப்பதாக தப்பு அர்த்தம் கொள்கிறோம். அவரது விலையேறப்பெற்ற அன்பை அறிந்துகொள்ள இப்படி யோசிக்கலாம், “இந்த உலகத்தில் மற்ற மனிதர்களே இல்லை. நான் மட்டுமே இருக்கிறேன். தேவன் எனக்காக மரித்து நான் அன்பில் பரிசுத்தமுள்ளவனாக, குற்றமற்றவனாக என்னை நினைக்கிறார். என்னை உருவாக்குகிறார்.” இது எத்தனை பாக்கியம். இந்த அன்பை உணர்ந்து கொண்டால், அவரது அளவற்ற அன்பு நமக்குள் அளவற்ற விசுவாசத்தை ஊற்றும்.

கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி அழைக்கப்பட்டோம்? ரோமர் 8:29இன்படி “தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.”

## விசுவாசம் - பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளின் காலங்களில்

நாம் தேவனுடைய குமாரனாகிய இயேசு வின் சாயலுக்கு ஒப்பாக மாறுவதுதான் தேவ சித்தம். பழைய உடன்படிக்கையிலும் புதிய உடன்படிக்கையிலும் விசுவாசம் எவ்வாறு ஒத்துப்போகிறது என்பதைப் பார்ப்போம். யாத்திராகமம் 12ஆம் அதிகாரத்தில் பஸ்கா அல்லது கடந்து செல்லுதல் என்ற பண்டிகை நடக்கிறது. நிசான் மாதம் 14ஆம் தேதி இதனை ஆசரிக்கக் கூறுகிறார். ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியிட்டு அதனுடைய இரத்தத்தை வீட்டு நிலையின் மத்தியிலும் வலது புறத்திலும், இடது புறத்திலும் பூசி வஸ்திரம் தரித்து செருப்பு அணிந்து, இடைக்கச்சை அணிந்து புறப்படத் தயாரான நிலையில் காத்திரு. இரவு நேரத்தில் சங்காரக்காரன் வருவான். உன் வீட்டு நிலையில் இரத்தம் பூசப்பட்டு இருந்தால் உள்ளே வர மாட்டான். யார் வீட்டில் இரத்தம் பூசப்பட வில்லையோ அங்கே போய், அந்த வீட்டில் உள்ள முதல் தலைப்பிள்ளையைச் சங்காரம் செய்து விட்டுச் செல்வான் என்று கூறுகிறார். இதோடு எபேசியர் 1:4ஐ கவனத்தில் கொள்வோம். உலகம் தோன்றும்முன் நம்மை முன்குறித்திருக்கிறேன் என்று சொல்கிறார். இந்தச் சம்பவத்தில், இரத்தம் பூசப்படாத வீட்டில் தலைப்பிள்ளையைச் சங்கரிக்கத் தெரிந்தச் சங்காரத்தூதனுக்கு எந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று தெரியாதா? இஸ்ரவேல் ஜனங்களை அடையாளம் காணமுடியாததால் அப்படியிருக்க எதற்காக இரத்தம் பூசச் செய்கிறார்? தேவன் சங்காரத் தூதனிடம் எகிப்தியருடைய தலைச்சன் பிள்ளைகளைச் சங்கரிக்கச் சொல்லியிருந்தால் மட்டும் போதுமே?! அதற்குப் பதிலாக, எந்த வீட்டில் இரத்தம் பூசப்படவில்லையோ அந்த வீட்டை அடையாம் கண்டு, சங்கரிக்கச் சொல்கிறார். இது எதற்காக? எகிப்திலுள்ள இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வார்த்தையை நம்பி, இரத்தத்தைப் பூசுகிறார்களா என்று பார்ப்பதற்காகத்தான் இவ்வாறு சொல்கிறார்.

அதேபோல புதிய உடன்படிக்கைக்குரியவர்களாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை நம்மேல் பூசி பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டால் மாத்திரமே நித்திய வாழ்வை அடைவோம். இல்லையென்றால் நித்திய நரகத்திற்குச் சென்றுவிடுவோம் என்று கூறுகிறார். தேவனுடைய வார்த்தையை நம்பி இயேசுவின் இரத்தத்தைப் பூசுகிறோமா? என்று எதிர்பார்க்கிறார். அவருடைய வார்த்தையை நம்பி கீழ்படிவதுதான் விசுவாசம்.

இன்றைய உலகில் அறிவு பெருத்தவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மரித்த இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தங்களுடைய பாவத்தை எப்படிக் கழுவும் என்று விவாதிக்கிறார்கள்?! ஆனால், இந்தக் காரியத்தை முழுமையாக நம்பிச் செயல்படும் எளியவர்கள் இரட்சிப்பின் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் என்பது உண்மை. நாம் ஒருவருக்கொருவர், எல்லாக் காரியத்திலும் நட்பு பாராட்டி ஒருவருக்கொருவர் உதவி செய்கிறதுபோல அன்றைய நாளிலும் எபிரேயன் ஒருவன், எகிப்தியனுக்குச் சங்கார தூதனிடமிருந்து தப்பிக்க வழி சொல்லியிருந்து அதை நம்பிக்கையோடு செய்திருந்தால் அந்த எகிப்தியன் கண்டிப்பாக தலைச்சன் சங்காரத்திலிருந்து தப்பியிருப்பான் என்பது நிச்சயம். ஆகவே யாராயிருந்தாலும், தேவன்மேல் விசுவாசம் வைத்து அவரை அண்டிக்கொள்பவன் பிழைப்பான்.

பழைய உடன்படிக்கையின் காலத்தில் நிசான் மாதம் பதினாலாம் தேதி பஸ்கா அனுசரிக்கப்பட்டு ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, அதனுடைய இரத்தம் பூசப்பட்ட வீடுகள் சங்காரத்தூதனுக்குத் தப்பினதுபோல 1500 ஆண்டுகளுக்குப்

பின்பு புதிய உடன்படிக்கையின் காலத்தில், அதே நிசான் மாதம் 14ஆம் தேதி இயேசுகிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்டு அவருடைய இரத்தினாலே பாவத்திலிருந்து விடுதலையாக்கி, நித்திய மீட்பை நமக்கு உண்டு பண்ணினார் (1 கொரிந்தியர் 10:10).

“அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்” என்று வேதம் கூறுகிறது.

பஸ்கா முடிந்து இஸ்ரவேல் ஜனங்கள் சிவந்த சமுத்திரத்தின் அருகில் வந்தபோது அவர்களுக்குப் பின்புறம் எகிப்தியர் துரத்திக் கொண்டு வந்தார்கள். இருபக்கமும் மலைகள் இருந்தன. முன்பக்கம் செங்கடல் இருந்தது. இதைக் கண்டு இஸ்ரவேல் ஜனங்கள் தேவனைக் கூப்பிட்டார்கள். தேவன் மோசேயிடம் அவனுடைய கோலை எடுத்து செங்கடலை நோக்கி நீட்டச் சொன்னார். அவனும் நீட்டினான். வேறு எந்த பிரயாசமும் படவில்லை. செங்கடல் இரண்டாக பிரிய, உலர்ந்த தரையின் வழியே இஸ்ரவேல் ஜனங்கள், செங்கடலைக் கடந்தார்கள். இது ஞானஸ்நானத்துக்கு அடையாளமாயிருக்கிறது. அவர்மீது விசுவாசம் வைத்து, ஞானஸ்நானம் எடுப்பதற்கு நாம் செய்ய வேண்டுவது ஒன்றும் இல்லை. இதே ஜனங்கள் வனாந்தர மார்க்கமாய் நடந்து யோர்தானுக்கு அருகில் உடன்படிக்கை பெட்டியைச் சுமந்து வந்து கால் வைத்தவுடன் யோர்தான் இரண்டாகப் பிளந்து வழிவிட்டது. இது தேவனுடைய அபிஷேகத்தினைக் குறிக்கிறது. யோர்தானைக் கடந்து உள்ளே வந்தபின்பு எங்கு பார்த்தாலும் அரக்கர்கள் இருக்கின்றனர். ஆனால், அந்த அரக்கர்களைத் தேவன் அழிக்காமல் இஸ்ரவேல் ஜனங்களிடம் அவர்களை அடித்துக் கொல்லும்படி சொல்கிறார். யோசுவா 10ஆம் அதிகாரத்தில், ஒவ்வொரு அரக்கனையும் எவ்வாறு மேற்கொண்டார்கள் என்று தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நமது வாழ்க்கையிலும் ஆண்டவரை ஏற்றுக் கொள்வதற்கும் ஞானஸ்நானம் எடுப்பதற்கும் அபிஷேகம் பெறுவதற்கும் எந்த விலைக்கிரயமும் செலுத்த வேண்டியதில்லை.

ஆனால், அதற்குப்பின்பு நமது வாழ்க்கையில் இருக்கும் அரக்கர்களாகிய (கலாத்தியர் 6:19-21) பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், பொறாமைகள், வெறிகள், களியாட்டுகள் போன்றவைகளை அழித்து அவைகளை மேற்கொள்ள வேண்டியது நமது பொறுப்பு. அதை ஆண்டவர் செய்யமாட்டார்.

இன்றைக்கும் அநேக கிறிஸ்தவர்கள் “மேற்குறிப்பிட்ட அரக்கர்களை என் வாழ்வில் தேவன் அழிக்க எனக்காக ஜெபியுங்கள்” என்று கேட்பதைப் பார்க்கிறோம். ஆனால், அந்த வேலையைத் தேவன் செய்வதில்லை.

நாம்தான் அந்த அரக்கர்களை மேற்கொண்டு ஜெயிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

யோசுவாவுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன? ‘‘நான் மோசேயோடு இருந்ததுபோல உன்னோடு இருப்பேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னை கைவிடுவதுமில்லை’’ என்பதுதான். எபிரெயர் 13:5இல் இதே வார்த்தையை கூறி திடப்படுத்துகிறார். மத்தேயு 28:20இல் ‘‘இதோ உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்’’ என்று வாக்களிக்கிறார் இயேசு. ஆகவே தேவன் நம்மோடு இருப்பதால், நாம் மாம்சத்துக்கு விரோதமாக போராடுகிற அரக்கர்களை எளிதாக அகற்ற இயலும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால், அவிசுவாசம் நம் வாழ்வில் புகுந்துவிடும். ஆறு லட்சம் பேர் எகிப்திலிருந்து வெளியே வந்தனர். ஆனால், அவர்களில் இருவர் மட்டுமே வாக்குத்தத்த பூமியான கானானுக்குள் பிரவேசித்தார்கள். ஆகவே மிகுந்த ஜாக்கிரதையோடு தேவனுடைய வார்த்தையின்மேல் விசுவாசம் வைத்து பரிசுத்தமாக வாழ்வது மிக அவசியம்.

யோவான் 3:14-16இல் ‘‘சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும். தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்புகூர்ந்தார்’’ என்று வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் நடந்த சம்பவத்தைச் சற்று நினைவுகூர்வோம். வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள், தேவனுக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் எதிர்த்துப் பேசினார்கள். இதனால், பாம்புகள் கடித்து சங்காரம் உண்டானதால் ஜனங்கள் மேசேயிடம் கதறினார்கள். மோசே தேவனை நோக்கிக் கெஞ்ச, தேவன் கடிபட்ட பாம்பை ஒரு கோலில் மாட்டி கம்பத்தில் வைத்து கடிபட்ட எவன் ஒருவன் அந்த உயர்த்தப்பட்ட பாம்பைப் பார்க்கிறானோ அவன் பிழைப்பான் என்று சொன்னார். அதேபோன்று விசுவாசத்தோடு பார்த்த எல்லாரும் காப்பாற்றப்பட்டார்கள். அதே போன்றே புதிய ஏற்பாட்டு மக்களாகிய நமக்கும் அதே தீர்வைத்தான் கூறுகிறார். பாவம் என்கிற பாம்பு கடிப்பதால் ஏற்படும் நித்திய மரணத்துக்குத் தப்ப, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள மரத்தில் (சிலுவை) தூக்கப்பட்ட அவரைப் பார்க்க வேண்டும்.

அதனால்தான் என்னவோ, எல்லா மருத்துவ நிறுவனங்களிலும் மரத்தில் தூக்கப்பட்ட பாம்பை, அடையாளமாக வைத்திருக்கிறார்கள். அந்த அடையாளம் சொல்வது என்ன? மருத்துவம் ஆயிரம் இருந்தாலும் சுகம் கொடுப்பவர் தேவன்தான் என்று சொல்கிறது. நமது விசுவாசம் தேவன்மேல் இருக்க வேண்டும். நம் கண்கள் தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும்.

விசுவாசம் என்பது ஒரு தேர்வு / தேர்ந்தெடுப்பது. இதற்கு ஒரு நல்ல உதாரணம், திருமண உறவு. ஒரு பெண் குழந்தையிலிருந்து, பிள்ளைப்பருவம், வாலிபப்பருவம் என இருபத்தைந்து

"பாவத்திலும், சாபத்திலும், வாழ்ந்த என் தகப்பன் வீட்டை விட்டு, கிறிஸ்துவுக்காக என் பெயர், தகப்பன், தாய், என் ஆசை இச்சைகள் எல்லாவற்றையும் தியாகம் செய்து, கிறிஸ்துவுக்காக வாழ்வேன் என்ற தீர்மானத்தோடு பிரித்தெடுக்கப்பட்டவர்களாய் வாழ்வதே விசுவாசம் அல்லது தெரிந்தெடுப்பு."

ஆண்டுகள், தனது தாய், தகப்பனை நேசித்து வீட்டில் செல்லப்பிள்ளையாக இருந்து வாலிப ஒரு ஆடவனைப் பார்த்ததும், தனது தாய், தகப்பன் அன்பைத் துறந்து தன் பெயரை மாற்றி, அவனது அன்பைப் பெற்று அவனை முழுமனதோடு நேசிக்கத் தொடங்குவதைக் கூறலாம். 2 கொரிந்தியர் 11:2இல் சொல்லப்பட்டபடி, "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டு இருக்கிறேன்." ஆக நான் பாவத்திலும், சாபத்திலும், வாழ்ந்த என் தகப்பன் வீட்டை விட்டு, கிறிஸ்துவுக்காக என் பெயர், தகப்பன், தாய், என் ஆசை இச்சைகள் எல்லாவற்றையும் தியாகம் செய்து, கிறிஸ்துவுக்காக வாழ்வேன் என்ற தீர்மானத்தோடு பிரித்தெடுக்கப்பட்டவர்களாய் வாழ்வதே விசுவாசம் அல்லது தெரிந்தெடுப்பு.



இதனை வேறுவிதமாக சிந்தித்தால் **கிறிஸ்து என்ற மணவாளனுக்கு நிச்சயிக்கப்பட்ட நான் என் மனம்போல் வாழ்ந்து தகாத காரியங் களைச் செய்து தவறான வாழ்க்கை நடத்தி னால், கிறிஸ்து என்ற மணவாளனுடைய மனநிலை எவ்வாறு இருக்கும்?** நான் திரும்ப வருவேன் என்று சொல்லிச் சென்று, மணவாட்டி குறித்த இனிமையான நினைவுகளால் நிரம்பி மகிழ்ச்சியாய் இருக்கும் மணவாளன் திரும்பவரும்போது, தனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண், வேறொருவனோடு வாழ்ந்து கொண்டிருந்தால், அந்த மணவாழ்க்கையின் நிலை என்ன? கிறிஸ்து என்ற மணவாளன் மணவாட்டியாகிய நாம் செய்கிற எல்லாக் காரியங்களையும் வெளியரங்கமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்படியானால் நாம் எப்படிப்பட்ட கன்னிகையாகக் கற்போடு வாழ வேண்டும்?

ஆறு நாட்களில் தனது வார்த்தையால் தேவன் சிருஷ்டித்த இந்த அழகான உலகத்தின் காரியங்களை அறிய இன்னும் மனிதன் திணறிக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட வல்லமையுள்ள தேவன் யோவான் 14:2,3 வசனங்களில் "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னோடு

சேர்த்துக் கொள்வேன்" என்று சொல்லிச் சென்றார் இயேசு. 2000 வருடங்களாக அவர் உருவாக்கிய நம்மை கொண்டு செல்லும் இடம் எவ்வளவு அழகானதாக, அற்புதமானதாக இருக்கும்? விசுவாசத்தோடு வாழும்போது அந்தப் பாக்கியம் நமக்குக் கிட்டும். ஆனால், நாம் இந்த உலகத்தில் வாழும்போது பாவத்தோடு வாழ்ந்து, நிறைய விஷயங்களில் பாவத்தோடு ஒத்துப்போய், நமது தகுதியை இழந்து வாழ்வது நமது தேவனுடைய இதயத்தை எவ்வாறு துக்கப்படுத்தும்? ஆகவே தேவனுக்கு ஏற்ற பரிசுத்த வாழ்க்கையை மணவாளனுக்காக ஒப்புவிக்கப்பட்ட ஒரு கற்புள்ள வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### விசுவாசம் - இந்தக் காலத்து பிரச்சனைகள்

இந்த நவீன காலத்தில் இப்படிப்பட்ட விசுவாச வாழ்க்கைக்கு எதிரிடையான காரியங்கள் எவை என்பதைப் பார்ப்போம். பொதுவாக இயேசுகிறிஸ்து என்று சொல்லும்போது நமது நினைவில் வருவது அவர் பாவத்தை மன்னிக்கிறவர். சிலுவை, கல்லறை என்பதே. ஆனால் சாத்தான் நம்மை சிலுவை, கல்லறை என்று வஞ்சிக்கிறான். ஏனெனில் அவர் சிலுவையிலும் இல்லை. கல்லறையிலும் இல்லை. நாம் இப்போதும் லெந்து காலங்களில் 40 நாட்கள்

> "சாத்தான் நம்மை சிலுவை, கல்லறை என்று வஞ்சிக்கிறான். ஏனெனில் அவர் சிலுவையிலும் இல்லை. கல்லறையிலும் இல்லை."

கண்ணீர் வடித்து அவர் சிலுவையில் தொங்கி, தோற்றுப்போனவர் போலவும், அவருக்காகப் பரிதாபப்படுபவர் சிலர். நமது பாவங்களுக்காகச் சிலுவையில் தொங்கியது நிஜம். ஆனால், அவர் உயிர்தெழுந்து இன்னும் வல்லமையோடு வீற்றிருக்கிறார் என்பதோடு நிறுத்திக் கொள்கின்றனர். வேறு சிலர் ஆனால் இவையெல்லாம் முழுமையான விசுவாசம் அல்ல. அவர் நம்முடைய பாவங்களைக் கழுவி, நமக்கு நீதியென்னும் சால்வையை அணிவிக்கிறார். நமது கடந்த கால பாவங்களை மாத்திரம் அல்ல. நமது நிகழ்காலத்திலும் பாவங்களை நம்மை விட்டு விலக்கி நீதிமான் என்கிற மேலாடையை எனக்குக் கொடுத்து, எனக்கும் தேவனுக்கும் இடைவெளி இல்லாமல், நான் தேவனுடைய பிள்ளை என்கிற ஆசீர்வாதத்தைத் தருகிறார் என்பதே முழுமையான விசுவாசம். தமிழில் நீதிமான் என்றும், ஆங்கிலத்தில் Righteous என்றும் (Right standing with God) நம்மை அழைக்கிறார். நீதியைச் செய்வதால் நீதிமான் இல்லை. தேவனோடு சரியாக வாழ்வதுதான் நீதிமான்.

> "நீதியை செய்வதால் நீதிமான் இல்லை. தேவனோடு சரியாக வாழ்வதுதான் நீதிமான்."

அப்படியென்றால் தேவன் முன் நிற்க, தேவனோடு இருக்க என்னை மாற்றுகிறார். "இப்படியிருக்க நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங் களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. விசுவாசிக்கிற எவர்களுக் குள்ளும், எவர்மேலும் அது பலிக்கும். வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ் செய்து தேவமகிமை அற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்பட்டோம். தேவன் பொறுமை யாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங் களைத் தாம் பொறுத்துக் கொண்டதைக் குறித்து தம்முடைய நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும் தாம் நீதியுள்ளவரும், இயேசு வினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே தமது நீதியை காண்பிக்கும் பொருட்டாகவும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்" ரோமர் 3:21-26 என்று வேதம் கூறுகிறது.

"நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியன் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற

பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்" (எபிரெயர் 4:15,16).

2 கொரிந்தியர் 5:21ம் இதையே கூறுகிறது.

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்." தேவன் பாவமாகிய பழைய ஆடையை நீக்கி, நீதி என்னும் புதிய ஆடையைத் தந்து, தேவனோடு வாழக்கூடிய பெரிய பாக்கியம் தந்தார். இந்த முழுமையான விசுவாசம் நமக்கு இருக்க வேண்டும். மத்தேயு 9:29 உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்ற வார்த்தையின்படி, முழுமையான விசுவாசத்தால் வரக்கூடிய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளக்கடவோம்.

**விசுவாசம் - அது எப்படி வருகிறது?**

இப்படிப்பட்ட விசுவாசத்தைப் பெற நான் என்ன செய்ய வேண்டும்? உதாரணமாக,

**ஒரு நான்கு வழி சந்திப்பில் சிவப்பு விளக்கு எரியும்போது நிற்பதும், பச்சை விளக்கு ஒளிரும்போது செல்ல வேண்டும் என்றும் நாம் எப்படி கற்றுக் கொண்டோம்? முதலாவது படித்தோம், பார்த்தோம், செயலாக செய்தோம். விசுவாசம் கேள்வியினாலே வரும். நாம் எதைக் கேட்கிறோமோ அதுதான் விசுவாசமாக வளரும்.**

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).



நான் எதைக் கேள்விப்படுகிறேனோ அதன்மேலே விசுவாசம் வரும். நான் தேவ வார்த்தையின்மேல் விசுவாசம் வைத்தால் தேவன்மேல் நம்பிக்கை வரும். உதாரணமாக, உலகத்தின் காரியங்களை, தோல்விகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால், அவநம்பிக்கையே வரும். அந்தச் சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, படிக்கும்போது நமது வாழ்க்கையின் பிரச்சனைகளைத் தேவன் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை வரும். ரோமர் 4:17 "அவர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன்" என்று சொல்கிறது. ஆதியாகமம்

"உலகத்தின் காரியங்களை தோல்விகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால், அவநம்பிக்கையே வரும். அந்த சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, படிக்கும்போது நமது வாழ்க்கையின் பிரச்சனைகளை தேவன் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை வரும்."

1:3,4ல் தேவன் இருளைப் பார்த்து வெளிச்சம் உண்டாகக்கடவது என்று சொன்னார். வெளிச்சம் உண்டாயிற்று. 2 கொரிந்தியர் 4:16 ‘‘இருளிலிருந்து ஒளியை பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்’’ என்று கூறுகிறது. நமது இருதயங்களிலே அவர் பிரகாசித்தால் நம்முடைய செயல்களும், அவரைப்போல மாறும். அப்படியானால் எனக்கு அந்தளவு விசுவாசம் இல்லையே என்று அநேகர் சொல்வதைக் கேட்கிறோம்.

## விசுவாசம் - அதன் அளவு





ரோமர் 12:3ல் சொல்லப்பட்டபடி **ஒவ்வொருவருக்கும் அவருடைய அழைப்புக் கேற்ற விசுவாசம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. தேவன் நமது விசுவாசத்திற்காக வார்த்தை என்ற விதையைக் கொடுக்கிறார். உதாரணத்திற்கு, நாம் பணத்தேவைகளுக்காக ஜெபித்தால், தேவன் நமக்குப் பணத்தைக் கொடுக்கமாட்டார். ஆனால், அதற்காக வார்த்தையைக் கொடுப்பார். தொழிலுக்காக ஜெபித்தால் தொழிலைக் கொடுக்கமாட்டார். அதற்கான வார்த்தையைக் கொடுப்பார். மாற்கு 4:14 ‘‘விதைக்கிறவன் வார்த்தையை (வசனத்தை) விதைக்கிறான்’’ என்று கூறுகிறது. வார்த்தையாகிய விதையை நல்ல நிலத்தில் போட்டு, தண்ணீர் ஊற்றி, பாதுகாத்து பெரிய மரமாக வளர்க்க வேண்டியது நமது வேலை. அது வார்த்தையாகிய விதையை கொடுப்பவரின் வேலை அல்ல.** மத்தேயு 17:20இல் கடுகளவு விசுவாசம் நமக்கு இருந்தால், மலையைப் பார்த்து அப்புறம் போ என்று சொல்ல, அது அப்புறம் போம். நம்மால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று இயேசு கூறுகிறார். ஆனால் அதே கடுகுவிதையை விதைக்காமல், அப்படியே மூடி வைத்தால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் அப்படியே இருக்கும்.

அந்த விதையைக் கடுகாகவே வைத்து இருப்பதோ, அல்லது விதைத்து மரமாக்குவதோ நம் கையில்தான் இருக்கிறது. அதே விதையைச் சாலையில் விதைத்தால் ஒன்றுக்கும் உதவாது. அதே சமயம், அதை நல்ல நிலத்தில் விதைத்தால் மிகப்பெரிய மரமாக மாறும். மத்தேயு 13இல் விதைக்கிறவனுடைய உவமையைப் பற்றி சொல்லியிருக்கிறது. அதில் நான்குவிதமான நிலத்தைப் பற்றியும் ஆறுவிதமான முடிவுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதை முப்பதும், அறுபதும், நூறுமாக மாற்றுவது நமது பொறுப்பு.

‘‘நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்‘‘ (மாற்கு 9:23) என்று இயேசு சொல்கிறார்.

## விசுவாசம் - அதன் இலக்கு

விசுவாசம் நம்மை மட்டுமே நம்பி இல்லை. நமது அறையில் வெளிச்சத்தைக் கொண்டுவர சுவிட்சை அழுத்துவது மட்டுமே நமது வேலை. மின் ஒயர் மூலமாக மின்சாரத்தைக் கொண்டு சென்று பல்பை எரிய வைப்பது நமது வேலை அல்ல. நம்முடைய விசுவாசம் சுவிட்சை அழுத்து வதில் மட்டுமே இருக்கிறது. அதைத் தொடர்ந்த காரியங்களில் இல்லை. நாம் ஒரு விமானத்தில் பயணம் செய்யும்போது, விமான ஓட்டியின் லைசென்சை வாங்கிப் பார்ப்பதில்லை. விமானத்திற்குப் பெட்ரோல் நிரப்பப்பட்டதா என்று யாரிடமும் கேட்பதில்லை. இவை களெல்லாம் சரியாக இருக்கும் என்று நம்பிக்கை உள்ளதால் நாம் தைரியமாக விமானத்தில் பயணிக்கிறோம்.

அதே விமானப் பயணத்தின்போது,



ஆகாயத்தில் விமானம் காற்றுச் சுழலில் சிக்கும்போது, விமானத்தில் உண்டாகும் அதிர்வுகளைப் பார்த்து பயணிகளின் முகபாவனைகள் மாறுவதைப் பார்க்கலாம். ஒரு சிலரின் முகம் இறுகுவதையும், சிலர் பிரார்த்திப்பதையும், மற்றவர்கள் மிரளுவதையும் காணலாம். இந்த விசுவாசக் குறைவால்தான் பயமுண்டாகிறது. சிலருக்கு வாந்தி வருகிறது. சிலருக்குத் தலை சுற்றுகிறது. புலம்பல் வருகிறது. ஆனால், தேவனை விசுவாசிப்பவர்களோ எந்தப் பயமுமில்லாமல் சந்தோஷமாகப் பயணிப்பர். தேவன் அவர்களோடு இருப்பதால் அந்த விமானத்திற்கு ஒன்றும் ஆகாது என்பது அவர்களது விசுவாசம். இறுதியில் விசுவாசிக்கிறவர்களும், விசுவாசிக்காதவர்களும் சென்றடைய வேண்டிய இடத்திலே சென்று இறங்குகின்றனர்.

விசுவாசம் தனியாக செயல்படாது. விசுவாசம், அன்பு, நம்பிக்கை மூன்றும் இணைந்தே செயல்படும். இவை முக்காலியின் மூன்று கால்களைப் போன்றது. முக்காலியின் காலில் ஒன்றோ, இரண்டோ கால்கள் இல்லாமல், அதால் நிற்க முடியாது. அதேபோல ஒன்றுக்கொன்று ஒரே சீரான உயரத்தில் இருக்க வேண்டும். அப்போதுதான் முக்காலி ஸ்திரமாக இருக்கும்.

### விசுவாசம் - தனிமையானதல்ல

அநேகருடைய விசுவாசம் ஸ்திரத் தன்மையில்லாதிருக்கக் காரணம் விசுவாசம், அன்பு நம்பிக்கை ஆகிய மூன்றும் ஒரே சீராக இல்லாததே. ‘‘இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது’’ (1 கொரிந்தியர் 13:13). ‘‘உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும்’’ (1 தெசலோனிக்கேயர் 1:2) என்று கூறப்பட்டுள்ளது. இதே கருத்து 1 தெசலோனிக்கேயர் 5:8இல் வலியுறுத்தப்படுகிறது.

‘‘பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.’’

விசுவாசம் என்பது உறுதியான எதிர்பார்ப்போடு கூடிய விருப்பம். நமது வீட்டிலுள்ள காற்று குளிரூட்டியில் (AC) நாம் குறிப்பிட்ட குளிர் நிலையை ரிமோட்டில் தெரிந்தெடுத்தப் பிறகு அந்தக் குறிப்பிட்ட குளிர் நிலையை அடைந்ததும் அங்கிருக்கும் வெப்பநிலை சீராக்கியிலிருந்து (Thermostat) ஒரு சிக்னல்போய் கம்பிரஷரை நிறுத்தும். அந்த சிக்னல்தான் நம்பிக்கை என்பது. அந்த சிக்னல் கம்பிரஷரைச் சென்று நிறுத்துவது விசுவாசம். நாம் இதைப் பற்றிய கவலையில்லாமல் சந்தோஷமாகக் குளிரை அனுபவிப்பது அன்பு என்று சொல்லலாம். இதைப் புரிந்து கொள்வது எளிது.

நம்பிக்கை என்பது விசுவாசத்தின் முதல். விசுவாசம் என்பது தேவனுடைய வல்லமை வெளிப்படும்படியான நமது உறுதியான எதிர்பார்ப்போடு கூடிய விருப்பம். அன்பு என்பது நமது வாழ்க்கையில் தேவனுடைய அன்பில் நிலைத்து மகிழ்ச்சியோடு வாழ்வது. இவை மூன்றும் நமக்கு இருக்க வேண்டும்.

### விசுவாசம் - அதன் ஆதாரம்

நமக்கு விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதை விசுவாசத்தின் மூலமாக வரும் கனிகளை வைத்து அறியலாம். கனிகள் இருந்தால் விசுவாசம் இருக்கும். யாக்கோபு 2:14-26இல் சொல்லியபடி, “என் சகோதரரே ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும் கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன?” அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? நிச்சயமாக இரட்சிக்காது. ஆக கிரியைகளுள்ள விசுவாசம், கிரியைகளில்லாத விசுவாசம் என்று இரண்டு இருக்கிறது. நமது விசுவாசம் கிரியைகளுள்ளதாக இருக்க வேண்டும். யாக்கோபு 2:26 “அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. கலாத்தியர் 5:5,6 இல் “நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக் கொண்டு

விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்” ஆக அன்பினால் கிரியை செய்வது விசுவாசம் இருப்பதைக் காட்டும். நம்பிக்கை விசுவாசத்தைக் காட்டுகிறது. விசுவாசம் அன்பின் மூலம் நடக்கக்கூடிய கிரியையினாலே உங்களிடத்தில் இருக்கக்கூடிய விசுவாசத்தையும் அன்பையும் பிரதிபலிக்கிறது. ஆகவே நாம் எப்பொழுதும் கனியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

> **அன்பினால் கிரியை செய்வது விசுவாசம் இருப்பதைக் காட்டும்.**

நமது கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்குகிற பரிசுகள் ஆவியின் வரங்கள். ஆனால் நமது தோட்டத்தில் உள்ள ஆப்பிள் பழங்களைக் கொடுக்கக்கூடியது கனிகள் தரும் மரம். வரங்களைத் தேவனிடத்திலிருந்து

கேட்டுப் பெறலாம். நாம் பிரயாசப்பட்டு, விதை நட்டு, நீரூற்றி, களை பிடுங்கி, பராமரித்துப் பெற்றுக்கொள்வது கனிகள். இவை தேவ உருவாக உதவியுடன் பிரயாசப்பட வேண்டும்.

“நமது வாழ்வில் அன்றாடம் எல்லாக் காரியத்திலேயும் எல்லாப் பொருள்களிலும் நம்பிக்கை வைத்து விசுவாசத்தோடு செயல்படுகிறோம். நாம் உட்காரும் நாற்காலியிலிருந்து நாம் பயணிக்கும் பேருந்து ஓட்டுநர் வரை அனைவரையும் நம்புகிறோம். ஆனால் தேவன்மீது மாத்திரம் விசுவாசம் நம்பிக்கை வைப்பதில்லை. ஏன்?”

கலாத்தியர் 5:26,27 இன் ஆவியின் கனிகள் நமது வாழ்க்கையில் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அந்தக் கனிகள் நமது அன்றாட வாழ்வில் காணப்பட விருப்பத்தோடு பிரயாசப்பட வேண்டும். நமது வாழ்வில் அன்றாடம் எல்லாக் காரியத்திலேயும் எல்லாப் பொருள்களிலும் நம்பிக்கை வைத்து விசுவாசத்தோடு செயல்படுகிறோம். நாம் உட்காரும் நாற்காலியிலிருந்து நாம் பயணிக்கும் பேருந்து ஓட்டுநர்வரை அனைவரையும் நம்புகிறோம். ஆனால் தேவன்மீது மாத்திரம் விசுவாசம், நம்பிக்கை வைப்பதில்லை. ஏன்?

**விசுவாசம் - தேவனைப் பிரியப்படுத்தும் வகை**

எபிரெயர் 11:6 “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்,” என்று கூறுகிறது. விசுவாசம் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்தும் காரியம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த விசுவாசம் கடுகளவு இருந்தால் போதும். அதைப் பெரியதாக்கி பறவைகள் வந்து இளைப்பாறும் அளவுக்கு நம்மால் அதை மாற்ற முடியும்.

நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு விதத்தில் உணர்ச்சிவயப்பட்டோ அல்லது நிதானமாகவோ இரட்சிக்கப்பட்டு தேவனைச் சொந்த இரட்சகராக கடந்த காலத்தில் ஏற்றுக் கொண்டோம். நல்லது, அதன்பின்பு பாவம் பற்றியும், மனந்திரும்புதல் பற்றியும், விசுவாசம் பற்றியும், சீஷத்துவம் பற்றியும் அறிந்து கொண்டோம்.



### நமக்கு முன் வைக்கப்படும் 4 கேள்விகள்

1. உலகத்தில் உள்ள எல்லாரைப் பார்க்கிலும், என்னை தேவன் அதிகம் நேசிக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

2. தேவன் உங்கள் தேவைகள் அனைத்தையும் சந்திக்க வல்லவர் என்பதை நம்புகிறீர்களா. அது அவரால் கூடும் என்று நம்புகிறீர்களா?

3. தேவன் எல்லாரையும் விட ஞானமுள்ளவர் என்பதை விசுவாசிக்கிறீர்களா?

4. தேவன் உங்கள் எதிர்காலம் அனைத்தையும் அறிந்திருக்கிறார் என்று நம்புகிறீர்களா?

**மேலே குறிப்பிட்ட 4 கேள்விகளுக்கும் உங்கள் பதில் 'ஆம்' என்றிருந்தால், தேவனையும் அவருடைய வாக்குறுதிகளையும் நம்பாமல் உங்கள் எது தடுக்கிறது?**

அப்படியானால் தேவனிடம் நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்க வேண்டும். இதோடு பாவமன்னிப்புக் கான அறிக்கை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இப்போது வேத வசனங்களை, விளக்கங்களைக் கேட்டு ஞானத்தோடு, என்னுடைய வாழ்க்கை ஏன் இப்படி இருக்கிறது? என்னால் சரியாக வாழ முடியவில்லை, நான் நீதியின் சால்வை தரித்தவனாய் தேவனோடு சரியாய் வாழ ஆண்டவர் மேல் விசுவாசம் வைக்க உதவி செய்யுமாறு ஒரு ஜெபத்தை செய்யலாம்.

**பி**தாவாகிய தேவனே, நான் உங்கள் கட்டளைகளை மீறியிருக்கிறேன். அதை அறிந்தும் வைத்திருக்கிறேன். என் பாவங்கள் உம்மை விட்டு என்னை பிரித்தது. நான் பாவியாயிருப்பதால் மனம் வருந்துகிறேன். நான் உண்மையில் என் வாழ்க்கையில் செய்த அனைத்துக்கும் வருந்துவதோடு, என் பாவ வாழ்க்கையிலிருந்து மனம் திரும்பிவிட விரும்புகிறேன். தயவுசெய்து என்னை மன்னியும். வாழ்க்கையின் பாவத்தை மேற்கொள்ள எனக்கு உதவி செய்யும். உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தாரென்றும், மீண்டும் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறார்; என் ஜெபத்தைக் கேட்கிறார் என விசுவாசிக்கிறேன். இயேசுவை என் தேவனாக வரும்படி அழைக்கிறேன். உமக்கு கீழ்படிவதற்கும், உமது விருப்பத்தை என் வாழ்க்கையில் செய்வதற்கும் உமது பரிசுத்த ஆவியானவரைத் தாரும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபிக்கிறேன்.ஆமென்.

**இப்போது நீங்கள் உண்மையிலேயே மறுபடியும் பிறந்திருக்கிறீர்கள்!**

வாழ்த்துக்கள்!!

**பாவத்தைப் பற்றியும், உண்மையான மனந்திரும்புதலைப் பற்றியும், கர்த்தர் மீது விசுவாசத்தைப் பற்றியும் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்!**

**உண்மையான மனந்திரும்புதலுடன் அறிக்கையிட்டிருக்கிறதால், உங்களை கர்த்தரின் குடும்பத்துக்குள் வரவேற்கிறோம்.**

## வாசிப்புக்காக.

**கிரியையில்லாத விசுவாசம்**

யாக்கோபு 2:14,20,26. மத்தேயு 7:21,23. தீத்து 1:16. லூக்கா 6:46.
1 கொரிந்தியர் 13:2. யோவான் 2:23,25. 8:30,31. 12:42,43.

**கிரியையில்லாத விசுவாசம் போலியானது**

யாக்கோபு 2:18, 2 தீமோத்தேயு 3:15, 1 கொரிந்தியர் 13:3,
மத்தேயு 5:20, 23:23,28. ரோமர் 3:20. கலாத்தியர் 2:16, 3:10,11. தீத்து 3:4,5.
எபேசியர் 2:8,10

**சிந்தனைக்கு:**

விசுவாசம், நம்பிக்கை, அன்பு போன்றவைகள் மூன்றும் சம அளவில் தொடரப்பட்டு தழுவிக் கொள்ளப்பட வேண்டும். இது முக்கியமானது.

விசுவாசம் - இயேசு உங்களை மீட்டிருக்கிறார்

நம்பிக்கை - உங்களை பரலோகத்துக்கு அழைத்துச் செல்ல இயேசு மீண்டும் வருகிறார்.

அன்பு - நாம் அவரையும் பிறரையும் அன்பு செய்யும்படிக்கு கர்த்தர் தமது அன்பை நமக்கு வெளிக்காட்டினார்.

விசுவாசமும் பயமும் எப்போதுமே கிறிஸ்தவ வட்டங்களில் வித்தியாசப்படுத்திக் காட்டப்படுகின்றது. ஆனால் வேதாகமத்தின்படி, கர்த்தரின் அன்பானது பயத்துக்கு எதிரான ஒன்றாக இருக்கின்றது: “அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.” (1 யோவான் 4:18).

**நீங்கள் பயமுள்ளவர் என்றால், தேவனின் அன்பில் வளருங்கள்.**

உங்களது பேச்சு விசுவாசத்தைப் பிரதிபலிக்கிறதா அல்லது பயத்தைப் பிரதிபலிக்கிறதா?

இந்தப் பாடத்தை முடித்தபின்னர், நீங்கள் விசுவாசம் – நம்பிக்கை – அன்பு ஆகியவற்றை எப்படித் தொடரப் போகின்றீர்கள் / நடைமுறைப்படுத்தப் போகின்றீர்கள்?

ஒவ்வொரு கட்டத்திலும் கீழ்க்கண்ட வார்த்தைகளில் பொருத்தமானவற்றைக் கொண்டு நிரப்புங்கள்: ஒருபோதும் இல்லை / எப்போதாவது / அவ்வப்போது / அடிக்கடி / தினசரி

| | **விசுவாசம்** | **நம்பிக்கை** | **அன்பு** |
|---|---|---|---|
| இவற்றுக்காக எந்த அளவுக்கு ஜெபிக்கின்றீர்கள்? | | | |
| இவற்றை எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்துகின்றீர்கள்? | | | |
| உங்கள் கிறிஸ்தவ உரையாடல்களில் இவை எந்த அளவுக்கு இருக்கின்றன? | | | |

ஒருவாரத்துக்குப் பின்னர், எந்த அளவுக்கு நீங்கள் விசுவாசம் - நம்பிக்கை - அன்புஆகியவற்றைத் தொடர்ந்திருக்கிறீர்கள் அல்லது நடைமுறைப் படுத்தியிருக்கிறீர்கள் என்பதை எழுதுங்கள். ஒவ்வொரு கட்டத்திலும் கீழ்க்கண்ட வார்த்தைகளில் பொருத்தமானவற்றைக் கொண்டு நிரப்புங்கள்: ஒருபோதும் இல்லை / எப்போதாவது / அவ்வப்போது / அடிக்கடி / தினசரி

| | **விசுவாசம்** | **நம்பிக்கை** | **அன்பு** |
|---|---|---|---|
| இவற்றுக்காக எந்த அளவுக்கு ஜெபிக்கின்றீர்கள்? | | | |
| இவற்றை எந்த அளவுக்கு நடைமுறைப் படுத்துகின்றீர்கள்? | | | |
| உங்கள் கிறிஸ்தவ உரையாடல்களில் இவை எந்த அளவுக்கு இருக்கின்றன? | | | |

# நோக்கம் – குடும்பம்

இந்த உலகத்தில் நோக்கம் / தேவையின் அடிப்படையில்தான் ஒவ்வொரு பொருளும் உருவாக்கப்பட்டது. அல்லது கண்டுபிடிக்கப்பட்டது. உதாரணத்துக்கு, உணவு கெட்டுப்போகாமல் இருக்க ஒரு சாதனம் தேவை என்பதால் அந்த நோக்கத்தின் அடிப்படையில் குளிர்சாதனப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது. இப்படித்தான் நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருளும் உருவாக்கப்பட்டது.

நமது தேவனும் ஒரு நோக்கத்தின் அடிப்படையில்தான் மனிதனைப் படைத்தார். அன்பான தேவனுக்குத் தாம் நேசிக்க ஒரு குடும்பம் தேவைப்பட்டது. “ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர் அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கையில்… “ (எபிரெயர் 2:10). தம்முடைய அன்பை காட்ட அநேகம் பிள்ளைகள் வேண்டும் என்பதற்காகத்தான் மனிதகுலத்தை உண்டாக்கினார். ஆண்டவர் படைத்த ஏதேன் தோட்டத்தைப் பார்த்துக்கொள்வதற்காக ஆதாமை ஒரு தோட்டக்காரனாகப் படைத்தார் என்ற தவறான கருத்து கிறிஸ்தவர்கள் மத்தியில் இருப்பதைப் பார்க்கிறோம். அது தவறு. அந்தத் தோட்டத்தில் உள்ள செடிகொடிகள், கனிதரும் மரங்கள் ஆகியவை உருவாக்கப்பட்ட பின்புதான் ஆதாம் உருவாக்கப்பட்டான். அவனுக்கு அங்குத் தோட்ட வேலை ஒன்றும் இல்லை. தேவன் அவனோடு தினமும் உறவாடி பேசி, பழகி தமது அன்பை அவனுக்குக் காட்டி, அவனுடைய அன்பைப் பெற்று, அவனோடு வாழவே அவனைப் படைத்தார். ஆதாமுடைய வழி வந்த நம்மையும் அவருடைய பிள்ளைகளாய்

> “தம்முடைய அன்பை காட்ட அநேகம் பிள்ளைகள் வேண்டும் என்பதற்காகத்தான் மனிதகுலத்தை உண்டாக்கினார்.”

இருக்கும்படிதான் படைத்தார். ஆனால் ஆதாமுடைய தவறினால் மனிதகுலம் பாவத்தில் விழுந்தது. அந்தப் பாவத்திலிருந்து நம்மை மீட்கும்படியாகத்தான் இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார்.

“அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாகி அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும், அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார்” (யோவான் 1:12) என்று சொல்லப்பட்டு இருக்கிறது. வல்லமை என்பது, என்னுடைய பலத்தினால் நான் செய்யக்கூடிய காரியம். அதிகாரம் என்பது வல்லமையுள்ள ஒருவர் தனது வல்லமையை பயன்படுத்திக் கொள்ள நமக்குக் கொடுக்கும் சுதந்திரம்.

நாம் இயேசுவை ஏற்றுக் கொண்ட மாத்திரத்திலே அவருடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார். 1 யோவான் 3:1ம் இதே கருத்தையே வலியுறுத்துகிறது. நாம் தேவனுடைய பிள்ளைகள் அல்ல. நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதால் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம். இல்லாதவைகளை இருக்கிறவைகள்போல அழைக்கிற தேவன் என்று அவரது குணம் வெளிப்படுத்தப்படுகின்றது. “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்” (ரோமர் 8:14-17).

இந்த வசனங்களில் உள்ள மூன்று கருத்துக்களை நாம் ஆராய்வோம். பழைய ஏற்பாட்டு காலங்களில் இருந்த இஸ்ரவேலர், தேவனுக்கும் தேவ கோபத்திற்கும் மிகவும் பயந்தார்கள். 40 வருட வனாந்தர பயணத்தில் சீனாய் மலையின் எல்லையெங்கும், ஆடுமாடு முதலாய் மேயக்கூடாது என்ற தேவ கட்டளைக்குப் பயந்து, மோசேயைப் பார்த்து நீ மட்டும் போ நாங்கள் வரவில்லை என்று பயந்து நடுங்கினார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்கச் சொன்னபோது, நாங்கள் வெளிப்பிரகாரத்தில் இருந்து கொள்கிறோம். ஆசாரியர் பிரதான ஆசாரியர் மட்டும் உள்ளே போகட்டும் என்று சொல்லி பரிசுத்தமுள்ள தேவன் தங்களைத் தண்டித்துவிடுவார் என்றும் பயந்தனர். ஆனால் அந்த அடிமைத்தனத்தின் ஆவியைத் தேவன் நம்மைவிட்டு நீக்கி,

> "நாம் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது நம்மை தேவன் தத்தெடுத்து தமது பிள்ளையாக மாற்றுகிறார். ஆனால் வேலைக்காரனாக நம்மை சேர்த்துக்கொள்ளவில்லை. நாம் தேவனுடைய சொத்தென்னும் ஆசீர்வாதத்தில், பிள்ளைகளுக்குரிய முழு உரிமையும் நமக்கு உள்ளது என்கிறார்."

அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற பிள்ளைகளாகத் தன்னுடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டார். இஸ்ரவேல் ஜனங்கள், ஆபிரகாமின் சந்ததியில் வந்ததால், தங்களை மாம்சத்தின்படி புத்திரர் என்று சொல்லிக் கொள்ளலாம். நாம் அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது நம்மைத் தேவன் தத்தெடுத்து தமது பிள்ளையாக மாற்றுகிறார். ஆனால் வேலைக்காரனாக நம்மைச் சேர்த்துக்கொள்ளவில்லை. தேவனுடைய சொத்தென்னும் ஆசீர்வாதத்தில், பிள்ளைகளுக்குரிய முழு உரிமையும் நமக்கு உள்ளது என்கிறார். "எனக்கிருக்கிற சொத்து கிறிஸ்துவுக்கு சகோதரர்களாகிய உங்களுக்கும் சொந்தம்" என்று வாக்கு கொடுக்கிறார்.

## தேவனது குடும்பம் எதனால் உருவாக்கப்பட்டிருக்கிறது?

இன்னொரு உதாரணமும் இதற்குக் கொடுக்கலாம். விலையுயர்ந்த ஒரு காரை வாங்கி, ஒருவர் தன் வீட்டின்முன் நிறுத்துகிறார். அச்சமயம் அவரது மகன் தன் தந்தையிடம் காரை வாங்கி, ஓட்டிச் செல்கிறார். விபத்து ஏற்பட்டதாக தகவல் வருகிறது. உடனே அந்த தந்தை காரைப் பற்றி கவலைப்படாது, தன் மகனைப் பற்றி மட்டுமே கவலையடைவார். "தம்பி உனக்கு ஒன்றுமில்லையே?" என்று விசாரிப்பார். காரைப் பற்றி கவலைப்படமாட்டார். ஆனால் அதே கார் வேலைக்காரன் ஓட்டிச் சென்று விபத்து ஏற்படும்போது, "காருக்கு என்ன ஆயிற்று?" என்று காருக்காகக் கவலைப்படுவார். நாம் தேவனுக்கு வேலைக்காரர் அல்ல. தேவன் நம்மைத் தமது சொந்தப் பிள்ளையாகவே கருதி அன்பு செலுத்துகிறார். ஆனால், தற்கால விசுவாசிகள், ஊழியர்கள் தங்களைப் பிள்ளைகள் என்று சொல்வதைவிட பாஸ்டர் (ஊழியர்) என்றோ, பிஷப் (ஊழியக்காரரின் தலைவர்) என்று சொல்வதில் மகிழ்ச்சியும், கௌரவமும் அடைகின்றனர். இது ஒரு தவறான மனப்பான்மை.

**"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோமர் 15:14-17).**

யோவான்15:15 இல் இதே கருத்தை இயேசு வலியுறுத்துவதைப் பார்க்கலாம்: ''இனி நான் உங்களை ஊழியக்காரரனென்று சொல்லுகிறதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களை சிநேகிதர் என்றேன். ஏனெனில் என் பிதாவினிடத்தில் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.''

வேலைக்காரனுக்கு வீட்டில் உள்ள காரியங்கள் தெரியாது. ஆனால் பிள்ளைக்கு எல்லாம் தெரியும். ஆகவே, நாம் வேலைக்காரன் என்று சொல்லிக்கொள்ளும் பலவித பட்டங்களைப் போட்டுக்கொண்டு நம்மை இழிவுபடுத்தாமல், தேவனுடைய பிள்ளை என்ற ஒற்றைச் சொல்லில் இருக்கக்கூடிய பெரிய மேன்மையை உணர்ந்து செயல்படுவோம். மற்றவர்க்கும் இதனைப் போதிப்போம். ஒரு பிள்ளை ஒரு வீட்டில் உள்ள அனைத்து பொருட்களுக்கும் இன்பங்களுக்கும் சௌகரியங்களுக்கும் அன்புக்கும், அக்கறைக்கும் உரிமையானவன். ஆனால், வேலைக்காரனுக்கு எந்த மேன்மையும் கிடையாது. நமது முதல் அழைப்பு தேவனுடைய பிள்ளை என்பதே. நாம் ஊழியக்காரனாகவோ, வேலைக்காரனாகவோ, அடிமையாகவோ, அநாதையாகவோ அழைக்கப்படவில்லை. நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை உண்மை இதுவே. இந்த அடிப்படையில் தவறும்போது, நாம் தவறான வழிகளில் வழிநடத்தப்படுவது சாத்தியமாகும்.

**''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்'' (எபேசியர் 1:4-6).**

ஆக நாம், தேவனுடைய சுவிகார பிள்ளைகளாகும்படி முன்குறித்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளுக்குரிய அதிகாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும், அக்கறைக்கும், அன்புக்கும் நாம் உரிமையுள்ளவர்களாய் இருக்கிறோம். நாம் அவருடைய வாரிசாகவும், அவருடைய எல்லாச் சொத்துக்கும் உரிமையுள்ளவர்களாயும் இருக்கிறோம். தேவனுடைய இந்தச் செயலை விளக்க வேண்டுமானால், இங்கிலாந்து அரசி, திடீரென நம்மை அழைத்து, எனது அடுத்த வாரிசு நீங்கள்தான் என்று அறிவித்தால், இங்கிலாந்து அரச குடும்பத்தின் சொத்துகளும், மரியாதையும், கௌரவமும், எப்படி நம்மைச் சேருமோ, அதைவிட பலமடங்கு மேன்மையை 'நாம் தேவனுடைய பிள்ளை' என்ற அழைப்பின்மூலம் பெறுகிறோம். இந்த ஆசீர்வாதங்கள் எல்லாம் என்றோ ஒரு காலத்தில் நமக்கு கிடைக்கும் என்பதல்ல. இன்றே இப்பொழுதே நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது சத்தியமான, நிதர்சனமான உண்மை. நாம் இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய குடும்பத்தில் கிறிஸ்துவுக்கு சகோதர, சகோதரிகளாக இருக்கிறோம் என்ற உண்மையை ஒருபோதும் மறக்கக்கூடாது.

> மனிதன் தேவனை தெரிந்து கொள்ளும், உருவாக்கும், தேர்ந்தெடுக்கும் காரியம் மதம். ஆனால் இறைவன் தனது பிள்ளைகளை தெரிந்து கொள்ளும் காரியம் கிறிஸ்தவம்.

கிறிஸ்தவம் என்பது ஒரு மதமல்ல. மனிதன் தேவனைத் தெரிந்து கொள்ளும், உருவாக்கும், தேர்ந்தெடுக்கும் காரியம் மதம். ஆனால், இறைவன் தனது பிள்ளைகளைத் தெரிந்து கொள்ளும் காரியம் கிறிஸ்தவம். இது பிதாவாகிய தேவன் இயேசுகிறிஸ்து மூலம் நம்மை அவருடைய பிள்ளைகளாக்கி அரவணைத்து அன்பு பாராட்டுகிற காரியம்.

“ஆகையால் நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரு நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்துஞ்” (எபேசியர் 2:19) ஆக, நாம் அந்நியரல்ல, பரதேசியல்ல, எனது உருவம் நிறம், குணம் எப்படிப்பட்டதாயினும் நான் தேவனுடைய பிள்ளையாக என்னை அழைக்கிறார். தேவன் என்னை தெரிந்து கொண்டதன் முதல் நோக்கம், நான் அவருடைய குடும்பத்தில் உள்ள உறுப்பினனாய் குடும்பத்தில் உள்ளவரோடு இசைந்து வாழ வேண்டும் என்பதே.

பழைய ஏற்பாட்டு காலத்திற்கும், புதிய ஏற்பாட்டு காலத்துக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் ஆராய்வோம். பழைய ஏற்பாட்டு மக்கள், தேவ பிரசன்னத்திற்கு வரப் பயந்தார்கள். தேவநாமம் மகா பரிசுத்த

நாமம். ஆகவே அதனைப் பயந்து பயந்து உச்சரித்தார்கள். வேத எழுத்துக்களை, யெகோவா அல்லது யாவே என்ற நாமத்தை எழுதும்போது, குளித்து, புதிய ஆடை அணிந்து புதிய எழுதுகோலால் எழுதி, பின் அதனை உடைத்து மீண்டும் குளித்து வேறு ஆடை அணிந்து மீதி உள்ள வசனங்களை எழுதும் வழக்கம் உடையவர்கள். ஆகவேதான் இயேசு, யெகோவா தேவனை எனது தந்தை, அப்பா என்று அழைத்தபோது வெகுண்டெழுந்தார்கள். தேவனைப் பற்றியும், அவருடைய மகத்துவத்தைப் பற்றியும், அவருடைய வல்லமை பற்றியும் மட்டுமே நிறைய அறிந்திருந்தார்கள். ஆனால், அவர்




எத்தனை அன்புள்ளவர் என்று அவர்களுக்குத் தெரியாது. புதிய ஏற்பாட்டில், இயேசு மத்தேயு 6:9இல் தமது சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும்போது, ‘‘பரமண்டலத்தில் இருக்கிற எங்கள் பிதாவே’’ (அப்பாவே) என்று அழைக்கிறார். இயேசுகிறிஸ்து யெகோவா தேவனை பிதா என்று சொன்னதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதைத் ‘தேவ தூஷணம்‘ என்று நினைத்தார்கள். அவர் தேவாதி தேவன். கர்த்தாதி கர்த்தர். மகா பரிசுத்தமான ஒளியில் வாசம்பண்ணுகிறவர். மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார் என்ற உண்மை நூற்றுக்கு நூறு மெய்தான். ஆயினும் இயேசுகிறிஸ்து, என் பிதா என் தந்தை என்று சொல்லிக் கொண்டிருந்தவர். தமது சிலுவை மரணத்தின்போது, என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் எனக் கதறியது ஏன்? நமது சர்வலோகத்தின் பாவங்களும் அவர்மீது சுமத்தப்பட்டபோது, பிதாவின் முகம் அவருக்கு மறைக்கப்பட்டது. ஆகவே அவர் புறந்தள்ளப்பட்டு, நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டடோம். அவர் நமக்காகச் சாபமானார். ஆனால் இன்றும் பலர் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைப்போல, அவருடைடய வல்லமை, மகத்துவம் பரிசுத்தம் போன்றவற்றை மட்டும் காரணம் காட்டி, அவரோடு தினமும் உறவாடி மகிழும் உன்னத அனுபவத்தை பெறாமல் அநாதைகள்போல காலம் கழிக்கும் அவல நிலையில் உள்ளனர்.

இங்கிலாந்து அரசியைப் பார்க்க நாம் நினைத்தால், அதற்காக பலவிதமான சட்ட, நிர்வாக, பிரயாசம், முயற்சி, நேரம் இவைகளைக் கடந்து, பல நாட்கள் காத்திருந்தால்தான் அவரைப் பார்க்க முடியும். ஆனால் அதே அரசியை, அவரது மகனோ அல்லது பேரப்பிள்ளைகளோ உறவினர்களோ எப்படி எளிதாக அணுக முடியுமோ அதேபோன்றே யெகோவா தேவனை மகா பரிசுத்தமான தேவனை 'பிள்ளை' என்ற உறவோடு, நாம் எளிதாக உறவாட முடியும் என்பது எத்தனைப் பெரிய பாக்கியம்! இதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த காலங்களில் என் பிதா என்ன செய்கிறாரோ அதையே நான் செய்கிறேன். என் பிதா என்ன சொல்கிறாரோ அதையே நான் சொல்கிறேன் என்று தனது எல்லாச் செயல்களிலும் பிதாவை முன்வைத்து செய்த இயேசு சிலுவை மரணத்தின்போது 'முடிந்தது' என்று கூறி தனது ஜீவனைத் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்தபோது தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிந்தது(மத்தேயு 27:56). அவ்வாறு செய்தது யார்? பிதா நான் இப்போது மகாபரிசுத்த ஸ்தலத்தை விட்டு உங்களோடு வாசம்பண்ணி, உங்களோடு இருப்பேன் என்று வந்து விட்டார். இது இயேசுகிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவே நிகழ்ந்தது. ஆகவே இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம் மனுக்குலத்தின் வெற்றி. யோவான் 20:17இல் மகதலேனா மரியாள் இயேசு உயிர்த்தெழுந்தபின்பு, அவரோடு பேசும்போது இயேசு அவளை நோக்கி, ''என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்தில் ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்கு போய் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும், உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு'' என்றார்.

இந்த வசனத்தில், 'பிதா, பிதா' என்று சொல்லிக் கொண்டிருந்த இயேசு, தேவனே என்றும், 'தேவனே, தேவனே' என்று சொல்லிக் கொண்டிருந்த நமக்கு இனி அவர் பிதாவாக, அப்பாவாக மாறியிருப்பதையும் காணலாம். பிள்ளையாகிய இயேசுவின் சிலுவை மரணத்தால், அவர் தள்ளப்பட்டு, அவர் இடத்தில் முதன்முதலாக தமது சீஷரைச் சகோதரர் என்று கூறுவதை இங்கே பார்க்கிறோம். ஆக, கிறிஸ்துவோடு அப்பா பிதாவே என்ற கூப்பிடும் பிள்ளைகளாக மாறிவிட்டோம். லூக்கா 15ஆம் அதிகாரத்தில் உள்ள கெட்டகுமாரன் கதையில், பரலோகத் தந்தையின் தன்மைகளாக காட்டுவதைக் கவனிப்போம். லூக்கா 15:20

''அவன் தூரத்தில் வரும்போதே அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்தான்'' இந்த வசனத்தில் தந்தை தன் கெட்டகுமாரனுக்காக பல வருடங்கள் காத்திருந்தார். கண்டார், மனதுருகினார். மகனை தூரத்தில் கண்டவுடன் இந்தத் தந்தை ஓடினார். பிதாவின் அன்புக்கும், அரவணைப்புக்கும் உரிமையானவர்களாகப் பிள்ளைகளாக இருப்பது எத்தனை சிலாக்கியம்? ஓடி, கட்டியணைத்து, முத்தம் கொடுத்து, அவனுக்குப் புதிய வஸ்திரங்களைக் கொடுத்து மோதிரம் அணிவித்து, பாதரட்சைகள் கொடுத்து அவனுக்காகப் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணினார் என்று பார்க்கிறோம். அதுவே பிதாவின் அன்பு இதயம். அப்படிப்பட்ட பிதாவுக்குப் பிள்ளைகளாக நம்மை மாற்றியது இயேசுகிறிஸ்து.

இந்தச் சாத்தியமான உண்மை ஜனங்களுக்குச் சரியாகப் போதிக்கப்படாததால் ஜனங்கள், ஊழியக்காரர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள் பின்னால், ஆசீர்வாதங்களுக்காக அலைமோதும் ஜனங்களுக்கு இந்த உண்மையைப் போதித்து, தாங்கள் இடைத் தரகர்களாக இல்லாதபடி, ஜனங்களையும், தேவனையும் இணைத்து நேரடியாக தேவனோடு தொடர்புடையவர்களாக மாற்றுவதே தேவனுக்குப் பிரியமாக இருக்கும். இதற்கு மாறாக நடக்கும் காரியங்களில் தேவகோபமே வெளிப்படும் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

சிலர் இவ்வாறு சொல்லலாம். நான் இப்போது தான் சுவிசேஷம் கேட்டு இரட்சிக்கப்பட்ட சிறு குழந்தை. ஆகவே நான் மற்றவரின் ஜெப உதவியை நாடுகிறேன் என்பர். இது தவறு. ஒரு வீட்டில் 13 வயது பிள்ளையும் 5 மாத குழந்தையும் இருக்கும்போது, தாயின் கவனம் யார்மீது அதிகம் இருக்கும். 5 மாத குழந்தையின் தேவையைச் சந்திக்க அதிக ஆயத்தமாய் இருப்பாளல்லவா? ஆகவே தேவ ஊழியத்தை செய்கின்றவர்கள், லூக்கா 1:17இல் சொல்லப் பட்டபடியே ‘‘பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளினிடத்திற்கும் கீழ்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்துக்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தம் செய்யும்‘‘ வேலையைச் செய்வதே உத்தம செயலாய் இருக்கும்.

> ‘‘ஜனங்களையும், தேவனையும் இணைத்து நேரடியாக தேவனோடு தொடர்புடையவர்களாக மாற்றுவதே தேவனுக்கு பிரியமாக இருக்கும்.’’

> ‘‘இந்த உலகத்தில் பிறக்கும்போது, நான் எனது பெற்றோரை தேர்ந்தெடுக்க இயலாது. ஆனால் மறுபடி பிறந்த நான் என் தந்தையை (பிதாவை) தேர்வு செய்ய இயலும்.’’

எனக்கும் தேவனுக்கும் இடையில் ஒரு தனிப்பட்ட உறவு இருக்கிறது. அந்த உறவு தேவனுக்குப் பிரியமில்லாத பாவங்களைச் செய்வதால் மட்டுமே அறுபடும். தேவ உறவில் நிலைத்து, வாழ்வதில், விசுவாசிகளுக்கு மற்றவர்கள், போதகர்கள் உதவலாமேயன்றி ஒரு சர்வாதிகாரியாக, இடைத்தரகர்களாகச் செயல்படுவது தவறான செயல். ‘‘அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு, பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்ஞ்’’(எபிரெயர் 8:11). ஆக கிறிஸ்துவுடன் வாழும் வாழ்வில் குறைந்த வயதை உடையவன், மிக நீண்ட நாள் கிறிஸ்துவை அறிந்தவன் என எல்லாரும் அவரை அப்பா என்று அழைக்கக்கூடிய உரிமையைப் பெற்றிருக்கின்றனர். யோவான் 1:11-12 வசனங்களும் இதனையே வலியுறுத்துகின்றன. ‘‘அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தினாலாவது, புருஷ சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனால் பிறந்தவர்கள்.’’

இந்த உலகத்தில் பிறக்கும்போது,

நான் எனது பெற்றோரை தேர்ந்தெடுக்க இயலாது. ஆனால் மறுபடி பிறந்த நான் என் தந்தையைத (பிதாவை) தேர்வு செய்ய இயலும்.

**“நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே” (கலாத்தியர் 3:26)”.**

**“நான் உன்னிடத்தில் சீக்கிரம் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனேயாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதுகிறேன். அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது” (1 தீமோத்தேயு 3:14-15).**

சபைதான் தேவனுடைய வீடு. நாம் சகோதரராய் கூடி ஒருவொருவருக்கொருவர் அன்பு செலுத்திக்கொள்ளும் இடம். சபை என்ற குடும்பத்தின் தலைவர் பிதா. இயேசுகிறிஸ்து நமது மூத்த சகோதரர். நாம் அனைவரும் அவருடைய சகோதர, சகோதரிகள். ஆக நாம் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய் வாழ்ந்து ஒருவரையொருவர் தாங்கி, மன்னித்து உற்சாகப்படுத்தி, அன்பு செலுத்த வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

**“அவர் சகல ஜாதிகளையும் அவர்களுக்குள் இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர் களாகிய உங்களையும்....” (ரோமர் 1:6).**

**“அன்றியும் அவர் தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று**

**அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறான வராய் இருக்கும்பொருட்டு தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனின் சாயலுக்கு ஒப்பாயிருப் பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:28,29).** இதே கருத்தை 2 கொரிந்தியர்3:18ம் கூறுகிறது: "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம்." நாம் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட உடன் நாம் தேவனால் அழைக்கப்பட்டு, அவருடைய குடும்பத்தில் பிள்ளையாய் சேர்க்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வின் சகோதர சகோதரிகளாய் மாறுகிறோம்.

### எப்படிப்பட்ட பிதா நமக்கு இருக்கிறார்?

இந்தக் குடும்பத்தின் தகப்பன் யார்? "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" (2 கொரிந்தியர் 6:18). இதைவிடப் பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்கிறது? சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை ஏற்றுக் கொண்டு நமக்குத் தகப்பனாயிருக்கிறேன் என்று வாக்கு கொடுக்கிறார். 1 யோவான் 3:1ம் இதே கருத்தை வலியுறுத்துவதைப் பார்ப்போம். "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்."

நமது தேவனுக்குப் பேரப்பிள்ளைகள் கிடையாது. 83 வயதுக்காரனும், 23 வயதுக்காரனும் அவருக்குப் பிள்ளைகள்தான். ரோமர் 8:17ன்படி நாம் அவருடைய சொத்துக்களுக்குச் சுதந்தரராயிருக்கிறோம்.

**"நீங்களெல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராய் இருக்கிறீர்களே. ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற வர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலாத்தியர் 3:26,27).**

நாம் கடுங்குளிருக்கு கம்பளி ஆடையை உச்சி முதல் கால்வரை போர்த்துக் கொள்ளும்போது, நமது அடையாளமே மாறி விடுவதைப்போல, நாம் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய பிள்ளையாக அவரது குடும்பத்தில் சேர்க்கப்படும்போது கிறிஸ்துவை நமது ஆடையாகத் தரித்துக் கொள்கிறோம். அப்போது நமது ஆவியில் ஏற்படும் மாற்றம், நமது சிந்தை, செயல்கள், மனப்பான்மைகளில் ஏற்பட்டு நம்மைப் பார்க்கிறவர்கள் கிறிஸ்துவைப் பார்க்கக்கூடிய நிலையில் நாம் மாறுகிறோம். 1பேதுரு 5:10, 1 யோவான் 3:2 ஆகிய வசனங்கள், நாம் தேவனாலே நித்தியத்திற்கு அழைக்கப்பட்டு, அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்

என்பதையே வலியுறுத்துவதைக் காணலாம். ஆக நமது முதலாவது அழைப்பு ‘பிள்ளை’ என்கிற உறவே. எனது பிள்ளை, வீட்டை மாற்றலாம், படிப்பை மாற்றலாம், வேலையை மாற்றலாம். ஆனால் அப்பா என்கிற உறவை மாற்றவே முடியாது. கீழ்க்கண்ட கடிதத்தில் நமது பெயரை முன்போட்டு தேவன் நம்மில் பேசுவதை கவனியுங்கள்.

**தேவனாகிய உங்கள் பிதாவிடமிருந்து ஒரு கடிதம்**

என் பிள்ளையே (_______________________________)

நீ என்னை அறியாவிட்டாலும், நான் உன்னை குறித்து அனைத்தையும் அறிந்திருக்கிறேன். உன் உட்காருதலையும் எழுந்திருத்தலையும் அறிந்திருக்கிறேன். உன் வழிகளெல்லாம் எனக்குத் தெரியும். உன் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டு இருக்கிறது. நீ என் சாயலாக சிருஷ்டிக்கப்பட்டவன். நீ எனக்குள் பிழைக்கிறாய். அசைகிறாய். இருக்கிறாய், நீ என் சந்தியாய் இருக்கிறாய். உன் தாயின் கருவில் நீ உருவாவதற்கு முன்னே உன்னை அறிந்திருக்கிறேன். நீ தவறுதலாய் உண்டாக்கப்பட்டவனல்ல. உன் நாட்களெல்லாம் என் புத்தகத்தில் எழுதப்பட்டு இருக்கிறது. நீ பிறப்பின் சரியான காலத்தையும், நீ குடியிருக்கும் எல்லையையும் நான் அறிந்திருக்கிறேன். நீ பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டாய். உன் தாயின் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உன்னைக் காப்பாற்றினேன். என்னை அறியாதவர்களால் நான் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நான் கோபிக்கிறதற்குத் தாமதமாய் இருக்கிறேன். ஆனால் அன்பாகவே இருக்கிறேன். என் அன்பை உன்னிடம் காண்பிக்க விருப்பமாய் இருக்கிறேன். நீங்கள் என் பிள்ளைகளாயும், நான் உங்கள் பிதாவுமாய் இருக்கிறேன். உங்கள் உலக தந்தைகளால் கொடுக்க முடியாததையும் நான் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறேன். நான் பூரண சற்குணராயிருக்கிறேன். நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் என்னிடத்திலிருந்து இறங்கி வருகிறது. நான் கொடுப்பவராய் இருப்பதால் உங்கள் தேவைகளைச் சந்திக்கிறேன். உங்களைப்பற்றிய என் எதிர்கால நினைவுகள் எப்போதும் சமாதானத்திற்குரியவைகளே. அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். உங்களைப் பற்றிய என் ஆலோசனைகள் மணலைப்போல அதிகமாம். நான் உன்மீது கெம்பீரித்து களிகூர்ந்து இருக்கிறேன். நான் உனக்கு நன்மை செய்வதை நிறுத்தவில்லை. நீ என் சொந்த சம்பத்து. என் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் உங்களை நாட்டுவேன். நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். உன் முழு இருதயத்தோடும், என்னைத் தேடுவாயானால் என்னைக் கண்டடைவாய். என்னிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அப்போது உன் இருதயத்தின்

வேண்டுதல்களை நிறைவேற்றுவேன். நானே உங்கள் விருப்பங்களை அறிகிறவர். நீங்கள் நினைக்கிறதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் மேலாய் நான் கிரியை செய்கிறவர். நான் உங்களுடைய நல்ல தேற்றரவாளன். உன் எல்லாப் பிரச்சனைகளிலுருந்தும் உன்னைத் தேற்றும் நல்ல தகப்பன். நீ நொறுங்குண்ட இருதயமுள்ளவனாய் இருந்தால், நான் உனக்குச் சமீபமாயிருக்கிறேன். நல்ல மேய்ப்பனைப்போல் உன்னைச் சுமந்து, என் இருதயத்துக்கு ஏற்றவனாய்ச் சமீபமாய் உன்னை வைப்பேன். ஒருநாள் உன் கண்ணீர்கள் யாவையும் நான் துடைப்பேன். இந்த உலகில் நீ அனுபவிக்கும் எல்லா வேதனைகளிலிருந்தும் உன்னை விடுவிப்பேன். என் குமாரனாகிய இயேசுவைப்போலவே உன்னையும் நேசிக்கிறேன். நான் உன் தகப்பன். இயேசுவுக்குள் என் அன்பு உனக்கு வெளிப்பட்டது. அவர் என் மகிமையின் பிரகாசமாய் இருக்கிறார். நான் உன் சார்பில் இருக்கிறேன்; உனக்கு விரோதமாக அல்ல என்பதை தெரியப்படுத்தவே அவர் வந்தார். நான் உன் பாவங்களை எண்ணவில்லை. நானும் நீயும் ஒப்புரவாகும்படி இயேசு மரித்தார். என்னுடைய முழுமையான அன்பைத் தெரிவிக்கும்படியாக அவருடைய மரணம் நிகழ்ந்தது. உன் அன்பைப் பெறுவதற்காக நான் நேசிக்கிற அனைத்தையும் விட்டுவிட்டேன். என் மகனாகிய இயேசுவின் ஈவுகளையும் பெற்றுக் கொள்வாயானால் என்னையும் பெற்றுக் கொள்வாய். திரும்பவும் என்னுடைய அன்பிலிருந்து உன்னை எதுவும் பிரிக்காது. என் வீட்டிற்கு வா. நான் உனக்காகப் பரலோகத்தில் பெரிய சந்தோஷங்களை வைத்திருக்கிறேன். நான் நேற்றும், இன்றும், எப்போதும் உன் தந்தையாக இருக்கிறேன். நீ என் பிள்ளையாக எப்போதும் இருப்பாயா? நான் உனக்காகக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு
அன்பான உன் தந்தை
எல்லாம் வல்ல இறைவன்.

## கர்த்தர் உங்கள் பிதா! நீங்கள் அவரது

# அன்புக்குரிய பிள்ளைகள்!

**கர்த்தரின் அற்புதமான குடும்பத்துக்கு உங்களை வரவேற்கிறோம்!!**

# நோக்கம் – அன்பு

தேவாதி தேவன் என்னை நேசித்து, என்னை உருவாக்கினார். அவர் என்மேல் வைத்த அன்பு முற்றிலும் வித்தியாசமானது. முழுமையயானது. ஏனெனில் நான் யார்? என் தன்மை எத்தகையது? நான் எத்தனை மோசமானவன் என்று தெரிந்தும் என்னை நேசிக்கிறார். நம்மைப் பெற்றோர், நம்மைச் சுற்றியுள்ளோர், அனைவரும் எதையோ என்னிடம் எதிர்பார்த்து அன்பைப் பொழிகின்றனர். நீ இதைச் செய்தால், நான் இதை உனக்கு செய்வேன் என்ற நிபந்தனையோடு கூடிய அன்பை நானும் மற்றவர்களிடம் செலுத்துகிறேன். நானும் அவ்வாறே பெற்றுக்கொள்கிறேன்.

> ‘‘நான் யார்? என் தன்மை எத்தகையது? நான் எத்தனை மோசமானவன் என்று தெரிந்தும் என்னை நேசிக்கிறார்.’’

தேவனுடைய உன்னதமான, ஒப்பில்லாத அன்பைப்பற்றி 1 யோவான் 4:16 இவ்வாறு கூறுகிறது. “**தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.**”

மேற்கண்ட வசனத்தில் தேவனிடத்தில் அன்பு இருக்கிறது என்று கூறப்படவில்லை. தேவன்தான் அன்பு. தேவன் ‘அன்பு’ ஆக இருக்கிறார். இந்த உலகத்தில் உண்மையான அன்பை, நேசத்தை இறைவனால் மட்டுமே கொடுத்து மனிதனை திருப்திப்படுத்த முடியும் என்ற உண்மை விளங்குகிறதல்லவா?

1 யோவான் 4:8ம் இதே கருத்தையே வலியுறுத்துவதைக் காணலாம். நாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் நன்மைகள் இவையனைத்தும் அவரது மகா பெரிய அன்பினிமித்தமாக மட்டுமே. எந்த உறவும்

நட்பும் இல்லாத ஒரு மனிதன் எப்படி அன்பைப் பெறமுடியும் அல்லது காட்ட முடியும்? சில கணவன்மார்கள் அல்லது மனைவிகள் திருமணத்திற்கு முன்பு எனக்குக் கோபமே வராது, நான் ‘டென்ஷன்’ ஆனதில்லை என்று கூறுகின்றனர். நமக்குப் பாதகமான, விருப்பமில்லாதச் சூழலுக்கு நாம் தள்ளப்படும்போதுதான், நம்முடைய அன்பு எத்தகையது? நாம் எத்தனை நல்லவர்கள்?! என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. சாதகமான சூழலில் அன்பு செலுத்துவதற்கு எந்தப் பிரயாசமும் தேவையில்லை. அது இயல்பாக நம்மிலிருந்து புறப்பட்டுவரும்.

> “தேவன் அன்பாக இருப்பதால்தான் நாம் எத்தனை முறை அன்பில் தோல்வி அடைந்தாலும் எப்போதும் அவரிடத்தில் உதவிக்காக நிற்கிறோம். அவரும் நமக்கு உதவி செய்கிறார்.”

தேவன் அன்பாக இருப்பதால்தான் நாம் எத்தனைமுறை அன்பில் தோல்வி அடைந்தாலும் எப்போதும் அவரிடத்தில் உதவிக்காக நிற்கிறோம். அவரும் நமக்கு உதவி செய்கிறார். ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கும்போது, தமது அன்பை காண்பிக்க தனக்கு ஒரு குடும்பம், பிள்ளைகள் வேண்டும் என்ற நோக்கிலே படைத்தார். “தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்து, தம்முடைய மிகுந்த அன்பினாலே” (எபேசியர் 2:4) மகாபெரிய, உன்னதமான, ஒப்பில்லாத, தீவிரமான அன்பை நம்மிடம் தேவன் காட்டுகிறார். காதல்வயப்பட்ட நாட்களில் ஒரு காதலனும், காதலியும் ஒருவரையொருவர் எப்போதும் நினைத்துக்கொண்டே இருந்து எப்படியெல்லாம் அன்பு செலுத்தவேண்டும் என்று யோசித்துக்கொண்டே இருப்பதைப்போன்ற ஒரு அன்பைத் தேவன் நம்மிடம் கொண்டுள்ளார்.

இப்படிப்பட்ட ஒப்பில்லாத அன்பு எப்படி, ஏன், எதற்காக அவருக்கு உண்டானது என்ற கேள்வி நமக்கு உண்டாகலாம். ஆதியாகமம் 1:1 இந்தப் பிரபஞ்சம் உண்டான கதையை ஆரம்பிக்கிறது. ஆனால் இந்த வசனத்திற்கு முன்பாக யோவான் 1:1ஐ போட்டு, அதன் பின் எபேசியர் 1:4,5ஐப் போட்டு, அதன்பின்பு ஆதியாகமம் 1:1ஐ வாசித்தால்தான் அதன் பொருள் புரிந்துகொள்ள எளிதாக இருக்கும். அவ்வாறு போட்டு வாசித்துப் பார்க்கலாமா?

“ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது” (யோவான் 1:1); தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகவும், குற்றமில்லாதவர்களுமாய் இருப்பதற்கு அவர் உலகத்தோற்றத்திற்குமுன்னே கிறிஸ்துவுக்குள்

நம்மைத் தெரிந்து கொண்டபடியே (எபேசியர் 1:4,5); ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1).

நான் என்னுடைய சரீரத்திற்குக் குறிப்பிட்ட பெயர் வைத்து அழைக்கப்படுவதால் அந்த ‘நான்’ உண்மையில் நானல்ல. என்னுடைய ஆவியும், ஆத்துமாவும் குடியிருக்க பயன்படுத்தும் வீட்டுக்குப் பெயர்தான் என்னுடைய பெயர். நான் என் நித்திய வீட்டிற்குச் செல்லும்போது, எனது சரீரமாகிய வீட்டை இந்தப் பூமியிலே விட்டுச் சென்று விடுவேன்.

முதலாவது, வார்த்தையாகிய தேவன் இருந்தார். அதன்பின் இன்னின்ன காலத்தில் இன்னின்ன இடத்தில் வாழப்போகிற நம்மைத் தெரிந்து கொண்டார். அதன்பின்புதான் நாம் குடியிருக்க இந்தப் பூமியை உண்டாக்கினார். இந்த வரிசையை நாம் புரிந்து கொண்டால், தேவன் நம்மேல் வைத்த அன்பை ஓரளவு புரிந்துகொள்ள இயலும்.

உங்களையும் என்னையும் தெரிந்து கொண்டு உருவாக்கியதில் அவருக்கு மகிழ்ச்சி உண்டானது. இதை எளிதாக விளங்கிக்கொள்ள வேண்டுமெனில் நமது குழந்தை இந்தப் பூமியில் முதன்முதலாக பிறந்தபோது அதை நமது கைகளில் ஏந்தி, இது என் பிள்ளை என்ற உணர்வு மேலிட அதனை மகிழ்ச்சி பொங்க பார்க்கிற அந்த அனுபவத்தை ஒப்பிடலாம். அதைவிட ஆயிரமடங்கு மகிழ்ச்சியோடு, பெருமிதத்தோடு, நம்மை தேவன் மதிக்கிறார்.

**லூக்கா 15ஆம் அதிகாரத்தில் உள்ள உவமான கதையில் மூத்த சகோதரர்களாகிய பரிசேயர்களைப் பார்த்து, வீட்டில் உட்கார்ந்து அடாவடித்தனம் பண்ணாதீர்கள், பிள்ளைகளாக வாழுங்கள் என்று சொல்வதற்காக எழுதப்பட்டது.ஆனால் இன்னும் நமது சபைகளில், மூத்த சகோதரர்களாகிய பரிசேயர்கள், இளைய சகோதரர்களை குறைசொல்கிறவர்களாய் இருப்பது வேதனையான காரியம்.**

ஆனால் இத்தனை முக்கியத்துவம் பெற்ற நாம் பிள்ளைகளாக வாழாமல் வேலைக்காரராகவே வாழ்கிறோம். லூக்கா 15ஆம் அதிகாரத்தில் உள்ள உவமான கதையில் மூத்த சகோதரர்களாகிய பரிசேயர்களைப் பார்த்து, வீட்டில் உட்கார்ந்து அடாவடித்தனம் பண்ணாதீர்கள், பிள்ளைகளாக வாழுங்கள் என்று சொல்வதற்காக எழுதப்பட்டது. ஆனால் இன்னும் நமது சபைகளில், மூத்த சகோதரர்களாகிய பரிசேயர்கள், இளைய சகோதரர்களைக் குறைசொல்கிறவர்களாய் இருப்பது வேதனையான காரியம்.

இயேசு உன்னை நேசிக்கிறார் என்று அடிக்கடி சொல்வதாலும், உன்னை ஆசீர்வதிக்கிறார் என்று சொல்வதால் அவர்மீதுள்ள அன்பு குறைவினாலும் நாம் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

நமது மாநில புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான குற்றாலத்திலே வாழ்பவர்கள், குற்றாலத்தில் குளிப்பதையோ அல்லது அந்த இதமான சூழலையோ ரசிக்க முடியாத சூழலில் இருப்பர். ஆனால், புதிதாக குற்றாலத்திற்குச் சுற்றுலா செல்வோர் ஒரு புதுவிதமான மகிழ்ச்சி, உற்சாகம், புத்துணர்வு கொண்டு மிகவும்

> “தேவனுடைய இரக்கத்தை, அன்பை முதன்முதலில் ருசிக்கும்போது ஏற்பட்ட அந்த பரவசஉணர்வு தற்போது மங்கி, குறைந்து ‘0’ நிலைக்கு வந்துவிட்டபடியால், நமக்கு எல்லாமே சாதாரணமாகத் தெரிகின்றன.”

ரசித்து நேசித்து புகழ்வார்கள். இதுபோன்ற மனநிலையே, நம்மிடமும் காணப்படுகிறது. தேவனுடைய இரக்கத்தை, அன்பை முதன்முதலில் ருசிக்கும்போது ஏற்பட்ட அந்தப் பரவச உணர்வு தற்போது மங்கி, குறைந்து ‘0’ நிலைக்கு வந்துவிட்டபடியால், நமக்கு எல்லாமே சாதாரணமாகத் தெரிகின்றன.

## கிறிஸ்துவை நேசித்த அளவு தேவன் உங்களை நேசிக்கிறார்

கிறிஸ்தவனாயிருக்கிற ஒருவனிடம் நீங்கள் யோவான் 3:16ஐ சொல் என்று கேட்டால், அவன் எந்திரகதியில் உடனே, “தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” என்று அதன் அர்த்தத்தை, மகாமேன்மையை உணராமலேயே சொல்லிவிடுவான்.

“நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசய மானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங் களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப் பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவா யிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது (சங்கீதம் 139:13-16) என்று தாவீது பிரமிப்பாய் எழுதினதைப் பாருங்கள்.

காலூன்றி உயிரோடு நிற்கிற நானே தேவனுடைய படைப்பின் உச்சகட்ட அற்புதம். ஏனெனில் நம்முடைய கண்களில் 130 மில்லியன் ஒளி வில்லைகள் கருப்பு வெள்ளை நிறத்தைப் பார்ப்பதற்கும், 7 மில்லியன் ஒளி வில்லைகள் மற்ற நிறங்களைத் துல்லியமாகப் பார்ப்பதற்கும் உள்ளன. இதுமட்டுமல்லாமல், நமது கண்களுக்கும், மூளைக்கும் இடையில், 3 லட்சம் ஒளி உணர் அலை செலுத்திகள் உள்ளன. நமது கண்களால் பார்க்கக்கூடிய அதே படத்தை நகல் எடுக்க 2,50,000 தொலைக்காட்சி பெட்டிகளும், அதை ஒளிபரப்பு செய்ய ஒளி வாங்கிகளும் தேவை. இத்தனை அற்புதமான கண்கள் நம் ஆயுள் நாட்களில் வளராமல் அப்படியே இருக்கின்ற ஒரு உறுப்பு. அதே போன்றே நமது உள்ளங்கை ரேகைகளும் தனித்தன்மை வாய்ந்தவை. ஒன்றைப்போல மற்றொன்று இருக்கவே முடியாது.

> “காலூன்றி உயிரோடு நிற்கிற நானே தேவனுடைய படைப்பின் உச்சகட்ட அற்புதம்.”





நமது பெருவிரலின் மேற்பகுதியில் 70லிருந்து 100 வரிகளுக்குள் இருக்கலாம். இந்த நூறுவரிகளில் எத்தனை விதமான மாற்றங்கள் செய்தால்கூட இத்தனை பில்லியன் மக்கள்தொகையிலும் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட ரேகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது இறைவனின் கைவண்ணம். ஆராய்ந்து முடியாது. இந்த ரேகைகள் தாயின் வயிற்றில் 8 வாரம் முதல் 12 வாரங்களுக்குள்ளாக உருவாகிறது. இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் அவருடைய பார்வையில் மிகவும் விசேஷித்தவர்கள். அவர் ஒருவனுக்கும் இணையாக ஒரு நகலை உருவாக்கவே இல்லை. கைளில் பிடிப்பதற்கு உதவியாக உள்ள ஒரு சிறு விரலின் ரேகையை வரைவதற்கே இத்தனைச் சிரத்தை எடுப்பாராயின் நம் ஒவ்வொருவரையும், சும்மா படைத்து சும்மா விட்டுவிடுவாரா? இல்லை. நம் ஒவ்வொருவரையும் ஒரு உயர்ந்த நோக்கத்துக்காகப் படைத்துள்ளார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால் இன்றைய நாட்களில் மக்கள், மூக்கைச் சரி செய்கிறேன், காதைச் சரி செய்கிறேன் என்று பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்கின்றனர். இவர்கள் படைத்தவனையே கேள்வி கேட்பவர்கள்?!

> தேவன் உருவாக்கின கவிதை என்றுகூட நம்மை அழைத்துக்கொள்ளலாம்.

“ஏனெனில் நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்போது அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்” (எபேசியர் 2:10) என்று நம்மைப் படைத்ததின் பொது நோக்கத்தைக் கூறுகிறார்.

‘சிருஷ்டிப்பு’ என்ற வார்த்தை கிரேக்க மொழியில் ‘Poiema’ என்ற வார்த்தையிலிருந்து வந்தது. தேவன் உருவாக்கின கவிதை என்றுகூட நம்மை அழைத்துக்கொள்ளலாம். பொதுவாக எதைப்பற்றி கவிதை எழுதுகிறோமோ அதன்மீது நமக்கு ஒரு இணைப்பு, பிணைப்பு, மரியாதை, நேசம் இருந்தால்தான் அவற்றை எழுதுவோம். ஆக தேவன் நம்மைப் பார்த்து, ரசித்து, நேர்த்தியாய் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார் என்பதைப் புரிந்து கொண்டால் நமக்குத் தாழ்வு மனப்பான்மை வரவே வராது. நம்மைப் போன்ற திறமைசாலி, அழகானவர், அன்பானவர், நேர்த்தியானவர், தனித்தன்மையுடையவர் இதற்குமுன்பும் இல்லை, இதற்குப்பின் வரப்போவதும் இல்லை. உங்களோடு ஒப்பீடு செய்ய ஒருவரும் இல்லை. நம்மை நம்மோடு மட்டுமே ஒப்பீடு செய்ய முடியும்.

அப்படி, தனித்தன்மையோடு படைக்கப்பட்ட நம்மைப் பிதா எப்படி நேசிக்கிறார்? தமது ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்துவை எப்படி நேசிக்கிறாரோ அப்படியே நம்மையும் நேசிக்கிறார்.

> தேவன் நம்மை பார்த்து, ரசித்து, நேர்த்தியாய் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார் என்பதைப் புரிந்து கொண்டால் நமக்கு தாழ்வு மனப்பான்மை வரவே வராது. நம்மைப் போன்ற திறமைசாலி, அழகானவர், அன்பானவர், நேர்த்தியானவர், தனித்தன்மையுடையவர் இதற்குமுன்பும் இல்லை, இதற்குபின் வரப்போவதும் இல்லை. உங்களோடு ஒப்பீடு செய்ய ஒருவரும் இல்லை. நம்மை நம்மோடு மட்டுமே ஒப்பீடு செய்ய முடியும்.

**கிறிஸ்துவை நேசித்த அதே முறையில் தேவன் உங்களை நேசிக்கிறார்**

“ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கு என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்” (யோவான் 17:23).

> “தமது ஒரே பேரான குமாரனாகிய கிறிஸ்துவை எப்படி நேசிக்கிறாரோ அப்படியே நம்மையும் நேசிக்கிறார்.”

இந்தச் சத்தியத்தை நாம் சரியாகப் புரிந்துகொண்டால், நாம் எங்கும், எதற்கும் கலங்கவே மாட்டோம். நாம் எந்தவிதமான பிரச்சனைகள், கட்டுகள் ஊடே இருந்தாலும், இந்தச் சத்தியத்தை விசுவாசித்து அறிக்கையிடும்போது, நமக்கு வெற்றி, விடுதலை நிச்சயம்.

யோவான் 16:32இல் இயேசு தனக்கும் தன் சீஷர்களுக்கும் நடக்கும் காரியங்களைப்பற்றி கூறும்போது இவ்வாறு கூறுகிறார்; “இதோ, நீங்கள் சிதறுண்டு, அனைவரும் தன்தன் இடத்துக்குப் போய் என்னைத் தனியே விட்டுவிடும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திரேன். பிதா என்னுடனேகூட இருக்கிறார்.”

இந்த உலகத்தில் யாருடைய அன்பும், ஆதரவும் எப்போதும் யாருக்கும் நிரந்தரம் இல்லை. ஆனால் நம்மைப் படைத்து,




நேசிக்கிற, மாறாத தேவன் நமக்கு உண்டு. அவர் என்னைக் கைவிடவேமாட்டார் என்ற உறுதி நமக்கிருக்குமானால் நம்மைப் போன்ற பாக்கியசாலி ஒருவருமேயில்லை. இக்கட்டு காலங்களில் நமது நம்பிக்கை என்ற நங்கூரத்தைக் கிறிஸ்துவின்மீது வைப்போமானால், நாம் அழுது புலம்பத் தேவையில்லை. ஆகவேதான் எபிரெயர் 13:5(ஆ) “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை” என்று

> “இந்த உலகத்தில் யாருடைய அன்பும், ஆதரவும் எப்போதும் யாருக்கும் நிரந்தரம் இல்லை. ஆனால் நம்மை படைத்து, நேசிக்கிற, மாறாத தேவன் நமக்கு உண்டு. அவர் என்னைக் கைவிடவே மாட்டார் என்ற உறுதி நமக்கிருக்குமானால் நம்மைப் போன்ற பாக்கியசாலி ஒருவருமேயில்லை.”

சொல்லியிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. மத்தேயு 28:20இல் இயேசு ‘‘இதோ! உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்’’ என்று வாக்கு கொடுக்கிறார்.

இயேசுகிறிஸ்து பூமியில் இருக்கும்போது எத்தனையோ எதிர்ப்புகள், போராட்டங்கள், நிந்தனைகள் வந்தபோதும் கலங்காமல் முன்னேறிச் சென்றதற்கான பலம் பிதாவோடு கொண்டிருந்த இடையறாத உறவு மட்டுமே.

இயேசுகிறிஸ்து பூமியில் வருவதற்கு முன்னும், வந்த பின்பும் அவரைக் குறித்து அநேக தீர்க்கதரிசனங்கள் எழுதப்பட்டு இருந்தன. அவருடைய பிறப்பு அவருடைய வளர்ப்பு, அவரது ஊழியம், அவரது நடத்தை அவருடைய பாடுகள் மற்றும் சிலுவை மரணம் நிகழும் முன் இருந்த 24 மணிநேரத்தில் நடக்கப்போகிற நூற்றுக்கு மேலான தீர்க்கதரிசனங்கள் எழுதப்பட்டு இருந்தன. தீர்க்கதரிசனம் நிறைவேறும்போது இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்ட இந்தக் காரியம் நிறைவேறும்படி இப்படி நடந்தது’’ என்று முடிக்கப்பட்டு இருக்கும். இதற்கு ஆதாரமாகக் கீழ்க்கண்ட வசனங்கள் உள்ளன. மத்தேயு 26:54,56, மாற்கு 14:49, 15:28, லூக்கா 4:21,24:44, யோவான் 13:18, 17:12, 19:24.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு இருந்தன. 476 வருடங்களுக்கு முன் வாழ்ந்த தானியேல் தீர்க்கதரிசி, இயேசுவைக் குறித்த ஒரு தீர்க்கதரிசனம் சொல்கிறார். இதைப்போலவே சகரியா தீர்க்கதரிசி ஒரு ஓய்வு நாளில், ஒரு கழுதை குட்டியின்மேல் இயேசு, யூதரின் ராஜாவாக பவனி வருவார் என்று சொன்னார்.

இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு 530 வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஏசாயா தீர்க்கதரிசி இயேசுகிறிஸ்து சிலுவையில் எப்படி மரிப்பார் என்று எழுதியிருக்கிறார். ஆக அவருடைய வாழ்க்கை முழுவதும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, தீர்மானிக்கப்பட்டு நிறைவேறியது. வெளிப்படுத்தல் 13:8இல் ‘‘உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி’’ என்று எழுதப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்துவைப்போலவே நம்மையும் நேசிக்கும் பிதா நமது வாழ்க்கையும் இப்படி இன்னின்ன பிரகாரம் நடக்கவேண்டும்




என்று முன்கூட்டியே திட்டமிட்டு, அனுப்பி இருக்கிறார். ஆனால் கலாத்தியர் 2:10ன்படி நற்கிரியைகளைச் செய்கிற வழியில் நாம் நடக்கிறோமா? என்பதே காரியம். இதில் நாம் புரிந்துகொள்ள வேண்டிய கருத்து என்னவெனில், தேவனுடைய சித்தம் ஒன்று. நமது சுயசித்தம் ஒன்று, இரண்டும் நம்முன்னே இருக்கிறது. நாம் இவற்றில் எதைத் தெரிந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நமது வாழ்க்கைப் பாதை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் தேவன் ஒருபோதும் தனது வழியில்தான் நாம் நடக்க வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. ஆனால் விரும்புகிறார். பகலின் மத்தியான வேளையில் ஒரு சமாரிய ஸ்திரீக்காக

> “தேவனுடைய சித்தம் ஒன்று. நமது சுயசித்தம் ஒன்று இரண்டும் நம்முன்னே இருக்கிறது. நாம் இவற்றில் எதை தெரிந்து கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே. நமது வாழ்க்கைப் பாதை நிர்ணயிக்கப்படுகிறது ஆனால் தேவன் ஒருபோதும் தனது வழியில்தான் நாம் நடக்க வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை. ஆனால் விரும்புகிறார்.”

அவளுடைய இரட்சிப்புக்காக இயேசு தனது நேரத்தைச் செலவிட்டதைப்போல, ஒவ்வொரு சிறியவரும், பெரியவரும், தரித்திரரும், ஐசுவரியவானும், அவருடைய பார்வையில் மிகவும் விலையேறப் பெற்றவர்கள்தான்.

யூதா 1:1 இவ்வாறு கூறுகிறது: “பிதாவாகிய தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்கள்” என்று நம்மைக் குறித்துக் கூறுகிறது. கிறிஸ்தவர்களிடம் நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள் என்ற கேள்வியைக் கேட்டால் கடந்த காலத்தில் ஒரு தேதியைச் சொல்வார்கள். இப்போது இந்த ரட்சிப்பின் அனுபவத்தில் நிலைத்திருக்கிறீர்களா என்று கேட்டால் அநேகநேரம் பதிலிருக்காது.

“தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு...” (ரோமர் 1:7).

“விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகிய, சகல பரிசுத்தவான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், அழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாயும், தேவனுடைய சகல பரிபூரணத்தால் நிறையப்படவும் அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்” (எபேசியர் 3:17-19) என்று கூறுகிறது.

அவருடைய அன்பிலே வேரூன்றியவர் களாய் நாம் காணப்படும்போது, அவருடைய

> கிறிஸ்தவர்களிடம் நீங்கள் எப்போது இரட்சிக்கப்பட்டீர்கள் என்று கேள்வியைக் கேட்டால் கடந்த காலத்தில் ஒரு தேதியைச் சொல்வர்கள். இப்போது இந்த ரட்சிப்பின் அனுபவத்தில் நிலைத்திருக்கிறீர்களா என்று கேட்டால் அநேகநேரம் பதிலிருக்காது.

கனிகள் தானாக வெளிப்படும். நாம் எதைக் குறித்தாவது பயப்படும்போது, கலங்கும்போது நமக்குப் போதுமான அளவு விசுவாசம் இல்லாமலிருப்பதால்தான் இந்தப் பயம் வருகிறது. ஆகவே நாம் விசுவாசத்தில் வளர வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் வேதம் இதைக் குறித்து என்ன சொல்கிறது?

1 யோவான் 4:18, இதைக்குறித்து, ”அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது. பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.” என்று கூறுகிறது.

நமது குழந்தைகள் நம்மிடம் அப்பா நானும் உங்களை நேசிக்கிறேன். நீங்கள் மிகவும் நல்லவர். என்னை ஆசீர்வதியுங்கள் என்று கூறி அதன்பின், அப்பா இன்றைக்கு அரிசி வாங்கி வையுங்கள், கரண்ட்பில் கட்டிவிடுங்கள், வண்டிக்கு பெட்ரோல் போட்டு வாருங்கள் என்றெல்லாம் நம்மிடம் கோரிக்கை வைப்பதில்லை. ஆனால் மாறாக எனக்குப் பொம்மை வாங்கித் தாருங்கள் என்று அதற்குரியவைகளை மட்டுமே கேட்கிறது. அதேபோன்றே நமது தகப்பன் நமக்குரிய எல்லாவற்றையும் தரவல்லவர் என்ற அடிப்படை அன்பைப் புரிந்துகொள்ள வேண்டும்.

பிதா உலகத் தோற்றத்திற்கு முன்னே என்னைத் தெரிந்துகொண்டு, உருவாக்கி, நான் நடக்க வேண்டிய பாதையைத்

திட்டமிட்டு, என்னைப் பூமியில் வைத்து, என்மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாக தனது சொந்தக் குமாரனை எனக்காகக் கொடுத்து, அவரை நேசிப்பதுபோல, என்னையும் நேசிக்கிறார்.

அதேபோன்று, எனது மூத்த சகோதரனாகிய இயேசுகிறிஸ்துவும், பிதாவை அவர் எவ்வளவு நேசிக்கிறாரோ அதே அளவு என்னையும் நேசிக்கிறார். ஆக இப்படிப்பட்ட ஒரு அழகான குடும்பத்தில் என்னை இணைந்துவிட்ட தேவன் எவ்வளவு நல்லவர்?!

## தேவன் தன்னை நேசித்த அதே வகையில் இயேசு உங்களை நேசிக்கிறார்

யோவான் 15:9 கூறுகிறது. ‘‘பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள்.’’ இயேசு மேலும் ‘‘நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும் உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். இன்னமும் தெரியப்படுத்துவேன்’’ (யோவான் 17:26) என்றார்.

1 யோவான் 3:1 கூறுகிறது: ‘‘நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.’’

மத்தேயு 6:25-34 ஆகிய வசனங்களில் இயேசு சொல்கிற இரண்டு காரியங்களைப் பார்ப்போம். ‘‘ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைப்பதும் இல்லை. அறுப்பதும் இல்லை. ஆனாலும் உங்கள் பரமபிதா அவைகளைப் பராமரிக்கிறார். காட்டுப்புஷ்பங்களையும் தேவன் உடுத்துவிக்கிறார். இவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடை நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.’’

நமது உடலிலுள்ள ஒரு சிறு உறுப்பாகிய கட்டை விரலில் மிகவும் சிரத்தையெடுத்து ரேகைகளை, வரிகளை செய்கிறவர் நம்மை கைவிட்டுவிடுவாரா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். மத்தேயு 7:9-11 வசனங்களில், ‘‘உங்களில் எவனாகிலும், ரொட்டியைக் கேட்கும் தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்கும் தன் மகனுக்கு பாம்பைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய (நிபந்தனையின் பேரில் அன்பு செலுத்துகிற குறைந்த அன்புடைய) நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்கும்போது, பரலோகத்திலிருந்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?’’ என்று நம்மை இயேசு கேட்கிறார்.

## தேவனது அன்பிலிருந்து உங்களை எதுவும் பிரிக்க இயலாது

தேவன் நம்மேல் வைத்த அன்பையும், குமாரன் நம்மேல் வைக்கும் அன்பையும் இந்த உலகில் உள்ள எவராலும் எந்தச் சக்தியாலும் தடுக்கவோ, குறைக்கவோ முடியவே முடியாது. இதை ரோமர் 8:36-39 வசனங்கள் இவ்வாறு குறிப்பிடுகிறது:

“உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, நம்மை தேவனுடைய அன்பை விட்டு பிரிக்காது. மரணம், ஜீவன், தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமை, நிகழ்காரியங்கள், வருங்காரியங்கள், உயர்வு, தாழ்வு, வேறெந்த சிருஷ்டியோ கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்” என்று வேதம் கூறுகிறது. இதை ஆணித்தரமாகச் சொல்கிற தேவன், வாக்குமாறாத உண்மையுள்ள தேவன் என்பதை உபாகமம் 7:9 இவ்வாறு உறுதி செய்கிறது: “ஆகையால் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், நம்மில் அன்புகூர்ந்து தமது கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறைமட்டும் உடன்படிக்கையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் என்றும்...” புலம்பல் 3:22,23 இதையே வலியுறுத்துகிறது: “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். உமது உண்மை பெரிதாயிருக்கிறது.”

ஆக ரோமர் நிருபத்தில், “நாம் பெலனற்றவர்களாய் இருக்கும்போதே அக்கிரமக்காரராகிய நமக்காக மரித்தார்” (ரோமர் 5:6) என்றும், “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார்” (ரோமர் 5:8) என்றும் “நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் நமக்காக மரித்தார்” (ரோமர் 5:10) என்றும் இந்த உண்மைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன. நாம் எப்பேர்ப்பட்ட கொடிய பாவங்களைச் செய்திருந்தாலும் கிறிஸ்து நமக்காக மரித்து, நம்மைப் பிதாவின் குடும்பத்தில் சேர்த்து, தமது அன்பை விளங்கப்பண்ணினார்.

இத்தனைப் பெரிய சிலாக்கியங்களையும் பேற்றினையும் பெற்ற நாம் அவருடைய பேரன்பு, தியாகம் இவைகளின் நீளம், அகலம், ஆழம், உயரம் இவைகளை அறிந்து கொள்ள வல்லவர்களாக இருந்தால் மிகவும் நல்லது; நமது பிள்ளைகளுக்கான அன்பையும் அக்கறையையும் கரிசனையும் நமது பிள்ளைகள் உணர்ந்து கொள்ளுமா?! உணர்ந்துகொள்ளும். ஆனால், அவர்கள் பிள்ளைகள் அவர்களது அன்பை நிராகரிக்கும்போதுதான், நமது அன்பைப் புரிந்துகொள்ளும்.

ஒரு குழந்தை பிறக்குமுன்பாக அதற்குரிய எல்லாவற்றையும்பார்த்துப் பார்த்து மிக உயர்ந்தவைகளை வாங்குகிறோம். ஆனால் அது அந்தக் குழந்தைக்குத் தெரியாது. ஒவ்வொரு வயதிலும், ஒவ்வொரு காரியங்களையும் நாம் பார்த்துப் பார்த்து செய்தாலும், அவைகளைக் குழந்தைகள் புரிந்து கொள்வதில்லை. அந்தக் குழந்தையைக் கையைப் பிடித்து சாலையைக் கடக்கும்போதுகூட நாம்தான் கவனமாக கூட்டி வருவோமே ஒழிய, தந்தைகூட வருகிறார், அவர்தான் தன்னைப் பத்திரமாகக் கூட்டி வருகிறார் என்று அதற்குத் தெரியாது. அதே குழந்தை வாலிப வயதை அடையும்போது தனது தந்தைக்கு ஒன்றுமே தெரியாது. அவர் பழமைவாதி என்று நினைத்துக் கொள்ளும்.

அந்தக் குழந்தை, உங்களை அதன் தாய், தந்தை என்று சொன்னதை நம்பித்தான் உங்களைத் தந்தையாக ஏற்றுக்கொண்டு, உங்களது அக்கறையை ஏற்றுக் கொள்கிறது. அதேபோல ‘பிதாவை’ தந்தை என்று வேதம் சுட்டிக்காட்டியதால், நாம் அதனை

நம்பி ஏற்றுக் கொள்கிறோம். நாமும் பலநேரங்களில் குழந்தைகளைப்போல நினைக்கிறோம். நடந்து கொள்கிறோம்.

சூரியன் காலையில் கிழக்கில் தோன்றி மாலையில் மேற்கே மறையும் என்று சொல்கிறேன். ஆனால் உண்மை அதுவல்ல. சூரியன் ஒரே இடத்தில் நிற்கிறது. பூமி மட்டுமே சூரியனை சுற்றுகிறது என்ற உண்மையை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். நான் நிற்கிற பூமி சுற்றவில்லை என்று நான் சொல்வேனாகில் நான் முட்டாள் என்று எண்ணப்படுவேன். ஆனால் அது தவறு என்பதை யாரும் என்னிடம் நிரூபிக்கவும் முடியாது. நம்மில் பலரும் இவ்வாறே முட்டாள்தனமாக நம்பிக்கையை உடையவர்களாய் இருக்கிறோம்.

நம்மை பாவத்திலிருந்து சாபத்திலிருந்து தூக்கியெடுத்து நமக்காக இரத்தம் சிந்தி, தேவனோடு ஒப்புரவாக்கி, அவருடைய அன்பு குடும்பத்தில் நம்மை பிள்ளைகளாக்கி சேர்த்துக் கொண்டார். கலப்படமில்லாதது அவரது அன்பு ஒன்றே என்ற அடிப்படை உண்மையை நாம் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். ஆனால் இது நம்மால் முடியாது. தேவனால் நமக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் உதவியால் மட்டுமே இது சாத்தியம்.

அதனால் ரோமர் 5:5 இவ்வாறு கூறுகிறது: “நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.”

ஆகவே எபேசு சபைக்கு எழுதும்போது பரிசுத்த ஆவியானவர் எப்போதும் ஊற்றப்படவேண்டும் என்ற கோரிக்கை

வைக்கப்படுகிறது. ‘‘நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்கு கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும், உங்கள் இருதயங் களைத் தேற்றி எல்லா நல்வசனத்தினத்திலும், நற்கிரியையிலும் உங்களைத் ஸ்திரப்படுத்து வாராக’’ என்று 2 தெசலோனிக்கேயர் 2:16,17 குறிப்பிடுவதுபோல ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் தனது அன்பை ஊற்றி மேற்கண்ட நித்திய ஆறுதல், நல்நம்பிக்கை, நற்கிரியை போன்றவற்றைத் தனது நல்வசனத்தினால் கொடுத்து நம்மை ஸ்திரப்படுத்துவார்.

ஆகவே எப்போதும் நமது இதய வாஞ்சை எபேசியர் 3:19ன்படி இருக்குமானால் அது எத்தனை அருமையான பலனைத் தரும்...!: ‘‘அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டு மென்று வேண்டிக் கொள்கிறேன்.’’

யோவான் 17:23இல் வாழ்வை மாற்றும் சத்தியம் இருக்கிறது. ஆகவே கற்பனைக்கெட்டாத அந்த அன்பை, தியானித்து, தேவன் நமக்கென்று நியமித்திருக்கிற ஓட்டத்தில் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**ஜெபம்:**

**இது இன்றைக்கு உங்களுக்கான ஜெபமாக இருக்கலாம் (எபேசியர் 3:19).**

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும் அவர் தமது மகிமையின் ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

நோக்கம்

# கிறிஸ்துவைப்போல மாறுதல்

நம்மைப் பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டு, நம்மைத் தமது குடும்பத்தில் அங்கத்தினராகச் சேர்த்த தேவனுக்கு நாம் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப்போல இந்த உலகத்தில் வாழ வேண்டும் என்ற நோக்கம் இருந்தது. தாயைப்போல பிள்ளை, நூலைப்போல சேலை என்ற பழமொழியைப் போன்று, தந்தைக்கேற்ற பிள்ளையாக நாம் வாழ வேண்டும். நாம் ஒருவரைப்போல மாற வேண்டும் எனில் அவரைப் பலநாள் கவனிக்க வேண்டும். அவரைப்போல பேசப் பழக வேண்டும். பின்பு அவர்போல நடிக்கலாம். ஆனால் நான் நானாக இருக்க நடிக்க வேண்டியதில்லை. அதேபோன்று, இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்று நான் நானாக வாழவே அழைக்கப்பட்டிருக்கிறேன். உங்களுக்குள் யாருடைய மரபணுக்கள் உள்ளதோ அவரைப்போல நீங்கள் இருக்கிறீர்கள் என்பது மறுக்கமுடியாத அறிவியல் உண்மை.




**சில பிள்ளைகள் எந்த அறிவியல் பரிசோதனைகளும் செய்யாமலே இந்த தகப்பனுடைய பிள்ளைகள் என்பதை அவர்களது தோற்றம், நடை, உடை, பாவனைகளை வைத்தே எளிதாக கூறிவிடலாம். அதேபோலவே தேவனுடைய இரத்தினால் கழுவப்பட்டு அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக மாறிய நம்மிடத்திலும் வெளிப்படவேண்டியது அவசியம்.**

**"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (ரோமர் 8:28-30).**

இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் தவறாகப் போதிக்கப்படுவதும் தவறாகப் புரிந்துகெள்ளப்படுவதும் தவறாக உபயோகப்படுத்துவதுமான வசனங்களில் இதுவும் ஒன்று. இது ஏதோ எல்லாமே எல்லாருக்கும் நன்மையாக நடக்கும் என்று பொதுவாக நினைப்பதும் போதிப்பதும் உண்டு.

உலகத்தில் தேவனுடைய பரிபூரணத் திட்டம் என்று ஒன்று உண்டு. நமது சுயதேர்வு என்று ஒன்று உண்டு. Sovergrity of God மற்றொன்று free will of man. தேவன் நமக்குத் தெரிந்தெடுத்துக்கொள்ளக்கூடிய உரிமையைக் கொடுத்து இருக்கிறார். அவரால் எங்கேயும் எப்போதும் எல்லாமே செய்ய முடியும். ஆனால் அவரால் செய்ய முடியாத ஒரு காரியம் ஒன்று உள்ளது.

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போகமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி...." (1 தீமோத்தேயு 2:4, 1 பேதுரு 3:9).**

ஆனால் இன்றைய நாட்களில் கடவுளே இல்லை என்று சொல்லி, நமது பாவங்களுக்கு இரத்தம் சிந்தி, பாவப்பரிகாரம் செய்த இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் நரகத்தில் விழுந்து மடிவோர் பல்லாயிரம் உண்டு. மனுக்குலம் இரட்சிக்கப்பட தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடு அலட்சியம் செய்யப்பட்டு தேவதிட்டம் நிறைவேறாமல் போவதைப் பார்க்கிறோம். தேவனை ஏற்றுக் கொண்டவர்களுக்குச் சகலமும் நன்மைக்குத்தான் நடக்கும் என்பது ஏமாற்று

> "கிறிஸ்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் நடப்பதைப்போலவே நன்மையும் தீமையும் ஏற்படத்தான் செய்யும். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவுடன் நமக்கு எந்த பிரச்சனையும் ஏற்படாது என்பது தவறு."

வேலை. அப்படி வேதம் நமக்கு வாக்கு பண்ணவேயில்லை. கிறிஸ்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் நடப்பதைப்போலவே நன்மையும் தீமையும் ஏற்படத்தான் செய்யும். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவுடன் நமக்கு எந்தப் பிரச்சனையும் ஏற்படாது என்பது தவறு.

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் நம்மை ஒரு பாதுகாப்பு வளையத்துக்குள் வைத்து நேராக மோட்சம் கொண்டு போய் விடுவார் என்பது ஒரு தவறான புரிந்து கொள்ளுதல். நீ கிறிஸ்தவனாக மாறியவுடனே வேதவார்த்தை, வாழ்க்கை மூலம் பிரச்சனைகள் அதிகமாகும் என்று வேதம் எச்சரிக்கிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கு வரும் தீமையை நன்மையாக எப்போது மாற்றுவார் என்று வேதம் கூறுகிறது?

இந்த ரோமர் 8:28வது வசனத்தின் ஆரம்பத்தில் அன்றியும் என்று ஆரம்பிப்பதால், முந்தைய வசனத்தில் உள்ள தொடர்ச்சியை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**"ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின் படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்."** இதைத் தொடர்ந்து ரோமர் 8:25, 26ஆம் வசனங்களையும் வாசிக்கலாம். **"நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிற தற்குப் பொறுமையோடே காத்திருப்போம். அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்வது இன்ன தென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியான வர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சு களோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்."**

நமக்கு என்ன தேவை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் வசனம், நமக்கு அது தெரியாது என்று கூறுகிறது. நமது பார்வையில் நடக்கக்கூடிய காரியங்களும், நம் பார்வைக்கு மறைவாக நடக்கக்கூடிய காரியங்களும் நமது வாழ்வில் உண்டு. நம்மைப் பற்றித் தவறாக நினைப்பவர்களும், நமக்குத் தீமை செய்ய வேண்டுமென்று இருக்கிறவர்களும் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றனர் என்பதை மறுக்க இயலாதுதானே?

ஆனால் அந்தக் காரியங்கள் நடக்கும்போது மட்டுமே நமக்குத் தெரியும். ஆக நமது கண்களுக்கு மறைவாக இருக்கிற ஆபத்துக்களும், விபத்துகளும், தீமைகளும் நமக்குத் தெரியாது. ஆனால் ஆவியானவருக்குத் தெரியும். ஆகையால் அவர் தேவ சிந்தையை அறிந்து நமக்காக நம்மோடுகூட வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு விண்ணப்பம்

> "நமது கண்களுக்கு மறைவாக இருக்கிற ஆபத்துக்களும், விபத்துகளும், தீமைகளும் நமக்குத் தெரியாது. ஆனால் ஆவியானவருக்குத் தெரியும். ஆகையால் அவர் தேவ சிந்தையை அறிந்து நமக்காக நம்மோடுகூட வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு விண்ணப்பம் பண்ணுவதால், சகலமும் நன்மைக்கு ஏதுவாக மாறுகிறது."

பண்ணுவதால், சகலமும் நன்மைக்கு ஏதுவாக மாறுகிறது. இந்த விண்ணப்பம் இல்லையென்றால் எதுவும் மாறாது. ஆகவே நாம் ஆவியில் ஜெபிப்பது மிகவும் அவசியம். அப்போது ரோமர் 8:29,30ம் நிறைவேறுகிறது.

தேவனுக்கு, நமது வாழ்வில் நடக்கக்கூடிய எல்லாக் காரியங்களையும் அறிந்துகொள்ளக்கூடிய முன்னறிவு இருக்கிறது. ஆனால் எல்லாக் காரியங்களையும், மிகவும், கவனத்தில் கொள்வதில்லை. நாம் நமது துணையோடு பேசிக்கொண்டு இருக்கும்போது, நமது குழந்தைகளின் குறும்புகளைக் கவனியாமல் விடுவதுபோல. ஆனால் நமது தேவனின் எண்ணங்களுக்கே வராத நிகழ்வு இருக்குமோ? இருக்கிறது: ‘‘தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியால் இப்படி வரப்பண்ணுவேன். இவைகளை நான் கற்பித்ததும் இல்லை. சொன்னதும் இல்லை. இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை’’ (எரேமியா 19:5, எரேமியா 32:35). எரேமியா 32:35 சொல்வதைப் பாருங்கள். ‘‘அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும், குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி, இன்னோருடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள். யூதவைப் பாவம் செய்யப் பண்ணுகிறதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை. அது என் மனதிலே தோன்றினதுமில்லை.’’

அவருடைய இருதயத்தில் இல்லாத காரியங்களையும், அவர் மனதிலே தோன்றாத பொல்லாத காரியங்களையும் நம்மால் செய்ய முடியும். ஆண்டவர் நமக்குக் கொடுத்த சுய விருப்பத்தை அவர் என்றைக்குமே நம்மிடத்திலிருந்து பறிக்கவேமாட்டார்.

“அவருடைய இருதயத்தில் இல்லாத காரியங்களையும், அவர் மனதிலே தோன்றாத பொல்லாத காரியங்களையும் நம்மால் செய்ய முடியும். ஆண்டவர் நமக்கு கொடுத்த சுய விருப்பத்தை அவர் என்றைக்குமே நம்மிடத்திலிருந்து பறிக்கவே மாட்டார்.”

அதற்கு உதாரணமாக, நான் எனது வீட்டை எனது மகனுக்குச் சட்டப்பூர்வமாக கொடுத்துவிட்டபிறகு சில ஆண்டுகள் கழித்து, அதே வீட்டில் பல காரியங்கள் எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்ல எனக்கு அதிகாரமுமில்லை. அப்படி அதிகாரம் செய்தாலும் அதை என் மகன் கேட்கமாட்டான். ஆதியாகமம் 1:26இல் தேவன் பூமி அனைத்தையும் குறையின்றி படைத்து, அதை மனிதன் ஆண்டு கொள்ளும்படி சொல்லியபிறகு அதில் அவர் தலையிடவில்லை. லூக்கா 4:6ல் சாத்தான் இயேசுவை சோதிக்கும்போது, ‘‘இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக்

கொடுக்கிறேன்'' என்கிறான்.

சாத்தானுக்கு இந்த அதிகாரம் எப்படி வந்தது? ஆதாமிடமிருந்து அந்த அதிகாரத்தைப் பறித்துக் கொண்டான். சாத்தான் பறித்துக் கொண்ட அதிகாரத்தை மீண்டும் மனிதனுக்கு மீட்டுத்தரவே இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்து தன்னையே பலியாக தந்து, அந்த உரிமையை மீட்டுக் கொண்டார். ஆகவே மத்தேயு 28:18ல், இயேசு கிறிஸ்து சொல்வதைப் பாருங்கள், ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.''

ஆனால் ஒருவேளைகளில் தேவனுக்கு தெரியாத, அவரது இருதயத்திற்குத் தோன்றாத காரியங்களும் பூமியல் நடக்கிறது. நமது பிறப்பிலிருந்து இறப்புவரை உள்ள காலங்களில் நாம் ஏதோ ஒரு வயதில் இயேசுவை ஏற்றுக் கொள்வோம் என்ற முன்னறிவு இருப்பதால் நமது காரியங்களைத் தேவனுக்கு நேராக பலவிதங்களில் திருப்புகிறார். அவருக்கு எல்லாக் காரியங்களும் தெரியும். அதிலேயும் தன்னுடைய சித்தப்படி சிலவற்றைச் சிலரைத் தெரிந்து கொள்கிறார். ''அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதுமில்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை'' (எண்ணாகமம் 23:21) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் யாக்கோபிலே அக்கிரமம் இல்லை என்று சொல்லப்படவுமில்லை. இஸ்ரவேலில் குற்றம் இல்லை என்று சொல்லப்படவுமில்லை. அக்கிரமும், குற்றமும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் தேவன் அவைகளைக் காண்கிறதுமில்லை. பார்க்கிறதுமில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் சமநிலையோடு

தேவனை தொழுது கொள்ளவேண்டும். அவர் நம்மைப்பற்றி முன்னறிந்திருந்தாலும் நாம் அவர் பாதையில் செல்கிறோமா என்பதை அறிய விரும்புகிறார். ஆதியாகமம் 18:19இல் சோதோம் கொமோராவைப் பற்றி அதன் அக்கிரமத்தைப் பற்றி சொல்லப்படுகிறது. அது உண்மையா என அறிய இரண்டு தூதர்களை அனுப்புகிறார். ஆதியாகமம் 21இல் ஆபிரகாமிடம் ஈசாக்கைப் பலியிடுமாறு ஆணை இடுகிறார். ஆபிரகாமும் ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா மலைக்குச் செல்கிறார். விறகை அடுக்கி மகனின் கை கால்களைக் கட்டி, விறகுகளின்மேல் வைத்து கத்தியை ஓங்கும்வரைக்கும் தேவன் இடைமறித்து ஒன்றும் சொல்லவில்லை. அதன்பின்பே அவனைத் தடுக்கிறார்.

ஆபிரகாமைப் பற்றி அவருக்கு முன்னமே நன்கு தெரிந்தாலும் அவனைச் சோதித்தார். 1 சாமுவேல் 15:11இல் சவுலை ராஜாவாக்கினது அவருக்கு விசனமாயிருந்தது என்றும், ஆதியாகமம் 6:6இல் அவர் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனம் வருந்தினார் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவர் எல்லாவற்றையும் முன்னறிந்திருந்தாலும், நமக்கு முன் வைக்கப்படும் காரியங்களில் நமது சுயசித்தத்தை எதிர்த்து எதையும் செய்யவே மாட்டார். அவர் நம்மிடமிருந்து சுயசித்தத்தை எடுத்துவிட்டால் நாம் ரோபோட் போல ஆகிவிடுவோம்.

கெட்ட பழக்கவழக்கங்களைத் தேவன் நம்மிடமிருந்து அகற்றிட முடியாது. நாம் விரும்புவதைப்போல அது நமது தெரிந்தெடுப்பு. கடவுள் ஒருநாளும் நமது சுயசித்தத்தில் தலையிடவே முடியாது. நாம் தவறு செய்யும்போது, நம்மை பலவிதங்களில் திருத்தி தமது வழிக்கு கொண்டு வருவாரே அன்றி நம்மை கழற்றி விடமாட்டார்.

எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை முன்குறித்துமிருக்கிறார். இது வேதத்தில் நான்குமுறை மட்டுமே வருகிறது. ரோமர் 8, எபேசியர் 1:5,12. ஆனால் இந்த வசனம் பல ஸ்தாபனங்களால் தவறாக புரிந்து கொள்ளப்படுகிறது. தேவன் பரலோகம் செல்ல மனிதர்களை முன்குறித்ததாகப் பலர் நினைக்கின்றனர். ஆனால் வசனம் ரோமர் 8:29 தமது குமாரனின் சாயலுக்கு ஒப்பாக

“கெட்ட பழக்கவழக்கங்களை தேவன் நம்மிடமிருந்து அகற்றிட முடியாது. நாம் விரும்புவதைப்போல அது நமது தெரிந்தெடுப்பு. கடவுள் ஒருநாளும் நமது சுயசித்தத்தில் தலையிடவே முடியாது. நாம் தவறு செய்யும்போது, நம்மை பலவிதங்களில் திருத்தி தமது வழிக்கு கொண்டு வருவாரே அன்றி நம்மை கழற்றி விடமாட்டார்.”

முன்குறித்திருக்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. நமது வாழ்க்கையைப் பற்றி தேவன் எல்லாவற்றையும் முன்குறித்து அதன்படி நடக்குமானால் நாம் எந்தக் கிரியையும் செய்ய வேண்டுவதே இல்லையே. ஆகவே அத்தகைய முட்டாள்களாக தேவன் நம்மை உருவாக்கவில்லை.

ஆகவே தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான கிரியைகளைச் செய்யும்போது தேவன் அதற்கு உறுதுணையாய் இருந்து தீமையான சகலத்தையும் நமக்கு நன்மையாக மாற்றுவார். ரோமர் முதலான எல்லா நிருபங்களிலும் இயேசுவைக் குறித்து கூறும்போது முதற்பேறானவர், முதல் கனி, முதற்பலன் போன்ற பதங்களைப் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். அவர் மரித்தோரிலிருந்து எழுந்து உயிர் வாழ்கின்றவர். நாம் என்றைக்கு ஞானஸ்நானம் எடுத்தோமோ, அன்றைக்கு நம் பழைய மனுஷன் மரித்துவிட்டான். ஒருவன் ஆவியினாலும், ஜலத்தினாலும் (ஞானஸ்நானம்) பிறவாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று வேதம் கூறுகிறது. என் மாம்சம் உயிரோடு இருந்தாலும், ஆவிக்குரிய வாழ்வில் என் பழைய மனிதன் இறந்துவிட்டான். நான் மறுபடியும் பிறந்து விட்டேன். ஆகவே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு, நானும் சகோதரனாக சகோதரியாக இணைந்து விட்டேன். ஆகவேதான், உமது ராஜ்யம் வருவதாக என்று தைரியமாகக் கூறுகிறோம். ஏனென்றால் தேவராஜ்யத்தைச் சுமந்து செல்கிற, அனுபவித்து வாழ்கிற நாம் செல்லுமிடமெல்லாம் தேவராஜ்யம் ஸ்தாபிக்கப்படவேண்டும். நாம் செல்லவேண்டிய இடம் கிறிஸ்துவுடைய சகோதரனாக, சகோதரியாக அவருடைய

> ““நம்மை சிருஷ்டித்தவரின் சாயலை தரித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் கிறிஸ்துவைப்போல மாறுமுடியும்.””

சாயலாக இருக்க வேண்டும் என்பதே. இதுவே நமது அழைப்பாகும்.

### கிறிஸ்துவைப்போல மாறுவது அல்லது வாழ்வது எப்படி?

கிறிஸ்துவிடமிருந்து ஒரு வெளிப்பாடு நமக்குத் தேவை. அது இல்லாதவரை கிறிஸ்துவைப்போல மாறுவது சாத்தியமல்ல. சட்டக்கல்லூரியில் படித்தால் வழக்கறிஞர் ஆகலாம். மருத்துவக் கல்லூரியில் பயின்றால் மருத்துவன் ஆகலாம். இறையியல் படித்தால் இறையியல் மேதை ஆகலாம். ஆனால் ஒரு நல்ல கிறிஸ்தவனாக முடியாது. வெறும் மூளையறிவைக் கொண்டு கிறிஸ்தவனாக முடியாது.

“ஒருவொருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும், அவன் செய்கைளையும் களைந்து போட்டு அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே” (கொலோசெயர் 3:9-10).

நம்மைச் சிருஷ்டித்தவரின் சாயலைத் தரித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் கிறிஸ்துவைப்போல மாறமுடியும். “ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது (யோவான் 1:1); அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும்,

> "தேவவார்த்தை மாம்சமாகி நமது மூலமாய் பிதாவை வெளிப்படுத்த வேண்டும். அதுவே நமக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு. நாம் வேதத்தை படிப்பதால் தேவனைப்பற்றி அறிகிறோம். நாம் எப்போது வேதத்தின்படி வாழ்கிறோமோ அப்போது தேவ சாயலாக மாறுகிறோம்."

சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள் வாசம் பண்ணினார்'' (யோவான் 1:14). ''இவர் அவருடைய (பிதாவினுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்துஞ்.'' (எபிரேயர் 1:3); ''என்னைக் (இயேசு) கண்டவன் பிதாவைக் கண்டான்'' (யோவான் 14:9).

அந்த வார்த்தை மாம்சமாகி எப்படிப் பிதாவை வெளிப்படுத்தியதோ அதேபோல தேவவார்த்தை மாம்சமாகி நமது மூலமாய்ப் பிதாவை வெளிப்படுத்த வேண்டும். அதுவே நமக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு. நாம் வேதத்தைப் படிப்பதால் தேவனைப்பற்றி அறிகிறோம். நாம் எப்போது வேதத்தின்படி வாழ்கிறோமோ அப்போது தேவ சாயலாக மாறுகிறோம். பழைய ஏற்பாட்டின்படி தியானிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டின்படி கீழ்படிந்து வாழ வேண்டும்.

### கிறிஸ்துவின் சாயலைப்போல் இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்

''நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது, பொறுமையோடே சகித்தால் அதனால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டும் இருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியை வைத்துப் போனார்'' (1 பேதுரு 2:20,21). கிறிஸ்துவை மாதிரியாக வைத்து, அவர் ஒவ்வொரு சூழலிலும் எப்படி நடந்து கொண்டார் என்பதைக் கவனித்து அதன்படி நாமும் வாழ்வதே முக்கியம்.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் எப்படி வாழ்ந்தார்? எதற்காக வாழ்ந்தார்? என்பதை கவனித்துப் பார்த்தால் அவருடைய சாயல் என்ன? எப்படி இருந்தது? என்பதை விளங்கிக்கொள்ள இயலும். இயேசு இந்தப் பூமிக்கு வந்ததன் நோக்கம் என்ன? ''என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன்'' (யோவான் 6:38). தன்னைப்பற்றி அவர் (இயேசு) சொன்ன வார்த்தை இதுவே. மிகச் சுருக்கமாக மிக ஆழமான ஒரு வசனம். நம்மை எடுத்துக் கொண்டால் மனிதனின் பிரயாசம் முழுவதும் உணவுக்காகத்தான் என்பது நன்கு தெரிந்ததே (யோவான் 4:34)ல் நாம் அல்லாடும் வாழ்க்கையில் பிரதான தேவையான உணவைப் பற்றி இயேசுவின் கருத்து. இந்த வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது''

என்றார். சமாரிய ஸ்திரீக்குச் சுவிசேஷம் அறிவித்தபோது அவருடைய சீஷர்கள் உனவு வாங்க வெளியே சென்று விட்டனர். சமாரிய ஸ்திரீக்குச் சுவிசேஷம் சொன்னவுடனே பசி என்ற உணர்வு மறந்துவிட்டது அவருக்கு. ஆக உணவைவிட முக்கியமானதாக இருந்தது பிதாவின் சித்தம் செய்வது.

இதே போன்று, லூக்கா 2:49இல் எருசலேம் தேவாலயத்தில் தங்கியிருந்து இயேசு தம்மைத் தேடி வந்த பெற்றோரிடம் சொன்ன முதல் வார்த்தை இதுதான். என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென அறியீர்களா? (மத்தேயு 26:39). அவருடைய வாழ்வின் கடைசி தருணமான கெத்செமனே தோட்டத்தில் அவர் சொன்ன வார்த்தை "என் சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகட்டும்"(யோவான் 17:4). அவருடைய சிலுவை மரணத்திற்கு முந்தைய நாள் பிதாவோடு பேசியபோது "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" என்று கூறுகிறார். அவர் பிறந்தது முதல் இறக்கும்வரை தேவசித்தத்தை மட்டுமே செய்தார்.

தேவனைப் பிரியப்படுத்தும் வகையில் இயேசு இந்த உலகில் செய்தது என்ன?

தேவசித்தத்தை மனமகிழ்ச்சியோடும் செய்யலாம். மனமகிழ்ச்சி இல்லாமலும் செய்யலாம். உதாரணத்துக்கு, குடிப்பதற்குத் தண்ணீர் கேட்கும்போது சில மணித்துளிகள் கடந்து, வேண்டாவெறுப்போடு தண்ணீர் கொண்டு வந்தும் கொடுக்கலாம். ஆனால் அதில் கேட்டவருக்குக் கண்டிப்பாக மகிழ்ச்சி இருக்காது.

"இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தை பிரியத்தோடு செய்தார். ஆனால் நாம் நம்முடைய வாழ்வில் நமக்கு சாதகமான சூழலில் பிரியமாக செயல்படுவோம். நமக்கு பிரியமில்லையெனில், அதன் செயல்பாடுகள் வித்தியாசமாக இருக்கும். ஏனெனில், நிபந்தனையுடன் கூடிய அன்பை மற்ற மனிதர்களிடம் பெற்று அதனையே மற்றவர்களுக்கும் கொடுப்பதில் வல்லவர்கள் நாம்."

"என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னை தனியேயிருக்க விடவில்லை" (யோவான் 8:29) என்றார் இயேசு.

இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தைப் பிரியத்தோடு செய்தார். ஆனால் நாம் நம்முடைய வாழ்வில் நமக்குச் சாதகமான சூழலில் பிரியமாக செயல்படுவோம். நமக்குப் பிரியமில்லையெனில், அதன் செயல்பாடுகள் வித்தியாசமாக இருக்கும். ஏனெனில், நிபந்தனையுடன் கூடிய அன்பை மற்ற மனிதர்களிடம் பெற்று அதனையே மற்றவர்களுக்கும் கொடுப்பதில் வல்லவர்கள் நாம்.

"நான் என் சுயமாய் ஒன்றும் செய்யவில்லை. நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன். எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" (யோவான் 5:30). எபிரெயர் 10:7-20 வசனங்களில் பழைய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவின் வருகை குறித்த வசனங்களில் தீர்க்கதரிசனங்கள் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வருவதைக்குறித்துச் சொல்வதைப் பார்க்கலாம்.

அன்பே உருவான மனதுருக்கமுடைய இயேசு என அறியப்பட்டவர், யோவான் 2:13இல் தேவலாயத்தில் உட்கார்ந்து, ஒரு சவுக்கை உண்டுபண்ணி, "தேவாலயத்தைக் கள்ளர் குகையாக்கினீர்களே" என்று சொல்லி காசுக்காரருடைய பலகைகளைக் கொட்டி, புறா விற்கிறவர்களையும் மற்ற வியாபாரிகளையும் தனியொருவராகவே விரட்டினார் என்று பார்க்கிறோம். "என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள்" என்றார். மத்தேயு 21:12-14இல் இதே சம்பவம் விவரிக்கப்படுகிறது. இயேசுகிறிஸ்து பலமுறை பஸ்காவிற்கு எருசலேம் தேவாலயத்திற்குப் போயிருந்தாலும், ஒவ்வொரு முறையும் இவ்வாறு செய்யவில்லை. இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், நன்மையான காரியங்களைச் செய்வதாக

> ‘‘நன்மையான காரியங்களை செய்வதாக இருந்தாலும்கூட தேவசித்தம் இல்லாமல் செய்வது எந்தவித பலனையும் அளிக்காது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.’’

இருந்தாலும்கூட தேவசித்தம் இல்லாமல் செய்வது எந்தவித பலனையும் அளிக்காது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதை இயேசு நன்கு அறிந்திருந்ததால் பிதாவின் பரிபூரண சித்தம், விருப்பம் அறிந்து பிரியமுடன் அவற்றைச் செய்தார்.

இயேசு ‘‘மரணபரியந்தம், சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்’’ (பிலிப்பியர் 2:8).‘‘ அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்’’ (எபிரெயர் 12:2). இயேசு பிறந்தது முதல் இறப்பு உயிர்தெழுதல்வரை வாழ்க்கை முழுவதும் தேவசித்தம் நிறைவேற்ற வாழ்ந்தார். அவருடைய மரணம்கூட தேவசித்தத்தின்படி நடந்ததே தவிர, அவருடைய பாவத்திற்காக அல்ல. அவர்மீது குற்றம் சொல்லி பாவத்தைக் காண்பிக்க, பரிசேயர், சதுசேயர், பிரதான ஆசாரியர், பிலாத்து, பிலாத்துவின் மனைவி, அருகிலிருந்த கள்ளர்கள் எவராலும் முடியவில்லை. ஏனெனில் அத்தனை அப்பழுக்கற்ற மனிதராக தேவகுமாரன் இருந்தார். அவர் சர்வலோகத்தின் பாவங்களுக்குப் பரிகாரபலியாகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். ‘‘நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்குப் பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்’’ (2 கொரிந்தியர் 5:21). பாவம் செய்யாத என்று இல்லை. மாறாக பாவம் அறியாத அவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசு நன்மை செய்து பாடனுபவித்து நமக்கு முன்மாதிரியை வைத்துப் போனார் (1 பேதுரு 2:20,21).

நம் வாழ்வில் ஏற்படும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூல காரணம் நான் அல்லது என் சுயம். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்று வாழ்வதே ஒரே தீர்வு (கலாத்தியர் 2:20).

### இயேசு எவ்வாறு தம்மைக் கீழ்ப்படித்தினார்?

பிலிப்பியர் 2:13-15 இவ்வாறு வாழ்வதற்கான வழிமுறையைக் கூறுகிறது: ‘‘தேவனே தமது தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். நான் வீணாக ஓடினதும் வீணாக பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு

> ‘‘நம் வாழ்வில் ஏற்படும் எல்லா பிரச்சனைகளுக்கும் மூல காரணம் நான் அல்லது என் சுயம். இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் வாழ்கிறார் என்று வாழ்வதே ஒரே தீர்வு’’

உண்டாயிருப்பதற்கு ஜீவவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவில் குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருப்பதற்கு…''.

தேவன் நமது காரியங்களைத் தேவசித்தத்திற்கு ஏதுவாக நடத்த போதுமானவராயிருக்கிறார். நாம் அவரைச் சார்ந்து, அவரது பாதைகளில் ஓட கவனமாயிருக்க வேண்டும் என்பதை 1 பேதுரு 2:20,21 போன்ற மேற்கண்ட வசனங்கள் வலியுறுத்துவதைக் காணலாம்.

### இயேசு தன்னைப் பின்பற்ற நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்

இயேசு பலமுறைகள் என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று அழைப்பதை வேதத்தில் பார்க்கலாம். நாம் எவ்வாறு அவரைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதற்கு உதாரணமாக Pointers என்ற நாய் வகையை



> "புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நமக்குள் ஆவியானவர் இருக்கிறார். நமக்கு அவர் தினமும் உணர்த்துகிறார். அதை வெளியில் உள்ள மற்ற விசுவாசிகள் உறுதிப்படுத்தலாமே ஒழிய, வெளியில் உள்ள தேவ மனுஷர்கள் நம்மை அழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மடமை."

எடுத்துக் கொள்வோம். Pointers நாய்கள் தனியாகச் செல்லாது. கூட்டமாகத்தான் செல்லும். ஓர் இரையைப் பார்த்தவுடன் சத்தமிடாது. குரைக்காது. மாறாக அந்த இரையைப் பிடிக்க ஒரு வியூகம் அமைத்து, மிக எளிதாக, விரைவாக இரையைப் பிடிக்கும். இந்த நாய்கள் முக அசைவு, கால் அசைவுகளை மட்டுமே ஒன்றுக்கொன்று கணித்துச் செயல்படும். ஆனால் நாம் மிக அசட்டையாக தேவனைப் பின்பற்றுகிறோம். ஊழியம் என்றால் அது கனமான ஊழியம். ஆரோன்போல மோசேபோல அழைக்கப்பட வேண்டும். அல்லது ஒரு பெரிய கூட்டத்தில் தேவன் நம்மைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும் என்று காத்திருந்து நாட்களை வீணாக நகர்த்துகிறோம். புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நமக்குள் ஆவியானவர் இருக்கிறார். நமக்கு அவர் தினமும் உணர்த்துகிறார். அதை வெளியில் உள்ள மற்ற விசுவாசிகள் உறுதிப்படுத்தலாமே ஒழிய, வெளியில் உள்ள தேவ மனுஷர்கள் நம்மை அழைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மடமை. Pointers நாய்களை விட நாம்

மேலானவர்களாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்.

மத்தேயு 4:19இல் இயேசு ‘‘என்னைப் பின்பற்றிவா, நான் உங்களை மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக மாற்றுவேன்’’ என்றார். மத்தேயு 16:24 தன்னைப் பின்பற்றி வருபவன் எப்படி இருக்க வேண்டும் என்று பட்டியலிடுவதைக் காணலாம்.

‘‘ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்ற வேண்டும்.’’ மாற்கு 1:17, 10:21.. என்று புதிய ஏற்பாட்டின் நான்கு சுவிசேஷ நூல்களிலும் சுமார் 25 முறை ‘என்னைப் பின்பற்றி வா’ என்று கூறினார். அதன்பின் பரலோகத்திற்கு ஏறிப்போனார். ஆவியானவருடைய வடிவில் நமது உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார். ஆகவே அந்த ஆவியானவருடைய சத்தத்தை நமக்குள்தான் தேட வேண்டும். அவரைப்பின்பற்றி, அவருடைய பாதையில் நடக்க வேண்டும்.

பிசாசு விசுவாசிகளை நம்பவைத்திருக்கும் ஒரு மிகப்பெரிய பொய் நாம் கிறிஸ்துவைப்போல வாழ முடியாது என்பதே. அது உண்மையானால் கிறிஸ்து என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று சொல்லவே மாட்டார். நம்மால் முடியாததை தேவன் நம்மைச் செய்ய சொல்லவேமாட்டார்.

> ‘‘பிசாசு விசுவாசிகளை நம்பவைத்திருக்கும் ஒரு மிகப்பெரிய பொய் நாம் கிறிஸ்துவைப் போல வாழ முடியாது என்பதே.’’

அவர் இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, ஒரு மனிதனாகத்தான் வாழ்ந்தார். அவர் தேவனாக சகல வல்லமை பொருந்தியவராக வாழ்ந்திருந்தால், நாம் அவரைப்போல வாழவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர் மனிதனாக வாழ்ந்து, பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தினால் பல்வேறு அற்புதங்களைச் செய்து, பரிசுத்த வாழ்வு வாழ்ந்து மனுக்குல இரட்சிப்புக்காக, தன்னையே பலியிட்டார். பிலிப்பியர் 2:5-9இல் அவருடைய தியாகம், அன்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். "அவர் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார்" என்று கூறுகிறது. ஆகவேதான் என்னைப் பின்பற்றி வாருங்கள் என்று சவாலிட்டு அழைக்கிறார். நாமும் அந்தச் சவாலை எற்றுக்கொண்டு, அவரோடு முன்னேறிச் செல்வோம்.

### தேவன் உங்களில் கிரியை செய்கிறார்

இதுவரை தேவனுடைய கோணத்தில் அல்லது அவரது பார்வையில் நம்மை அழைத்ததின் நோக்கத்தைப் பற்றிச் சிந்தித்தோம். பின்வரும் பகுதியில் நம்முடைய கோணத்தில் அந்த நோக்கங்களை அடைவதில் உள்ள காரியங்களைப் பற்றி சிந்திப்போம். அது நமக்கு சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் ஊட்டும் என்பது திண்ணம்.

அதில் முதலாவது, இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவருடைய பிள்ளையாக மாறி, பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் இருந்து அவரோடு செயல்படும் வாய்ப்பைப் பெறுகிறோம். "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காக பிடிக்கப்பட்டேனோ, அதை பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் (பிலிப்பியர் 3:12).

(படத்தை பார்க்க) படத்தில் ஒரு தாயின் கரம் கீழிருந்து நீட்டும் குழந்தையின் கரத்தை இறுகப் பிடித்திருப்பதைப் பார்க்கிறோம். அதேபோல பிலிப்பியர் 3:12இல்



சொல்லப்பட்டபடி, இந்த உலகத்தைத் தன் உள்ளங்கையில் வைத்திருக்கும் கிறிஸ்து இயேசுவின் பெரிய கரத்தினால் உங்கள் சின்ன கரம் பிடிக்கப்பட்டிருப்பதால் அது எவ்வளவு உறுதியாக இருக்கும் என்று சிந்தித்து பாருங்கள். நீங்கள் அந்தக் கரத்திலிருந்து தப்பவே முடியாது. நீங்கள் அவர் கரத்தை பற்றிக் கொள்ள வேண்டும் அவ்வளவுதான். உங்கள் கரத்தைப் பிடித்திருப்பவர் யார் என்றும் அவர் எதற்காக உங்களைப் பிடித்திருக்கிறார் என்றும் அறிந்து அந்தப் பிடியை நீங்கள் பற்றிப் பிடித்து, அவரது அழைப்பை உணர்ந்து இலக்கை நோக்கி ஓட ஆரம்பித்துவிடுவீர்கள். அப்பொழுது அந்தப் பிடியிலிருந்து எந்தச் சக்தியாலும் உங்கள் கரத்தைப் பிரிக்க இயலாது.

யோவான் 10:28,29 வசனங்கள் “நம்மை ஒருவனும் தேவனுடைய கரத்திலிருந்து பறித்துக் கொள்ளக்கூடாது” என்று தெளிவாக கூறுகின்றன. அந்தப் பிடி

> “உங்கள் கரத்தை பிடித்திருப்பவர் யார் என்றும் அவர் தெற்காக உங்களை பிடித்திருக்கிறார் என்றும் அறிந்து அந்த பிடியை நீங்கள் பற்றி பிடித்து, அவரது அழைப்பை உணர்ந்து இலக்கை நோக்கி ஓட ஆரம்பித்துவிடுவீர்கள். அப்பொழுது அந்த பிடியிலிருந்து எந்த சக்தியாலும் உங்கள் கரத்தை பிரிக்க இயலாது.”

சரியாய் இருந்தால் உங்கள் இலக்கை நோக்கி ஓடுவதை ஒருவராலும் தடுக்க இயலாது. எபிரெயர் 13:20,21 வசனங்கள் கூறுவதைப் பாருங்கள். “நான் நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறி வரப்பண்ணின சமாதானத்தின் தேவன், இயேசுகிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர் பொருந்தினவர்களாக்குவாராக. அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக ஆமென்.”

சமாதானத்தின் தேவன் மனித குலத்தைத் தன்னுடைய பிள்ளைகளாய் ஏற்றுக் கொள்ள நித்திய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி அதற்காகத் தன்னுடைய குமாரனாகிய பெரிய மேய்ப்பனான இயேசுகிறிஸ்துவைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து அவருடைய இரத்தத்தின் மூலம் உங்களை மீட்டுக்கொண்டு, அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழப்பண்ணி, அவரைக் கொண்டு உங்களுக்குள்ளே தேவனுக்குப் பிரியமான காரியங்களை நடப்பித்து உங்களைச் சகலவற்றிலும் சீர்பொருந்தினவர்களாய் மாற்றி தேவனுடைய மகிமையில் அமரப் பண்ணப் போகிறார். அவரே உங்களுக்குள்ளே சகல காரியங்களையும் நடப்பித்து உங்களை மாற்றப் போகிறார். நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. அவரது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு இலக்கை நோக்கி ஓடுவது மட்டும்தான். மற்ற அனைத்தையும் அவரே செய்து முடிப்பார். என்ன அற்புதமான காரியம்!

அதேபோல எபேசியர் 5:26,27 வசனங்களில், “தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன்பாக நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்” என்று கூறப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்து அவருடைய வார்த்தையின் மூலம் நம்மிலுள்ள கறை திரைகளைச் சுத்தப்படுத்துகிறார். நம்மைப் பரிசுத்தப்படுத்தி அப்பழுக்கற்றவர்களாய் மாற்றி, நம்மில் தமக்குப் பிரியமான காரியங்களை நடப்பித்து, தேவனுடைய மகிமையைப் பறை சாற்றக்கூடிய சபையாக மாற்றி நம்மை அவருக்குப் பரிசாக அவரே கொடுக்கப்போகிறார். அல்லேலூயா! என்ன ஒரு அருமையான வாக்குத்தத்தம் இது!

யூதா 24,25 வசனங்களைப் பாருங்கள். “வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்.”

நாம் கிறிஸ்துவைபோல மாற மாம்ச பிரயாசங்கள் வீண். ஆவியானவருடைய சத்தத்தைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்தால் அவரே நமக்குள் கிரியைகளை நடப்பித்து மாசற்றவர்களாய் மாற்ற வல்லமையுள்ளவர். அதை நம்மிலே நடப்பிக்க அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார் என்று பார்க்கிறோம்.

நம்மை இறுகப் பற்றிய தேவனுடைய கரத்தை நாமும் பற்றிப் பிடித்து கொள்ள வேண்டும்.

பெரிய மேய்ப்பனாகிய கிறிஸ்து அவருடைய கிரியைகளை உங்களில் நடப்பித்து சகல காரியத்திலும் சீர்பொருந்தப் பண்ணி அவருடைய மகிமையில் கொண்டு வந்து நிறுத்தப் போகிறார்.

அவர் தம்முடைய வார்த்தையினால் நம்மைக் கறை திரையில்லாமல் கழுவி பரிசுத்தப்படுத்தி அவருக்குப் பரிசாக அவரே அளிக்கப் போகிறார்.

உங்களை வழுவாதபடி காத்து தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு நிறுத்துகிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரது அபிஷேகத்தில் நாம் வாழவேண்டும். அவர் நமக்குள் செய்யும் காரியங்கள் மூலம் நாம் கிறிஸ்துவைப்போல மாறுவது மாத்திரமல்ல, மகிமையில் அவருடைய பிரசன்னத்தில் நம்மை மாசற்றவர்களாய் மாற்ற அவரால் முடியும். அவருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய பிள்ளைகளாய் வாழ்ந்தால் போதும்.

## முடிவு:

உங்கள் வாழ்வில் கர்த்தரின் பணியை செய்வதில் உங்களுக்குப் பெரும் தைரியமும், மகிழ்வும் ஏற்பட வேண்டும் என்பதுவே எனது ஜெபமாக இருக்கின்றது. மேற்கண்ட நான்கு வேத வசனங்களிலுமே கர்த்தர் உங்கள் வாழ்வில் செயலாற்றி அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் போல உங்களை மாற்றுவார்.

## நோக்கம்

# ஆராதனை

தேவன் நம்மைத் தெரிந்து கொண்டதின் நான்காவது நோக்கம் ஆராதனை. பால் டேவிட் செப் என்பார் ஆராதனையைப் பற்றிக் குறிப்பிடும்போது "ஆராதனை என்பது மனிதகுலத்தின் இயற் பண்புகளுள் ஒன்று." **ஆராதனை நான் செய்வது அல்ல. நாம் யாராய் இருக்கிறோம். ஆராதனையாக நாம் என்ன செய்கிறோம் என்பதே.** நாம் ஆராதிக்கிறோமோ அல்லது இல்லையோ என்பது காரியமல்ல. ஆனால் ஆராதிக்கிற பண்பு நம்மிடம் இருக்கிறது. சிலர் தேவனை ஆராதிக்கிறோம். சிலர் தேவனாக ஒன்றை உருவாக்கி அதனை ஆராதிக்கின்றனர்.

**ஆராதனை என்பது மனிதகுலத்தின் இயற் பண்புகளுள் ஒன்று.**

நாம் ஒரு அழகான ஓவியத்தை பார்க்கும்போது அதனைக் குறித்து சந்தோஷப்பட்டு பாராட்டுகிறோம். அதோடு நிறுத்திவிடாமல், அந்த ஓவியத்தை வரைந்த படைப்பாளனையும் சேர்த்துப் பாராட்டுகிறோம். இது இயல்பு. அதே போன்றே நமது வாழ்வில், அழகான இயற்கையைப் பார்க்கும்போதோ, அல்லது நம்மையே பார்க்கும்போதோ இயல்பாகவே அந்தப் பாராட்டு, நமது இதயத்தில் இருந்து எழுகிறது.

### ஆராதனை - பொருள் என்ன?

'ஆராதனை' என்பதன் எபிரேய வார்த்தை 'சகா' என்பது பழைய ஏற்பாட்டில் 172 முறையும் புதிய ஏற்பாட்டில் 'பிரஸ்டுநாயு' என்ற பதத்திலும் வருகிறது. இந்தப் பதத்திற்குத் தேவனுக்கு முன் மண்டியிடுதல் அல்லது நெடுஞ்சாண்-கிடையாய் விழுந்து வணங்குதல் என்று பொருள்படும். அவ்வாறு விழுந்து வணங்குவது மற்றவரையோ அவரது உடை அலங்காரங்களையோ காணாது, தேவனை மாத்திரமே நோக்கி ஆராதிப்பதற்கு ஏதுவாக இருக்குமல்லவா?

## ஆராதனை - சில துணிகர எண்ணங்கள்

### தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட நோக்கம்:



பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது நமது உடலைச் சற்று தேவனுக்கு முன்பாக பணிந்து, குனிந்து, தாழவிழுந்து மண்டியிடுதலைப் பார்க்கிறோம். முதலாவது, நாம் எது ஆராதனை இல்லை என்பதை அறிந்து கொள்வது நல்லது. 'ஆராதனை' பற்றி பல்வேறு விதமான தவறான கருத்துகள் தாராளமாக உலா வருகின்றன. அதில் முதலாவது, தேவன், ஒரு 'சர்வாதிகாரி', அவர் நினைக்கிறபடி நாம் அவரை வணங்க வேண்டும் என்று கண்டிப்பாக இருக்கிறவர் என்று நினைக்கின்றனர்.

ஆனால் தேவன் அப்படிப்பட்டவர் அல்ல. ஓர் ஆப்பிள் மரம் தன்னை நட்டு வைத்து, தன்னைப் பராமரித்த மனிதனுக்கு ஆப்பிளைக் கொடுப்பது போன்ற இயல்பான காரியமே ஆராதனை. உயிருள்ள ஒவ்வொரு பொருளும், தன்னைப் படைத்த தேவனுக்கு மகிமையைச் செலுத்துகின்றன (ரோமர் 1:20). ஆராதனைக்கு இசை முக்கியமல்ல. இசை என்பது நமது பண்பாடு மற்றும் கலாச்சாரத்திலிருந்து, நாம் எடுத்து ஆராதனைக்கு உபயோகப்படுத்துகிறோம். கிராமங்களில் நடத்தப்படும் திருவிழாக்களில், தாளத்திற்கு ஏற்ப நடனமாடும் பழக்கத்தை ஆலயத்துக்குள் கொண்டு வந்து தவறான வழக்கத்தை ஏற்படுத்திவிட்டோம்.

> "ஓர் ஆப்பிள் மரம் தன்னை நட்டு வைத்து, தன்னை பராமரித்த மனிதனுக்கு ஆப்பிளை கொடுப்பது போன்ற இயல்பான காரியமே ஆராதனை."

**இது இசையைப் பற்றியதல்ல.**




ஆதியாகமம் 4:21ல் முதன்முதலாக வாத்திய கருவிகளைப் பற்றிய வசனம் உள்ளது. "ஞ்தகப்பன் ஆனான் கின்னரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பன் ஆனான்" ஆனால் அதற்கு முன்பாக வாழ்ந்த ஆதாம், இசைக்கருவிகள் இன்றி தேவனை ஆராதித்தான். ஆனால் தற்போதைய நமது ஆலயங்களில் வாத்தியக் கருவிகளுக்கும் அங்க அசைவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவனை உதாசீனம் செய்வது முட்டாள்த்தனமான ஆராதனை.

இன்றைக்கு ஆராதனை மிகவும் நன்றாயிருந்தது. போன வார ஆராதனை அவ்வளவு சிறப்பாக இல்லை. ஆராதனையில் புதிய பாடல்களையும் பாடவேண்டும். இல்லையில்லை புதிய பாடல்களைத்தான் பாட வேண்டும். இந்தவிதமான விமர்சனங்கள், ஆராதிப்பவர்கள் தேவனை ஆராதிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இவ்வித விமர்சனங்களை ஊழியர்கள் கண்டிப்பாக ஆதரிக்கக்கூடாது. ஏனெனில் தேவனுக்கு முன்பாக 'எதையோ' நடத்திக் காட்டக்கூடாது. நாம் தேவனை முழு மனதோடு ஆராதிக்க வேண்டும்.

மேடையில் எல்லாவற்றையும் முன்னதாக ஆயத்தம்பண்ணி இயந்திரத்தனமாக ஆராதனை செய்யாதபடியும், ஒரு சடங்காச்சாரமாகவோ ஒரு கட்டாயத்திற்காகவோ, இசைக்காகவோ, ஒரு பாரம்பரியத்திற்காகவோ ஆராதனை நடத்தி தேவனை கனவீனம் பண்ணக்கூடாது.

நமது நன்றியுணர்வு, அன்பு, மகிழ்ச்சி இவைகள் நிரம்பிய ஆராதனையே தேவனை மகிமைப்படுத்தும். "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. அவர்கள் எனக்குப் பயப்படும் பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (ஏசாயா 29:13).

> " 'ஆராதனை' பற்றி பல்வேறு விதமான தவறான கருத்துக்கள் தாராளமாக உலா வருகின்றன. அதில் முதலாவது, தேவன், ஒரு 'சர்வாதிகாரி', அவர் நினைக்கிறபடி நம் அவரை வணங்க வேண்டும் என்று கண்டிப்பாக இருக்கிறவர் என்று நினைக்கின்றனர். "

**கர்த்தருக்குப் பிரியமில்லாத ஆராதனைகள்:**

**வீணான ஆராதனை**

''மாயக்காரரே உங்களைக் குறித்து இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்'' (மத்தேயு 15: 7 - 9).

பொன்கன்றுக்குட்டியைச் செய்து இஸ்ரவேல் ஜனங்கள் ஆராதனை செய்து தேவனுக்கு கோபமூட்டுவதற்கு முன்பே பத்துக் கட்டளைகளில் ஒன்றான ''என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்'' என்ற கட்டளையிடப்பட்டிருந்தது. அதோடு, அவர்கள் தேவனுடைய வல்லமையான செயல்களை,



இஸ்ரவேல் ஜனங்களின் 'தலைச்சன்கள்' பஸ்கா ரத்தத்தால் காப்பாற்றப்பட்டது, சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிரித்து உலர்ந்த தரை வழியாக பயணித்தது இவை எல்லாவற்றையும் மறந்தார்கள். தேவ கட்டளைக்கிணங்க மோசே சீனாய் மலைக்குப் போய் வர தாமதித்தபோது, எங்களுக்கு முன் செல்ல தேவர்களை உண்டாக்கு என்று ஆரோனை வற்புறுத்தி பொன் கன்றுக்குட்டி செய்து ஆராதனை செய்தார்கள். இது எத்தனை முரண்பாடான காரியம் பாருங்கள்.

நம்முடைய காரியத்துக்கு வருவோம் என்றால் கிறிஸ்தவர்களாகிய நாம் மற்ற இடங்களைவிட, ஆலயத்தில் ஆராதிக்கும்போது பொய்களை அவிழ்த்து விடுகிறோம். அழகாகக் கைகளை உயர்த்தி ''என்னை ஒப்புகொடுக்கிறேன் ஆண்டவரே!'' என்று நடிக்கிறோம். 'உமக்காக வாழ்கிறேன்' என்றும் உம்மையே நேசிப்பேன் என்றும் இசைக்கு ஏற்றவாறு உள்ளம் உருகப் பாடுகிறோம். ஆனால் அந்த ஆலயத்தை விட்டு வெளியே வந்தவுடன் நமது தோற்றமும், எண்ணங்களும், மனப்பான்மைகளும் வேறு திசையை நோக்கி பயணிக்கிறது. எத்தனை முரண்பாடான வாழ்க்கை!

**அறியாமையுள்ள ஆராதனை.**

''அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக்



கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்'' (அப்போஸ்தலர் 17:22,23) என அத்தேனருக்கு சுவிசேஷத்தை அறிவித்தார் பவுல். இன்றும் செருப்பு அணியாமல் கால்களில் ரத்தம் வழிய பல நூறு மைல்கள் இரவிலும் பகலிலும் பிரயாணம் செய்து அதற்குரிய விதவிதமான ஆடைகளை உடுத்தி விரதமிருந்து எப்படியாவது கடவுளின் அருளைப் பெற்று விட வேண்டும் என்ற நோக்கில் செல்கிற பக்தர் கூட்டம் அறியாமையுள்ள ஆராதனை செய்து கொண்டிருக்கிறது.

### சுய இஷ்ட ஆராதனை

அடுத்து ''சுய இஷ்ட ஆராதனை'' பற்றி கொலோசெயர் 2:21-23 இவ்வாறு கூறுகிறது: ''மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும்,




இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது." அதேபோன்று நாமும் மேற்கண்ட சுய இஷ்ட ஆராதனை செய்கிறவர்களாக இருக்கிறோம். ஒரு கிரிக்கெட் வீரரையோ அல்லது திரைப்பட நடிகர் நடிகைகளையோ இவ்வாறு ஏதேனும் ஒரு அரசியல் தலைவரையோ மேன்மைப்படுத்தி பேசுவதோ, அவரை முன்மாதிரியாக வைத்து புகழ்வதோ நல்லதல்ல. அவரைப் புகழ்வதை விட்டுவிட்டு அவருக்கு அந்தத் தகுதி, திறமையைக் கொடுத்தவரைப் புகழ்வதுதான் சரியானதாக இருக்கும். போதகருக்கு அல்லது மனைவிக்கு, பிள்ளை களுக்கு, கணவருக்குத் தேவனுக்கு மேலாகக் கனத்தை, புகழைக் கொடுப்பது பாவம்.

**ஆராதனை - ஒரு வாழ்க்கை முறை**

ஆராதனை என்பது ஒரு வாழ்க்கை முறை. நாம் நினைப்பதுபோல அது ஆலயத்தில் தேவனுடைய வார்த்தைகள் கொடுக்கப்படும் முன்னால் மட்டும் நடக்கக்கூடிய ஆராதனையை மட்டும் குறிப்பது அல்ல. அது எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் நடைபெற வேண்டியது.

"சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக" (சங்கீதம் 113:3) என்று வேதம் கூறுகிறது.

சங்கீதம் 34:1 இதே கருத்தைத்தான் கூறுகிறது "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்."

> **"ஆராதனை என்பது ஒரு வாழ்க்கை முறை... அது ஆலயத்தில் நடக்கக்கூடிய ஆராதனையை மட்டும் குறிப்பது அல்ல. அது எல்லா நாட்களிலும் எல்லா நேரங்களிலும் நடைபெற வேண்டியது."**

கொலோசெயர் 3:17 இதே கருத்தை வலியுறுத்துகிறது "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்."

எல்லா நேரங்களிலும் வீட்டிலேயே ஆராதிக்கலாமே. ஏன் சபைக்குப் போக வேண்டும்? சபையில் மற்றவரோடு நாம் ஆராதிக்கக் காரணம் என்னவென்றால் நாம் மற்ற விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ள ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி உதவி

> எல்லா நேரங்களிலும் வீட்டிலேயே ஆராதிக்கலாமே. ஏன் சபைக்குப் போக வேண்டும்?

செய்யத்தான். கொலோசெயர் 3:24 "எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" என்கிறது. நாம் எந்த வேலை செய்தாலும், என்னப் பணியில் இருந்தாலும் அதை மனிதர்களுக்கு என்று செய்யாமல் தேவனுக்கென்று செய்யும்போது அதுவும் ஒரு ஆராதனைதான்.

"ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள்." ஆக தேவனை எல்லா நேரத்திலும் எல்லா வேலையிலும் தேவன் நமக்கு கொடுத்த எல்லா வசதி வாய்ப்புகள், திறமைகள், தாலந்துகள், உயர்வுகள் நன்மைகள் எல்லாவற்றிலும் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்து ஆராதிக்கலாம்.

## ஆராதனை - பழைய, புதிய ஏற்பாடுகளில் வெளிப்பட்ட முறைகள்

புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நாம், பழைய உடன்படிக்கையின் ஆராதனை எப்படி இருந்தது என்பதையும் தற்போது நாம் ஆராதிக்கிறதையும், இனி எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பழைய உடன்படிக்கையில் இஸ்ரவேல் மக்கள் எருசலேமுக்குச் சென்று, ஆலயத்தில் உடலை வருத்தி, மண்டியிட்டு ஆராதனை செய்தார்கள். ஆனால் மனம் ஒன்றி முழுமனதோடு செய்ய வேண்டும் என வற்புறுத்தப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையில் விசுவாசிகளாகிய நாம் அவ்வாறு ஒரு புனித இடத்திற்குச் சென்று தேவனைத் தொழுது கொள்ளாமல் நமது உள்ளமாகிய ஆலயத்தில் வாசமாய் இருப்பதால், நாம் எங்கும் தொழுது கொள்ளலாம் என்று சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம்.

பழைய உடன்படிக்கையின் ஆராதனையில் பலி செலுத்தல், ஆசரிப்புக் கூடாரத்தின் பாகங்களான வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் போன்றவை எவ்வளவு நீளம், அகலம், உயரம், திரைச்சீலைகள் எப்படி இருக்க வேண்டும், எத்தனை முறை எங்கு பலிபீட இரத்தம் தெளிக்கப்பட வேண்டும், ஆசாரியனின் உடுப்பு எப்படி இருக்க வேண்டும் என்று எல்லாவித நுணுக்கங்களையும், சரியான முறையில் செய்ய வேண்டும் என்ற வரைமுறை இருந்தது (லேவியராகமம் 16:4) அவைகள் கவனமாக கடைப்பிடிக்கப்பட்டன. ஆராதனை கூட்டத்தின் தலைவனாக இருந்து தள்ளப்பட்ட 'கேரூப்' எப்படி தேவனை வஞ்சித்தானோ, அந்த வஞ்சனைக்கு இடங்கொடாதபடி எல்லாம் கவனமாகச் செய்யப்பட்டன. அதே 'கேரூப்' இப்போதும் ஆராதனையின் மகிமையை தேவனுக்குக் கொடாதபடி தனக்கு எடுத்துக்கொள்ள திசை மாற்றுகிறான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவன் தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவிடமே என்னைப் பணிந்துகொள்; பூமியின் அனைத்து மேன்மைகளையும் உனக்குத் தருகிறேன் என்று பேரம் பேசினவனாயிற்றே. (மத்தேயு

4:9) அதற்கு இயேசு கிறிஸ்து கொடுத்த பதிலடி என்ன?

''அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே''

இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தையைக் கொண்டு ஜெயித்தார். அதே இயேசுகிறிஸ்து புதிய உடன்படிக்கையின் ஆராதனைப் பற்றி யோவான் 4:23,24ல் கூறுவதைக் கவனியுங்கள்: ''உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்.''

## மோசேயின் கூடாரமும், தாவீதின் கூடாரமும் - ஆராதனையில் வித்தியாசங்கள்

மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தில் ஒரு வெளிப்பிரகாரம், அதன்பின் பரிசுத்த



ஸ்தலம், அதன்பின் மகா பரிசுத்த ஸ்தலம் என்று இருந்தது. நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் வெளிப்பிரகாரம் வரை செல்லலாம். ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலம் வரை செல்லலாம். மகா பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்துக்கு சென்று வரலாம். இவை அனைத்தும் மாம்ச பிரகாரமாக செய்யப்பட்டது.

புதிய உடன்படிக்கையின்படி நாமே தேவனுடைய ஆலயம். நமது சரீரம்தான் வெளிப்பிரகாரம். நமது ஆத்மா பரிசுத்த ஸ்தலம். நமது ஆவி மகா பரிசுத்த ஸ்தலம். புதிய உடன்படிக்கையின்படி, நாம் அனைவரும் ஆசாரியர்கள். ஆகவே 1 கொரிந்தியர் 3:16 இவ்வாறு கூறுகிறது: ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?'' 1 கொரிந்தியர் 6:19ம் இதே கருத்தையே வலியுறுத்துகிறது: ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?''

மோசேயின் ஆசரிப்புக் கூடாரம் மிகப் பரிசுத்தமானதாகும். ஒருவரும் அதில் பிரவேசிக்க முடியாத நிலையில் இருந்தது. மக்கள் அதற்குள் பிரவேசிக்கப் பயந்தார்கள். தேவ கட்டளையை மீறி உள்ளே பிரவேசித்தவர்கள், மகா பிரதான ஆசாரியன் உட்பட தேவனால் தண்டிக்கப்பட்டனர்.

அதற்குப் பின்வந்த தாவீது, தேவனுடைய பெட்டிக்கு எந்த அளவுமில்லாத, கண்டிப்பும் இல்லாத கூடாரம் அமைத்தார். அதில்




தேவனைத் தினமும் புகழ்ந்து பாட ஆராதனை செய்ய ஆட்களை நியமித்தார். அதில் இரத்த பலிகள் செலுத்தப்படவில்லை. ஆனால் தேவன் அதை ஏற்றுக்கொண்டார்.

“அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல அதை ஸ்தாபிப்பேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்” (ஆமோஸ் 9:12) என்று கூறுகிறது. ‘அந்நாளில்’ என்ற சொல் பெந்தேகோஸ்தே நாளில் நியாயத்தீர்ப்பு நாளையும் குறிக்கிறது.

இயேசுகிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின்பு தன்னுடைய சீடர்களை அழைத்து நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவி உங்களிடத்தில் கொடுக்கப்பட காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். அதுபோலவே பெந்தேகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி அருளப்பட்டார். அதனால் அநேக அற்புதங்கள் தேவ வார்த்தையை நிலைநிறுத்தின. அதன் பின்பு ஏற்பட்ட உபவத்திரங்களின் காரணமாக விசுவாசிகள் சிதறடிக்கப்பட்டனர்.

அப்போஸ்தலர் 10ஆம் அதிகாரத்தில் யூதரல்லாத கொர்நேலியு தேவ பக்தியுள்ளவனாயிருந்து, ஜெபம் பண்ணிக்கொண்டிருந்த அதே வேளையில் பேதுருவுக்கு ஒரு தரிசனம் வந்தது. அந்தத் தரிசனத்தில் பல்வேறு வகையான பறவைகளும் விலங்குகளும் நிறைந்த கூடை இறங்கி வந்தது. பசியோடு இருந்த பேதுருவை நோக்கி அடித்து புசி என்ற கட்டளையும் வந்தது. இதேபோன்று மும்முறை நிகழ்ந்தது. பேதுரு அசுத்தமான பறவைகளை எப்படிச் சாப்பிடுவது என்று திகைத்தபோது, தேவன் சுத்தமாக்கினவைகளை நீ அசுத்தமாக என்னாதே என்று எச்சரிப்பும் கூடவே வந்தது.

அந்நேரத்தில்தானே கொர்நேலியு தேவ கட்டளைப்படி அனுப்பிய தூதர்கள் பேதுரு இருந்த வீட்டைத் தட்டி நின்றனர். தேவ கட்டளையால் அங்குச் சென்ற பேதுரு கொர்நேலியு வீட்டில் கூடியிருந்தவர்களுக்குச் சுவிசேஷம் அறிவித்துக் கொண்டிருந்தபோதே தேவ ஆவியானவர் ஊற்றப்பட்டு அந்நிய பாஷைகளைப் பேசினர். தேவ ஆவியைப் பெற்ற அவர்களுக்குப் பேதுரு ஞானஸ்நானம் கொடுத்தார். இது குறித்து அப்போஸ்தலர்களுக்கு உண்டான திகைப்பு கொஞ்ச நஞ்சமல்ல. அப்போது அங்கே பவுலும் பர்னபாவும் கூட இருந்தனர்.

அதன்பின் பவுலும், பர்னபாவும் அப்போஸ்தலர் 15:12இல் சொல்லியபடி புறஜாதிகளுக்குள் தங்களைக்கொண்டு தேவன் செய்த அடையாளங்களை விவரித்துச் சொன்னபோது யாக்கோபு, ஆமோஸ் 9:12 வசனத்தை நினைவுகூர்ந்து சொல்லும் வார்த்தைகளை அப்போஸ்தலர் 15:17 கவனியுங்கள்.

**தாவீதின் கூடாரம் எது? அதுவே விலையேறப்பெற்ற தேவ பிரசன்னம்.**

“நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளையெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.”

இங்கே மோசேயின் கூடாரம் என்றோ, சாலமோனின் தேவாலயம் என்றோ குறிப்பிடாமல் தாவீதின் கூடாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். அந்தத் தாவீதின் கூடாரம் எது? அதுவே விலையேறப்பெற்ற தேவ பிரசன்னம்.

எந்த மாம்சீக பலி இல்லாத ஸ்தோத்திர பலியாகிய உதடுகளின் பலியை மட்டுமே கொண்ட யூதரையும், புறஜாதிகளுமாகிய மொத்த மனித குலத்துக்குமான இரட்சிப்பைக் கொடுக்கத்தக்கதாக தாவீதின் கூடாரத்தைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தினார்.

தாவீதின் கூடாரமாகிய தேவ பிரசன்னம் நம்மீது ஊற்றப்பட்டு, நம்மில் தங்கி, தரித்து, நாம் தேவ ஆலயமாய் விளங்கத்தக்கதாக நம்மைச் சீர்ப்படுத்தும்.

| விபரம் | மோசேயின் கூடாரம் | தாவீதின் கூடாரம் |
|---|---|---|
| இடம் | அளவு மற்றும் அனைத்து விபரங்களும் கர்த்தரால் கொடுக்கப்பட்டது. | உடன்படிக்கைப் பெட்டியின் மீது விரிக்கப்பட்ட கூடாரம் என்று தாவீது சொல்கிறார். |
| பொருட்கள் | ஒவ்வொரு பொருளையும் கர்த்தர் விவரித்தார். அவைகளின் வரிசையும் கர்த்தராலேயே சொல்லப்பட்டன. | உடன்படிக்கைப் பெட்டி என்னும் ஒரே ஒரு பொருள் தான் உண்டு. |
| ஆசாரியன் | ஆசாரியன் பரிசுத்த ஸ்தலம் வரை தான் செல்ல முடியும். சாதாரண மனிதர்கள் அங்கே நுழைய இயலாது. | ஆசாரியன் எந்த நேரமும் உள்ளே நுழையலாம். புதிய ஏற்பாட்டில் நாம் அனைவருமே ஆசாரியர்களாக இருக்கிறோம் (வெளிப்படுத்தல் 1:6). |
| பிரதான ஆசாரியன் | பிரதான ஆசாரியன் மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் வருடத்துக்கு ஒரு முறை நுழைய முடியும்! | ஒவ்வொரு ஆசாரியனும் எல்லா நாட்களிலும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடியும்!! (புதிய ஏற்பாட்டில் இயேசுவே நமது பிரதான ஆசாரியனாக இருக்கிறார்). |
| பலிகள் | கட்டளைகளின்படி தான் ஒவ்வொரு பலியையும் செலுத்தினார்கள். | எந்த உயிர்ப்பலியும் இல்லை. (புதிய ஏற்பாட்டில் இயேசுவே அனைத்தையும் செலுத்தித் தீர்த்தார்) |
| துதியும் ஆராதனையும் | இசையோ பாடல்களோ இல்லை. | மகிழ்ச்சியும் துதியுமாகிய, ஆன்மீக ஸ்தோத்திரம் இருந்தது. |

யோவான் 1:1, 14 வசனங்களை வாசிக்கும்போது இது நன்றாக விளங்கும். “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.”

**ஆராதனை - உட்பிரிவுகள்**

## அவரை ஆராதிப்பது நமது நோக்கம்

**ஆராதனை - உங்களைப் படைத்தவருக்கு இன்பத்தைக் கொடுப்பது**

ஆகவே நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள நம்மை அழைக்கிறார். ஆராதனையில் இருக்கக்கூடிய முக்கிய அம்சங்களை 1 தெசலோனிக்கேயர் 5:23 காணலாம்: “சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.”

இதில் முதலாவது வருகிற சரீரம் அதைப் பற்றி ரோமர் 12:1இல் சொல்லப்பட்டுள்ளது.

**சரீரம்**

“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.” ஆகவே நாம் நமது சரீரங்களைத் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம். நாம் நமது கைகளை அசைத்து பாடுவதும் தேவனுக்குப் பிரியமானவைகளை நாம் செய்வதும் இதில் அடங்கும். 1 கொரிந்தியர்3:16 இதே கருத்தை வலியுறுத்துகிறது.

**ஆத்மா**

அடுத்ததாக வருவது ஆத்மா. இது குறித்து ரோமர் 12:2இல் கூறப்பட்டுள்ளது. “நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.” இந்த வசனத்தின் மூலம் ஒரு மாற்றம் அல்லது மறுரூபம் ஆத்துமாவில் நடைபெறவில்லை என்றால் அது சரீரத்திலோ அல்லது ஆவியிலோ எந்த மாற்றமும் இருக்காது.

பிரபஞ்சத்துக்கு அடிமையாகாமல் தேவன் நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்து அதற்கேற்ப செயல்பட நம்மை அர்ப்பணித்தல் வேண்டும். இல்லையெனில் நமது பிரபஞ்சம் நம்மைத் தேவ சித்தம் செய்ய இயலாதவர்களாக்கி, நாம் படைக்கப்பட்டதின் நோக்கத்தை முற்றிலும் இழந்தவர்களாய் மாற்றும்.

**ஆவி**

அடுத்ததாக வருவது ஆவி. நாம் மறுபடி பிறக்கும்போது புதிய ஆவியோடு புதிதாகப்

பிறக்கிறோம். நாம் சில சமயங்களில் ஊழியத்துக்குச் செல்லும்போது ஆத்தும ஆதாயம் செய்யப்போகிறேன் என்று சொல்வதுண்டு. நான் "ஆவி ஆதாயம்" செய்கிறேன் என்று சொல்வதில்லை. ஏனெனில் 'ஆத்மா' தான் தேவனைச் சேவிக்க வேண்டிய தீர்மானம் எடுக்க வேண்டும். அப்போதுதான் சரீரமும் ஆவியும் அதனோடு இணைந்து தேவனைச் சேவிக்கும். ஆத்துமாவில் தீர்மானம் இல்லையெனில் எந்த ஒரு பலனையும் நம்மில் காண இயலாது.

எபிரெயர் 4:12 இதைக் குறித்து இவ்வாறு கூறுகிறது: "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."

## தியாகம் இல்லாமல் ஆராதனை இல்லை

ஆகவே தேவ வார்த்தை மட்டுமே நமது ஆவி ஆத்துமாவின் எண்ணங்களை செயல்பாடுகளை வகையறுக்க இயலும். நாம் எவ்வாறு ஆவியில் ஆராதனை செய்வது? இதற்கு ஆதாரமாக ஆதியாகமம் 22-ஐ எடுத்துக்கொள்ளலாம். 75 வயதில் அழைக்கப்பட்டு 95 வயதுவரை பிள்ளை இல்லாதவனாய் இருந்து 100 வயதில் பிள்ளை பெற்ற ஆபிரகாமை நோக்கி தேவன் அவனது ஒரேபேரான குமாரனை

> ஆராதனை என்பது தியாகம் அல்லது தனக்கு பிரியமான ஒன்றை தேவனுக்கு கொடுப்பது அல்லது தேவனுக்காக இழப்பது என்று பொருள்படும்.

மோரியா மலையில் பலியிட ஆணையிட்டார். ஆபிரகாமும் அவரது குமாரனும் மூன்று நாள் பிரயாணமாக மோரியா மலைக்குச் செல்லும்போது அவர்கள் இருவரும் பல விஷயங்களைப் பேசி இருந்திருப்பார்கள். அப்பொழுது வேத அறிஞர்கள் கூற்றுபடி ஈசாக்கு 30 வயதிற்கு மேற்பட்டவனாக இருந்திருக்க வேண்டும். ஈசாக்கு ஆபிரகாமிடம் "விறகு இருக்கிறது, நெருப்பு இருக்கிறது. பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே?" என்று வினவியபோது "தேவன் பார்த்துக்கொள்வார்" என்று கூறி வேலைக்காரனிடம் "மலையில் தேவனை ஆராதித்து விட்டுவிட்டு திரும்பி வருவோம்" என்று சொல்லி சென்றார். பலி கொடுக்கச் சென்ற ஆபிரகாம், தேவனைத் தொழுது விட்டு வருவேன் என்று சொன்னார். இதிலிருந்து ஆராதனை என்பது தியாகம் அல்லது தனக்குப் பிரியமான ஒன்றைத் தேவனுக்குக் கொடுப்பது அல்லது தேவனுக்காக இழப்பது என்று பொருள்படும்.

பொதுவாக மக்களுக்கு இதைச் சொன்ன உடனே நினைவில் வருவது பணம்தான். பணமும் தேவைதான். ஆனால் தேவன் எதிர்பார்ப்பது நமது நேரம், ஆற்றல், தாலந்துகள், திறமைகள். ஆகவே தியாகம் இல்லையெனில் தொழுகையோ, ஆராதனையோ முழுமை பெறாது.

உயர்வான ஒன்றுக்காக, சமூக நன்மைக்காக மற்றவர்களின் நலன் சார்ந்த தேவ சித்தத்திற்கு நம்மை அர்ப்பணித்து 'தியாகம்' என்று கூறலாம். இந்தத் தியாகம் நமது வேலை, பெற்றோர், குழந்தைகள், வியாபாரம், பொருட்கள், பொழுதுபோக்கு, பழக்க வழக்கம், பண்பாடு ஏதேனும் ஒன்றையோ அல்லது பலவற்றையோ தேவனுக்காகத் தியாகம் செய்வது என்று பொருள்படும்.

யோபுவின் வாழ்க்கையில் ஒன்றின்பின் ஒன்றாக எல்லாவற்றையும் இழந்து தன் முடியைச் சிரைத்துக்கொண்டு தரையில் விழுந்து தேவனைப் பணிந்து கொண்டான். எவ்வளவு அழகான உன்னதமான ஆராதனை!

எல்லாவற்றையும் உடையவராகிய தேவனுக்கு நாம் என்னத்தைத்தான் செய்துவிடமுடியும்? நாம் நமது

> தியாகம் இல்லையெனில் தொழுகையோ, ஆராதனையோ முழுமை பெறாது.

மனைவிக்கோ, கணவனுக்கோ ஒரு பரிசை வாங்கிக் கொடுத்தால் அது அவர்களுக்கு நாம் எதிர்பார்க்கிற அளவு மகிழ்ச்சியைக் கொடுத்தது இல்லை. ஆனால் நம்மைப் படைத்து, பாதுகாத்து, வழிநடத்துகிற தேவனுக்கு நாம் என்ன பரிசைக் கொடுத்துவிட முடியும்?!

“இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை.” என்று கூறுகிறார் (மத்தேயு 22:37,38).

இதையே மாற்கு 12:30 கூறுகிறது. தேவன் அவரை முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் முழு பலத்தோடும் அன்புகூர எதிர்பார்க்கிறார்.

முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட மக்களைத் தேவன் தேடுகிறார்: “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்”(1 கொரிந்தியர்6:19,20). ஆகவே ஆவியினால் ஆராதனை செய்ய தேவ வார்த்தையினால் நமது மனதைப் பழக்க வேண்டும்.

வெளிப்படுத்தல் 4:10,11 பரலோகத்தில் செய்யப்படும் ஆராதனையைக் குறித்துக் கூறுகிறது: “இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்.”

**தேவனை ஆராதிப்பது நமது கடமையும் பொறுப்புமாயிருக்கிறது. நாம் அவைகளைச் செய்யாததன் காரணம் தேவனைப் பற்றிய பயமும் பக்தியும் நம்மிடம் இல்லாமையே. சில சமயங்களில் நம்மை பற்றி தேவன் யாரோ ஒருவர் மூலமாக ஒரு தீர்க்கதரிசனமோ, எச்சரிப்போ கொடுக்கும்போது நாம் பரவசம், ஆச்சரியம், ஆறுதல் அடைகிறோம். ஆனால் அடுத்தடுத்த வாரங்களில் மறக்கப்பட்டு பழக்கவழக்கங்களாக மாறி விடுகிறது. எவ்வளவு துக்ககரமான காரியம்?**

## உடல், ஆன்மா, ஆவி ஆகியவற்றால் தேவனை ஆராதிப்பது எப்படி?

அநேக நேரங்களில் தேவன் எவ்வளவு பெரியவர், எத்தனை மகத்துவம் உள்ளவர் என்பதை மறந்து அவருக்குக் கொடுக்க வேண்டிய கனத்தை, கவனத்தைக் கொடுக்காமல் அவரை உதாசீனம் செய்கிறோம் என்பதை நினைத்து நம்மை சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவ வல்லமையை, தேவ கோபத்தைக் கண்ணாரக்கண்டு பயந்தார்கள். புதிய ஏற்பாட்டு

விசுவாசிகளாகிய நாம் தேவனை அப்பா பிதாவே என்று அழைக்கக்கூடிய புத்திர உரிமையைக் கொடுத்த தேவனை நன்றியோடும், பயபக்தியோடும் சேவித்து தொழுது கொள்ள வேண்டுமே...!

இயேசுகிறிஸ்து பூமியில் இருந்தபோது அவருடைய மார்பில் சாய்ந்து அவருக்குப் பிரியமான சீஷனாய் வாழ்ந்த யோவான் அப்போஸ்தலன் அறுபது வருடங்களுக்குப் பின் பத்மூ தீவில் அவரைத் தரிசனத்தில் கண்டபோது "நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்" (வெளிப்படுத்துதல் 1:17) என்று அறிக்கையிடுகிறார். ஆகவே நாம் தேவனுடைய ஆலயத்தில் நிற்கும்போதோ அல்லது தனி ஜெபத்திலோ மற்ற காரியங்களான இசை, ஆராதனை நடத்துபவர், மற்ற காரியங்களைப் பார்க்காதபடி அகில உலகத்தையும் படைத்த தேவாதி தேவனுடைய சந்நிதியில் நிற்கிறோம் என்ற உணர்வு நமக்கு மிகவும் அவசியம். ஆராதனையில் அது சரியில்லை, இது சரியில்லை என்று குறை கூறுவதை விட்டுவிட்டு, நமது கண்கள் தேவனை மட்டுமே பார்க்கட்டும். ஆலயத்தில் தேவன் மட்டுமே உயர்ந்திருப்பாராக!

"கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர். என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்"(சங்கீதம் 139:1-3).

"எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" (ரோமர் 8:7).

நான் நன்றாய்ப் பாடுகிறேன், நான் மிக அழகாக இசை இசைக்கின்றேன் என்ற எண்ணம்கூட நாம் தேவனை ஆராதிப்பதற்குத் தடை செய்கிறது. ஆகவே ரோமர் 12:2இல் சொல்லப்பட்டபடி "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகி" வாழ முயற்சி எடுப்போம்.

## தேவன் - நமது ஆராதனையின் இலக்கு

மத்தேயு 6:6 நாம் எப்படி தேவனைத் தேட வேண்டும் என ஆலோசனை சொல்கிறது. "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்."

"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3). ஆகவே அவரை உறுதியாய் பற்றிக் கொள்ள ஜாக்கிரதையாய் இருப்போம். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மை யோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் (யோவான் 4:24).

நம்மை விட்டு நமது பார்வையை, கவனத்தைத் தேவன்மேல் வைப்போமானால்

தேவனுடைய கிருபையை எந்நாளும் அனுபவிக்கலாம்.

2 கொரிந்தியர் 3:17 இவ்வாறு கூறுகிறது: “கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.” தேவன் கொடுக்கும் விடுதலையை நாம் அனுபவித்து மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிப்போம்.

**ஜெபித்தல், கொடுத்தல், பரிந்து பேசுதல், சுவிசேஷம் அறிவித்தல் என்ற பல வகையான ஊழியங்களில் நாம் தேவனிடம் செல்கிறோம். ஆனால் ஆராதனை ஊழியத்தில் தேவன் நம்மிடம் வந்து நமது ஆராதனையை ஏற்றுக்கொள்கிறார். இது எத்தனை ஆச்சரியமான காரியம் பாருங்கள்!**

ஒரு சர்வதேச கால்பந்தாட்ட போட்டி லண்டனில் நடைபெற்றபோது பதினைந்தாயிரம் ஜெர்மானியர்கள், பல மடங்கு பணத்தைச் செலவழித்து பல்வேறு விதமான இன்னல்களைக் கடந்து சில மணிநேரம் நடக்கக்கூடிய ஆட்டத்திற்கு ஒரே விதமான உடைகளை அணிந்து பார்வையாளர்களாக வருகிறார்கள் என்றால் இதன் காரணம் தான் என்ன? அது விளையாட்டின் மீது உள்ள பற்று. தங்கள் நாடு விளையாடுகிறது என்ற அதீத அன்பினால் உந்தப்பட்டு வருகின்றனர். ஆனால் நம்மிடம் அந்த உந்தித் தள்ளும் அன்பு காணப்படுகிறதா? நம்மை உருவாக்கி தூக்கி சுமந்து, தப்புவிக்கும் தேவனை நாம் உண்மையாக நேசிக்கிறோமா?

1 யோவான் 4:19 தேவனுடைய விலையேறப்பெற்ற அன்பை வர்ணிப்பதைப் பாருங்கள். “அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.”

ஓசியா 6:6 தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஆராதனையை இவ்வாறு கூறுகிறது: “பலியை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும், விரும்புகிறேன்.”

யாத்திராகமம் 34:14 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பின் மிகுதியை இவ்வாறு கூறுகிறது: “கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே; ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்.”

தேவன் நம்மைக் குறித்து நம்மோடு உள்ள உறவைக் குறித்து இவ்வாறு கரிசனையோடு இருப்பாரானால் மண்ணான நாம் எத்தனையாய் அவரை நேசிக்க வேண்டும்? ரோமர் 6:13இன்படி வாழ்ந்தால் நம் வாழ்வு தேவனுக்குமுன்பாக பிரியமுள்ளதாய் இருக்கும். “நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.”

தேவனை தொழுதுகொள்வது சேவிப்பது நமது முதல் நோக்கமாய் இருக்குமானால் தோல்வி என்பது என்றும் நம் வாழ்வில் இல்லை என்பது உறுதி. நாம் எத்தனையோ குறிக்கோள்களை உருவாக்கி அதன் பின்னால் ஓடிக் கொண்டிருக்கிறோம். அது

> **“தேவனை தொழுதுகொள்வது சேவிப்பது நமது முதல் நோக்கமாய் இருக்குமானால் தோல்வி என்பது என்றும் நம் வாழ்வில் இல்லை என்பது உறுதி.”**

நமது செழிப்பான வாழ்க்கைக்காகவோ அல்லது நமது வெற்றிகரமான தொழிலுக்காகவோ இருக்கலாம். அதில் தவறொன்றும் இல்லை. எனினும் இவைகள் எல்லாவற்றிலும் தேவனுக்கு மகிமையைச் செலுத்தி வாழும்போது நமது வாழ்வு சரியான திசையில்தான் செல்லும் என்பது உறுதி. கொலோசெயர் 3:24 இதையே நமக்கு சொல்கிறது,“எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.” ரோமர் 12:1இல் சொல்லப்பட்டபடியே நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் எந்தச் செயலைச் செய்தாலும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து அவரிடத்தில் அன்பு செலுத்தி வாழும் உயர்ந்த வாழ்க்கை நெறியைப் பின்பற்றுவோம்.

2 கொரிந்தியர் 5:9 இவ்வாறு கூறுகிறது. “அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.”

தேவன் நம்மேல் வைத்த அன்பை எபேசியர் 1:6 இவ்வாறு கூறுகிறது: "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்."

அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்ததின் நிமித்தமாக பரலோகத்தில் நன்றிப்பாடல் தினமும் ஏறெடுக்கப்படுகிறது இவ்விதமாக: "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" (வெளிப்படுத்தல் 4:11).

**சுயபரிசோதனைக்கான கேள்விகள்**

1. ❑ நீங்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தினமும் தொழுது கொள்கிறீர்களா?
2. ❑ நீங்கள் காலையில் எழுந்தவுடன் உங்கள் சிந்தையை நிறைக்கும் முதல் காரியம் என்ன?
3. ❑ நீங்கள் பயப்படுவது யாருக்கு?
4. ❑ தேவனுக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய், நேர்மையாய் இருக்கிறேன் என்ற உறுதி உங்களுக்கு உண்டா?
5. ❑ நீங்கள் மனிதர் முன்பாக செய்கிற செயல்களும் தனிமையாக இருக்கும்போது செய்கிற செயல்களும் தேவனுக்கு பிரியமாயிருக்குமா?
6. ❑ நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்களா?

கர்த்தாதி கர்த்தரையும் ராஜாதி ராஜாவையும் ஆராதிக்க வேண்டிய நேரம் இதுவே ஆகும்.

## தேவனுக்கு நமது பதிற்செயலாக ஆராதனை

"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்கீதம் 147:11).

தினமும் நாம் வாழ்நாள் முழுவதும் எல்லாக் காரியத்திலும் கர்த்தருக்குப் பயந்து, அன்பு செலுத்தி, தீமையை விட்டு விலகி தேவனுக்குப் பிரியமாயிருக்க நாடுவோம். புத்தியுள்ள ஆராதனை செய்ய கவனமாயிருப்போம்.

## நோக்கம்

# ஊழியம்

நாம் சாதாரண மக்கள் ஆனால் அசாதாரணமான காரியங்களைச் செய்யக் கூடியவர்கள். நாம் இருக்கும் இடத்தில் ஒரு மாறுதலையும் ஆண்டவருடைய இராஜ்ஜியத்தையும் ஸ்தாபிக்கிறவர்கள். ஏனென்றால் நாம் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றவர்கள். ஆவியானவர் நமக்குள்ளிருந்து கிரியை நடப்பிக்கிறார் (1 யோவான் 4:4). எனக்குள்ளிருப்பவர் இந்த உலகத்திலிருப்பவனைக் காட்டிலும் பெரியவர். தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்'' (எபேசியர் 1:6).

தேவன் நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தன்னுடைய பிள்ளைகளாகத் தெரிந்து கொள்ளும்படி முன்குறித்திருக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகள். ஒரே குடும்பத்தில் வாழும் ஒவ்வொருவரும் தகப்பனுடைய நோக்கம் என்னவோ அதை நிறைவேற்றுபவராகத்தான் வாழ வேண்டும்.

> ‘‘நாம் சாதாரண மக்கள் ஆனால் அசாதாரணமான காரியங்களை செய்யக் கூடியவர்கள். நாம் இருக்கும் இடத்தில் ஒரு மாறுதலையும் ஆண்டவருடைய இராஜ்ஜியத்தையும் ஸ்தாபிக்கிறவர்கள்.’’

அப்பா பிள்ளைகள் உறவில் செய்யக்கூடிய காரியம் இது. தகப்பன் பேச்சைக் கேட்காத பிள்ளைகளுள்ள வீடு எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய தகப்பனாகிய தேவன் என்ன காரண காரியங்களுக்காக ஒன்றைச் செய்ய நினைக்கிறாரோ அந்த நோக்கில் பிள்ளைகளாகிய நாம் செயல்பட்டால்தான் குடும்ப உறவு நிலைக்கும். ‘‘ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்கிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை

விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாக அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே" (ரோமர் 10:13-15).

இந்த வசனங்களை பின்பகுதியிலிருந்து பார்க்க வேண்டும். முதலாவது அனுப்பப்பட வேண்டும். அனுப்பப்படுகிறவன் பிரசங்கிக்க வேண்டும். பிரசங்கம் பண்ணினால்தான் கேள்விப்படுவார்கள். கேள்விப்பட்டால்தான் விசுவாசிப்பார்கள். விசுவாசித்தால்தான் இரட்சிக்கப்படுவார்கள். இரட்சிக்கப்பட்டால்தான் ஆண்டவரைத் தொழுது கொள்ளுவார்கள்.

ஒருவன் இரட்சிக்கப்படவேண்டும் என்றால் அதன் முதல்படி ஒருவர் அனுப்பப்பட வேண்டும்.

2 கொரிந்தியர் 5:18இல் "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி ஒப்புரவாகுதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்தார்" என்று பார்க்கிறோம்.

தேவன், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மை ஒப்புரவாகச் செய்கிறார். சமாதானம் பண்ணச் செய்கிறார். இப்படி நாம் அவரோடு ஒப்புரவாகிறதினாலே நமக்கு ஒப்புரவாகுதலின் ஊழியத்தைக் கொடுத்துவிட்டார்.

தேவைகளின் அடிப்படையில்தான் ஒவ்வொரு புதிய பொருளும் உருவாக்கப்படுகிறது. பொருட்களை உருவாக்கி விட்டு, அதன்பின்பு அதை எப்படிப் பயன்படுத்துவது என்று யாரும் யோசிப்பது இல்லை.

தேவை அல்லது நோக்கத்தின் அடிப்படையில் பொருட்கள் உருவாக்கப்படுவதுபோல நம்முடைய தேவனும் நம்மை ஒரு நோக்கமில்லாமல் அவரது குடும்பத்தில் பிள்ளைகளாய் உருவாக்கவில்லை.

ஒவ்வொரு தேவ பிள்ளையைக் குறித்தும் அவர்களைக் குறித்த தேவசித்தம் தேவனுக்குத் தெளிவாய்த் தெரியும். அதை அறிந்துகொள்ள வேண்டியது அவரவரது காரியம். ஆண்டவர் ஒரு நோக்கத்தோடுதான் என்னைப்

> "நாம் ஒவ்வொருவரும் படைப்பிலே எப்படி தனித்தன்மையோடு படைக்கப்பட்டிருக்கிறோமோ அதேபோல நாம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பும் வித்தியாசமானது."

படைத்திருக்கிறார். நோக்கமில்லாமல் நான் சிருஷ்டிக்கப்படவில்லை என்று அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தேவன் எல்லாத் தேவ பிள்ளைகளையும் ஒரே நோக்கத்திற்காகத் தெரிந்து கொண்டாரா? இல்லை. நாம் ஒவ்வொருவரும் படைப்பிலே எப்படி தனித்தன்மையோடு படைக்கப்பட்டிருக்கிறோமோ அதேபோல நாம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அழைப்பும் வித்தியாசமானது.

நான் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நோக்கத்தை அல்லது அழைப்பைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். சிறு பிள்ளைகள் புதிர்களுக்கு விடைகாண துண்டுப் படங்களை இணைப்பதைப்போல நாம் ஒவ்வொருவரும் நம்மில் நாம் ஒவ்வொருவரின் பங்கும் நிறைவுபெறும்போது நம் அனைவரின் பங்கும் இணைந்து தேவநோக்கம் முழுமை பெறும்.

உதாரணத்திற்கு, நமது உடலில் கை, கால், வாய், தலை போன்ற ஒவ்வொரு உறுப்பும் அதனதன் வேலையைச் சரியாய்ச் செய்ய வேண்டும். ஒரு உறுப்பு மற்றொரு உறுப்பின் வேலையைச் செய்ய முடியாது. அப்படிச் செய்தால்தான் ஒரு மனிதனின் மொத்த சரீரமும் சரியாய்ச் செயல்பட முடியும்.

அதேபோல நாம் ஒவ்வொருவரும் நமக்குக் குறிக்கப்பட்ட தேவ நோக்கத்தை நிறைவேற்றினால்தான் முழு சரீரமாகிய சபை சரியாய் முன்னேறிச் செல்ல இயலும்.

“உங்களுக்குச் சமாதானம் உண்டாகட்டும், பிதா என்னை அனுப்பினதுபோல நான் உங்களை அனுப்புகிறேன்” (யோவான் 20:21). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து

> “நாம் ஒவ்வொருவரும் நமக்கு குறிக்கப்பட்ட தேவ நோக்கத்தை நிறைவேற்றினால் தான் முழு சரீரமாகிய சபை சரியாய் முன்னேறி செல்ல இயலும்.”

பூமியில் வாழ்ந்தபோது எதைச் செய்தாரோ அதை செய்யத்தான் நம்மை அனுப்பியிருக்கிறார். இயேசுகிறிஸ்து எப்படி வாழ்ந்தார், என்னென்ன செய்தார் என்பதைப் புரிந்து கொண்டால் நாமும் அதைப்போல செய்ய முடியும்.

“நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்” (யோவான் 15:16).

“நீ உன் தாயின் கருவில் உருவாகும் முன்பே உன்னைத் தெரிந்து கொண்டேன். நீ இந்தப் பூமிக்கு வரும் முன்பே நான் உன்னை அழைத்தேன். உன்னைத் தேசங்களுக்கு ஒரு தீர்க்கதரிசியாய் நியமித்தேன்” (எரேமியா 1:5). அவன் தாயின் கருவில் உருவாவதற்கு முன்பே 3 காரியங்களையும் கூறுகிறார்.

சங்கீதம் 139இல் தாவீது “நான் பிரமிக்கத்தக்க வகையில் அதிசயமாய்ப் படைக்கப்பட்டேன்” என்று சொல்வதற்கு முன்பு “நான் ஒளிப்பிடங்களில் உருவாவதற்கு முன்பே என்னை அறிந்திருக்கிறீர்” என்கிறார். ஆக தேவன் நாம் உருவாவதற்கு முன்பே நம்மை அறிந்து வைத்திருக்கிறார். நாம் அறிந்து கொள்ளவில்லை.

யோவான் 15:16இல், “நீங்கள் என் நாமத்தினால் பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக்

கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண்டவருக்காக நாம் என் செய்ய வேண்டும் என்பதைக் குறித்து மாத்திரம் குறிப்பிடாமல் நம்முடைய வாழ்க்கையில் கனி கொடுக்கிறவர்களாயும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். நாம் கொடுக்கும் கனி நல்ல கனியாய், கடைசிவரை நிலைத்திருக்கிற கனியாய் இருக்க வேண்டும். நல்ல கனிகள் நிறைந்த வாழ்க்கை அவசியம் என்றால், இன்றைக்கு ஆண்டவருக்காக ஊழியம் செய்கிறவர்களில் பலருடைய வாழ்க்கையில் இந்தக் கனி கொடுக்கிற அனுபவம் இல்லை.

நன்றாக பிரசங்கம் பண்ணுவார்கள், இசை இசைப்பார்கள், ஆராதிப்பார்கள் மற்றும் அநேக காரியங்களைச் செய்வார்கள். மத்தேயு 7:20-24இல் ''கர்த்தாவே! உமது நாமத்தினால் தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா?'' என்றபோது ஆண்டவர் ''உங்களை நான் ஒருக்காலும் அறியவில்லை'' என்று ஏன் கூறுகிறார் என்று யோசித்துப் பாருங்கள்.

கனி கொடுக்கிற வாழ்க்கை அவர்களில் இல்லாததினாலேயே!

**நாம் ஆண்டவருக்காய் ஊழியம் செய்வது மாத்திரம் போதாது. கனி கொடுக்கிற வாழ்க்கையும் தேவை. இந்த இரண்டும் சம நிலையில் இருந்தால்தான் சரியாய் ஆண்டவருக்குப் பிரியமான விதத்தில் ஊழியம் செய்ய இயலும். சாட்சியுள்ள வாழ்க்கை ஊழியத்தின் அடிப்படையான, அத்தியாவசியமான ஒன்று.**

இயேசுகிறிஸ்துவைப்போல வாழ, நடக்க, ஊழியம் செய்ய அழைக்கப்பட்டுள்ள நாம் கனி கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட விலையேறப்பெற்ற ஊழியத்தைச் செய்ய நம்மைத் தேவன் வெறுமையாய் அனுப்புவாரா?

சாதாரண தலைவலி மாத்திரை விற்பனை செய்யும் ஒரு நிறுவனம் அதை விற்பனை செய்யும் ஊழியருக்கு வாகனம் கொடுத்து, டை, ஷீ எல்லாம் கொடுத்து எல்லாம் கொடுத்து, எல்லா விதத்திலும் தயார் செய்து மருத்துவர்களிடம் அனுப்புகிறது. அப்படியிருக்கும்போது நித்திய வாழ்க்கையைக் குறித்து பிரசங்கிக்க, நரக அக்கினியிலிருந்து ஜனங்களை மீட்க உங்களைப் பயன்படுத்தும் தேவாதி தேவன் உங்களைச் சும்மா அனுப்பி விடுவாரா?

அனுப்பவே மாட்டார். அது நமக்குத் தெரிய வேண்டும். நம்மை ஒரு நோக்கத்தோடு படைத்திருக்கிறார். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு நம்மை வெறுங்கையோடு அனுப்பமாட்டார். ஏற்கெனவே நமக்கு என்னவெல்லாம் கொடுத்திருக்கிறார் என்று பார்ப்போம்:

மத்தேயு 28:18-20இல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ''வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான்




உங்களுடனேகூட இருக்கிறேன். ஆமென்!'' என்கிறார்.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இந்தப் பூமியில் வாழும் நமக்குள்ளே சகல அதிகாரமும் உள்ள இயேசுகிறிஸ்து இருக்கிறார். சதாகாலமும் உங்களோடு இருக்கிறார். ஆகையால் நீங்கள் புறப்பட்டுபோய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்கிறார். அதிகாரம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**அடிக்கடி இயேசுகிறிஸ்து பயன்படுத்திய இரண்டு வினைச் சொற்கள் உண்டு. ஒன்று ''வா'' மற்றொன்று ''போ''. எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் என்னிடத்தில் ''வா'' என்று அழைக்கிறார். அவரிடத்தில் வந்த பின்பு பவாங்கள் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று ஒரு வல்லமையான பரிசுத்தவானாய் மாறிய பிறகு வெளியே போக வேண்டும்.**

மத்தேயு 28:20இல் ''நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்'' என்றார். நான் சொல்லிக் கொடுத்ததை நீங்கள் சொல்லி அதை அவர்கள் செய்யக்கூடியவர்களாய்

மாற்றுங்கள் என்கிறார்.

இன்றைய சபைகளில் விசுவாசிகளை உருவாக்கி வைத்திருக்கிறோம். ஆனால் ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்படிகிறவர்களை உருவாக்கத் தவறி விட்டோம். இன்றைக்குச் சபைகள் முழுவதும் விசுவாசிகள்தான். வேதத்தில் யாக்கோபு 2:19இல் “பிசாசுகளும் தேவனை விசுவாசிக்கின்றன” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு மாத்திரமல்ல அவைகள் தேவனைக் கண்டு நடுங்குகின்றன என்றும் சொல்லப்பட்டுள்ளது.

நம்மைவிட தேவனை விசுவாசித்து பிசாசு நடுங்குகிறான் என்றால் அவன் விசுவாசியா?

கிறிஸ்தவத்தில் விசுவாசி என்பது ஒரு தகுதியல்ல. நீங்கள் ஆண்டவருடைய வார்த்தையைக் கைக்கொண்டு சீஷர்களாய் மாறுவதுதான் முக்கியம்.

அப்போஸ்தலர் 1:8இல் “பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்” என்றார்.

மத்தேயு 28ஆம் அதிகாரத்தில் நமக்கு கொடுக்கப்படும் அவருடைய அதிகாரத்தைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 1:8இல் நமக்கு கொடுக்கப்படும் ஆண்டவருடைய வல்லமையைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரம் மற்றும் வல்லமை ஆகிய இரண்டும் வித்தியாசமான அர்த்தமுள்ளவை.

உதாரணத்திற்கு, ஒரு யானைக்கு இருப்பது வல்லமை. அதை செலுத்தக்கூடிய பாகனுக்கு இருப்பது அதிகாரம். ஐந்து பேரைத் தூக்கிக்கொண்டு 100 கீ.மீ. வேகத்தில் என்னால் ஓட முடியாது. அதே சமயம் ஐந்து பேரைச் சுமந்து செல்லும் வல்லமையுள்ள வாகனம் என்னிடமுள்ளது. அதை ஓட்டிச் செல்லும் அதிகாரம் என்னிடம் இருக்கிறது.

“இன்றைய சபைகளில் விசுவாசிகளை உருவாக்கி வைத்திருக்கிறோம். ஆனால் ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவர்களை உருவாக்க தவறி விட்டோம்.”

**ஆண்டவர் பரிசுத்த ஆவியின் மூலம் எனக்கு வல்லமை கொடுத்திருக்கிறார். அதன்மூலம் நல்ல சாட்சியாக மாறுவேன். அவர் என்னோடு இருப்பதால் எனக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அவர் கட்டளையிட்ட காரியங்களைச் செய்ய நான் செல்வதால் எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக எனக்கு வல்லமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

லூக்கா 10:2,3இல் சீஷருக்கு அதிகாரமும் வல்லமையும் கொடுத்து அனுப்பினதைப் பார்க்கலாம். அப்போஸ்தலர் 1:8இல் “நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” என்று ஆண்டவராகிய இயேசு சொல்வதைப் பார்க்கிறோம்.

நமக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பு, நோக்கம் அல்லது தரிசனம் என்னவென்றால் அது இந்த உலகம் முழுவதும்தான். நமது அழைப்பு நாம் வசிக்கும் பகுதியோ, மக்களோ மட்டுமல்ல. உலகம் முழுவதும் சென்று நாம் சுவிசேஷத்தை சொல்லக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

> “நமது அழைப்பு நாம் வசிக்கும் பகுதியோ, மக்களோ மட்டுமல்ல. உலகம் முழுவதும் சென்று நாம் சுவிசேஷத்தை சொல்லக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்.”

**இதை மூன்று விதமாக பிரிக்கலாம்.**










அப்போஸ்தலர் 1:8இல் குறிப்பிடப்பட்டுள்ள எருசலேம் அவர்கள் வாழ்ந்த பகுதி. சமாரியா, யூதேயா அவர்களைச் சுற்றியிருந்த பகுதிகள். கடைசியாக உலகம் முழுவதும் சென்று அறிவிக்க சொல்லப்பட்டுள்ளது. நமது தொலைநோக்குப் பார்வை இந்த உலகம் முழுவதும் தேவனுடைய இராஜ்ஜியம் வரவேண்டும் என்பதாய்த்தான் இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் நடக்கிற சம்பவங்களையும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களையும் குறித்த ஒரு ஆழமான அறிவு நமக்குள் இருந்தால், நாம் அதற்காக திறப்பின் வாசலில் நிற்க ஆரம்பித்து விடுவோம். நம் சபைகளுக்குள் இருக்கும் தேவையில்லாத பிரச்சனைகளை ஒதுக்கி விடுவீர்கள்.

இன்று சபைகளுக்குள் அநேக பிரிவுகளும், பிரிவினைகளும் வந்ததற்குக் காரணம் சின்னச் சின்ன தேவையற்ற காரியங்கள்தான். அதனால் கிறிஸ்துவின் சபை பிரிந்து கிடக்கிறது.

**உலகம் முழுவதும் இருக்கும் 7 பில்லியன் மக்களையும் நாம் சென்றடைய வேண்டும் என்று ஒரு மிகப்பெரிய தேவை இருக்கும்போது, நமது சபைகளுக்குள் இருக்கும் 200 அல்லது 500 விசுவாசிகளின் பிரச்சனைகளையே பெரிதாக்கி பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை.**

சபைப் பிரிவுகளின் வேறுபாடுகளைப் பெரிதாக்கிப் பார்க்காமல் மற்றவர்களோடு இணைந்து செயல்பட ஆரம்பிப்போம்.

**உலகம் முழுவதும் நாம் தொட வேண்டும் என்ற மேலான சிந்தை உங்களுக்குள் வந்து விட்டாலே சின்னச் சின்ன காரியங்களை ஒதுக்கி விடுவீர்கள். உங்கள் சிந்தை தெளிவு பெறும்.''எனக்கு சபையில் உரிய மதிப்பில்லை என்றோ, மற்றவர்கள் நம்மைச் சரியாக நடத்தவில்லை'' என்றோ சின்னச் சின்ன விஷயங்களைப் பெரிதுபடுத்தமாட்டீர்கள். உலகம் முழுவதும் நீங்கள் செய்ய வேண்டிய வேலை அதிகம் உள்ளது.**

ஏசாயா 14:24,26இல் இந்த மொத்த உலகத்திற்கும் நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன் என்று ஆண்டவர் கூறுகிறார். உலகம் முழுவதும் இருக்கிற மக்களை இரட்சிக்கும்படியாக காரியங்கள் புறப்பட்டுப்போக வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம் தகப்பனின் நோக்கத்தை விருப்பத்தை நிறைவேற்றுகிறவர் களாய் மாற வேண்டும். அவரது கட்டளைக்குக் கீழ்படிந்தால் இது சாத்தியம்.



## ஊழியம் விரிவடைய

உலகம் முழுவதும் நமது ஊழியம் விரிவடைய நாம் செய்ய வேண்டிய நான்குகாரியங்களை பார்ப்போம்.

### 1. ஜெபித்து ஆட்களை அனுப்புவது

ஜெபம் என்பது மிக மிக முக்கியம். ஜெபம் என்பது நமது சுவாசம் போன்றது. ஜெபிக்காத மனிதன் ஆவிக்குரிய வாழ்க்கையில் செத்து விடுவான்.

மொத்த உலகத்திற்கும் தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்றால் தம் தகப்பனாகிய அவரிடம் அதை நிறைவேற்ற ஜெபித்து கேட்க வேண்டும். நம் தகப்பனுடைய திட்டங்களை அறிந்துகொள்ள நாம் ஜெபிக்க வேண்டும். அப்போது அவர் நமக்கு அதை வெளிப்படுத்துவார். நாம் அதைச் செயல்படுத்த வேண்டும். அவ்வளவுதான்.

மத்தேயு 9:37,38 அறுவடை மிகுதி, ஆட்களோ குறைவு. அதற்காக ஜெபிக்கக் கூறுகிறார். லூக்கா 10:1,2 அறுவடை மிகுதி, ஆட்கள் வேண்டும், ஜெபி.

ஒரு மனிதன் எப்பொழுது அடுத்தவர்களுக்காக ஜெபிக்க ஆரம்பிப்பான் என்றால் அவனுக்கு அவன் பெற்ற இரட்சிப்பின் மேன்மை தெரிந்தால் மட்டுமே. பாதாளத்தை நோக்கி, நித்திய அழிவுக்கு போய்க் கொண்டிருந்த என்னை மீட்டெடுத்து 'அப்பா, பிதாவே' என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். சிலுவை மரணத்தில் இரத்தம் சிந்தி என்னை மீட்ட ஆண்டவரை இந்த உலகத்தில் அழிந்து கொண்டிருக்கிற ஜனங்கள் எப்படியாவது சந்திக்க வேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட

“ ஆத்ம பாரத்தோடு ஜெபிக்க வில்லை என்றால் நாம் பெற்ற இரட்சிப்பை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். ”

வேண்டும், அவர்கள் மனக்கண்கள் திறக்கப்பட வேண்டும் என்ற ஆத்ம பாரத்தோடு ஜெபிக்கவில்லை என்றால் நாம் பெற்ற இரட்சிப்பை நாம் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

வெளிப்படுத்தின விஷேசத்தில் “அங்கு உங்கள் கண்ணீரைத் துடைப்பார்” என்று சொல்லப்பட்டுள்ளது. பரலோகத்தில் கண்ணீர் வர வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நாம் பரலோகத்தில் இருக்கும்போது நமது நண்பர்களும் உறவினர்களும் பாதாளத்தில் அழுது புலம்பி “ஐயோ! எனக்கு ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே! அவர்தான் ஜீவனுள்ள தேவன் என்று சொல்லாமல் விட்டுவிட்டீர்களே!” என்று நம்மை பார்த்து புலம்பும்போது நம்மால் எப்படிக் கண்ணீர் விடாமல் இருக்க முடியும்? எனவே நமது ஜெபம் மிக மிக முக்கியம். எந்த ஒரு ஊழியத்திற்கும் அடிப்படையே ஜெபம்தான். அந்த ஜெபம் அழிந்து போகிற ஆத்துமாக்களைக் குறித்ததாக இருக்க வேண்டும். நம்மை மீட்டுக் கொண்ட ஆண்டவருடைய அன்பைப் புரிந்துகொண்டால் தானாக ஜெபிக்க ஆரம்பிப்போம்.

**2. ஊழியங்களில் பங்குதாரர்களாய் இருந்து செயலாற்றுவது.**

நம்மால் முடிந்த இடங்களுக்கு நாம் போய் ஊழியம் செய்ய வேண்டும். நாம்



போக முடியாத இடங்களுக்கு மற்றவர்களோடு பங்குதாரர்களாய் இணைந்து அதைச் செய்ய வேண்டும்.

3 யோவான் 8ஆம் வசனத்தில் “ஊழியம் செய்கிறவர்களோடு இணைந்து செயலாற்ற வேண்டும்” என்று கூறுகிறது. மத்தேயு 10:8 வசனம் “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்” என்கிறது.

நாம் அனுதினமும் போகிற இடங்களுக்கு, அலுவலகத்திற்கு, குடியிருக்கும் பகுதிகளுக்குச் சென்று இரட்சிப்பை அறிவிப்பது நாம் செய்ய வேண்டிய முதல் கடமை. உங்களால் போக முடியாத இடத்திற்கு, உதாரணத்திற்கு, வட இந்தியாவில் பீஹாரிலோ, ஒரிசாவிலோ அல்லது பாகிஸ்தான், ஆப்கான், கிழக்கிந்திய நாடுகளுக்கோ நாம் செல்ல வாய்ப்பில்லை என்றால், அங்கு ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்பவர்களோடு நாம் பங்குதாரர்களாகி, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்து ஜெபிப்பது.

“நான் தேவனிடத்தில் நன்மை பெற்றேன். ஆகவே அதைக் குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்கிறேன், என்ற நிலையில் சுவிசேஷம் அறிவிப்பதே நன்மை பயக்கும்.”

### 3. நமக்கு மிகவும் பழக்கமான நபர்களுக்காக தினமும் ஜெபிப்பது

அடுத்து செய்ய வேண்டியது நமக்கு மிகவும் பழக்கமான நான்கு, ஐந்து நபர்களின் பெயரை எழுதி வைத்து தினமும் ஜெபித்து, அவர்களுக்குச் சுவிசேஷம் அறிவித்து அவர்களைத் தேவ அன்புக்குள் கொண்டு வரலாம்.

பொதுவாக ஒரு சபையில் சுவிசேஷம் அறிப்பது போதகர் அல்லது சுவிசேஷகர்தான். இவர்கள் தவிர சுவிசேஷக்குழு என்று ஒன்று இருக்கும். மற்றவர் எவரும் சுவிசேஷம் அறிவிப்பதில் ஆர்வமின்றியோ பழக்கமின்றியோ இருப்பர். இது தவறான செயல். இதற்குக் காரணம் சுவிசேஷம் அறிவிப்பதற்குச் சம்பளம் கொடுப்பதுதான். நான் தேவனிடத்தில் நன்மை பெற்றேன். ஆகவே அதைக் குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்கிறேன் என்ற நிலையில் சுவிசேஷம் அறிவிப்பதே நன்மை பயக்கும். “யாரை நான் அனுப்புவேன், யார் என் காரியமாய் போவான்” (ஏசாயா 6:8) என்று தேவனுடைய அங்கலாய்ப்பின் குரலையும், அதற்குப் பதிலாக

நான் உமது மகிமையின் பிரஸ்தாபத்தைப் பூமியின் கடையாந்தரமட்டும் அறிவிப்பேன் என்று கூறப்பட்டுள்ளது. "நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார்" என்று வெளிப்படுத்தல் 1:5,6 இல் கூறப்பட்டுள்ளது. அடிப்படையிலேயே நம்மை ஆசாரியர்களாகத் தேவன் அழைத்ததினாலே நாமெல்லாரும் சுவிசேஷம் அறிவிப்பவர்களாக இருக்க தேவன் விரும்புகிறார். நாம் கூலிக்கு மாரடிப்பவர்களாக இல்லாமல், நாம் பெற்ற நன்மையின் அடிப்படையில் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிலையில் சுவிசேஷம் அறிவிப்பது நன்மை பயக்கும்.

2 கொரிந்தியர் 5:18-20இல் நாம் எங்கு, என்ன செய்ய வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது: "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்."

வேறு ஒரு நாட்டில் இருக்கக்கூடிய ஒரு இந்திய தூதரகத்தின் எல்லைக்குள் இந்திய அரசாங்கத்தின் சட்ட திட்டங்கள், உரிமைகள் சட்டப்படி நிலைநாட்டப்படுவதுபோல பரலோக ராஜாவின் மேன்மைகளை, அன்பை, இரட்சிப்பை உலகத்தில் கொண்டு வருகிற, சுமக்கிறவர்களாகத் தேவன் நம்மை அழைத்து இருக்கிறார். பாவத்தில் உழலும் மனிதர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பிதாவோடு ஒப்புரவாக்கக்கூடிய உபதேசத்தை, சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். தேவனுடைய தூதுவர்களாய் அழைக்கப்பட்ட நமக்கு, சாட்சியின் வாழ்க்கை மிகவும் அவசியம். பல்வேறு விதமான சந்தேகங்கள், தர்க்கங்களைச் சொந்த சாட்சியின் மூலம் மேற்கொள்ளலாம். நான் தேவனை ஏற்றுக்கொள்ளும்முன் இப்படி இருந்தேன். ஏற்றுக்கொண்ட பின் என் வாழ்க்கை நன்மையாக மாறியிருக்கிறது என்ற நமது சாட்சியின் முன் வேறு எதுவும் நிற்க முடியாது.

> "தேவனுடைய தூதுவர்களாய் அழைக்கப்பட்ட நமக்கு, சாட்சியின் வாழ்க்கை மிகவும் அவசியம். பல்வேறு விதமான சந்தேகங்கள், தர்க்கங்களை சொந்த சாட்சியின் மூலம் மேற்கொள்ளலாம். நான் தேவனை ஏற்றுக்கொள்ளும்முன் இப்படி இருந்தேன். ஏற்றுக்கொண்ட பின் என் வாழ்க்கை நன்மையாக மாறியிருக்கிறது என்ற நமது சாட்சியின் முன் வேறு எதுவும் நிற்க முடியாது."

> நாம் செய்தியை சொல்வதை விட்டு, நாமே ஒரு செய்தியாக மாறுவது உத்தமமானது. நாமே அவருடைய வல்லமைக்கு, அன்புக்கு சாட்சி அல்லது நிருபங்கள்.

லூக்கா 8:39இல் நெடுநாளாய் பிசாசுகள் பிடித்தவனும், வஸ்திரம் தரியாதவனும், வீட்டில் தங்காமல், பிரேதக் கல்லறைகளில் தங்கினவனுமாய் இருந்த ஒரு மனுஷன் கெனசெரேத்து கடலருகே, இயேசுவால் சுகமாக்கப்பட்டான். அவன் புத்தி தெளிந்து, வஸ்திரம் தரித்தவனாய், அவரோடு எப்போதும் இருக்க உத்தரவு கேட்டபோது, இயேசு அவனை நோக்கி "நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய் தேவன் உனக்கு செய்தவைகளையெல்லாம் அறிவி" என்று சொல்லி அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன் போய் தனக்கு செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தம் பண்ணினான். வேதம் தெரியாத வசனம் தெரியாத, சபைக்குச் செல்லாத அந்த மனிதன் ஒரு பெரிய சபையை உருவாக்கி, அந்தச் சபையிலிருந்து அநேகர் சுவிசேஷகர்களாக அனுப்பப்பட்டார்கள் என்று சபை சரித்திரம் கூறுகிறது. அப்படியென்றால், அவனுடைய சாட்சி வல்லமையுள்ளதாயிருந்தது என்பது புரிகிறதல்லவா? நம்முடைய சாட்சிகளை 2 நிமிட சாட்சி, 5 நிமிட சாட்சி, 10 நிமிட சாட்சி என பிரித்துக் கொண்டு நாம் மற்ற மக்களோடு இடைபடும் நேரத்தைப் பொறுத்து நமது சாட்சியைப் பகிர ஆயத்தமாய் இருக்க வேண்டும். நாம் செய்தியைச் சொல்வதை விட்டு, நாமே ஒரு செய்தியாக மாறுவது உத்தமமானது. நாமே அவருடைய வல்லமைக்கு, அன்புக்கு சாட்சி அல்லது நிருபங்கள்.

ஒரு நீதிமன்றத்தில், நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறில்லை என்று கூறி தான் பார்த்த காரியங்களைச் சாட்சிக் கூண்டில் நின்று சொல்வதைப்போல நான் இப்படி இருந்தேன், இயேசு என்னைத் தொட்டார். என் வாழ்க்கை மாறியது என்று சொல்வதே சாட்சி. "ஆகையால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படிஞ்" (2 தீமோத்தேயு 2:10), தேவனை அறியாமல் பாவத்தையும், சாபத்தையும் சுமந்து கொண்டிருக்கும் ஜனங்கள் நம்மூலம், நம் சாட்சியின் மூலம், தேவனை அறிந்து விடுதலை பெற்று சந்தோஷமாய் வாழ நம்மால் உதவ முடியும். தேவன் நம்மை இரட்சித்து, மீட்டு எடுத்ததன் நோக்கம் நமது வாழ்வின் மூலம் நிறைவேறுவதாக.

### நோக்கம்

# உங்கள் ஓட்டம்

தேவன் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பாதையை நியமித்திருக்கிறார். அந்தப் பாதையின் வழியே நாம் ஓடுவது நமக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது. நாம் வேதத்தை வாசிக்கும்போது, தியானிக்கும்போது வேத புருஷர்கள் எப்படி ஓடினார்கள் என்று அவர்கள் வாழ்க்கையில் நாம் கற்றுக்கொண்டு, அவைகளைப் பயன்படுத்தி நமது ஓட்டத்தைத் தடையின்றி சுணக்கமின்றி எப்படி ஓடுவது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

**நமது உள்ளங்கை ரேகை, நாக்கு ரேகை ஆகட்டும். எல்லாவிதத்திலும் தனித்துவமாக தேவனால் படைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருக்கென்றும் தனித்தன்மையான பாதைகளை ஓடும்படி நியமித்திருக்கிறார். ஒவ்வொரு விளையாட்டுக்கும் தனித்தனியான விதிமுறை கள், விளையாடும் நபர்களின் எண்ணிக்கை, விளையாட்டு பொருட்கள் இருப்பதைபோல நம்முடைய ஓட்டமும் தேவனால் தனித்தனியாக தனித்தன்மையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவரவர் ஓட்டத்தை அவர்தான் ஓடி முடிக்க வேண்டும்.**

ரோமர் 8:28,29 நம்முடைய ஓட்டம் என்ற தலைப்பிலான தியானத்திற்கு ஆதாரமாக உள்ளது. "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவரா யிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்."

வேதத்தில் இயேசுகிறிஸ்து ஒவ்வொரு செயலையும் ஒரு உவமானமாக குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக சபை என்பதைக் குறிப்பிடும்போது 'மணவாட்டி' என்றும், 'அப்பம்' என்றும், 'சரீரம்' என்றும். 'ஓட்டம்' என்றும் கூறப்படுகிறது.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோத்தேயு 4:7).

வாழ்க்கையை ஓட்டம் என்றும் ஓட்டத்தை வெற்றியை ஓடி முடிப்பவர்களுக்கு நித்திய ஜீவன் பரிசாக கொடுக்கப்படும் என்றும் குறிப்பிடுகிறார்.

இதைக்குறித்து மேலும் 1 கொரிந்தியர் 9:24-26 இவ்வாறு சொல்கிறது: “பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரிடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரிடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்.”

புகழ்பெற்ற அகில உலக கால்பந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் பெயரைக் கேட்டால் ஒரு இரண்டு மூன்று வருட வெற்றியாளர்களை மட்டுமே நம்மால் கூற முடியும். ஒரு குறுகிய கால வெற்றிக்கே பல ஆண்டுகளாக பயிற்சி எடுத்து, பல பிரயாசங்கள்பட்டு வெற்றியை ஈட்டுகின்றனர். ஆனால் அதை விட பலமடங்கு உயர்வான ‘நித்திய வாழ்வு’ என்ற எதிர்கால வாழ்வுக்காக நடக்கும் வாழ்க்கை ஓட்டம் என்ற பந்தயத்தில் வெற்றி பெறுவது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். கலாத்தியர் 5:7,“நீங்கள் நன்றாய் ஓடினீர்களே!” என்று கூறுகிறது.

அப்போஸ்தலர் 20:24 வாழ்க்கை ஓட்டத்தை சந்தோஷத்தோடு முடிப்பதைப் பற்றிக் கூறுகிறது. மேற்கண்ட வசனங்கள் மூலமாக வாழ்க்கை ஒரு ஓட்டம் என்பது உறுதியாகிறது.

உலகிலேயே புகழ்பெற்ற ஓட்டப்பந்தய வீரர் என்று கேட்டால் உடனே உசைன் போல்ட் என்று சொல்லிவிடுவோம். உசைன் போல்ட் வெற்றி கோப்பையைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் பயிற்சி எடுத்தார். நாம் ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு குறிக்கோளை மனதில் வைத்து பொதுவாக ஓடுகிறோம். சிலர் உடற்பயிற்சிக்காக ஓடுகின்றனர். சிலர் வெற்றி பெற்று புகழ் பெற எண்ணி ஓடுகின்றனர். சிலர் மெலிந்து அழகாக வேண்டும் என்று ஓடுகின்றனர். சிலர் யாருக்காவது பயந்து கொண்டே ஓடுகின்றனர். நாமும் ஓடுகின்றோம், எதை நோக்கி? ‘நித்திய வாழ்வு’ என்ற பரிசைப் பெற ஓடும் ஓட்டமே புத்திசாலித்தனமானது.

நம்முடைய ஓட்டத்தை எதற்காவது பயந்து ஓடுகிறோமா? அல்லது நித்திய ஜீவனைப் பெற ஓடுகிறோமா? பவுல் அப்போஸ்தலன் நமது ஓட்டத்தைக் குறிக்க ‘ஸ்டேடியான்’ என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறார். அதுவே பின்னர் ஸ்டேடியம் ஆக மாறியது.

ஒரு விளையாட்டுப் பந்தயத்தை அந்த அரங்கத்தில் உள்ள மக்கள் எவ்வாறு ஆர்வமுடன் பார்க்கிறார்களோ அதுபோல கிறிஸ்தவராகிய உங்கள் ஓட்டத்தை மக்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

நமது போராட்டங்கள், தடைகள், பயங்கள், பலவீனங்களை மேற்கொண்டோ அல்லது தோல்வியுற்றோ நாம் ஓடுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த ஓட்டப் பந்தயம் 2 அல்லது 3 நிமிடத்தில் முடிந்து போகிற 100 மீட்டர் ஓட்டம் அன்று. வாழ்நாள் முழுவதும் இறக்கும்வரை நாம் ஓட வேண்டிய ‘மாரத்தான்’ ஓட்டம். இந்த வருடம் முழுவதும் நான் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ்ந்து இனிமேல் நான் என் மனம்போல வாழலாம் என்று இருக்க முடியாது. நான் என் வாழ்நாள் முழுவதும் ஓடி எப்படி முடிக்கிறேன் என்பதைப் பொறுத்துதான் எனக்குப் பரிசு வழங்கப்படும்.

நாம் ஓடும்போது நமது சுய பலத்தில், நம்முடைய ஆசை இச்சைகளை, புகழை, பெருமையை நிறைவேற்றும் வண்ணம் ஓடக் கூடாது. தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டி, நம்முடைய காரியங்களை நிறைவேற்றும்வண்ணம் நமது ஓட்டம் இருக்க வேண்டும்.

தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்டு விலைக்கிரயமாய் வாங்கப்பட்ட நாம், தேவ சித்தத்தை நிறைவேற்றும்வண்ணம் வாழ்வதே பலனைக் கொடுக்கும்.

“இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” (2 தீமோத்தேயு 4:8).

உலகத்தில் நடைபெறும் ஓட்டப்பந்தயங்களில் முதல், இரண்டு, மூன்றாவது இடத்தை பெற்றவர்களுக்கு மட்டுமே பரிசு கிடைக்கும். மற்றவர்களுக்குக் கிடைக்காது. ஆனால் வாழ்க்கை என்னும் மாரத்தான் ஓட்டத்தில் வெற்றியாக ஓடி முடிக்கும் எல்லோருக்கும் ‘நித்திய ஜீவன்’ என்ற பரிசு கிடைக்கும் என்ற உறுதியை மேற்கண்ட வசனம் அளிக்கிறது.

பந்தயத்தை ஆரம்பிக்கும்போது முதல் 10 மீட்டர் மிக அழகாக வேகமாக லாவகமாக ஓடியதற்கெல்லாம் பரிசு கிடைக்காது. முடிவுவரை சரியாக ஓடுபவர்களுக்கு மட்டுமே பரிசு கிடைக்கும். உங்கள் ஓட்டத்தை உங்கள் ஒருவரால் மட்டுமே ஓடமுடியும். உங்களோடு போட்டி போட சரியான ஆள் ஒருவர் உண்டெனில் அது நீங்கள் மட்டுமே. கணவன் மனைவியோடு போட்டி போட இயலாது. மனைவி கணவனோடு போட்டி போட முடியாது. பெற்றோர் பிள்ளைகளோடு போட்டி போட முடியாது. பிள்ளைகள் பெற்றோரோடு போட்டி போட முடியாது.

அதேபோல அடுத்தவர் ஓட்டத்தை அவருக்காக நீங்கள் ஓட முடியாது. அவருக்கென்ன? அவருக்கு வேலையிருக்கிறது. மனைவி வேலை பார்க்கிறார், நிறைய சொத்து இருக்கிறது என்று கூறி, அவரைப்போல நான் ஓட முடியாது. என்னுடைய ஓட்டத்தை அவர் ஓட முடியாது.

“ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான

யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபிரெயர் 12:1).

அவரைப்போல நாம் இப்படி இருக்க வேண்டும், செய்ய வேண்டும் என்று அவர் ஓட்டத்தில் நாம் ஓட முயலும்போது, நாம் சேரவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர முடியாது. 100 மீட்டர் ஓட்டம் ஓடும் ஒருவரை மாரத்தான் ஓட்டத்திலும், மாரத்தான் ஓட்டக்காரரை 100 மீட்டர் ஓட்டத்திலும் ஓட வைத்தால் நடக்கும் குளறுபடிகள் பார்க்க சகிக்காது.

**அதேபோன்று அடுத்தவரின் ஓட்டம் மிக எளிதானது. தனது ஓட்டம் மிகக் கடினமானது என்று தவறான எண்ணத்தோடு பொறுமையற்று ஓடுவது சலிப்பையும் கசப்பையும் நமக்குத் தந்து விடும். நமது ஓட்டத்தையும் மற்றவர் ஓட்டத்தையும் ஒப்பிடுவது அறிவற்ற செயலாகும். நமது இலக்கு எப்போதும் கிறிஸ்துவாக மட்டுமே இருப்பது நன்மை தரும். எப்போது அவரை விட்டு நமது கண்கள் மற்றவர்களை, மற்றவைகளை நோக்குகிறதோ அப்போது தோல்வி ஆரம்பித்துவிடுகிறது.**

இந்தியா ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஓட்டம் எடுத்துக் கொண்டிருந்த ஒரு புகழ் பெற்ற விளையாட்டு வீரர் தான் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று கருதி அடுத்த விளையாட்டு வீரர் பாதுகாப்பான இடத்துக்குப் போய் விட்டாரா என்று பார்க்க முயன்று, அதனால் ஆட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இதுபோன்ற மோசமான தோல்விகளை அடுத்தவரை விமர்சிப்போர் பெறுவது உறுதி. ஆகவே, ஜாக்கிரதையோடு நமது கண்களை விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற தேவனை நோக்கி பார்த்துக் கொண்டே முன்னேறிச் செல்வோம்.

நாம் தேவன் நமக்கு கொடுத்த திறமைகளை, தாலந்துகளைப் பயன்படுத்தி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் கண்களைப் பதித்து ஓடினால் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை கிடைக்கும்.

''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்'' (2 கொரிந்தியர்3:18).

நாம் தேவனை நோக்கிப் பார்க்கும்போது அவரது உயர்ந்த உன்னதமான குணாதிசயங்கள், நற்குணங்கள் நம்மைப் பாதித்து நமக்குள் அந்த நற்குணங்கள் வெளிப்படும்போது நாம் மகிமையின்மேல் மகிமையடைந்து, மறுரூபப்படுகிறோம். அவரை நோக்கிப் பார்த்து ஓடிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் நம்மிடம் அவருடைய நற்பணிகள் வெளிப்படாவிட்டால் நமது ஓட்டம் சரியானதா என்பது சந்தேகமே!?

பேதுரு ஒருசமயம் இயேசு கடலில் நடந்து வந்து கொண்டிருக்கும்போது, ஆவல் மேலிட தானும் அவ்வாறே கடலில் நடக்க விரும்பி இயேசுவை நோக்கி விண்ணப்பித்து, நடக்க முயல்கிறார். இயேசுவை பார்த்துக்கொண்டே நடந்தபோது கடலில் நடப்பது சாதாரண காரியமாக இருந்தது. எப்போது காற்றையும்

கொந்தளிக்கும் கடலையும் பார்த்தாரோ அப்போது மூழ்க ஆரம்பிக்கிறார். அதுபோல நம்மை நடுங்க வைக்கும் அல்லது மலைக்க வைக்கும் பிரச்சினைகள், போராட்டங்களை நோக்கிப் பார்க்காமல், அதைவிட பெரியவரான தேவன்மேல் கண்பதிக்கும்போது அவைகள் சூரியனைக் கண்ட பனிபோல இல்பொருள் ஆவதை நாம் பார்க்க முடியும். கிறிஸ்து என்னும் இரட்சகர், மீட்பர் என்பதை மறக்கக் கூடாது.

**கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரே அணியில் இருக்கிறோம் என்ற உணர்வு நமக்கு அவசியம். அந்த உணர்வு இல்லாதபோதுதான் பிரச்சனைகள் முளைக்கின்றன. இதனால், நான் பெரியவன், என் சபை பெரியது என்று பெருமையடிப்பதும், எனது சபை சரியில்லை என்று விமர்சனம் செய்வதும் நமக்குச் சிறிதளவும் நன்மை பயக்காது.**

தேவன் நமக்கு என்று நியமித்திருக்கிற காரியங்களில் சரியாக ஓடி முடிப்பது மட்டுமே காரியம். தேவன் கொடுக்காததை வேறு எவரும் கொடுக்க முடியாது. அதுபோல தேவன் தருவதை எவராலும் தடுக்க முடியாது என்ற நம்பிக்கை நமக்கு இருக்கும்போது, மற்றவரைப் பார்த்து போட்டிபோடவோ, பொறாமைப்படவோ வாய்ப்பு இருக்காது. நாம் நமது கிறிஸ்தவ ஓட்டத்தைப் பொறுமையோடு ஓடுவது அவசியம் என்பதை எபிரெயர் 12:2,3 விளக்குகிறது.

“அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால்

> "தேவன் கொடுக்காததை வேறு யாரும் கொடுக்க முடியாது. அதுபோல தேவன் தருவதை யாராலும் தடுக்க முடியாது"

நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.''

இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்பட்ட விபரீதங்களை பட்டியலிட்டால் முதலாவது அவர் கன்னியின் வயிற்றில் பிறந்தார்; ஏழைப் பெற்றோர்; பிறக்கும்போதே கொலை முயற்சி நடந்தது; அந்தக் கொலை முயற்சியில், அவரைத் தவிர பல சிசுக்கள் கொல்லப்பட்டன. அவருக்கென்று தலை சாய்க்கக்கூட இடமில்லை. சிறுவயதிலேயே தந்தை இறந்ததால் குடும்பப்பொறுப்பு இருந்தது. யூதர்கள் அவரைப் 'பைத்தியம் பிடித்தவன்' என்றும் 'பேய் பிடித்தவன்' என்றும் கீழ்த்தரமாய்ப் பேசினார்கள். மதிக்கவேயில்லை. செய்த நன்றியை மறந்தனர். ஆயினும் இத்தனை விபரீதங்களையும் சகித்து வெற்றி சிறந்தவர்.

கொடிய துன்பங்களை அனுபவித்து, ஜெயித்த அவரை நோக்கிப் பார்ப்பதே புத்திசாலித்தனமான ஒன்று. நாம் இளைப்புள்ளவர்களாய், சோர்ந்து போய்விடாமல் அவரையே நினைத்துக் கொண்டு வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும்.

''நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.'' என்று எபிரெயர் 4:15,16 நமக்கு ஆலோசனை கூறுகிறது. 1 பேதுரு 5:10 என்ற வசனமும் இதே கருத்தை வலியுறுத்துவதைக் காணலாம்: ''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக.''

தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை நாம் பொறுமையோடே ஓடும்போது தேவன் நம்மை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவார் என்று உறுதி அளிக்கிறது.

நாம் சபைகளில் கூடிவரும்போது ஒருவரையொருவர் பார்த்து கற்றுக் கொள்கிறோம். அன்பு செலுத்துகிறோம். ஆறுதல் பெறுகிறோம். ஆறுதல்படுத்துகிறோம்.

துன்பங்களைச் சகிக்க, வெற்றி சிறக்கக் கற்றுக் கொள்கிறோம். இதை எபிரெயர் 10:24,25 இவ்வாறு கூறுகிறது: “அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.” நாம் கூடிவருவது நமது ஓட்டத்தைப் பொறுமையோடே ஓடுவதற்குத் துணைபுரிவதாய் இருக்க வேண்டும்.

நான்காவதாக “பாரமான யாவற்றையும் நம்மை நெருக்கி நிற்கிற பாவத்தை விட்டு.... இயேசுவை நோக்கி ஓட வேண்டும்.”

ஓட்டப்பந்தயத்தில் ஓடும் ஒருவன் கோட், சூட், மடிக்கணினி சகிதம் தூக்கிக் கொண்டு ஓட முடியுமா? விளையாட்டு வீரன் எவ்வளவு தூரம் ஆடையைக் குறைத்துக் கொண்டு ஓடுகிறானோ அந்த அளவுக்கு அவனுக்கு எளிதாக இருக்கும் அல்லவா. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் நமது ஓட்டத்தில் பல விதமான இத்தியாதிகளோடு ஓட முயலுவதால் நம்மால் ஓடமுடியாமல் தோல்வியைத் தழுவுகிறோம். நமது வாழ்க்கை ஓட்டத்தில் நமது ஓட்டத்தைத் தடை செய்யக்கூடியவை இரண்டு. ஒன்று நம்மைக் கவர்ச்சிப்பவை. மற்றொன்று நமது பாதையை ஓட முடியாதபடி விலக்கக்கூடியவை. நமது வேலை, பிள்ளைகள், மனைவி, விளையாட்டு, பொழுதுபோக்கு இவை நம்முடைய நேரத்தை வீணாக்கி நம்மைப் பயனற்றவர்களாய் மாற்றுகிறது. நமது அன்றாட கவலைகள்,

> “நமது வாழ்க்கை ஓட்டத்தில் நமது ஓட்டத்தை தடை செய்யக்கூடியவை இரண்டு. ஒன்று நம்மை கவர்ச்சிப்பவை. மற்றொன்று நமது பாதையை ஓட முடியாதபடி விலக்கக்கூடியவை.”

பிரச்சனைகள், போராட்டங்கள், நம்மை நமது ஓட்டத்தை மெதுவாக ஓடச் செய்து, நம்மைச் சலிப்படையச் செய்கிறது.

பாரமானவைகளைகளாகிய இவைகள் மட்டுமல்லாமல், பாவமான காரியங்கள் நம்மை ஓட முடியாதபடி தடை செய்கிறது. சர்தார்ஜி நகைச்சுவைக் கதைகள் இந்திய அளவில் பிரபலமானவை. சர்தார்ஜி ஒருவர், தனது உடைமைகளை ஒரே பையில் அடைத்து அதைத் தன் தோளில் சுமந்து, ஊருக்குச் செல்ல மின்தொடர்வண்டியில் உட்கார்ந்திருந்தார். முதுகு சுமையைச் சுமக்கமுடியாமல் அவதிப்படும் அவரைப்பார்த்து பயணி ஒருவர், அந்தச் சுமையை ஏன் இறக்கி வைக்கக் கூடாது? எனக் கேட்க, உடனே சர்தார்ஜி இறக்கி வைத்து நிம்மதி அடைந்தார். அதுபோலவே நாமும் பல சமயங்களில் மத்தேயு 11:28இல் “வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” என்ற வாக்குறுதியை மறந்து வாழ்க்கை ஓட்டத்தில் தடுமாறுகிறோம்.

பாரமான, பாவமான யாவற்றையும் ஒதுக்கிவிட நமக்கு முதலில் தேவை இச்சையடக்கம். நமது சுயத்தைத்

தேவனுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவராத நிலையில், தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் வெற்றி பெற இயலாது. பண ஆசை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை, மாம்ச இச்சை இவைகளுக்கு இடங்கொடுத்தால், எதைப் பற்றியும் கவலை கொள்ளாத ஆவிக்குரிய வாழ்க்கையின்மீது விருப்பமற்ற, அக்கறையற்ற 'ஏனோதானோ' என்ற மனிதர்கள் பெருகக் கூடும்.

ஒரு விளையாட்டு வீரனிடம் அவனுடைய வெற்றி பற்றி கேட்டால் அவனது தொடர்ந்த, இடையறாத பயிற்சி, உணவுக்கட்டுப்பாடு, கடினமான உடற்பயிற்சி, ஊக்கம் இவைகளைப் பற்றி கேட்கலாம். அதேபோன்றே, ஒரு கிறிஸ்தவனும் எப்படிவேண்டுமானாலும் வாழ முடியாது. வேத வசனத்தின் அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்போதுதான், அது பயனுள்ளதாக மாறும்.

**1 தீமோத்தேயு 4:7-16 வரையுள்ள வசனங்களில் ஒரு கிறிஸ்தவன் வாழவேண்டிய விதத்தை 6 காரியங்களைக் கொண்டு போதிக்கிறார்.**

| | |
|---|---|
| 1. | தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு. |
| 2. | ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கையாயிரு. |
| 3. | நீ வார்த்தையிலும், நம்பிக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாயிரு. |
| 4. | வேதவசனத்தை வாசித்து ஆராய்ந்து புரிந்து கொண்டு நட. |
| 5. | உன்னைக் குறித்தும் உன் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. |
| 6. | வேத வசனத்தில், நடக்கையில் நிலை கொண்டிரு. |

கிறிஸ்தவ வாழ்க்கையின் ஓட்டம் ஒரு தொடர் ஓட்டம் போன்றது. 400 மீ ஓட்டத்தில் ஒரு குழுவுக்கு 4 பேர் இருப்பர். ஒவ்வொரு 100 மீட்டருக்கும் ஒரு வீரர் இருப்பார். முதல் வீரர் 100 மீ ஓடி கொடுப்பதை அடுத்தவர் வாங்கி ஓடி மூன்றாவது, பின் நான்காவது நபர் எல்லைக்கு கொண்டு வர வேண்டும். 'சுவிசேஷம்' என்ற நற்செய்தியைக் கடத்துவதில் காட்டும் சுணக்கம் தொடர் ஓட்டத்தில் வெற்றியைப் பாதிக்கும்.

உலக வரலாற்றில் எழுப்புதல் என்ற காட்டாற்று வெள்ளம் கடத்தப்படாததால் சுவிசேஷம் தேங்கி நின்றது. எபிரெயர் 11:1-3 வரை விசுவாசத்தால் வெற்றி கண்டவர்களையும், 35-39 வரை வாழ்வில் தோல்வியடைந்தாலும், விசுவாசத்தில் வெற்றி கண்டவர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. எபிரெயர் 11:39,40 "இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமல் போனார்கள்" என்கிறது.

**'சுவிசேஷம்' என்ற நற்செய்தியை கடத்துவதில் காட்டும் சுணக்கம் தொடர் ஓட்டத்தில் வெற்றியை பாதிக்கும்.**

“அவர்கள் நம்மையல்லால் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்தார்.”

எபிரெயர் 11ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட பரிசுத்தவான்கள் விசுவாசத்தில் நற்சாட்சி பெற்று நல்ல போராட்டம் போராடி ஓட்டத்தை முடித்திருந்தாலும் நமது ஓட்டம் இன்னும் முடியாதபடியாலும், அவர்கள் நமக்காகக் காத்துக் கொண்டிருக்க வைக்கப்பட்டவர்கள். நாம் ஓடி முடிக்கவில்லையென்றால், அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது கிடைக்காது. அவர்களுக்கு அது கிடைத்ததானால் நமது ஓட்டம் வீணாகிவிடும். ஆகவே நாம் ஓடி முடிக்கும்போதுதான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது அவர்களுக்கும் கிடைக்கும்.

ஆகவே நமது ஓட்டத்தை மேற்கண்ட பரிசுத்தவான்கள் அனைவரும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தொடர் ஓட்டத்தில், நமக்குக் கொடுக்கப்பட்டதை நற்சாட்சியோடு அடுத்தவருக்குக் கொடுத்து, அந்தச் சுற்றை நிறைவு செய்ய வேண்டிய பொறுப்பான நிலையில் இருக்கிறோம் என்ற உணர்வோடு ஓடுவது அவசியம். ஆகவே நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்ட நற்பொருளை நமது சந்ததிகளுக்குக் கடத்த வேண்டும்.

ஒரு தொடர் ஓட்டத்தில் ஒரு சுற்றை 4 பேர் சேர்ந்துதான் முடிக்க முடியும். முதல் மூன்று நபர்களும் மிகுந்த பிரயாசத்தோடு, பொறுப்போடு, மிக நேர்த்தியாக ஓடி முடித்திருந்தாலும், நான்காவது நபரின் ஓட்டம் வெற்றியை பாதிக்கும் அல்லவா… அந்த நான்கு பேரும் சேர்ந்து எவ்வளவு நேரத்தில் ஓடி முடிக்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் வெற்றி நிச்சயம் செய்யப்படும். சரி முதல்

> “கிடைத்தால் நான்கு பேருக்கும் பரிசு கிடைக்கும். இல்லையெனில் ஒருவருக்கும் பரிசு இல்லை. அவ்வளவு தான்.”

மூன்று பேர் சிறப்பாக ஓடினார்கள் என்று அவர்களுக்கு பரிசு கொடுக்கப்படுமா? இல்லையே. ஆகவே கிடைத்தால் நான்கு பேருக்கும் பரிசு கிடைக்கும். இல்லையெனில் ஒருவருக்கும் பரிசு இல்லை. அவ்வளவுதான்.

ஒரு புதிர் விளையாட்டில் எல்லாக் கட்டங்களும் நிரப்பப்பட்டால்தான் அது முழுமையடையும். அதுபோல தேவனுடைய திட்டத்தில் ஒவ்வொருவருடைய ஓட்டமும் ஒரு கட்டம் போன்றது. ஒரு கட்டம் விடுபட்டால்கூட, அந்த புதிர் விளையாட்டு நிறைவு பெறாது. ஆகவே நாமும் ஓட வேண்டும். நமது பின் சந்ததிகளும் அதே உணர்வோடு ஓட நம்மால் வழிநடத்தப்பட வேண்டும். நமது சந்ததிகளை, தலைமுறைகளை தேவ வார்த்தையிலும், கிருபையிலும், தேவ நீதியிலும் விசுவாசத்திலும் வளர்த்து, ஓடச் செய்வது நமது கடமை என்பதை மறக்கக்கூடாது.

நமது ஓட்டத்தை எப்படித் தொடங்கினோம் என்பது முக்கியமல்ல. எப்படி முடிக்கிறோம் என்பதே முக்கியம். “நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான்

எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:12-14).

**நான் பின்னே திரும்பிப்பார்ப்பதில்லை, பந்தயப்பொருளாகிய இலக்கை நோக்கி என் பயணத்தைத் தொடர்கிறேன். ஆகவே நமது தளர்ந்த முழங்கால்களை நிமிர்த்தி தேவன் முன்பாக வந்து, தேவன் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, 2 தீமோத்தேயு 4:7இல் நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்து நித்திய ஜீவன் பெற தேவன் கிருபை செய்வாராக.**